# அந்த நாள்

நாவல்
195

வரதராசன்



இன்ப நிலையம்

# அந்த நாள்

டாக்டர் மு. வரதராசன்



காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.

இன்ப நிலையம் — மயிலாப்பூர், சென்னை

முதற் பதிப்பு :—அக்டோபர் 1949
உரிமை பதிவு

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 418
நன்கொடை எண்: 418

விலை ரூ. 3—0—0

## மு. வ. நூல்கள்

**(கற்பனை)**

அந்த நாள்
விடுதலையா ?
கள்ளோ? காவியமோ?
கி. பி. 2000

**(ஆராய்ச்சி)**

திருவள்ளுவர் அல்லது
வாழ்க்கை விளக்கம்
திருக்குறள் தெளிவுரை
மொழி நூல்
அறமும் அரசியலும்
தமிழ் நெஞ்சம்

**(பொது)**

அரசியல் அலைகள்
அன்னைக்கு
காந்தி அண்ணல்
மணல் வீடு

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ்,
46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., மதராஸ்.

# முன்னுரை

நாகரிகம் வளர வளர, கொலைக் கருவிகளில் சிறந்த முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. அதனால், போர் என்பது யாரோ சில வீரர்களைப் பொறுத்த நிகழ்ச்சியாக நிற்காமல், உலகம் முழுதும் பல ஆண்டுகள் அல்லல் படத் தக்க கொடுமைகளுக்கு வித்து ஆகிவிட்டது. "நாம் என்ன செய்ய முடியும்? வேறு வழி இல்லை" என்று ஒவ்வொருவரும் எண்ணுவதாலேயே இவ்வாறு பெருதும் கொடுமைகளைத் தடுக்க முடியாமல் வருந்தவேண்டியுள்ளது. "நாமும் மறைமுகமாக இவற்றிற்குக் காரணமே; இவற்றைப் போக்க நாம் செய்ய வேண்டிய கடமையும் உள்ளது" என்ற மனப்பான்மை வளர்ந்தால்தான் உலக அமைதிக்கு வழி உண்டு. அதற்கு அடிப்படையாக, பட்ட கொடுமைகளை மறக்காமலிருக்க வேண்டும் அல்லவா?

1941, 42-ம் ஆண்டுகளில் பர்மாவிலிருந்து ஓடி வந்த தமிழர் பட்ட துன்பங்களுக்கு அளவில்லை. இன்று அந்தத் துன்பங்கள் வரலாற்றின் ஏடுகளில் மறைந்துவிட்டன. ஆயினும், அன்று அவற்றிற்கு ஆளாகி நொந்தவர்களுக்கும், அவர்களுக்கு உறவினராகவும் நண்பராவும் இருந்து கேட்டறிந்து வருந்தியவர்களுக்கும் அவை மறக்க முடியாத நிகழ்ச்சிகள். அவற்றை நினைக்கும் போதெல்லாம் "நம் கடமை என்ன?" என்று நெஞ்சம் குமுறுவது இயற்கை.

அவற்றைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டது இந்தப் புனைகதை. இதை முதலில் வெளியிட்டுதவிய 'தமிழ் முரசு' ஆசிரியருக்கும், இப்போது நூல் வடிவில் வெளியிடும் 'இன்ப நிலையத்'தினர்க்கும் நன்றி செலுத்துகின்றேன்.

மு. வரதராசன்

# பதிப்புரை

மலேயா நாட்டின் மாண்புக்கு உழைக்கவும், பர்மிய நாட்டைப் பண்படுத்தவும் தன் உழைப்புச் சக்தியை நல்கி, உயிர் வாழ்வதற்காக சிறிது ஊதியம் பெறக் கடல் கடந்து சென்றனர் இந்திய மக்கள்; அதிலும் தமிழ் நாட்டினரே பெரும்பாலோர். அண்மையில் நடந்து முடிந்த உலகப் போரின் ஒரு பகுதியாக பர்மா-மலேயா நாடுகளும் ஜப்பானியரால் ஆக்ரமிக்கப்பட்டன. யுத்தம் ஆரம்பமானதும் இந்தியாவிலிருந்து பர்மா-மலேயா போன்ற இடங்களுக்கு கப்பல் போக்கு வரத்து நிறுத்தப்பட்டது. அதனால், அங்கு வசித்துவந்த இந்திய மக்கள் தாய் நாட்டிற்குத் திரும்ப முடியாமல் எதிரியின் தாக்குதலுக்கும் உள்நாட்டுக் குழப்பங்களுக்கும் இலக்காகி இன்னலுற்றனர். பர்மா நாட்டிலிருந்து இந்தியாவிற்கு ஏற்கனவே நடை பாதை இருந்ததால் அந்த வழியே இந்திய மக்களில் பெரும்பாலோர், சொத்து சுகங்களையும் இழந்து உயிர் தப்பினால் போதும் என்ற எண்ணத்துடன் கால் நடையாகத் தாய் நாட்டிற்குப் புறப்பட்டனர்.

பர்மாவிலிருந்து தாய் நாட்டிற்குப் புறப்பட்ட இந்திய மக்களை வழிமறித்து அவர்களிடம் எஞ்சியிருந்த கொஞ்சம் பொருள்களையும் திருடிச் சென்றதுடன் எதிர்த்தோரை வெட்டியும் வீழ்த்தினர் பர்மியக் கொள்ளைக் கூட்டத்தார். எவ்வளவோ கொடுமைகளுக்கு இடையில், நடந்துவந்த மக்களில் கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், மக்களை இழந்த பெற்றோர், உற்றாரை இழந்த உறவினர் போன்ற துன்பத்தில் உழன்றவர்களாகவே தாய் நாடு வந்து சேர்ந்தனர்.

பர்மாவிலிருந்து நடந்து வந்தவர்கள் பட்ட கஷ்டங்களை அவர்கள் சொல்லக் கேட்ட எவரும் கண்ணீர் பெருக்காமல் இருக்க முடியாது. யுத்தக் கொடுமையால் மக்கள் படும் இன்னல்களை ஏட்டில் எழுதி நாட்டிற்கு அறிவித்தால்தான், அதன் உண்மையை உணர்ந்து, இனியாகிலும் யுத்தம் என்ற மோகம் உலகை விட்டுப் போக ஒவ்வொரு நாட்டு மக்களும் தங்களால் இயன்ற பணியைச் செய்வார்கள். அந்த எண்ணத்தோடுதான் டாக்டர் மு. வரதராசனார் "**அந்த நாள்**" என்னும் இந்தப் புனை கதையை எழுதியுள்ளார். அன்னாரின் நூல்களுக்கு அறிமுகம் தேவையில்லை. சிந்தனைத் திறனும் எழுத்தாற்றலும் மிக்க டாக்டர் மு. வ. அவர்கள் இந்நூலை வெளியிடும் வாய்ப்பை அளித்ததற்கு எங்கள் நன்றி.

சென்னை,
2-10-49

சோம. சுவாமிநாதன்

இன்ப நிலையம்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க.சண்முகம் நூலகம்.
துறை

# 1. ஆறுமுகம்

அன்று இரவு என் மனம் பட்ட பாடு சொல்ல முடியாது. எதற்காக? இந்த உடம்பைக் காப்பாற்றி இன்னும் நெடுநாள் வாழ்வதற்காகவா? அல்ல; அல்ல. நான் எட்டுப் படிப்போடு நின்றவன் அல்ல. நான் கற்ற தாயுமானவர் பாட்டு, மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி 'நல்ல சொற்பொழிவாளன்' என்று பெயர் எடுப்பதற்காக அல்ல. தாயுமானவர் பாட்டில் உள்ள ஒவ்வொரு கருத்தையும் நம்புகின்றவன் நான். உடம்பு ஒரு சொக்காய் என்று ஊராருக்குச் சொல்லிவிட்டு, உடம்பே எல்லாம் என்று இரவும் பகலும் அதற்காகவே வாழ்கின்றவனல்ல நான். அந்தப் போரில் சேர்ந்து உயிர்விடத் துணிந்துள்ள சிப்பாய்களில் என்னைப் போல் அஞ்சாத வீரன் ஒருவன் இருப்பானா? அவர்கள் எல்லாரும் வயிற்றுணவுக்காகத் துப்பாக்கி எடுத்துச் சென்றவர்கள்; கூலிக்காகக் காக்கியுடை அணிந்தவர்கள்; வேறு வழியில்லாமையால் வீரம் பேசி நடிப்பவர்கள். எதிரி விமானம் பறக்கும்போது தலைதூக்கிப் பார்க்க அவர்களுக்கு ஆண்மை உண்டா? போர்க்களத்திற்குச் செல்லுமுன் பேதைகள் போல் கலங்கியல்லவா செல்கிறார்கள். பாவம்! அவர்களைக் குறைகூறிப் பயன் என்ன? அவர்களும் மனிதர்கள். அவர்களுக்கும் வாழ்க்கையில் அச்சம் உண்டு.

முந்தாநேற்று இரவு மனைவியையும் மகளையும் மாடியை விட்டு இறங்கிக் கீழே சென்று ஒதுங்கியிருக்கு

மாறு வற்புறுத்தினேன். நானா வற்புறுத்தினேன்? மனைவி அவ்வளவு எளிதில் என் சொல்லைக் கேட்டு நடப்பாளா? ஏ. ஆர். பி. காரர் வற்புறுத்தினார்கள். சங்கு ஒலித்தவுடனே, அவர்கள் எல்லாரும் மூலைக்கு ஒருவராய்ப் பறந்து வீடுதோறும் எச்சரிக்கை செய்தார்கள். அப்போது முதலிலேயே நான் சொன்னேன். அவள் கேட்கவில்லை. விளக்கெல்லாம் அணைத்துவிட்டோம். படுக்கை விளக்கு மட்டும் மினுக் மினுக் என்று எரிந்துகொண்டிருந்தது. சன்னல் கதவுகளின் சந்தில் அது எப்படியோ தெரிந்து, இரண்டு பேர், "யாரது? மேலே இன்னும் விளக்குத் தெரியுது! யார் சார்? வீட்டு நெம்பர் குறித்துக் கொண்டு போகட்டுமா? என்ன சொன்னாலும் கேட்கவில்லை" என்று வீட்டுக் கதவைத் தட்டினார்கள். "அபராதம் தண்டனைதான் சொன்னபடி கேட்கும்" என்று முணுமுணுத்தார்கள். உடனே கீழே இருந்த குடித்தனக்காரர் தங்களுக்கு அபராதமும் தண்டனையும் கிடைக்குமே என்று பயந்து எங்களைக் காட்டிக்கொடுத்து விட்டார்கள். நான் உடனே அந்த ஏ. ஆர். பி. காரரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, விளக்கை முற்றிலும் நிறுத்திவிட்டு, அவளையும் வாணியையும் கீழே அழைத்துக்கொண்டு நகர்ந்தேன். "இன்னொரு முறை தொந்தரவு கொடுக்க வேண்டாம் ஐயா" என்று சொல்லிவிட்டு அவர்கள் நகர்ந்தார்கள்.

கீழ்அடுக்கில் விட்டுவிட்டு நான் மேலே வந்தேன். எனக்கு உயிரைப் பற்றிய கவலையே இல்லை. ஏதோ ஒரு வகை முரட்டுப் பிடிவாதம் என்று சொல்வதற்கில்லை. கட்டிடத்தின்மேல் குண்டு விழுந்தால் தப்புவார் ஒருவரும் இல்லை. இந்த நிலைமையில் கட்டிடத்தின் மேல்மாடியில் இருந்தால் என்ன, கீழ்அடுக்கில் இருந்தால் என்ன என்று எனக்குத் தோன்றியது. தவிர, கீழடுக்கில் தற்காப்புக்கு ஒதுக்கிடமாகக் குறித்த இடத்தில் ஏறக்குறைய அறுபது பேர் இருக்க வேண்டும். அந்தக் கூட்டத்தில் இருந்து தொல்லைப்படுவதை விட மேலே இருந்து தனிமையில் ஏதாவது எண்ணிக்கொண்டிருக்க விரும்பினேன். உண்மையான காரணம் இதுவாக இருக்கலாம். என் மனை

தில் அவளையும் வாணியையும் எப்படியாவது சென்னைக்கு அனுப்பிவிட வேண்டும் என்ற துணிவான முயற்சி இருந்தது. ஆனால் அதற்கு அவள் இணங்க வில்லை. அதற்கு என்ன செய்யலாம் என்ற போராட்டம் உள்ளத்தில் இருந்துவந்தது. உள்ளத்தில் போராட்டம் எழும்போதெல்லாம் தனிமையை நாடுவது என் இயற்கை. வெளிப் போராட்டமாக—வேறு போராட்டமாக இருந்தால் அவளிடம் சொல்லி ஆறுதலும் ஊக்கமும் பெறலாம். துணைவி என்பது அதற்குத் தானே! சமையல் வேலைக்கும் குழந்தை வளர்ப்புக்கும் அவளைத் துணைவி என்று சொல்வது பொருந்தாது அல்லவா? ஆனால் இந்தப் போராட்டம் வெளிப் போராட்டம் அல்ல; வீட்டுப் போராட்டம். வேறு போராட்டம் அல்ல; அவளைப் பற்றிய போராட்டமே. ஆகையால் அவளை விட்டுத் தனியே இருக்கவே விரும்பினேன்.

சங்கொலி கேட்டாலும் சரி, ஏ. ஆர். பி. தொண்டர்களை எங்கே கண்டாலும் சரி, தமிழ் நாட்டுக்குப் போகின்றவர்களைக் கண்டாலும் சரி, பத்திரிகைச் செய்திகளைப் படித்தாலும் சரி, என் மனம் போராடத் தொடங்கும். அவளை எப்படியாவது அனுப்பிவிட வேண்டும் என்று துணிவேன். அடுத்த நொடியிலேயே என்ன சொல்லியும் அவள் மனத்தை மாற்ற முடியவில்லையே என்று திகைப்பேன். வாணியை மட்டுமாவது அனுப்பிவிட எண்ணுவேன். அருமைக் குழந்தையைத் தனியே திக்கற்ற நிலையில் அனுப்புவதா என்று சோர்வேன். இந்தப் போராட்டத்தின் எல்லையை அன்று இரவு கண்டேன்.

திடீரெனத் தெருவெல்லாம் சீழ்க்கை ஒலி கேட்டது. மூன்றாம் வீட்டில் கதவைத் தட்டினார்கள். "வெளிச்சம், யாரையா?" என்று விடாமல் கேள்வி எழுந்தது. யாரோ ஒருவர் சிகரெட் பற்றவைத்தாராம். அந்த நெருப்புக்குச்சியின் ஒளியும் தெரியக் கூடாது என்று அவ்வளவு கடுமையாக இருந்தது. சீழ்க்கை மேலும் மிகுதியானது. ஏ. ஆர். பி. தொண்டர்கள் பரபரப்பாக ஓடும் காலடிச் சத்தம் கேட்டது. கீழடுக்கில் இருந்தவர்கள் கவிழ்ந்து

படுத்துக்கொண்டும் காதில் துணி அடைத்துக்கொண்டும் வாயில் ரப்பர் துண்டு வைத்துக்கொண்டும் கிடந்தார்கள். அவர்கள் பேச்சும் அடங்கிற்று.

என் மேசைமேல் இருண்ட இருட்டில் ரப்பர் துண்டு குறித்த இடத்தில் இருந்தது. நான் மேசையின் கீழோ கட்டிலின் கீழோ கவிழ்ந்து கிடக்க எண்ணினேன். "கவலையில்லை" என்றது ஒரு மனம். விர் விர் என்று விமானங்கள் பறக்கும் ஒலி கேட்டது. என் கை ரப்பர் துண்டை எடுத்துப் பற்களுக்கு இடையே வைத்தது. நாற்காலியில் இருந்தபடியே கண்களை மூடினேன். நெஞ்சம் படபடத்தது. செவியில் விமான ஒலி தவிர வேறொன்றும் கேட்கவில்லை. தெருவெல்லாம் அமைதி நிலவியது. "கண்டார் நகைப்புஉயிர் வாழ்க்கை" என்ற தாயுமானவர் பாட்டை நினைத்தேன். அந்த ஓரடி தவிர அப்பால் ஓர் எழுத்தும் வரவில்லை. பல்லாயிர முறை படித்த பாட்டும் நினைவுக்கு வராத நிலையில் இருந்தது உணர்ந்தேன். கண்களைத் திறந்தேன். இருள் மயம் கண்டேன். விமான ஒலி மேன்மேலும் மிகுவதைக் கேட்டேன்.

கண்களை மூடினேன். "நான் யார்" என்று என் மனத்தைக் கேட்டேன். இது அன்று, அது அன்று என்று நீக்கல் முறையில் தலைப்படவில்லை. இதுவும் அதுவும் எதுவும் என்று அணைக்கும் முறையில் முனைந்தேன். அந்த வீடு, அதன் கீழடுக்கில் கவிழ்ந்து நடுங்கும் உடல்கள், சுற்றுப்புறம் பதைக்கும் மனங்கள், விமான ஒலி, அந்த விமானங்கள், அவற்றை ஓட்டும் ஆட்கள், மனைவி மக்களை விட்டு அவற்றில் ஏறி நள்ளிரவில் உயிர் வேட்டையாடும் சிப்பாய்கள், வயிற்று வாழ்வுக்காக அவர்கள் முன் பின் அறியாத மக்களின் தலையில் எறியக் கொண்டுவரும் வெடி குண்டுகள், அவர்களையும் அவர்களுடைய விமானங்களையும் தாக்க எழுந்த தற்காப்பு விமானங்கள், அவற்றில் உயிருக்கு அஞ்சி நடுங்கிப் பறக்கும் சிப்பாய்கள், ஊர் எல்லையில் தற்காப்புக்காக அமைந்த பீரங்கிகள், அவற்றை இயக்க அங்கே உள்ள சிப்பாய்கள், அங்கங்கே ஒதுக்கிடங்களில் கவிழ்ந்து படுத்துக் கிடக்கும் மற்றச் சிப்பாய்கள், இவ்வளவு பேருக்கும் காரணமாகத் தன்னலத்தை

வளர்க்கும் சில முதலாளிகள், சில அரசியலாளர்கள், அவர்கள் நாட்டுப்பற்றை வளர்க்கச் செய்யும் முயற்சிகள், அதற்கான அமைப்பு முறைகள், இவ்வளவுக்கும் காரண மாக மனம் அசையும் அசைவுகள் ஆகிய எல்லாம் பரம் பொருளின் கூத்து என எண்ணினேன். விமான ஒலி மீண்டும் மிகுதியாயிற்று. தலைக்கு மேல் விமானம் பறப் பதை உணரலானேன். தற்காப்புப் பீரங்கிகளின் வெடி முழக்கம் கேட்கலாயிற்று. விமானங்களிலிருந்து குண்டு களும் விழுந்தன. நூற்றுக்கணக்கான இடி முழக்கங்கள் செவியைத் துளைத்தன. இவ்வொலி யெல்லாம் அம்பலக் கூத்தனுடைய சிலம்பொலி என எண்ண முயன்றேன். நெஞ்சப் படபடப்பு இன்னும் நீங்கவில்லை. ஆயினும் தொடக்கத்தில் இருந்தது போல இல்லை. ரப்பர் துண் டைப் பற்கள் இறுகக் கடித்துப் பற்றியிருந்தன. மூடின கண்ணைத் திறக்காமல் நாற்காலியில் குண்டுமுழக்கம் கேட் டுக்கொண் டிருந்தேன்.

திடீரென அவளை நினைத்தேன். வாணியை நினைத் தேன். "நான் யார்" என்ற கேள்வியைத் துணைக்கு அழைத்தேன். அவள் நான் என்றும், அவள் போன்றே அங்குள்ள எல்லா உயிரும் நான் என்றும் உணர முயன் றேன். வெடி குண்டு ஒன்று ஒரு பர்லாங்கு தொலையில் வெடித்தாற் போல் கேட்டேனோ இல்லையோ, என் இரண்டு தோளும் இறுகப் பற்றப்பட்டு என் முகத்தோடு மற்றொரு முகம் சேர்ந்திருந்தது. ஒருவரும் வாய்திறக்க வில்லை. என்னைப் பற்றிய கைகளின் நடுக்கம் இவ்வளவு என்று சொல்வதற்கில்லை. அந்த இரு கைகளையும் சேரப் பற்றினேன். விமானங்கள் திரும்பும் ஓசை கேட்டது. மூன்று வீடுகளுக்கு அப்பால் ஒரு கட்டிடம் இடிந்து விழும் ஓசையும் கேட்டது.

என் முகத்தில் கண்ணீர்த் துளிகள் விழுந்தன. "பொன் முடி" என்றேன். பெரு மூச்சு விட்டாள். ரப்பர் துண்டை எடுத்து வைத்துவிட்டு "வாணி எங்கே?" என்றேன். "தூங்குகிறாள் கீழே" என்றாள். "தப்பி னோம்" என்றேன். "உன் மனம் கல் மனம்" என்றாள்.

" ஆமாம், கல் மனம்தான். அதுதான் வேண்டும். இளகிய மனத்தால் என்ன பயன்? இளகிய மனம் உடையவர்கள் தாங்களும் வாழ்வது இல்லை; மற்றவர்களையும் வாழவிடுவது இல்லை" என்றேன். அதற்குள் விமானங்களின் ஒலியே கேட்கவில்லை. தெருவில் பூட்ஸ் ஒலி கேட்டது. ஏ. ஆர். பி. தொண்டர்கள் ஒரு சிலர் நடமாடத் தொடங்கினார்கள்.

அவள் பெரு மூச்சு விட்டாள். அவளுடைய கண்ணீரை என் கையால் துடைத்தேன். " நான் உன்னை வாழவிட வில்லையா? என்னால் உன் வாழ்வுக்குத் தடையா? நான் உன்னை விட்டுப் பிரிந்து போய்விட்டால் கவலையில்லாமல் உன்னால் இருக்க முடியுமா? இருக்க முடியுமானால் நான் சொல்லாமல் போய்விடுகிறேன்" என்று விம்மி அழத் தொடங்கினாள்.

இதுவரை மெல்லப் பேசிக்கொண்டிருந்தோம். தெருவில் தொண்டர்கள் நடமாடுவதை அறிந்ததும் பதுங்கியிருந்த மக்கள் தலைநிமிர்ந்து பேசத் தொடங்கிவிட்டார்கள். " அம்மா! அம்மா!" என்று வாணி அழைக்கும் குரல் கேட்டது. " வா அம்மா! வாணி!" என்று குரல் கொடுத்து இருட்டில் எழுந்து சென்றேன். அவள் எதிரே தடவிக் கொண்டு வந்தாள். கையைப்பிடித்து அழைத்து வந்து பக்கத்து நாற்காலியில் உட்காரவைத்தேன்.

" எங்கே'மா போய்விட்டாய்? நான் பயந்து நடுங்கிக்கொண்டே இருந்தேன். எல்லாரும் பேசத் தொடங்கிய பிறகுதான் பக்கத்தில் தடவிப் பார்த்து, " அம்மா" என்று கூப்பிட்டேன். நீ அதற்குள் மேலே வந்துவிட்டாயே" என்றாள்.

" நான் இப்போதுதான் வந்தேன் அம்மா!" என்றாள் மனைவி.

" என்னையும் அழைத்துக்கொண்டு வந்திருக்கக் கூடாதா? நான் எவ்வளவு பயந்து போயிருந்தேன்!" என்றாள் வாணி.

" இதுதான் பழக்கமாய் விட்டதே! இன்னுமா பயம் வாணி!" என்றேன்.

" இல்லே'ப்பா இன்றைக்குத்தான் இவ்வளவு ஓசை கேட்டது. எப்போதும் இவ்வளவு வெடிகுண்டு கேட்டதில்லையே. ஐயோ, இன்னும்கூட என் நெஞ்சு பட பட என்று அடித்துக்கொண் டிருக்கிறது" என்றாள்.

" இனிமேல் இந்த ஊரில் இருக்கக்கூடாது. வாணி! நீயும் அம்மாவும் நாளைக்கே புறப்பட்டுப் போகவேண்டியதுதான் " என்றேன்.

" நீயும் வந்துவிடு'ப்பா. எல்லோரும் ஒன்றாகப் போய் விடலாம் " என்றாள்.

" அப்படிச் சொல்லம்மா " என்றாள் மனைவி.

" இப்போது விளக்குக் கொளுத்தக் கூடாதாப்பா ?" என்று வாணி என்னைக் கேட்டாள்.

" சங்கு பிடிக்கிறவரைக்கும் விளக்கு வெளிச்சமே கூடாது " என்றேன்.

" பகலில் வெளிச்சம் தெரிகிறதே, அப்போது என்ன செய்வது ?" என்று வாணி மறுபடியும் கேட்டாள்.

" பகலை இருட்டாக்க முடியாது. அதற்காக என்ன செய்வது ?" என்றேன.

" இன்றைக்கு விடியற்காலம் மூன்று மணிக்கு நிலா வரப்போகிறது. இன்னும் மூன்று நாளானால் அமாவாசை இருட்டு. அப்புறம் பத்துப் பன்னிரண்டு நாளில் பட்டப் பகலாய் நிலவு இருக்குமே! அப்போது இந்தத் தொண்டர்கள் என்ன செய்யப் போகிறார்களோ?" என்று மனைவி குறுக்கிட்டாள்.

" அதைத்தான் நானும் சொல்லலாம் என்று இருந்தேன். அமாவாசைக்கோ, அமாவாசை கழித்த மறு நாட்களிலோ விமானப்படையெடுப்பு இருந்தாலும் ஒரு வகையாகத் தப்பித்துக்கொள்ளலாம். ஆனால் பத்து நாள்

கழித்து நல்ல நிலா வெளிச்சத்தில் ரங்கூன் பாழாய்ப் போகுமே! ஜப்பானியர் இந்த முறை நம்மைப் பொசுக்கி விடுவார்களே ?'' என்றேன்.

'' அதற்கு முன்னே நாம் எல்லோரும் போய்விட லாம்'ப்பா '' என்ருள் வாணி.

'' சொல்லம்மா ! சொல்லு! அம்மாவுக்குச் சொல்லு !'' என்றேன்.

வாணி வழக்கம்போல் சும்மா இருந்தாள். இது போன்ற நடுநிலை அவளுக்குப் பலநாளும் அனுபவமானது. இப்படித்தான் அம்மாவும் அப்பாவும் ஏதாவது சொல்லிக் கொண்டு '' நீ சொல்லு, நீ சொல்லு !'' என்று சொல்வார்கள் என்பது அவளுக்குத் தெரியும். அப்போதெல்லாம் எங்கள் இருவர் முகத்தையும் பார்த்துவிட்டுச் சும்மா இருப்பாள். இந்த இருளில் முகத்தைப் பார்க்க முடியா விட்டாலும் அதே தந்திரத்தைக் கையாண்டாள். பதி னெட்டு வயது நிரம்பிய பெண்ணுக்கு அவ்வளவு தந்திரம் வேண்டாமா ?

வாணியை அழைத்துக்கொண்டு ஊர்க்குப் போக வேண்டும் என்று அவ்ளிடம் பலமுறை வற்புறுத்தியது போல் அன்றும் வற்புறுத்தினேன். '' இந்த ஒரு பேச்சுத் தவிர வேறு ஏதாவது பேசலாம் ; இதைப் பேசுவதாக இருந்தால் பேசாமல் படுக்கைக்குப் போகலாம் '' என்று உறுதியான குரலில் பேசினள்.

'' வீடு வாசல் உடையவர்கள் பலரும் ஓடிப் போய்க் கொண்டிருக்கும் காலத்தில் இப்படி வெளியூரில் வாடகை வீட்டில் வாழ்கின்றவர்கள் பிடிவாதம் செய்யலாமா ?'' என்று சொன்னேன். எதிர் வீட்டார்-பாக்கியநாதன் வீட் டாருக்கு இரண்டு மோட்டார்கள் சொந்தமாக இருந்தும் கப்பலும் கிடைக்காமல், வேறு வழியும் இல்லாமல், அவர் கள் ஒரு மோட்டாரில் புறப்பட்டுச் சிறிது தூரம் போய் அங்கிருந்து கால்நடையாகப் போகத் துணிந்ததை எடுத் துச் சொன்னேன். என் கம்பெனித் தலைவர்களுள் ஒருவ ராகிய சாமிநாதன்வீட்டார் விலையுயர்ந்த வெள்ளிச்

சாமான்களை மட்டும் எடுத்துக்கொண்டு, அருமையான வீட்டையும் வீடு நிறையத் தட்டுமுட்டுச் சாமான்களையும் அரிசி முதலிய பண்டங்களையும் அப்படியே விட்டுவிட்டுப் போவதையும் எடுத்துரைத்தேன். இன்னும், அதிகாரிகள் சிலர் வீட்டாரை அனுப்பிவிட்டுத் தாங்களும் பயணத்துக்கு ஏற்பாடு செய்துகொண்டிருப்பதைச் சொன்னேன்.

இவ்வளவும் கேட்டுக்கொண்டே இருந்தவள் ஒரே ஒரு பதிலாகப் பழைய பல்லவியைப் பாடிவிட்டாள். "இந்தக் கதை தவிர வேறு ஏதாவது பேசலாம்" என்றாள். உடனே படுக்கைக்குச் சென்றாள். எப்போதும் இவ்வளவு கடுமையாகப் பதில் கொடுப்பதில்லையே என எண்ணிக் கொண்டிருக்கும்போது, தெருவில் மறுபடியும் பரபரப்பு காணப்பட்டது. சீழ்க்கைகள் மிகுந்தன. "விளக்கணை யுங்கள், விளக்கணையுங்கள்" என்ற ஆரவாரங்கள் எழுந்தன. தொண்டர்கள் காலடிச் சத்தமும் பெருகிற்று. மறுபடியும் சங்கு அழுதது. விமான ஒலி தெளிவாகக் கேட்டது. எதிரியின் விமானங்கள் என்று எல்லோர்க்கும் தெரிந்துவிட்டது.

அவள் படுக்கையிலிருந்து எழுந்து என்னிடம் வந்து "வாணியை அழைத்துக்கொண்டு எழுங்கள், கீழுக்குக் குப் போகவேண்டும்" என்று கையைப் பிடித்து இழுத்தாள். அவள் பேசிய குரலிலும் நடுக்கம் இருந்தது; பிடித்த கையிலும் நடுக்கம் இருந்தது. எழுந்தேன்; மூவரும் சென்றோம். ரப்பர்துண்டை வாயில் வைத்துக் கொண்டு கவிழ்ந்து கிடந்தோம். வெடிகுண்டு ஓசை கேட்கவே இல்லை. விமான ஒலி அடங்கிற்று. எதிரி திரும்பிப் போய்விட்டான் என்றார்கள். தெருவில் மெல்ல மெல்லக் காலடிச் சத்தம் கேட்டது. எல்லாரும் பேசத் தொடங்கினார்கள். நாங்கள் மேலே வந்து படுத்தோம்.

"பொன்முடி! இப்படி எத்தனை நாளைக்கு வாழ்வது? நாம் படுவது வாணியும் படவேண்டுமா? அவளாவது கவலை இல்லாமல் அம்மான் வீட்டில் இருக்கக்கூடாதா? நம்முடைய சொந்த ஊரில் எத்தனை நாள் எவ்வளவு விமானங்கள் பறந்தாலும் கவலை இருக்காதே! இந்த ஊரில்—உற்

ருர் உறவினர் இல்லாத இடத்தில் இப்படி ஆபத்துக்கு ஆளாவதா? குடும்பத்தோடு அழிந்து போகும்படி குண்டு விழுந்தால் ஒரே கவலையாய்ப் போகும்—கவலையே இல்லாமல் போகும். ஆனால், பகலில் நான் கம்பெனியில் இருக்கும் போது அன்றைக்கு வந்தாற்போல் எதிரி வந்தால் என்ன செய்வேன்? கம்பெனியில் எல்லாரும் இருந்தும் என் நெஞ்சம் நடுங்கிக் குலைகின்றதே! நான் கம்பெனியில் இருக்கும் போது, உங்களுக்கு ஆபத்து நேர்ந்தால் எப்படி மறுபடியும் வந்து பார்ப்பேன்?'' என்று சொல்லிவிட்டு மேலே பேச முடியாமல் நின்றேன்.

"அப்படியானால், நீயும் புறப்படு என்றுதானே சொல்கிறேன். எல்லாரும் போய் எங்கேயாவது ஒன்றாக இருந்து மடியலாம்'' என்றாள்.

நான் பதில் பேசாமல் இருந்தேன்.

"...அல்லது, வாணியை மட்டுமாவது அனுப்பிவிடலாம். அவள் உயிரோடு தாய்நாட்டுக்குப் போய்ச் சேரட்டும். நாம்இரண்டு பேரும் எந்தக்கதியாவது அடையலாம்'' என்றாள்.

நான் அதற்கும் பதில் பேசாமல் இருந்தேன்.

"வாணி! தூங்கிவிட்டாயா?'' என்று அவள் வாணியைக் கேட்டாள்.

"இல்லையம்மா! தூக்கம் வரவில்லை'' என்று அவள் அழுதுகொண்டே சொன்னாள்.

"நீ ஏன் வாணி அழுகிறாய்?'' என்று அவளுடைய கண்ணீரைத் துடைத்துவிட்டு வருந்தினேன்.

"என்னால் நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் இங்கே இருக்கிற வரைக்கும் உங்களோடு நானும் இருப்பேன். இல்லையானால் எல்லாரும் புறப்பபட்டுப் போகலாம். நான் மட்டும் தனியாக இருக்கமாட்டேன்'' என்று தழு தழுத்த குரலில் வாணி சொன்னாள்.

அமைதிச் சங்கு ஒலித்தது. எல்லாரும் நடுக்கமும்கவலை யும் நீங்கிக் கலகல என்று பேசினார்கள். மின்சாரப் பொத்தானைத் தட்டினேன், ஒளி வந்தது. பொன்முடியின் முகத்தையும் வாணியின் முகத்தையும் கண்டேன். அவர் களும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்து என்முகத்தையும் பார்த்தார்கள். அழுது அழுது சிவந்த கண்களும் ஊதலாய் மாறிய முகங்களும் கண்டு "இதுவோ குடும்பம்!" என்று நொந்தேன். வாணி கவிழ்ந்து படுத்து முகத்தை மறைத்துக் கொண்டாள். பொன்முடியோ முகத்தை அந்தப் புறமாகத் திருப்பிக்கொண்டாள். ஒளி கண்டதும் எங்கள் துயரத் தில் முக்கால் பங்கு திடீரெனக் குறைந்து விட்டது. துன் பம், நடுக்கம், பயம் இவைகளுக் கெல்லாம் இருள் துணை செய்வதாக இருக்கின்றது. இவைகளின் ஆற்றலைக் குறைப் பதற்கு ஒளி பெரு மருந்தாக இருக்கிறது. இருள் நம் பகை! ஒளி நம் நட்பு! விமானப் படையெடுப்பின் வாயி லாக எதிரி நம்மை நெருங்கும்போது இருள் என்னும் பகைவனை வலிய வருவித்து ஆட்சி தருகின்றார்கள், இந்த எ. ஆர். பி. தொண்டர்கள்.

நாற்காலியை விட்டு மெல்ல எழுந்தேன். சன்னலைத் திறந்து எட்டிப் பார்த்தேன். தொண்டர்கள் நடமாட்டம் கண்டேன். அவர்கள் பேசும் பேச்சைக் கேட்க வில்லை. அபாயம் என்பதன் அறிகுறியாக, போக்குவரத்து வண்டி களைத் தடுக்க வேண்டிய சிவப்பு விளக்கு ஒன்று எங்கள் வீட்டை அடுத்தாற்போல் வைத்துக்கொண் டிருந்தார்கள். கீழே இறங்கிச் செல்லப் புறப்பட்டேன்.

"எங்கே புறப்பட்டீர்கள்?" என்று மனைவி தடுத் தாள். "எந்த வீடு இடிந்தது என்று போய்ப் பார்ப்பதற் காக" என்றேன். "காலையில் பார்க்கலாம்" என்றாள். "ஒரு வேளை நம் வீடாகவே இருந்தால்—" என்றேன். "அப்படி இருந்தால் கூண்டோடு கைலாயம். எவ்வளவோ நல்ல முடி வாயிற்றே" என்றாள்.

திரும்பி வந்து படுக்கையில் படுத்தேன். நெடு நேரம் பேச்சில்லை. தெருவிலும் தொண்டர்கள் பேச்சும் நடையும் அடங்கிவிட்டன. வீட்டினுள்ளும் அமைதி நிலவிற்று.

" தூங்கிவிட்டாயா ?" என்றேன்.

" இன்னும் இல்லை " என்றாள்.

" என்ன யோசனை ?"

" சொல்வதற்கு ஒன்றும் இல்லை. நீங்கள் கம்பெனி வேலையை விட்டுவிடுங்கள்."

" அப்புறம் ?"

" பிச்சை எடுத்து வயிறு வளர்க்கலாம்."

" வேளைக்குக் காப்பியும் பிச்சை கொடுப்பார்களா ?"

" அதுவும் கிடைத்தாலும் கிடைக்கும்."

" வாணியைச் செல்வக் குழந்தையாக வளர்ப்பதற்கும் பிச்சை கிடைக்குமா ?"

" அவள் ஏழைவீட்டுப் பெண்ணாகத்தான் வளரட்டுமே! அறிவு வளர்வதற்கு பணம் வேண்டுமா ?"

" மாதம் ஏழெட்டு ரூபாய்க்குத் தமிழ்ப் புத்தகங்களும் பத்திரிகைகளும் வாங்கி அவளுக்குக் கொடுப்பவர் யார் ?"

சிறிது நேரம் பதில் இல்லை. ஒரு பெருமூச்சு மட்டும் வந்தது. கீழ் அடுக்கில் இருப்பவர் யாரோ பெருத்த கொட்டாவி விட்டார். ஒரு நாய் குரைக்கத் தொடங்கியது. முழுதும் குரைக்காமல் அடங்கியது. அதற்கு எதிராகக் குரைத்து ஊக்கம் கொடுக்கும் நாய் இல்லை என்று தெரிந்தது. இப்படியே, எதிர்க்கும் நாடு இல்லாதிருந்தால், போருக்குள் எழுகின்றநாடும் அடங்குமேஎன எண்ணினேன். பக்கத்து வீட்டில் சன்னல் பக்கம் படுத்துக் கொண்டு வல்லமையாகக் குறட்டை விட்டுக்கொண்டு ஒருவர் தூங்கு வது வழக்கம். அந்த ஒலி நள்ளிரவில் மோர் கடைவது போல் கேட்டுக்கொண்டிருக்கும். அவரும் தமிழ் நாட்டவரே. அவர் ஊருக்குப் போக வேண்டுமென்று எப்படியோ முன்னேற்பாடு செய்து கடையைச் சுருட்டிக் கொண்டு கப்பல் கிடைக்கும் போதே போய்விட்டார். அந்த வீட்டில் அந்தப் பகுதி காலியாகக் கிடந்தது. எதிர்

வீட்டில் பெரிய செல்வர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவருடைய மகன் கல்லூரியில் படிப்பவன். அவன் நாள்தோறும் இரவில் பத்து மணிக்கு மேல் தேநீர் குடித்துவிட்டு நெடு நேரம் படித்துக்கொண் டிருப்பான். ஒவ்வோர் இரவிலும் ஏதாவது நாவலில் நூறு பக்கமாவது படிக்காமல் அவன் தூங்குவதே இல்லையாம். ஆனால், அவனுடைய தகப்பனார் இரவு ஒன்பது மணிக்கே படுத்துக்கொண்டு நள்ளிரவில் ஒன்று அல்லது இரண்டு மணிக்கே விழித்துக்கொண்டு நடை பழகிக் கொண்டிருப்பார். ஆகவே, மகன் படுக்கப் போனவுடனே தகப்பனார் விழித்துக்கொண்டு கடமையைத் தொடங்குவார். அதனால் எதிர் வீட்டிலிருந்த எங்களுக்குப் பெருந் தொல்லையாக இருக்கும். அந்த எதிர் வீட்டாரும் வீட்டைப் பூட்டிவிட்டு வேலைக்காரனிடம் சாவியைக் கொடுத்து விட்டு, ஐநூறு ரூபாய் லஞ்சம் கொடுத்துக் கடைசிக் கப்பலில் எப்படியோ இடம் தேடிப் பெற்றுப் போய்விட்டார்கள். எங்கள் வீட்டிலும் நாள்தோறும் சினிமாவுக்குப் போய்க் கடைசி ஆட்டம் பார்த்துவிட்டுப் பன்னிரண்டு மணிக்கு வந்து கதவைத் தட்டும் பேர்வழிகள் இரண்டு பேர் குடியிருந்தார்கள். அவர்களில் ஒருவர் போய்விட்டார். இன்னொருவர், "பாழாய்ப் போன சண்டை வந்தது. கடைசியான மூன்றும் காட்சியை நிறுத்திவிட்டார்கள். சாயங்காலம் ஆறு மணிக்கே சினிமாவுக்குப் போய்ப் பார்த்துவிட்டு ஒன்பது மணிக்கு வீடு திரும்ப வேண்டுமாம். என்ன அநியாயம் இந்தச் சர்க்கார் செய்வது!" என்று காரணமில்லாமல் சர்க்காரைத் திட்டிக் கொண்டிருக்கிறார். அவர் ஒரு மணிக்கு முன் தூங்கிப் பழகாததால் இப்போது தூக்கமே பிடிக்கவில்லை என்று எந்நேரமும் கனைத்துக்கொண் டிருக்கிறார். இன்னொருவர் காச நோயாளியாக இருந்தார். அவர் அடிக்கடி இரவில் நோய்த் தொல்லைப் பட்டு "ஹா—ஹீ—அம்மாடா—அப்பாடா" என்று பெருந் துன்பப்பட்டுக்கொண் டிருப்பார். அவர், "எப்படிப் போவது? என் உடம்புக்குப் பயணம் ஒத்துக்கொள்ளாதே! நோய் அதிகமாகப் போய்விடுமே! போகிற வழியில் நோய் வந்துவிட்டால் செத்துப் போவேனே!" என்றெல்லாம் பிதற்றிக்கொண் டிருந்தார்.

பாவம்! அந்த மனிதரும் புறப்பட்டுப் போய் ஐந்து நாள் ஆயின. அவர்க்குக் கப்பல் கிடைத்த காலத்தில் போக மனமில்லை. கடைசியில் காலால் நடந்து போகத் துணிந்து போய்விட்டார். கால்மைல் தொலைவு நடந்து போக வேண்டுமானால் பெருமூச்சு இழுத்து வேதனைப் படுகிறவர் நூற்றுக் கணக்கான மைல் நடந்து போய்ச் சேர முடியுமா? எனக்கு எள்ளளவும் நம்பிக்கை இல்லை. அவர் குண்டுக்குத் தப்பிப் போய் வழியில் திக்கற்ற பிணமாய் விடுவார். நினைத்தாலும் வருத்தமாக இருக்கிறது. இவற்றை விடப் பெரிய துன்பம் இது! அந்தப் பழைய வேலைக்காரி எப்படியோ போகத் துணிந்து புறப்பட்டுவிட்டாள். கப்பலில் போகக் காசு இல்லாமல் கலங்கினாள். கடைசியில் இரண்டு முறை விமானப் படையெடுப்பைக் கண்டதும் நடந்து போகத் துணிந்தாள்! போய்விட்டாள்! ஒன்பது மாத கருப்பம் நிறைந்தவள்—நிறைந்த பிள்ளைத்தாய்ச்சி! சொன்னாலும் கேட்காமல் போய்விட்டாள். சொல்லித் தடுக்கவும் வழியில்லை. என்ன என்று சொல்வது? இப்படி யெல்லாம் எண்ணிப் படுக்கையில் புரண்டுகொண்டிருந்த போது பொன்முடி பேசத் தொடங்கினாள்.

"வேலையை விட்டுவிடுங்கள்" என்றாள்.

"இன்றைக்குக் காலையிலேயே விட்டுவிடத் துணிவேன். அப்புறம் பிழைப்பது எப்படி? இத்தனைக் காலமாய் 150 ரூபாய் சம்பளம் கொடுத்துவந்தவர்கள் இப்போது எதிர்பாராதவாறு 300 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள்" என்றேன்.

"ஆபத்துக் காலத்தில் ஆசை ஊட்டுகிறார்கள். இது நல்லெண்ணத்தால் செய்வது அல்ல."

"உண்மைதான். இருந்தாலும் இதை விட்டால் 30 ரூபாய்க்கு வழி இல்லையே. தவிர, ஆபத்துக் காலத்தில் நம்பினவர்களைக் கைவிடலாமா?"

"நீதான் இப்படி அரிச்சந்திரனாக இருக்கிறாய். போன வாரத்தில் நாலைந்து பேர் சொல்லாமல் விட்டுவிட்டுப் போனார்களே, நீ தானே சொன்னாய்."

"அதனால்தான் இப்போது கம்பெனி கலகலத்து நெருக்கடியாக இருக்கிறது. இந்த வேளையில் நானும் விட்டுவிட்டுப் போவது துரோகமாக இருக்குமே! தவிர கம்பெனித் தலைவர் என்னை நேரில் கூப்பிட்டு 'உன்னைத் தான் நம்பி விட்டுவிட்டுப் போகிறோம்' என்று சொன்ன ஒரு சொல்லை எப்படி மறக்க முடியும்?"

"கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை. கம்பெனியையும் காப்பாற்ற வேண்டும். குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டும். குள்ளர்கள் படையெடுப்பு நிற்கிற வரையில் எப்படி நடக்கும்? இரண்டும் கெடவேண்டியதுதான்."

"இல்லையே! கம்பெனியை இங்கே உறுதியாக நிலைக்க வைத்துக் காப்பாற்றும் எண்ணம் இல்லையே. ஏறக்குறைய முக்கியமான பொருள்களும் கணக்குகளும் கல்கத்தா போய்ச் சேர்ந்துவிட்டன. இன்னும் இருப்பதை ஏறக் கட்ட இரண்டு வாரந்தான் ஆகும். அதற்கப்புறம் கவலை யில்லை. நான் இந்த இரண்டு வாரமும் இங்கே இருந்து உழைத்துவிட்டால், அப்புறம் நான் எங்கே இருந்தாலும் கல்கத்தாவில் மானேஜரிடமிருந்து மாதம் முந்நூறு ரூபாய் வந்துவிடுமே. அதைத்தான் விட மனமில்லை."

"அந்த இரண்டு வாரம் வரையில் நாங்களும் இங் கேயே இருந்துவிடுகிறோம்."

"இந்த இரண்டு வாரத்தில் ரங்கூன் பிடிபட்டுவிடும் என்று சொல்லுகிறார்களே!"

"நாமும் அகப்பட்டுக்கொள்ளலாம். எங்கேயாவது நாம் ஒரு குடும்பமாய் வாழ வேண்டும், அவ்வளவுதானே!"

"இந்த இரண்டு வாரத்தில் வீட்டிற்கு ஏதாவது ஆபத்து வந்தால்—அல்லது—"

"கம்பெனிக் கட்டிடத்தின்மேல் குண்டுவீழ்ந்தால்—"

"நான் ஓரிடம், நீங்கள் ஓரிடமாக இருந்து மடிய வேண்டுமா?"

"அதனால்தான் அந்த முந்நூறு ரூபாய் சம்பளம் வேண்டாம் என்கிறேன். நம் குடும்பத்தைப் பாழாக்கு வதற்குப் போட்ட தூண்டில் அது. வேண்டாம், புறப் படுங்கள்."

"நம்ம வாணியை மட்டும் முன்னே அனுப்பிவிட் டால் நல்லது அல்லவா? அங்கே சென்னையில் உன் அண் ணன் வீட்டில் யாராவது கொண்டுபோய்ச் சேர்க்க மாட் டார்களா?"

"அண்ணன் வீட்டில் அண்ணி இருக்கிறாள். வாணி யைப் பார்த்ததும் அவளுக்கு வயிறு எரியுமே! தலைமுறை தலைமுறையாய்ப் பகையை வளர்த்துப் பண்படுத்தி உறவு என்று பெயரிட்டுப் புழுங்கும் தமிழ்க் குடும்பப் பேச்சு இப்போது எதற்காக?"

"போகட்டும். நண்பர் நீலமேகன் நாளைக்குப் புறப்பட இருக்கிறார். அவரோடு வாணியை அனுப்பினால் நல்லது என்று எண்ணுகிறேன்."

அதைக் கேட்டதும் அவள் பதில் சொல்லாமல் திரும் பிப் புரண்டாள்; சிறிது நேரம் அமைதியாக இருந்தாள். கீழே யாரோ குழாயைத் திருப்பிவிட்டுத் தண்ணீர் பிடித் தார்கள். பொழுது விடிந்துவிட்டதோ என ஐயுற்றேன். குழாய் மூடப்பட்டது. மனைவியை நோக்கினேன். அவள் தூங்கவில்லை என்று தெரிந்தது. ஒரு தும்மல் தும்மினாள்.

"பொன்முடி!" என்று அழைத்தேன்.

"உன்னோடு என்ன பேசியும் பயனில்லை. சும்மா இருப்பதே நல்லது" என்றாள்.

நீலமேகனுடைய பேச்சை எடுத்தாலே அவள் வெறுப் பைக்காட்டுவது வழக்கம். அவன் அவசரக்காரன் என்ற ஒரு குறை தவிர, வேறு ஒன்றும் சொல்ல முடியாது. அவனு டைய குடும்ப வாழ்க்கை ஒழுங்குபடவில்லை. அதைத்தான் மற்றொரு குறையாக எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். எனக்கு அது அவன்குறையாகப் படவில்லை. பொருத்த மான துணைவியாக இல்லாத காரணத்தால் அவன்மனம்

அவளிடம் பொருந்தவில்லை. குடும்பத்தைத் தொல்லையாக நினைத்துவிட்டான். அந்த மனைவியை நல்ல முறையில் நடத்துவதில்லை. வீட்டை ஒரு சிறிய உணவுவிடுதியாக நினைத்து வாழ்க்கையைக் கழிக்கிறான். ஆனால் அது பொன் முடிக்குப் பிடிக்கவில்லை. அவனைக் கண்டாலும், "மனைவியை ஒழுங்காக நடத்தத் தெரியாத ஒருவர் எவ்வளவு கற்றாலும் பயனில்லை, அவரோடு பழகுவதும் பாவம்!" என்று வெறுப்பாள். நானே, அது முதலில் ஏற்பட்ட குறை, அது தீர்வதற்கு வழியில்லை; அது தவிர மற்றெல்லாத் துறையிலும் அவன் நல்லவன் என்றே நம்புகிறேன். நீலமேகன் தவிர வேறு எவரிடமும் வாணியை ஒப்படைக்க எனக்கு மனமில்லை. வேறு யார் தெரிந்தவர் புறப்படுகிறார் என்று எண்ணலானேன்.

திடீரென்று, வாணி, "அம்மா, அம்மா, எங்கேபோய் விட்டாய் அம்மா!" என்று அலறி எழுந்து உட்கார்ந்தாள். மனைவியும் நானுமாக அப்படியே குழந்தையை அணைத்துக் கொண்டு, "என்ன கனவு கண்டாய்? என் பயந்தாய்?" என்று கேட்டோம். "எங்கேயோ குண்டு விழுந்தது போல் கனவு கண்டேன் அப்பா" என்றாள். அவள் பயந்து நடுங்கிய நடுக்கம் தீரவில்லை. அவளை அப்படியே பொன்முடி தன் பக்கத்தில் படுக்கவைத்துக்கொண்டாள். நான் எதையோ எண்ணிக்கொண்டே இருந்து உறங்கி விட்டேன்.

காலையில் எழுந்து வழக்கம்போல் கடமையைச்செய்து கம்பெனிக்குப் புறப்பட்டேன். நான்கு ஐந்து வீடு கடந்து குண்டு விழுந்ததுபோல் கேட்டது. அது ஏறக்குறைய முப்பது வீடுகள் கடந்து விழுந்திருந்தது. அந்த வழியே பாலைவனம்போல் ஆயிருந்தது. நெடுந்தூரம் அப்படி இருந்தது. வழியில் இருந்த இரண்டு உணவுவிடுதிகளில் முந்திய நாள் இரவு வரையில் வேலை செய்துகொண் டிருந்தார்கள். இப்போது போகும்போது அவைகள் மூடப்பட்டிருப்பதைக் கண்டேன். குண்டு விழுந்த இடத்திற்கு அருகே குடியிருந்தவர்களும் விடியற்காலையில் புறப்பட்டு எப்படியோ எங்கோ போய்விட்டிருக்க வேண்டும். என்



காமரா

வீட்டைச் சுற்றியுள்ளவர்களும் அவ்வாறு புறப்படுவார்களானால், அந்தப் பகுதியும் பாலைவனம் ஆகிவிடும். அப்புறம் அங்கே தனியாக மனைவியையும் வாணியையும் விட்டுவருவதும் பிழையாகிவிடும். பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் சர்க்கார் கப்பல் வசதி செய்து கொடுத்தபோது வாணியை அனுப்பத் தவறிவிட்டோமே என்று வருந்தினேன். பள்ளிக்கூடம் மூடி இரண்டு வாரமாகியும், அவளை இன்னும் வீட்டில் எங்களோடு வைத்துக்கொண்டிருப்பது எவ்வளவு குற்றம் என்று நொந்துகொண்டேன்.

எதிரில் வலக்கைப் பக்கமாக இருந்த தெருவிலிருந்து ஒரு வண்டி வந்தது. அந்த வண்டியில் சில மூட்டைகளும் குழந்தைகளும் இருந்தன. தொடர்ந்தாற்போல் இருபது முப்பது பேர் ஆளுக்கு ஒரு மூட்டை எடுத்துக்கொண்டு நடந்தார்கள். நகை மூட்டைகளோ, உணவுப்பொருள் மூட்டைகளோ என்று எண்ணினேன். அவர்கள் நெருங்கி வந்ததும், முகங்களில் வாட்டமும் கண்களில் கலக்கமும் கண்டேன். சிலர் கண்ணீர் வடித்துக்கொண்டே நடந்தார்கள். உயர்ந்த ஆடை உடுத்திச் செல்வமாக வாழ்ந்த மெல்லிய பெண்களும் நான்குபேர் அவர்களிடையே இருந்தார்கள். ஏழையையும் செல்வனையும் மடுவும் மலையும் போல் தாழ்த்தி உயர்த்திப் பிரித்துவைத்திருந்த இந்த நகரம் இப்போது எல்லோரையும் கால்நடைப் பிராணிகளாகச் செய்துவிட்டதே என்று வியப்புற்று வருந்தினேன்.

கம்பெனியை நெருங்கினேன். எனக்காக நீலமேகன் காத்திருப்பதைக் கண்டேன். அவனைக் கண்டதும் எனக்குச் சென்னையைக் கண்டதுபோன்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. அவனும் நானும் சென்னையில் ஒன்ருகப் படித்தவர்கள். சென்னைக் கடற்கரையில் கைகோத்துத் திரிந்தவர்கள். கடைத்தெருவில் கலந்து பொழுதுபோக்கியவர்கள். பச்சையப்பன் பள்ளிக்கூடத்தில் பல ஆண்டுகள் படித்துப் பழகியவர்கள். நான் வேலையில்லாத் திண்டாட்டத்தால் வருந்தி இந்த நகரத்தை வந்தடைந்தேன். அவனும் அவ்வாறே வந்து சேர்ந்தவன். எத்தனையோ வகையில் அவன் என்னைவிட வல்லவனுக இருந்தும், அவனைப் பலரும்

வெறுக்கின்ருர்கள். நான் மட்டும் அவனைக் கைவிட்டதும் இல்லை; கைவிட எண்ணியதும் இல்லை. அவன் என்னிடம் ஒளி மறைவின்றிப் பேசிப் பழகுவான். அப்படிப்பட்ட கரவற்ற நண்பனை அப்போது கண்டதும் எனக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது. ரங்கூன் படிப்படியே பாலைவனமாகி உயிரற்றுச் சாகும் நாளில், அதில் வாழும் என்போன்ற வர்களைக் கலங்காமல் காக்கவல்லவர்கள் யார்? மனைவியும் மகளுமே. அவர்களுக்கு அடுத்தபடி இந்த நீலமேகனே.

"ஆறுமுகம்! இனிமேல் ஒரு நொடிப்பொழுதும் இங்கே தங்கக் கூடாது. எப்போது பயணம்?" என்று ஆத்திரத்தோடு என்னை நெருங்கிக் கேட்டான்.

"இப்போது இல்லை" என்றேன்.

"வழக்கம்போல் வேதாந்தம் குறுக்கே தடுக்கின் றதோ?" என்ருன்.

அதற்குள் கம்பெனி வேலையாள் என்னை நோக்கி, "சார், மானேஜர் உங்களுக்காகக் காத்திருக்கிருர்" என் ருன். உடனே, நீலமேகனைக் கைப்பிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே சென்று உட்கார வைத்துவிட்டு மானே ஜருடைய அறையை நோக்கிச் சென்றேன். அவரே எதிரில் வந்துகொண்டிருந்தார். நெருங்கி வந்ததும், "ஆறுமுகம்! நான் குடும்பத்தில் எல்லோரையும் அனுப்பிவிட்டேன். நானும் இன்றைக்குப் புறப்படப் போகிறேன். கல்கத் தாவிற்குத் தந்தி கொடுத்திருக்கிறேன்; பதில் வரும். வந்த தும் சொல்லிவிடு. எல்லாம் அரைசாண் வயிற்றுக்குத் தான். கடவுள் இருக்கிருர். சரிதானே! வரட்டுமா?" என்று சொல்லிவிட்டுச் சாவியை என்னிடம் கொடுத்து விட்டு நடந்துகொண்டே இருந்தார். நான் வாயைத் திறந்து ஒன்றுமே சொல்லவில்லை; சொல்ல வேண்டும் என்று அவரும் எதிர்பார்க்கவில்லை என்று தெரிந்தது. ஊரெல்லாம் ஏதோ ஒரு தொத்துநோய் போல் முகத்தில் வாட்டமும் சோர்வும் கவலையும் சில நாளாகக் கண்டுவரு கின்றேன். ஆனல், முதல்முதலாகப் பைத்தியத்தின் அறி

குறியைக் கண்டது அவர்முகத்தில்தான். நான் பின் தொடர்ந்து சென்றேன். அவர் திரும்பிப் பார்த்தார்.

“ இப்போதே பயணமா ?” என்று கேட்டேன்.

“ அதெல்லாம் அப்புறம் பேசிக்கொள்ளலாம் ; போய்வரட்டுமா ?” என்ருர்.

“ வண்டி பேசிவரச் சொல்லட்டுமா ?” என்று கேட்டேன்.

“ ஆறுமுகம் ! போய் வரட்டுமா ?” என்ருர். நான் கேட்டதற்கும் அவர் சொன்னதற்கும் தொடர்பே இல்லை.

“ நண்பர்—எனக்குத் தெரிந்தவர்—நீலமேகன் என்று ஒருவர்—அவரும் புறப்படப் போகிருர் ” என்று சொல்லி முடிப்பதற்குள், நடந்து கொண்டே “ அதெல்லாம் அப்புறம் பேசிக் கொள்ளலாம் ” என்ருர்.

“ அவரும் இப்போது புறப்பட இருக்கிருர். நீலமேகன்—இதோ வந்திருக்கிருர், உங்களுக்கு நல்ல துணையாக இருப்பார். தனியே போவதைவிடத் துணை நல்லது ” என்று நானும் நடந்துகொண்டே வாயிலைக் கடந்து போன பிறகு சொன்னேன்.

“ எல்லாம் தந்தியில் கல்கத்தாவுக்குத் தெரியப்படுத்து. இப்போதே தந்தி கொடுத்துவிடு. ஆறுமுகம்! போய் வரட்டுமா ?” என்று விட்டு விட்டுப் பல சொற்களைச் சொல்லிக்கொண்டே விரைவாக நடந்தார். நான் நின்றேன். அவர் திரும்பிப் பார்க்கவில்லை. எனக்குக் கண்ணீர் கலங்கியது. பேயோடு பழகினுலும் பிரிவு பிரிவுதானே ! எட்டு ஆண்டுகளாய்ப் பழகினேன். எங்களுக்குத்தலைவராய் விளங்கினர். குடும்பத்தை அனுப்பி ஆறுநாட்கள் ஆய்விட்டன. ஆறுநாட்களாய் உணவு உண்ணவும் மனமில்லாமல், “ எப்படி நடந்துபோனுளோ? என்னபாடு படுகிருளோ ?” என்று மனைவியைப் பற்றி எங்களிடமெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார். திடீரென்று ஒருநாள் காலையில் அரைப் பைத்தியமாய் மாறிவிட்டார். சாவியும் பொறுப்பும் சட்டென்று கொடுத்துவிட்டு ரங்கூன் தெருவில் காலால்

நடந்தார். சொந்த மோட்டார் நின்ற இடத்திலேயே நிற்கின்றது. ஓட்டுவார் இல்லை. ஐம்பது ரூபாய்ச் சம்பளம் வாங்கிய அவருடைய டிரைவர் இரண்டு வாரத்திற்கு முன்னமே அறிவோடு திரும்பிப் போய்விட்டான். ஐந்நூறு ரூபாய்ச் சம்பளமும் லாபத்தில் பங்கும் வாங்கிய மானேஜர் அறிவு கலங்கி நடந்து சென்றார்.

திரும்பினேன். நீலமேகன் குறிப்பாகத் தெரிந்து கொண்டான். அவனுக்காக விளக்கமாகச் சொன்னேன். யாராவது மோட்டார் ஓட்டத் தெரிந்தவர்கள் கிடைப்பார்களா என்று கேட்டேன்.

"மோட்டாரில் போவது பெரிய இடையூறாக இருக்கிறது. அதைவிட மானேஜர் செய்வதுதான் சரி. மோட்டாரில் சென்றால், பெரிய பாதைகளில்தான் செல்லவேண்டும். அங்கங்கே கிராமங்களில் பர்மாக்காரர்கள் வழி மறித்துக் கொள்ளையடிக்கின்றார்கள். சில சமயங்களில் உயிருக்கே ஆபத்து ஏற்படுகிறதாம். எரிகிற வீட்டில் பிடுங்கினவரைக்கும் லாபம் என்பது இப்போது இந்த நாட்டில்தான் நடக்கிறது" என்றான்.

நான் நம்ப முடியவில்லை. அவனும், "எவ்வளவு உண்மையோ, தெரியாது. கேள்விப்பட்டதைச் சொன்னேன்" என்றான். "அப்படியானால் மாட்டுவண்டியாக இருந்தால் நல்லது. அதாவது ஒன்று வாடகை பேசி அனுப்பலாம் என்றால்—" என்றேன்.

"அதுவும் முடியாது" என்று முழுதும் சொல்லத் தொடங்கினான். இப்போது மாட்டுவண்டிக்காரர்களுக்குச் சொல்லமுடியாத வரும்படி! கொள்ளை வரும்படி! மைலுக்குப் பத்து ரூபாய் வாடகை கேட்கிறார்கள். அதுவும் இன்று காலைமுதல் கிடைப்பதில்லை. பர்மாக்காரரின்வண்டிகள்தான் கிடைக்கின்றன. அதில் போக எல்லாரும் இப்போது பயப்படுகிறார்கள். நகையும் வெள்ளிச் சாமானும் பணமும் எடுத்துக்கொண்டு எல்லோரும் போவதால், அந்த வண்டிக்காரர் எங்கே ஓட்டிக்கொண்டு போய் என்ன செய்வார்களோ என்று எல்லாரும் அஞ்சுகிறார்கள்.

நாட்டுப்புற வழிகள் முன் பின் தெரியாத வழிகள். அங்கெல்லாம் என்ன செய்தாலும் செய்யலாம். எனக்கும் உனக்குங்கூட என்ன தெரியும்? ரங்கூனை விட்டு மூன்றுவது மைலில் உள்ள கிராமம் தெரியுமா? பர்மாக்காரர்கள் தானே அங்கெல்லாம் இருக்கிறார்கள். இது அவர்களுடைய நாடு. அவர்கள் இட்டது சட்டம்" என்றான்.

"நம்மவர்கள் வண்டிக்காரர்கள் யாரும் கிடைக்க மாட்டார்களா? என்று கேட்டேன். "நம்மவர்கள் சிலரே வண்டி ஓட்டி வாழ்கின்றவர்கள். அவர்களும் இப்போது புறப்படுகிறார்கள் அல்லவா? அவர்களுடைய குடும்பத்தாருக்கும் வேண்டியவர்களுக்கும் போக இடமிருந்தால் மற்றவர்களுக்கு வாடகைக்குக் கிடைக்கும். அவர்கள் வண்டியை ஓட்டிக்கொண்டு போய் மலைவழி வந்ததும் வண்டியை அங்கேயே விட்டுவிடுவார்களாம். அப்புறம் மூட்டைகளை மாட்டு முதுகில் போட்டுக்கொண்டு மலைவழியில் மாட்டை ஓட்டிக்கொண்டு போவார்களாம். மோட்டார் வைத்திருந்தவர்கள் திண்டாடும்போது இவர்களுக்கு நல்ல காலம் வந்திருக்கிறது. ஆனைக்கு ஒரு காலம், பூனைக்கு ஒருகாலம்" என்றான்.

நடந்து செல்வதுதான் உயிர் தப்பும் வழிஎன்றான் நீலமேகன். அதுவும் நாலைந்து பேராக நடந்துபோகாமல், நூறு நூற்றைம்பது பேராக நடந்து போனால் ஆபத்து இல்லை என்றான். வண்டியை விடச் சிறந்த கருவி அவனுக்குக் கிடைத்தது. "என் எதிர்வீட்டுக்காரர்கள் கப்பலில் போய்விட்டார்கள். அவர்கள்வீட்டில் ஒரு சைக்கில் இருந்தது. யாரும் கேட்பார் இல்லாத காலம். நான் நேற்று இரவு அந்த வீட்டுப் பூட்டை உடைத்து அந்தச் சைக்கிலை எடுத்து வைத்திருக்கிறேன். அதில்தான் ஏறிப் போகப் போகிறேன். மலைவழி வந்தாலும் கூடியவரைக்கும் தள்ளிக்கொண்டு போகலாம்" என்றான்.

எனக்கும் சைக்கில் விடத் தெரியும் என்று எண்ணியவுடனே, என்குடும்பத்தையும் நீலமேகன் குடும்பத்தையும் பற்றிஎண்ணினேன். "நீலமேகன்! நீ மட்டும் சைக்கிலில் போனால், உன் மனைவி எப்படி?" என்று கேட்டேன்.

"அவள் போய் ஐந்து நாள் ஆயின" என்றான். ஒருவாறு ஆறுதல் அடைந்தேன்.

"நீயும் கம்பெனி சைக்கில் எடுத்துக்கொண்டு புறப்படு" என்றான்.

"நான் எப்படிப் புறப்படுவது? மானேஜரையும் நம்பாமல் தலைவர் என்னிடம் சொல்லிவிட்டுப் போனாரே!" என்று சொல்லி முடிப்பதற்குள், தந்திச் செய்தி வந்தது.

அது கல்கத்தாவிலிருந்து வந்தது. என் பெயருக்கே வந்தது. செய்தி:

> **மானேஜர் தாறுமாறாகச் செய்தி அனுப்பினார். என்ன காரணம்? உண்மையாகப் புறப்பட்டுவிட்டாரா? அப்படியானால், நம்பிக்கை உன்மேல். இன்னும் சில நாள். அவசரமாகப் புறப்படாதே. பொறுப்பு முழுதும் உன்மேல். கடைசி உதவி. இன்னும் நான்குநாள் இருந்தால் போதும். நன்றி மறவோம்.**

இந்தச் செய்தியைக் கண்டதும் எனக்குத் துணிவு பிறந்தது. உயிர்போனாலும் போகட்டும், இன்னும் நான்கு நாள் இருந்தே தீர்வேன் என்று துணிந்தேன். நீலமேகனிடம் துணிவைச் சொல்லிச் செய்தியும் காட்டினேன்.

"நீ ஒரு பைத்தியம்! ஆபத்து வந்தபோது, இந்தக் கதையெல்லாம் சொல்வார்கள். நீதான் ஏமாந்தவன் என்று தெரிந்துகொண்டார்கள்" என்றான்.

என் மனம் கலங்காமல் தெளிவை அடைந்தது. அவன் என்ன சொல்லியும் நான் பொருட்படுத்தவில்லை.

"சரி, உன் குடும்பத்தையாவது அனுப்பப் போகிறாயா? இல்லையா?" என்று கேட்டான்.

"நீதான் சைக்கிலில் ஓடப்போகிறாயே! உன்னை நம்பிப் பயன் என்ன?" என்றேன்.

" உன் மனைவியும் மகளும் வருவதாக இருந்தால் சைக்கிலைத் தள்ளிக்கொண்டு போவேன். அவ்வளவு உதவியும் என்னிடம் எதிர்பார்க்கக்கூடாதா ?" என்ருன்.

மனைவியின் மனம் எனக்குத்தான் தெரியுமே அவள் அவனேடு செல்லவேமாட்டாள். அது அவனுக்கும் தெரியும். இருந்தாலும் நட்பு முறைக்குக் கேட்டான். நான் வேறு ஆட்களோடு சேர்த்து அனுப்புவதாகச் சொல்லி அவனுக்கு விடை கொடுத்தேன். உண்மையாகவே கலங்கி நின்ருன். என்னேடு நெடுங்காலம் பழகிய நண்பனை மறுபடியும் எங்கே காண்பேனே என்ற ஏக்கமும் துயரமும் என் வாய்ச் சொல்லைத் தடுத்தன. மேற்கொண்டு ஒன்றும் பேச முடியவில்லை. அவன் கைகூப்பினன், நானும் கைகூப்பினேன். திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தான்.

என்னைப் பொறுத்த வரையில் அவர் எப்போதும் இவ்வளவு பிடிவாதம் செய்ததே இல்லை. இப்போது நான் சொல்லும் சொல்லைக் கேட்கவும் அவர்க்கு மனம் இல்லை. தம் சொல்லுக்கு மாறு சொல்லாமல் கீழ்ப்படிதலே வேண்டும் என்கிறார். சில வேளைகளில் அப்படி நடந்தாக வேண்டும் என்று பொதுவான அறிவுரையும் கூறி வற்புறுத்துகிறார்.

அரசாங்கமும் மக்களை இப்படித்தான் நடத்துகிறது; இப்படித்தான் சொல்லுகிறது. சில வேளைகளில் மாறான செயலையும் மாறான சொல்லையும் அரசாங்கம் அடியோடு வெறுக்கின்றது. எல்லாருக்கும் வாக்குரிமையும் பேச்சுரிமையும் கொடுத்து ஊக்கப்படுத்தும் அதே அரசாங்கம் சில வேளைகளில் வாயைத் திறந்து உண்மையைப் பேசுகின்றவர்களை எல்லாம் சிறைப்படுத்துகின்றது; தண்டிக்கின்றது; வதைக்கின்றது; கொல்கின்றது.

'சில வேளைகளில்' என்று ஏன் சொல்ல வேண்டும்? போர்க் காலத்தில் என்று ஒரு காலத்தைக் குறிப்பிட்டால் போதுமே! ஜனநாயக அரசாங்கமெல்லாம் போர் வந்த மறுநாளிலேயே கொடுங்கோல் அரசாங்கமாக அல்லது தனி மனிதன் ஆட்சி முறையாக மாறிவிடுகின்றன. ஒருவன் சர்வாதிகாரியாகத் தோன்றி விருப்பம் போல் மக்களை ஆட்டி வைக்கின்றான்.

போர்க் காலத்தில் அரசாங்கத்தின் குறையை ஒருவரும் வாய் திறந்து பேசக்கூடாது. அரசாங்கத்திற்கு ஒருவரும் ஒன்றும் அறிவுரை சொல்லக்கூடாது. அரசாங்கம் சொல்வதெல்லாம் உண்மை என்று நம்ப வேண்டும். எதிரிகள் சொல்வதெல்லாம் பொய் என்று தள்ள வேண்டும். அரசாங்கம் செய்வதெல்லாம் நன்மை என்று கொள்ள

வேண்டும். எதிரிகள் செயல் எல்லாம் அட்டூழியம் என்று வெறுக்க வேண்டும். அரசாங்கம் விதிக்கும் வரி எல்லாம் முறை என்று கட்ட வேண்டும். எதிரிகளைப் புகழ்ந்து பேசியதாக ஒருவனைப் பற்றிக் கனவு கண்டாலும் அவனை முன்னே தொலைத்துவிட வேண்டும். அரசாங்கம் 'ஊரை விட்டுப் போ' என்றால் போய் விட வேண்டும்; 'வா' என்றால் வந்துவிட வேண்டும். போர் வேளையில் நன்மை தீமை ஆராய்ச்சிக்கு இடந் தருவதே இல்லை. கண்ணை மூடி நம்ப வேண்டும். சொன்னபடி செய்ய வேண்டும்.

போர்க் காலத்தில் நாட்டில் புகுந்த ஆட்சி முறையை வீட்டிலும் புகுத்த வேண்டும் என்பது அவர் எண்ணமோ? இத்தனை நாளாக வீட்டில் நான் அரசியாக வாழ்ந்தேன். அவர் அரசராக வாழ்ந்தார். அவர் ஆளும் முறை வந்தபோது நான் அமைச்சுத் தொழில் மேற் கொண்டு ஆலோசனை கூறி வந்தேன். நான் அரசியாக இருந்து கடமைகளைச் செய்யும்போது அவர் அமைச்சராக இருந்து துணைசெய்துவந்தார். நாட்டுப் போர் வீட்டிலும் புகுந்தவுடன், அவர் சர்வாதிகாரியாக மாறி விட்டார். மந்திரிசபையைக் கலைத்து விட்டார். அவர் சொல்ல வேண்டுமாம். நான் சிறிதும் எண்ணிப் பார்க்கக் கூடாதாம்! உடனே அதன்படி செய்துவிட வேண்டுமாம்! இது ஒரு காலம்!

என் தம்பி படுக்கையாகப் படுத்து எமனோடு போராடிக்கொண் டிருந்தபோது அன்னையின் கன்னம் கன்னிப் போன கதை நினைவுக்கு வருகின்றது. வைத்தியர் வந்து பார்த்து நிமோனியா காய்ச்சல்என்று 'நாமகரணம்' செய்துவிட்டுப் போனார். போகும்போது, "மிகவும் கவனிப்பாக இருந்து பார்த்துக்கொள்ள வேண்டும். என்னால் ஆனது செய்கிறேன். ஆனாலும், இரண்டு நாளைக்கு முன் என்னிடம் ஒப்படைத்திருந்தாலும் எப்படியாவது காப்பாற்றியிருப்பேன். இப்போது இருக்கும் நிலைமை பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்" என்று சொல்லிவிட்டுப் போனார். சன்னலின் மேல்கதவுகள்

இரண்டையும் திறந்து வைக்கும்படி சொன்னர். கேட்டுக்கொண் டிருந்த தாயும் தந்தையும் ஓவியம் போல் அப்படியே நின்றுவிட்டார்கள். சிறிது நேரத்திற்குள் அன்னை தம்பியின் படுக்கை யருகே உட்கார்ந்து வருந்திக் கொண்டிருந்தாள். நான் சும்மா இராமல், டாக்டர் சன்னலைப் பற்றிச்சொன்னதைநினைவூட்டினேன். உடனே அன்னை, சன்னலின் கீழ்க் கதவுகள் இரண்டையும் திறந்தாள். அதைப் பார்த்த அருமைத் தந்தை நேரே வந்து அன்னையின் கன்னத்தில் ஓங்கி ஓர் அடி கொடுத்துவிட்டு, "குழந்தை இருக்கும் ஆபத்து என்ன? குடித்தனம் பண்ணுகிற அழகு என்ன? மேல் கதவைச் திறக்கச் சொன்னல், கீழ்க் கதவை திறப்பதா? இந்தக் கழுதை தான் கண்டபடி மருந்து கொடுத்து மகனைக் கொன்று விடுவாள்" என்று கொதித்து அடங்கினர். உடனே மேல்கதவு திறக்கப்பட்டது. கீழ்க் கதவு மூடப்பட்டது. தம்பியும் தப்பினன். அன்று எமனேடு போராடியவன் இன்று பட்டாளத்தில் சேர்ந்து எதிரியோடு போராடுகின்றனம். எல்லாம் முடிந்தது. ஆனல் அந்த வலுவான அடியைக் கன்னத்தில் வாங்கிக்கொண்டு துடைக்கவும் துடைக்காமல் அமைதியாக இருந்து அவனுடைய உயிரைக் காப்பாற்றினள் அன்னை.

சொன்னபடி செய்ய வேண்டும். இது ஆணை. உயிருக்கு ஆபத்து நேர்ந்த போதெல்லாம் இந்த ஆணை பிறக்கிறது. அரசாங்கத்திலும் இந்த ஆணை; குடும்பத்திலும் இந்த ஆணை. உயிருக்கு ஆபத்து என்றல் அரசாங்கத்திலும் வெறி, குடும்பத்திலும் வெறி. அறிவுக்கோ. பொறுமைக்கோ, ஆலோசனைக்கோ யாரும் இடங் கொடுப்பதில்லை. உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற வெறியில் மனிதனுடைய அறிவும் நிற்பதில்லை; பண்பும் நிற்பதில்லை.

ஆனல், அவரைப் பற்றி அப்படிச் சொல்வதில் பயனில்லையே. அவர் நேற்று இரவுதான் அந்த வெறி கொண்டார். அதுவும் திடீரென்று கொள்ளவில்லை. பதினைந்து நாளாக இரவும் பகலும் எனக்குச் சொல்லிச் சொல்லிச் சலித்துப் போனர். அறிவின் திறமை யெல்லாம் காட்டிச் சொல்லிப் பார்த்துவிட்டார். புதுப்புது வகையாகச் சொன்

ஞர். நானும் புதுப்புது காரணங்கள் சொல்லி மறுத்து விட்டேன். ஒரு நாளைப் போல் பல நாளும் நான் மறுத்து வந்தால் யார்தான் பொறுத்துக்கொண் டிருக்க முடியும்? நேற்று அவர் மனமும் துணிந்துவிட்டது; "இனிமேல் பதில் பேசக்கூடாது; சொன்னபடி செய்தாக வேண்டும். நாளைக்கு யாருடனாவது அனுப்பிவிடுவேன். புறப்பட்டுப் போயாக வேண்டும். பதில் பேசுவதாக இருந்தால், இனி மேல் உன் முகத்தில் விழிக்கமாட்டேன்" என்றார்.

"இரண்டும் ஒன்றுதானே" என்றேன்.

"என்ன சொன்னாய்?" என்று வெறுப்போடு கேட்டார்.

"நான் புறப்பட்டுப் போகாவிட்டால் முகத்தில் விழிக்கப் போவதில்லை. புறப்பட்டு யாரோடாவது போய் விட்டாலும் அவ்வளவுதான். அப்புறம் யார்முகத்தில் யார் விழிக்க முடியும்? அதைவிட இந்த மண்ணிலேயே முகத்தில் விழிக்காமல் சாகலாமே" என்றேன்.

"தெய்வமே!" என்று ஒரு பெருமூச்சு விட்டார். உடைந்து போகும் இதயத்தை இறுகப் பிடிப்பவர் போல் தம்முடைய மார்பின் மேல் கை வைத்துத் தலை கவிழ்ந்து படுத்துக்கொண்டு வருந்தினர். நான் மெல்ல விம்மிக் கொண்டு அழுதேன். என் விம்மல் அவருக்குத் தெரிந்ததும், தலை நிமிர்ந்து என் முகத்தைப் பார்த்து, "இப்படி இரண்டு வாரமாய் அழுததுபோதும்! இனிமேல் வீட்டை விட்டுப் புறப்பட்டே தீரவேண்டும். பதில் பேசக் கூடாது. போதும் உன்னால் நான் பட்டது" என்றார்.

நெடுநேரம் இருவரும் தூங்க வில்லை. தனித் தனியே எங்கள் நெஞ்சங்கள் கலங்கிக்கொண் டிருந்தன. கண்கள் அழுதுகொண் டிருந்தன. அந்தக் கடைசிச் சொல் என் நெஞ்சத் துயரைக் கிளறிவிட்டது. "உன்னால் நான் பட்டது—!"

மணி பன்னிரண்டுஅடித்தது; ஒன்று அடித்தது. அரை மணி கழித்து மறுபடியும் ஒன்று அடித்தது. அரை மணி

கழித்து இன்னொரு முறை ஒன்று அடித்தது. "பொன் முடி! தூங்கிவிட்டாயா?" என்றார். நான் பேச முடியாமல் திணறினேன். விழித்திருப்பதைத் தெரிந்து கொண்டார். "இனி மேல் பதில் பேசாதே! நம்ம குடும்பம் ரங்கூனில் மண்ணாய்ப் போக வேண்டுமா?" என்றார்.

நாங்கள் எத்தனையோ இரவுகள் அழுதிருக்கின்றோம். அழுகை எங்களுக்குப் புதுமையானது அல்ல. ஆனால், அவருடைய சிரிப்பில் என் நெஞ்சத்தைப் பறிகொடுப்பேன். என் மகிழ்ச்சியில் அவர்நெஞ்சம் கலந்துவிடும். அழுகையிலும், அப்படித்தான். என் கண்ணீரைக் கண்டு அவருடைய நெஞ்சம் கலங்கும். அவருடைய கலக்கத்தைக் காணு முன்னே எனக்குக் கண்ணீர் வரும். எங்கள் துன்பத்தில் இருந்த ஒற்றுமை போல் எங்கள் இன்பத்திலும் இல்லை எனலாம்.

ஆனால், இப்போது எங்கள் துன்பத்தில்—எங்கள் அழுகையில்—ஒற்றுமை இல்லாமல் இருந்தது. அது ஒரு பெரிய குறையாகவும் தெரிந்தது. அவரை மாற்றுவதற்காக நான் அழுதேன். என் மனத்தை மாற்ற அவர் வருந்தினார். இருவரும் சிறிதும் மாறவில்லை. கலங்கிக் கொண்டிருந்தோம்.

ரங்கூன் பொல்லாத ஊர். அவர்மேல் குறை சொல்லிப் பயனில்லை. இந்த ஊர் இரண்டு வாரமாக ஒரே அமர்க்களமாக இருக்கிறது. எல்லாரும் வீட்டைக் காலி செய்து வெளியூருக்குப் போவதே பேச்சாகவும் காட்சியாகவும் இருந்தால், அவர் மட்டும் என்ன செய்வார்? இந்த ஊர் இப்படித்தான் இருக்கும். இங்கே உள்ளவர்களில் பெரும்பாலோர் வெளியூரார்; பலர் வெளிநாட்டார். உயிருக்கு ஆபத்து வரும்போது சொந்த ஊரையும் சொந்த நாட்டையும் நினைத்து ஏங்குகின்றார்கள். அந்த ஊர்களிலும் நாடுகளிலும் எமன் வரமாட்டானா? அதுவும் அவர்களுக்குத் தெரியும்! இருந்தாலும், மனம் வலிமை அற்றுப் போகும்போது தாய்நாடு, சொந்த ஊர் என்ற ஏக்கம் உண்டாகின்றது.

சென்னையில் அப்பாவுடன் இருந்த காலத்தில் பாட்டனுர்க்குக் காய்ச்சல் வந்த போதெல்லாம் சொந்த ஊரை— கிராமத்தை-நினைந்து வருந்தவில்லையா? பாட்டனுர்என்னைக் கூப்பிட்டு எவ்வளவு வேண்டினர்! "பொன்முடி! அப்பாவுக்குச் சொல் அம்மா! இந்தப் பட்டினத்தில் உயிரை விட்டுவிட்டுத் திக்கற்ற பிணமாகச் சாகவேண்டும் என்று அப்பா நினைக்கிருரு? நம்ம பெரியவர்கள் வாழ்ந்து மடிந்த ஊர் செங்காடு. அந்த ஊரில் நம்ம பழைய வீட்டில் போய் உயிரை விட்டுவிடுகிறேன். சொல்லம்மா" என்று என்னிடமும் சொல்லி வேண்டினர். ஒரு தனி மனிதரே மரணம் நெருங்கிய போது இவ்வாறு கவலைப் பட்டார். இந்த ரங்கூனில் வெளிநாட்டுக்காரர் லட்சக்கணக்கானவர்கள். இத்தனை மக்களையும் ஆபத்து நெருங்கிய போது, இவர்களுக்கு இறக்கை இருந்தால் பறந்து போய்விடமாட்டார்களா? கப்பல் இல்லை என்று தெரிந்தும் இந்தப் பறக்கும் கவலையை விடவில்லையே! காலால் நடந்து போகவும் துணிந்துவிட்டார்களே! இருபது முப்பது மைல் தூரமா? இருநூறு முந்நூறு மைல் தொலைவா? ஒரு நாள் இரு நாள் நடையா? இவையெல்லாம் துன்பமல்ல. நடந்து போய் எங்கே சேர்வது? எங்காவது போய்ச் சேர முடியுமா? அப்படித்தான் போனலும் அங்கே எப்படி வாழ்வது? கணவனை இங்கே விட்டுவிட்டு மனைவி தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக இத்தனை முயற்சியா? என்ன அறியாமை! நாகரிகம் நகரங்களில் என்று சொல்கின்றுர்களே! இதுவா நாகரிகம்? ரங்கூன்! பெரிய நகரமாம்!

போகிறவர்கள் தங்கள் வரையிலும் போய்த் தொலையட்டுமே! மற்றவர்களை என் வம்புக்கு இழுக்க வேண்டும்? அன்று காலையில் அந்த வாணியம்பாடியம்மா வந்து கேட்டது என்னல் பொறுக்கவே முடியவில்லை. நான் ஏதோ கவலையோடு காய் அரிந்துவிட்டு எதையோ எண்ணிக் கொண்டிருந்தேன். இன்னும் எத்தனை நாள் இப்படி எரிமலையில் நின்றுகொண் டிருப்பது என்று கலங்கிச் சமையல் வேலையிலும் கவனம் இல்லாமல் எண்ணிக்கொண் டிருந்தேன். அந்த வேளையில் அந்த அம்மாவை யார் வரச் சொன்னர்கள்? வந்தவள் சும்மா

பார்த்துவிட்டுப் போவது தானே? அல்லது, வேறு ஏதாவது பேசிவிட்டுப் போவது தானே? "என்ன அம்மா! எப்போது புறப்படப் போகிறாய்?" என்று திருமணத்திற்குப் போகிறவர்களைக் கேட்பது போல் கேட்டாள். நான் எப்படித்தான் அதைக் கேட்டுப் பொறுத்துக்கொண் டிருக்க முடியும்? "ஏன் அம்மா! எப்போது சாகப்போகிறாய் என்று ஒரே கேள்வியாக கேட்பது தானே!" என்றேன். உடனே அவளுக்குச் 'சுறுக்'கென்று பட்டதால், "என்னவோ, அந்த மனிதன் சொன்னாரே என்று கேட்டேன். இப்படி நீங்கள் எல்லோரும் உடன்கட்டை ஏறுகிறவர்கள் என்று தெரியாமல் போச்சு" என்று சொல்லிக்கொண்டே முறுக்காக நடந்தாள். சொன்னது சொல்லிவிட்டேன். இப்போது என்ன செய்வது? ஆனால், உண்மையாகவே எண்ணிப் பார்க்கிறேன். அவரை இந்த ரங்கூனில் விட்டு விட்டு நான் மட்டும் குழந்தையை அழைத்துக்கொண்டு புறப்படுவது சாகப்போவது போல்தான் தெரிகிறது. இன்னமும் அப்படித்தான் தெரிகிறது. நான் சென்னைக்கோ செங்காட்டுக்கோ போவதாகத் தெரியவில்லை. ஏதோ கண்காணா நாட்டுக்கே சென்று துன்பப்படப் போவதாகத் தெரிகிறது! நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. நெஞ்சம் கொதிக்கின்றது! ஆனால், இவர்கள் எப்படித்தான் வாயால் சொல்கிறார்களோ! தாய் நாட்டுக்குப் போகின்றார்களாம்!—தாய்நாடு—எது? எங்கே? தாய்நாடு!

எனக்குச் சமூக இயலும் அரசியலும் கற்றுக் கொடுத்தது தவறு என்று நினைந்து வருந்தினார். நானும் அவ்வாறு அவற்றைக் கற்றுக் கொண்டது தவறு என்று நினைந்து வருந்துகிறேன். இன்று சமூக அறிவும் அரசியல் அறிவும் எனக்கு இருப்பதால் அஞ்சாமை வந்திருப்பதாகவும் கணவன் கட்டளைக்கு அடங்காத உரிமை பெற்றிருப்பதாகவும் சொன்னார். ஆனால் நான் நினைப்பது வேறே. இப்போது இவரை ஆயிரமுறை வேண்டினேன்; வேலையை விட்டுவிடு என்று வேண்டினேன். ஆனால் அவர் விடத் துணியவில்லை. விட்டுவிட்டால் வருவாய்க்கு என்ன செய்வது என்று வருந்துகிறார். நான் சமூகமும் அரசியலும் பற்றிக் கற்பதற்காக நூல்களும் பத்திரிகை

களும் படித்து எவ்வளவோ காலத்தைச் செலவழித்தேன். அந்தக் காலத்தில் அரைப்பங்கும் அந்தப்பணத்தில் அரைக் கால் பங்கும் வேறு எதற்காகவாவது செலவழித்திருந் தால் எவ்வளவு நன்மையாய் இருந்திருக்கும். இன்று எனக்கு ஐம்பது ரூபாய் சம்பாதிக்கும் திறமை இருந் திருந்தால், அவரை இன்று காலையில் கம்பெனிக்கு அனுப்பியிருப்பேனா? வாயிற்படியைக் கடந்து கால் வைக்க விட்டிருப்பேனா? இன்று காலையிலேயே குடும்பத் தோடு புறப்பட்டு இந்நேரம் எவ்வளவோ தொலைவு கடந்து போயிருக்கமாட்டோமா?

நான் கொஞ்சம் பணமும் காலமும் செலவழித்து இசை கற்றுக்கொண் டிருந்தால், எவ்வளவு இறுமாப் போடு இருந்திருப்பேன்? அந்தக் காலத்தில் என் தந்தை என் வேண்டுகோளைப் புறக்கணித்தார். "அம்மா! இசை ஒரு கலைதான். ஆனால் அது மட்டும் வாழ்க்கைக்குப் போதாது. அதைவிட முக்கியமானதெல்லாம் உண்டு. வாழ்க்கையே ஒரு கலை. அதைத்தான் முன்னே கற்க வேண்டும். இசையை நன்றாகக் கற்ற பெண்கள் வாழத் தெரியாமல் திண்டாடுவதைப் பார்க்கவில்லையா? பெற் றோரும் வெறுக்க, சுற்றத்தாரும் கைவிட, நாடின நண்பர் களும் வெறுத்தோட இசை கற்ற பெண்கள் பலர் வாழும் வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? அவர்கள் பாடும் குரலில் குயில் வாழலாம். அவர்கள் பற்றிய வீணையில் கலைமகள் வாழலாம். ஆனால் அவர்களின் மூளையில் களிமண்ணும் நெஞ்சில் நஞ்சும் குடியிருப்பதை நாம் பார்க்கவில்லையா?" என்றெல்லாம் எடுத்துச் சொல்லி என் இசைவேட்கை யைக் குலைத்தார்.

திருமணமான பிறகு இவரும் என்னைத் தடுத்தார். "இசை கற்றுக்கொள்வதால் எனக்கு நல்ல துணைவியாக இருக்கமுடியுமா? உனக்குக் குடும்ப வாழ்க்கை வேண்டு மானால், உலகத்தை நன்றாகப் படித்துக்கொண்டு எனக்கு உற்ற துணையாக இரு. உலகம் இருவகை. ஒன்று ஆளும் பகுதியான அரசியல்; மற்றொன்று வாழும் பகுதியான சமூக அமைப்பு. இந்த இரண்டையும் படித்துத் தேர்ந்

தால் எனக்கு நீயும் உனக்கு நானும் துணையாக வாழ்ந்து மகிழலாம்'' என்று சொல்லி நூல்களையும் பத்திரிகைகளை யும் வாங்கி வீட்டை நிரப்பினர். அவற்றைக் கற்றது வீணகப் போகவில்லை. இன்று ஒருவாறு திறமையும் இருக்கிறது. ஆனல், அப்படிச் சொன்னவரே இப் போது—அவர் பேச்சைக் கேட்காமல் நான் வேறுபடும் இப்போது—நொந்துகொள்கிருர்.

ஒரு கைத்தொழில் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எவ்வளவோ முயன்றேன். கையால் தைக்கத் தெரியும். நாகரிகமாகத் துணிகளை வெட்டவும் தையல் யந்திரத்தில் தைக்கவும் கற்றுக்கொள்ள முயன்றேன். தையல் கூலியைக் கணக்கிட்டுப் பார்த்து, "நம் குடும்பத் துக்கு ஓர் ஆண்டுக்கு முப்பது ரூபாய் தையல் கூலி ஆகின்றது. இந்த முப்பது ரூபாய் மிகுதிப்படுத்துவதற் காகக் காலத்தை வீணக்க வேண்டாம். அந்த நேரத்தில் இன்னும் இரண்டு பத்திரிகை படி; இரண்டு நூல்களைப் பார்; இன்னும் கொஞ்சம் மிகுதியாகக் குழந்தையோடு பேசி விளையாடு'' என்ருர். அதையும் கைவிட்டேன். அந்த ஒரு கைத்தொழில் இப்போது எனக்குத் தெரிந்திருந்தால் எந்த ஊரிலும் எப்படியும் பிழைக்க முடியுமே! இப்போது வயிற்றுக் கஞ்சிக்காகப் பகைவன்குண்டை எதிர்பார்த்து நடுங்க வேண்டியதில்லையே!

எனக்கு இப்போது என்ன தெரியும்? அறுசுவை உண்டி ஆக்கத் தெரியும். சிறு சிறு துணிகளைச் சோப்பு இட்டுத் துவைத்து வெளுத்து மடித்துவைக்கத் தெரியும். அவ்வளவுதான். ஆனல் இவைகளும் கைத்தொழில்கள் தான். இப்போதே நகரங்களில் உணவுவிடுதிகளும் சலவை விடுதிகளும் உடையவர்கள் செல்வர்களாக-பெரிய முதலாளிகளாக—மாறிவருகின்ருர்கள். மனித நாகரிகம் உணவையும் உடையையும் நம்பியிருக்கின்ற வரைக்கும் இந்த இரண்டு கைத்தொழில்களும் அழிய முடியுமா?

ஆனலும், நான் இசை கற்றிருந்தால் இன்று எந்தச் சினிமாக் கம்பெனியிலாவது சேர்ந்து மிகுதியான வரு

வாய்க்கு வழிசெய்துகொண்டு அவருடைய கவலையைப் போக்கியிருக்க முடியும் அல்லவா?

வருவாயைப் பற்றியே அவருக்கு உண்மையான கவலையா? அதுவும் காணேம். அவருடைய மனம் நம்பினவர்களைக் கைவிடக் கூடாது என்று உறுதிகொண்டிருக்கிறது. ஆனல் நம்பினவர்கள் யார்? ஆபத்து வந்தபோது காலைப் பிடிப்பவர்கள்; "ஏணியின்மேல் இருந்துகொண்டு எட்டிப் போடா" என்று தீண்டாமை பேசும் முதலாளிகள்; ஏணி வழுக்குவது உணர்ந்ததும், 'உன்னல்தான் உயிர் வாழ வேண்டும்' என்று கும்பிட்டுக் கெஞ்சுகின்ற வஞ்சகர்கள்; வாணிக்கு நல்ல உடை வாங்கிக் கொடுத்தது கண்டு பொருமைப்பட்டுச் சம்பளம் மிகுதி என்று எண்ணியவர்கள்; வேறு வழி இல்லை என்று அறிந்ததும் எதிரிகள் குண்டு ஓசையைப் பெருக்கியதுபோல் சம்பளத்தை இரட்டிப்பு ஆக்கி ஆசை காட்டும் தந்திரக்காரர்கள். இவற்றையெல்லாம் எடுத்துச் சொன்னல், நான் சமூக அறிவும் அரசியல் அறிவும் பெற்றதால் கெட்டுவிட்டேன் என்கிருர். அறிவு வளர்ந்தால் பேசக் கூடாதா? எட்டளவில் நிற்க வேண்டுமா? அப்படியானல் அந்தக் குறளை மாற்றிவிட வேண்டும். 'நிற்க அதற்குத் தக' என்று சொல்லக் கூடாது. அவர் என்ன செய்வார்? அவரைவிட நான் அறிவாளி அல்ல; செயலாளியும் அல்ல. உயிர்ப் போராட்டம் அவரை அப்படி மாற்றிவிட்டிருக்கின்றது. ஆனல் இனி அவரை மனம் நோகச் செய்வதா? அவருக்குக் கீழ்ப்படிவதா? எது கடமை?

அவர் மனம் நொந்தால், குடும்பமே குழம்புகின்றது. அவருக்குக் கீழ்ப்படிந்து நானும் வாணியும் அவரை விட்டுச் சென்ருல் குடும்பம் குலைகின்றது. என்ன செய்வது? குடும்பம் குழம்புவது பெரியதா? குடும்பம் குலைவது பெரியதா?

நான் முன்னே போக வேண்டுமாம். நாளைக்கே புறப்பட வேண்டுமாம். அவர் மூன்று நாள் கழித்து வந்து எங்களைப் பிடித்துவிடுவாராம். காரணம் கேட்டால் மூன்று நாள் கால்நடையை ஒரு நாள் சைக்கில் ஓட்டம்

பிடிக்க முடியும் என்கிறார். கம்பெனி சைக்கிலில் வருவாராம். நல்ல யோசனைதான். ஆனால் மூன்றுநாள் கழித்த பிறகு வராமல், "நம்பினவர்களைக் கைவிடக் கூடாது" என்று பாம்புக்குப் பால் வார்க்கத் துணிந்து இந்த ரங்கூனில் திக்கற்றவராய் எங்கிக் கிடப்பாரானால் நான் என்ன செய்வேன்? எப்படி உயிர்கொண்டு வாழ்வேன்?

இவருடைய மனநிலை ஏனோ இப்படி இளகி இளகி மாறிவிட்டதோ, தெரியவில்லை. காரணமில்லாமல் இப்போது கண்டவர்களிட மெல்லாம் அன்பு காட்டுகின்றார். சைக்கிலில் புறப்படும்போது, யாராவது குறுக்கே வந்து, "என்னை விட்டுவிட்டா போகிறீர்கள்?" என்று முறையிட்டால் பேசாமல் நின்றுவிடுவார்போல் இருக்கிறதே!

அல்லது, மூன்று நாள் கழித்துப் புறப்படுவார் என்றே வைத்துக்கொள்வோம். இந்த மூன்று நாளில் வாழ்க்கை என்ன ஆகுமோ? நாளுக்கு நாள் எதிரியின் வல்லமை மிகுவதை அறிந்திருந்தும், எப்படி அமைதி அடைவது? கம்பெனிக் கட்டிடம் இவரைக் காப்பாற்றுமா? அல்லது, என் தவமும் வாணியின் பூசையும் இவரைக் காப்பாற்றுமா? ஐயோ! இதை எப்படி நினைப்பது? இவரை இந்தப் பாலைவனத்தில் விட்டுவிட்டு நான் மட்டும் தாய்நாட்டுக்குப் போவதா? நான் மட்டுமா? தாய் நாட்டுக்கா?

எல்லாரையும் நல்லவர்கள் என்று நம்பும் நெஞ்சமும் எல்லாரையும் கெட்டவர்கள் என்று எண்ணும் நெஞ்சமும் இரண்டும் வேண்டாம் என்று இவரே எனக்குச் சொல்லியிருக்கிறார். நீலமேகனையும் நம்புகிறார் இவரே! அந்த ஆள் மனைவியை அனுப்பிவிட்டு ஆறுநாள் ஆயின என்று என்னிடம் சொல்கிறார். காலையில் அந்த அம்மா வந்து பேசிக்கொண்டிருந்தாள். நீலமேகன் தன் வீட்டுக்குப் போய் ஒரு வாரம் ஆனதாம். எப்படிப் புறப்படுவது என்று என்னைக் கேட்க அந்த அம்மா வந்து போனாள். இதைச் சொன்னால் இவர் திகைக்கிறார். "அந்த அம்மாவோ? வேறு யாரோ? நீலமேகன் மனைவியா? நன்று

கத் தெரியுமா ?'' என்று கேட்கிறார். நீலமேகன் எப்படிப் பட்டவர் ? மனைவியை மட்டுமல்ல, நண்பரையும் ஏமாற்றும் வன்னெஞ்சம் உடையவர். இதைச் சொன்னால், மறுத்துத் தலையசைக்கிறார். அவருடைய பார்வையும் அந்த ஒரு நாள் செய்த செயலும் எனக்கு அவரைக் காட்டிக்கொடுத்தன. ஆனால் நான் சொல்வதை இவர் நம்ப வில்லை. "பெண்கள் இப்படித்தான். ஆண் யாராக இருந்தாலும் பொல்லாதவன் என்று பேசுவார்கள். கைப் பிடித்து இழுத்தான் என்றும் பழிப்பார்கள்'' என்று என்னிடமே கதை அளக்கிறார். ஆனால், ஆபத்துக் காலத்தில் மனைவியை எட்டிப் பார்க்காமல் விட்டுவிட்டுத் தாம் மட்டும் சைக்கிலில் பறந்தாரே. இதைப் பார்த்து ஆளைத் தெரிந்துகொள்ளக் கூடாதா ? இவர்மனம் என்னவோ கலங்கியிருக்கிறது ! நான் மேலும் பிடிவாதம் செய்தால், அந்தக் கலங்கிய மனம் முறிந்து போகுமோ? அப்படி முறிந்தால்—ஆ ! நான் செய்த தவறு ! நான் நெருக்கடி வந்தபோதும் அறிவின் திறமை காட்டிப் பேசினேன் ! நான் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அறிவுக்கு இப்போது வேலை இல்லை. நான் அன்போடு இணங்கி யிருக்க வேண்டும்.

இப்போதுதான் தெரிகிறது: நான் எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டேன் என்பது இப்போதுதான் தெரிகிறது.

காலையில் எழுந்தவுடன் என்னிடம் அன்பாய்ப் பேசுகின்றவர் இன்று என் முகத்திலேயே விழிக்கவில்லை. கம்பெனிக்குப் போகும் நேரம் வரையில் மகளுடன் பேசிக் கொண்டிருந்தார். அவளுடனும் வழக்கம்போல் பேச முடியாமல் கவலைப்பட்டதாகவே தெளிவாகத் தெரிகிறது. அவருடைய முகத்திலிருந்த துயரம் என்னை அறியாமல் என் மனத்தைக் கலக்கிவிட்டது. குளித்தார்; வழக்கம் போல் சிறிது நேரம் தாயுமானார்பாடல் படித்தார்; சிற்றுண்டி உட்கொண்டார். உண்ணும்போது வாய் திறக்கவே இல்லை. வாணியிடம் ஏதோ பேசினார். உடுத்துக்கொண்டார். புறப்பட்டார். புறப்படும்போது வாசற்

படி வரைக்கும் போய்வருகின்ற வழக்கப்படி நான் போகவில்லை. அவரும் வழக்கம்போல் நடந்துகொள்ள வில்லை. போகும்போது, 'பொன்முடி! வரட்டுமா?' என்று சொல்லுகின்றவர், இன்று மௌனமாய் வாசற் படியைக் கடந்து போனார். நானும் வழக்கம் போல் நடந்துகொள்ளவில்லை. "பணம் இருக்கிறதா? சாவி எடுத் துக்கொண்டீர்களா?" என்ற இந்த இரண்டு கேள்வி களையும் கேட்பது வழக்கமல்லவா? அவ்வாறு கேட்கத் தவறினேன். "போய்விட்டு வா" என்று கடைசியாகச் சொல்வது வழக்கம். அதையும் சொல்லவில்லை.

ஏன் அவ்வாறு மௌனமாக நின்றுவிட்டேன்? வாசற்படி வரைக்கும் போகாமல் வீட்டினுள்ளேயே நின்றுவிட்டேன். குழப்பத்தால் மறந்துவிட்டேனா? அப்படி மறந்துவிட்டிருந்தால் இப்போது என் நெஞ்சம் என்னைச் சுட்டுக் கொல்லாதே. அவர் வாசற்படியை விட்டுக் கீழ் இறங்கியதை உள்ளே இருந்தே பார்த்துக் கொண்டிருந்தேன் அல்லவா? அப்போது எனக்குச் சாவி யும் பணமும் நினைவிற்கு வந்தன அல்லவா? ஆனால் கேட்க நா எழவில்லை. போய்விட்டு வருமாறு சொல்ல மனம் இல் லாமற் போயிற்று.

ஏதோ ஒருவகைத் தற்பெருமை—ஒருவகைச் செருக்கு என்னைத் தடுத்துவிட்டது. நெடுங்காலமாக அன்பு வாழ்க்கை வாழ்ந்துவரும் எங்களிடையே எப்படியோ அது புகுந்து என்னைக் கெடுத்தது. என் ஆருயிர்க் கணவரி டம் வாய்திறந்து பேசாதபடி என்னைத் தடுத்தது. நெஞ்சு வரையில் வந்த சொற்களை வாயில் வராமல் தடுத்தது. அவர் என்ன நினைத்திருப்பார்? துன்பம் நேர்ந்த காலத்தில் எனக்குத் துணையாக இருக்காமல், எதிர்த்துப் போராடும் பகையாக இருக்கிறாளே என்று எண்ணி எண்ணி வருந்தி யிருப்பாரோ? அல்லது, என் அன்பு மாறிவிட்டது என்று எண்ணி நைந்திருப்பாரோ? என் நெஞ்சம் என்னைச் சுட்டுக் கொல்கின்றது. இவ்வளவுக்கும் காரணம் என் பிடிவாதம், என் தற்பெருமை, என் செருக்கு—வேறு என்ன என்பது?

ஒரு சொல்தான்—"பணம் எடுத்துக்கொண்டீர்களா?" என்ற ஒரு சொல்தான். வாய் திறந்து இதைக் கேட்டுவிட்டிருந்தால் என் மனம் ஆறியிருக்கும். அவரும் அவ்வளவு துன்பப்பட வேண்டியதில்லை. எங்கள் அன்பான வாழ்க்கையிலும் இந்த முள் தைத்திருக்காது.

எத்தனைநாள் எனக்குச் சொல்லிவைத்திருக்கிறார். அவருடைய மறதி சாதாரணமானது. ஆனால் அதை மலையாக்கி என்னிடம் சொல்வார். "பொன்முடி! நான் எதையும் அடிக்கடி மறந்துவிடுவேன். நீதான் அதை அதை அப்போது அப்போது நினைவூட்டவேண்டும். கிழமையும் கூட மறந்துவிடுவேன்" என்றெல்லாம் சொல்லிக் கொண்டே வந்து என்னைத் திடீரென்று சிரிக்கவைப்பதற்காக, "கம்பெனியை மறந்துவிடுவேன்; கடவுளையும் மறந்துவிடுவேன். ஆனால் உன்னைமட்டும் மறப்பது இல்லை" என்று சொல்லிப் புன்முறுவல் செய்வார். "பணம் எடுத்துக் கொள்ளாமல் நகரங்களில் வீட்டை விட்டுக் கிளம்பினால் திண்டாடித் திரும்பி வரவேண்டும். நான் எத்தனையோ நாள் மறந்து போய் நண்பர்களிடம் கடன் வாங்கியிருக்கிறேன். சாவி இல்லாமல் கம்பெனிக்குப் போய்விட்டால் தலைமேல் கைவைத்துக்கொண்டு மேசைமேல் சாய்ந்திருக்க வேண்டும். மானேஜரிடம் சொல்லி வெட்கங் கெட்டு வீட்டுக்குவந்து திரும்பவேண்டும். இந்த இரண்டு அவமானமும் இல்லாதபடி நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். நான் எப்போது புறப்பட்டாலும் பணமும் சாவியும் கேள். மறந்துவிடாதே," என்று சொன்னார் அல்லவா?

இப்படிச் சொல்லியும் நான் மறந்துவிட்ட நாட்கள் உண்டு. ஆனால் அவர் பெரும்பாலும் மறக்காமல் இந்த இரண்டும் எடுத்துக்கொண்டே புறப்படுவார். ஒருநாள்தான் அவரும் எடுத்துக்கொள்ளத் தவறினார்; நானும் கேட்கத் தவறினேன்; வெளியே போனவர் திரும்பிவந்து எடுத்துக்கொண்டு போனார். அன்று இரவு நான் அவரைக் கேட்டேன். "நான் வந்தபிறகுதான் எனக்கு இந்த வேலை. அதற்குமுன் எப்படி?" என்று கேட்டேன். அவர்

சொன்ன பதிலை இன்றும் நினைத்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. "திருமணத்திற்கு முன்பு என் மனம் பணம், பெட்டி, சாவி, புகழ் முதலான எல்லாவற்றிலும் பற்று வைத்திருந்தது. திருமணத்திற்குப் பிறகு, உன்னைப் பற்றிய பிறகு, மற்றப் பற்றெல்லாம் பறந்துபோய்விட்டது. 'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்று சொன்ன திருவள்ளுவரும் இதை உணர்ந்திருக்கிறார். அதனால்தான் 'அப் பற்றைப் பற்றுக' என்று சொல்லி, 'பற்று விடற்கு' என்று காரணமும் சொன்னார். அதை உரைகாரர் உணராமல் 'பற்றற்றான்' என்று னகர இறுதியாகத் திரித்துத் தவறு செய்து விட்டார்கள். உன் பற்றால் எனக்கு மற்றப் பற்று இல்லாமற் போய்விட்டது. பணப்பை மறந்தேன்; சாவிக் கொத்து மறந்தேன்; வேண்டேன் புகழ், வேண்டேன் செல்வம், வேண்டேன் சாவி" என்று வேடிக்கையாகப் பேசினார். அவ்வளவு அன்பான மனத்தை இன்று கவலைக்கு இடமாக்கி அனுப்பினேன்.

இந்த வாணியாவது வாய்திறந்து பேசி அனுப்பியிருக்கக் கூடாதா? சின்ன குழந்தையாக இருந்தபோது இவள் எங்கள் வாழ்க்கைக்கு எவ்வளவோ உதவியாக இருந்தாள். நாங்கள் பேசாமல் பிணங்கிக்கொண்டிருந்த நாட்களில் இவள் குழந்தையாக இருந்து என்னிடமும் அவரிடமும் மாறி மாறிக் கொஞ்சினாள்; எங்கள் மனத்தை மெல்ல மெல்லக் கொள்ளை கொண்டாள்; எங்களிடையே இருந்த வேற்றுமைகளை—முள்வேலிகளை—அவளுடைய மழலைச் சொல்லால் தகர்த்தெறிந்தாள். ஒருமுறை இரண்டு நாள் தொடர்ச்சியாகப் பேசாமல் இருந்தோம். அப்போது குழந்தை வாணி தன் பிடிவாதத்தினால் எங்களை வென்று விட்டாள்; ஒன்றுபடுத்தி விட்டாள். ஏதோ ஒரு பொம்மை வேண்டுமென்று என்னைக் கேட்டாள். "அப்பாவைக் கேளம்மா" என்று சொல்லிவிட்டேன். "நீயே சொல்லம்மா, அப்பாவுக்குச் சொல்லம்மா" என்று எனக்கே வேலை வைத்தாள். எனக்கோ திகைப்பு உண்டாய்விட்டது. கொஞ்சினேன்; கெஞ்சினேன்; பலிக்கவில்லை. அவளை அழைத்துக்கொண்டு அவரிடம் சென்றேன். "கேளம்மா" என்றேன். "சொல்லம்மா" என்றாள். அவரும் வாணி

யின் முகத்தைப் பார்த்துத் திகைத்தார். நான் தயங்கினேன். "அப்பாவுக்குச் சொல்லம்மா" என்று பிடிவாதமாய் அழுதாள். அவர் வாணியை அணைத்துக்கொண்டு "என்ன வேண்டும் அம்மா?" என்று கேட்டார். "சொல்லம்மா" என்று என் முன்தானையை இழுத்துக்கொண்டே அழுதாள். எனக்கோ திகைப்பு ஒரு பக்கம்; கோபம் ஒரு பக்கம்.

அவரோ என்னை வாயால் கேட்கவில்லையே தவிர, கண்ணால் என்னைக் கேட்டுக்கொண்டே இருந்தார். நான் அவருடைய பார்வைக்கு எதிரே பார்க்க முடியவில்லை. அவரிடம் சொல்வதென்றால் இரண்டு நாளாக இருந்த என் பிணக்கு—என் கோட்டை இடிந்துவிழுவதாக இருந்தது. அவ்வாறு தோற்றுப்போவதற்குப் பெண்மனம் இடந்தருமா? "அழாதேம்மா" வாணி! அப்பா பொம்மை வாங்கித் தருவார் அழாதே'ம்மா" என்றேன். என் வாய் மூடுவதற்குள், அவர் "அழாதே'ம்மா. நான் பொம்மை வாங்கிவருவேன், அழாதே'ம்மா" என்றார். அப்போதும் வாணியின் கை என் முன்தானையை விடவில்லை. அவளுடைய அழுகை நிற்கவில்லை. கீழே விழுந்து புரளாதபடி அவர் அவளைத் தடுத்துப் பிடித்துக்கொண்டிருந்தார். அப்படிப்பட்ட வேளைகளில் அவளை அடிக்க வேண்டும் என்று என் கை ஊறும். ஆனால் அறிவு தடுக்கும். அன்றும் அடிக்கப் போனேன். வழக்கம்போல் அவர் தடுத்து விட்டார். நான் சமையலறைக்குச் சென்றேன். அவரிடம் இருக்க இசையாமல் அழுதுகொண்டே வந்தாள் வாணி. அரைமணி நேரம் ஆயிற்று. அழுகை நிற்கவில்லை.

குழந்தை தோல்வியடைய விரும்புவதும் இல்லை. தோற்றுவிட்டால் தோல்வியை ஒப்புக்கொள்வதும் இல்லை அல்லவா? நான் இந்த உண்மையைப் படித்தும் இருக்கிறேன். பழகி உணர்ந்தும் இருக்கிறேன். எனக்கு இந்த உண்மை நினைவுக்கு வந்தவுடனே சினம் மாறிவிட்டது. குழந்தையின் மனத்தை மாற்றி மகிழ்ச்சி தரவேண்டிய கடமையை எண்ணினேன். வாணி சொன்னபடி நான் அவரிடம் கேட்காதது அவளுக்குத் தோல்வியாக இருந்தது. அதனால்தான் அழு

தாள். பிடிவாதம் செய்தாள். அப்பா சொல்லியும் கேட்க மறுத்தாள். குழந்தைகளுக்கு வெற்றி நல்காத உலகம் வாழ்ந்தால் என்ன, வீழ்ந்தால் என்ன? குழந்தைகளுக்கு வெற்றிதரவே தாயும் வாழ்கின்ருள்; தந்தையும் வாழ்கின்ருன். குழந்தைகளின் அரசு தனியரசு. அந்த அரசாட்சியை உலகமெலாம் எதிர்க்கலாம். ஆனல் பெற்ற தாயும் தந்தையும் எதிர்க்கலாமா? அந்த இருவருந்தானே குழந்தையின் சேனே; சேனேத் தலைவர்கள்; படை வீரர்கள்; படைக்கலங்கள் எல்லாம்; நாள்தோறும் நாலாயிரம் முறை தாயும் தந்தையும் தோற்றுப்போக வேண்டும்; குழந்தையின் உள்ளம் வெற்றி பெறவேண்டும். இந்தத் தோல்வியில் உள்ள இன்பத்தை நான் கோடிக்கணக்கான முறை உணர்ந்திருக்கிறேன். அப்போதெல்லாம் நான் தாயாக இருந்து தாய்மனத்தோடு நடந்ததே காரணம். ஆனல் இப்போது நான் பெண்ணுக இருந்து ஆண்மையோடு போராடிக்கொண்டு பிணக்கில் இருந்தேன் அல்லவா?

வாணி என் மனத்தை அந்த அரை மணி நேரத்தில் கரைத்து உருக்கிவிட்டாள். அவரோ எவ்வளவோ முயன்றும் அழுகையை நிறுத்த முடியாமல் அங்கும் இங்கும் அலைந்துகொண்டும் என்னையே பார்த்துக்கொண்டும் இருந்தார். ஆனல் கரைந்து உருகிய என் மனத்தில் இன்னும் அந்தப் பெண்மை விட்டு நீங்கவில்லை. அவரிடம் சொல்ல வாயெடுத்தேன். "அவரிடம் பிணக்கை நிறுத்தித் தோற்றுவிடுவதா" என்று என் உள்ளம் எனே தடுத்தது.

வாணியின் கை என் முன்தானையை விடவே இல்லை. இழுத்தாள். நான் நெகிழ்ந்து எழுந்தேன். அவர் எதிரே இழுத்துக்கொண்டுபோய் நிறுத்தினுள்; முன்னிலும் வேகமாக அழுதாள். நான் தலை குனிந்து நின்றேன். "பொன்முடி! குழந்தையை இப்படி அழ வைக்கலாமா?" என்று அவர் கனிந்த குரலில் பேசினர். அவருடைய முகத்தை நோக்கினேன். கண்ணீர்த் துளிகளைக் கண்டேன். என் கண்கள் கலங்கின. நெஞ்சம் உடைந்தது.

“ இவள் பொம்மை கேட்கிருள். வாங்கிக் கொடுங்கள்” என்றேன். உடனே அவர், “ இன்று சாயுங்காலம் வாங்கிவருகிறேன். நல்ல பொம்மை, புது பொம்மை, வாணி!” என்று சொல்லிக்கொண்டே அவளைத் தோள் மேல் சாய்த்துக்கொண்டார். மாலையில் படிப்படியாகப் பறவை ஒலி அடங்குவது போல், வாணியின் அழுகை அடங்கி, விம்மல் நின்று, பெருமூச்சும் ஓய்ந்தது. திருக் குறளில் “ அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்” என்ற குறளைப் படித்துக்கொண் டிருந்தபோது, அந்தப் புத்தகத்திலேயே ஓரத்தில் “ வாணி பிடிவாதம் - என் உறுதி - அவர் கண்ணீர் - என் கலக்கம் - பிணக்குக் கோட்டை இடிந்தது” என்று எழுதினேன்.

ஆனல், அந்த வாணி அப்போது ஐந்து வயதுக் குழந்தை. இப்போது பதினெட்டு வயதுள்ள பெண். இப் போது முன்னிருந்த ஆற்றல் இல்லை. எங்கள் பிணக்கைத் தீர்க்க இப்போது அவளால் முடியவில்லை. அவளும் எங் கள் துன்பக் கடலில் மூழ்கிவிடுகிருள். அமைதியாக இருந்து அல்லல்படுகிருள். அறிவு வளர்ந்த பயன்! காலை யில் அவளும் வாய் திறக்காமல் இருந்து அவரைக் கம் பெனிக்கு அனுப்பினுள்.

அவர் கம்பெனிக்குப் போய் விட்ட பிறகாவது வாணி என்னேடு வாய்விட்டுப் பேசினளா? அதுவும் இல்லை. சின்ன குழந்தையாக இருந்தபோது என்னிடம் ஓயாமல் வாயாடிக்கொண் டிருந்தவள் இப்போது வாய் திறந்து பேசுவது அருமையாகிவிட்டது. “ஆமாம்,” “இல்லை,” “ சரி” என்ற மூன்று சொற்களை மட்டும் எனக்கு என்று ஒதுக்கிவைத்துப் பேசுகின்றுள். ஆனல் அப்பாவிடம் மணிக் கணக்காகப் பேசுகின்ற பழக்கம் இன்னும் இருக் கின்றது. பெண்கள் உற்ற வயதில் தாயிடம் பேசிப் பழகு வது குறைந்து தந்தையிடம் பேசிப் பழகுவது மிகுதியா கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மை யாகிவிட்டது.

“ வாணி! அப்பா நிரம்பக் கவலைப்படுகின்றுர் அம்மா” என்றேன்.

"ஆமாம்" என்று சொல்லிக்கொண்டே கலைமகள் படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"உன்னிடம் ஏதாவது சொன்னாரா? வாணி!"

"இல்லை அம்மா."

"இப்படி அவருக்குத் துயரம் உண்டாக்கிவிட்டு நாம் இங்கே இருக்க வேண்டுமா?"

அவள் வாய் திறக்கவே இல்லை. அந்தக் கலைமகள் படத்திலிருந்த பார்வையைத் திருப்பித் தன் கால்விரல் களைக் கைவிரல்களால் திருகிக்கொண் டிருந்தாள். மறு படியும் நானே பேச்சைத் தொடர்ந்தேன். "அப்பா சொல்கிறபடி நாம் இரண்டுபேரும் ஊருக்குப் போய்ச் சேரலாம்" என்றேன். அதற்கும் பதில் இல்லை. விரல் களின் நகங்களைத் தேய்த்துக்கொண் டிருந்தாள். ஆனால் அவளுடைய கண்கள் கலங்கின. கண்ணீர் ததும்புவதை நான் காணாதபடி முகத்தைத் திருப்பிக்கொள்ள விரும்பி ஏதோ முதுகில் எறும்பு துடைப்பது போல் பாசாங்கு செய்தாள். "வாணி! இன்று மாலையில் அப்பா கம்பெனி யிலிருந்து வந்தவுடனே ஊருக்கு நாம் போவதாகச் சொல்லிவிடு" என்றேன். "சரி" என்றாள்.

அப்புறம் என் கடமைகளைச் செய்யத் தொடங்கி னேன். ஒவ்வொரு நொடியும் என் மனம் அல்லல் பட் டது. வாழ்க்கையின் முடிவை அடைந்துவிட்டதாகவே தோன்றியது. என் நெஞ்சத்தின் குமுறல் படிப்படியே மிகுந்தது. சமையலறையில் என்னை மீறி விம்மி விம்மி அழுதேன். அழுகை ஒரு வகை ஆறுதலாக இருந்தது. வெடித்துப் போகும் நிலையில் இருந்த நெஞ்சம் நெகிழ்ந்து நின்றது. கண்ணீர் விட்டு அழுது துயரால் உடையும் நெஞ்சிற்கு அருமருந்தாக விளங்கியது. ஆனால் எல்லாம் சிறிது நேரமே. மறுபடியும் துயர அலை பெருகுவதும் அடங்குவதுமாக மாறி மாறி வந்தது.

இவ்வாறே பகலெல்லாம் போக்கினேன். மாலையில் குறித்த நேரத்திற்கு முன்னமே அவர் வந்துவிட்டார். வரும்போதே நான்தான் எதிரில் இருந்தேன். அவருடைய

முகத்தின் எதிரே நேரே பார்க்கும் உறுதி எனக்கு இல்லாமல் போய்விட்டது. உடனே வாணியிடம் சென்றேன். அவள் கண்ணாடி ஏந்திக் குங்குமம் அணிந்துகொண்டிருந்தாள். "வாணி! அப்பா வந்துவிட்டார். சொல்லிவிடு" என்றேன். சரி என்ற பதிலைத்தான் எதிர்பார்த்தேன். அதுவும் வரவில்லை.

பூட்ஸையும் கால் சட்டையையும் கழற்றிவிட்டு அவர் நாற்காலியில் சாய்ந்திருப்பதைக் கண்டேன். வாணி அவரை நெருங்கிச் சென்றாள். அவர் வாணியைப் பார்த்துக்கொண்டே தாரை தாரையாகக் கண்ணீர் விட்டார். வாணி ஏதோ சொன்னாள். மெல்லிய குரலில் சொன்னாள். அவளுடைய கையைப் பற்றிக்கொண்டே கண்ணைத் துடைத்தார். விம்மினார். என்னால் அங்கே நிற்க முடியவில்லை. அழுகையும் பெருமூச்சுமாய் அப்பால் சென்றேன்.

# 3. குணமாலை

ரங்கூன் நகரம் அல்லோல கல்லோலம் ஆயிற்று. இரண்டு வாரமாகத் தவித்த தவிப்புச் சொல்ல முடியாது. இரவிலும் பகலிலும் ஒரே கொந்தளிப்பாக இருந்தது. எங்குப் பார்த்தாலும் மக்கள்முகத்திலெல்லாம் கவலையும் பயமும் குடிகொண்டிருந்தன. இந்த நிலையில் எந்த எசமானராவது வேலையாளை நடுத்தெருவில் கைவிட்டுவிட்டுப் போவாரா? அன்பான சொல் ஒன்றுவது சொல்லாமல் போய்விடுவாரா? எதிர்வீடு காலியாகிவிட்டது. பக்கத்துவீடுகள் காலியாகிவிட்டன. தெருவில் ஒருபாதி பாழடைந்துவிட்டது. குடி இருந்த வீட்டிலும் முக்கால் பங்கு காலியாகிவிட்டது. வெளியே தலை காட்டவும் அச்சமாகிவிட்டது. பர்மாக்காரர் தொல்லையும் தொடங்கிவிட்டது. இரவில் பூட்ஸ் ஓசை தெருவில் கேட்டாலும், அல்லது எங்காவது பெரிய ஓசை கேட்டாலும் குடல் எல்லாம் நடுக்கமாக இருந்தது. பகலில் என்ன செய்வதென்று கவலை. இரவில் எப்படித் தப்புவது என்று பயம். சங்கு அழத் தொடங்கிவிட்டாலோ, அல்லது, ஏ.ஆர்.பி. காரரின் சீழ்க்கை ஒலி கேட்டாலோ ஜப்பான்குண்டுபயத்தால் நொடிக்கு நொடி உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. இந்த நிலைமையில் என்னைத் திக்கற்றவளாய் ஒரு வீட்டின் மூலையில் விட்டுவிட்டு இரண்டு வாரமாக—பதினைந்து நாட்களாக—வீட்டிற்கு வராமல் ஒருவர் இருந்தால், அவரை எந்தப் பெண்ணாவது கணவன் என்று கண்ணெடுத்துப் பார்க்க முடியுமா? கனவிலாவது மதிக்க முடியுமா? ஆனால், அந்த ஆபத்துக்கிடையே என் கண்கள் அவரைத்தான் தேடித் திரிந்தன. கனவிலும் நனவிலும் அவரைப் பற்றித்தான் கவலைப்பட்டேன். அவருக்கு எங்கே என்ன ஆபத்து நேர்ந்ததோ என்றுதான் துடி துடித்தேன்.

பொன்முடியின் வீட்டிற்குப் போன பிறகுதான் என் மனம் மாறிவிட்டது. மறுபடியும் அவரைப் பற்றிக்

கவலைப் படுவதில்லை என்ற உறுதியும் ஏற்பட்டது பொன் முடியின் கணவரிடத்தில் பொய் சொல்லியிருக்கிறார். என்னை முன்னமே தக்கவர்களிடத்தில் அனுப்பி விட்டதாகப் பொய் சொல்லி ஏமாற்றி யிருக்கின்றார். நான் தனித்துத் திக்கற்றவளாய்ச் சாக வேண்டும் என்று துணிந்த மனம் அவருக்கு இருக்கும்போது, என் மனம் மட்டும் அவரை என் நாடிக் கவலைப்பட வேண்டும்? கவலையை அந்த நொடியிலேயே விட்டுவிட்டேன்.

என்ன பொருத்தம் அவருக்கும் எனக்கும்! அந்தத் திருமணத்தை நினைத்தாலும் வெறுப்பாக இருக்கின்றது! அறியாமை நிறைந்த என் தந்தை துள்ளிக் குதித்தார். எல்லாப் பொருத்தமும் பார்த்தார். இன்னும் நினைவிருக்கின்றது. நீலமேகன் என்று தம்முடைய மருமகன் பெயரைக் கேட்டதும், பெயர்ப் பொருத்தம் நன்றாக அமைந்திருக்கின்றது என்று மகிழ்ச்சி கொண்டார். மனம்போல் வாழ்வு என்ற உண்மை அறியாமல் ஆயிரம் பொருத்தங்களைப் பார்த்தார் அவர். ஆனால் மனப் பொருத்தம் ஒன்றைப் பர்க்கவே இல்லை.

என் வாழ்க்கையே வீணாகி விட்டது. என் பெற்றோருக்கு நான் சுமையாக இருந்தேன். அவர்கள் இப்படிப் பட்ட ஒருவரைத் தேடி அவருக்கு என்னை மனைவியாக்கி ஒப்படைத்துவிட்டார்கள். அப்புறம் நான் அவருக்கும் சுமையாகிவிட்டேன். என்னை ஒரு பெண்ணுடம்பாக அவர் கருதிப் பழகினாரே அல்லாமல், ஒருநாளும் மனைவியாக எண்ணிப் பழகியதாக நினைவே இல்லை. அதுவும் முதலில் சில நாட்கள் வரையில்தான். பிறகு அவர் என்னை ஒரு வேலையாளாக முடிவு செய்துவிட்டார். அந்த முடிவும் இந்த இரண்டு ஆண்டுகளாக நிற்கவில்லை. என்னை ஒரு நோயாக நினைத்துவிட்டாரோ, பேயாக நினைத்துவிட்டாரோ தெரியவில்லை. ரங்கூன் சுடுகாடாக மாறி விட்ட இந்த நாளிலும் அவருக்கு எள்ளளவும் இரக்கம் இல்லையே!

அவர் மனிதரல்லவா? அவருக்கும் மனம் உண்டல்லவா? அந்த மனம் ஒரு நாளும் என்னைப் பற்றி இரக்கமாக எண்ணியிருக்காதா? நான் ஒரு பெண் என்பதை அந்த

மனம் மறந்து போனாலும் போகட்டும். வேலையாள் என்று எண்ணினாலும் இரக்கம் பிறக்குமே! அன்பு வளருமே! ஒரு வேலையாளுக்கு உரிய இரக்கமும் அன்பும் நான் என்றும் பெற்றதில்லையே! ஒரு வேளை இதுதான் காரணமாக இருக்கலாம். வேலையாளை ஒருவரும் சுமை என்று நினைப்பது இல்லை. வேண்டியவரையில் வைத்திருப்பார்கள். வேண்டாத போது கூலி கொடுத்து வெளியே அனுப்பி விடுவார்கள். பழங்காலத்து அடிமையாக இருந்தாலும், வேண்டிய வரைக்கும் வேலை கொடுத்து உணவும் உடையும் கொடுப்பார்கள். வேண்டாத போது சந்தைக்குக் கொண்டுபோய் விற்றுவிட்டு விடுதலை பெறுவார்கள். ஆமாம்! விடுதலைதான். வேண்டாத ஒன்று நம்மிடம் இருந்து நம்முடைய எண்ணத்தைக் கவர்வது துன்பம் தான். அது நம்மை விட்டு நீங்குவது விடுதலைதான். நான் இரவும் பகலும் வேலையாளாக உழைத்தும், அவர் என்னை விரும்பவில்லை. என்னிடமிருந்து விடுதலைபெறவே விரும்பினார் என்று தெரிகிறது. என்னை ஒரு சுமை என்று உணர்ந்துவிட்டார் என்றே சொல்ல வேண்டும். ஒருவர் வேலையாளை விலக்க முடியும்; அடிமையை விற்க முடியும். அதனால் அவர்களை ஒருவரும் சுமையாகக் கருதுவதே இல்லை. வீட்டில் வாழக் கொண்டுவந்த ஒரு பெண்ணை— திருமணத்தால் பிணைத்துக் கொண்டுவந்த ஒருத்தியை— விலக்குவதற்கும் வழியில்லை, விற்பதற்கும் வழியில்லை. இதை ஒருவர் உணர்ந்துவிடுவாரானால் உண்மையிலேயே அவள் பெருஞ் சுமையாகத்தான் தோன்றுவாள்; ஆயுள் சுமையாகக் கவலை தருவாள். நான் அப்படித்தான் ஆகிவிட்டேன். என்னைப் போல் திருமண அடிமைகள் எத்தனை பேர் வாழ்நாளெல்லாம் அல்லல் படுகிறார்களோ தெரியவில்லை.

இவருக்கு வரும் சம்பளத்தைக் கொண்டு உணவு விடுதியில் உண்டு உறங்கி வாழ முடியுமா? முடியாது. நாள்தோறும் இரண்டு ரூபாய் உணவுக்கும் மாதந்தோறும் இருபது ரூபாய் தங்கும்அறைக்கும் கொடுத்தால் தவிர இவர் உணவுவிடுதியில் வாழ முடியாதே. இவருடைய மாதச் சம்பளமே தொண்ணூறு ரூபாய் தானே. அதில்

உடைக்கு என்ன செய்வார்? படக்காட்சிக்கு என்ன செய்வார்? வேறு நாகரிகச் செலவுகளுக்கு என்ன செய் வார்? அதனுல்தான் அவர் எண்ணிய எண்ணம் நிறை வேறவில்லை போல் தெரிகிறது.

திருமணமான மறு ஆண்டிலேயே "உன்னேடு வாழ என்னுல் முடியாது. நான் இந்த வீட்டில் வாழ்ந்து என் பணத்தைக் கொடுத்தும் துன்பப்படுவதைவிட உணவு விடுதியில் வாழ்ந்து இன்பமாகக் காலங் கழிப்பேனே" என்ருர். அந்த மாதத்திலேயே பத்து நாள் உணவுவிடுதி யில் வாழ்ந்தார். பணம் போதாத குறையால் திரும்பி வந்தாரோ, அல்லது, அந்த நல்லமனம்—ஆறுமுகம்—தடுத் துச் சொன்னதால் திரும்பி வந்தாரோ, தெரியாது. வந்த மறுநாளே என்னை வலுச்சண்டைக்கு இழுத்தார். "இப் படி ஆறிப்போன வெந்நீரில் குளிக்கவைத்து ஆறுமாதத் தில் சாகவைக்கத் துணிந்துவிட்டாயே?" என்ருர். இப் படிப்பட்ட கேள்விகளைக் காதால் கேட்டுக்கொண்டு அவ ரிடம் அன்போடு பேசுவது என்னுல் எப்படி முடியும்?

ஆறுமுகம் சொன்னுர்; அவரே நேரிலும் சொன்னுர்; பொன்முடியிடமும் சொல்லி அனுப்பினுர்; "இனிமேல் அவரிடம் அன்பாக நடந்துகொள்" என்று சொன்னுர். எனக்கும் அப்படி நடக்கவேண்டும் என்றுதான் ஆசை. அவரைக் கணவராகக் காணவேண்டும் என்பதுதான் ஆசை. வேலைவாங்கும் எசமானராகக் காணவேண்டும் என்று கனவிலும் எண்ணியதே இல்லை. எந்தப் பெண் தான் அப்படி விரும்புவாள்? தக்க வயது, நல்ல உடல், போதுமான அழகு, கூர்மையான அறிவு இவையெல்லாம் நிரம்பிய ஒருவரிடம் ஒரு பெண் விரும்புவது இன்னென்று உண்டு அல்லவா? அதுதானே உள்ளங் கலக்கும் அன்பு! அந்த அன்பு இல்லாதபோது, எந்தப் பெண்ணுவது ஒரு வனுடைய வயதையோ, உடம்பையோ, அழகையோ, அறிவையோ மதிப்பாளா? மதித்து நடந்ததாக வரலா றும் கூறவில்லையே. அரசன் முதல் ஆண்டி வரையில் உள்ள எல்லாருடைய மனத்தையும் மாற்றி அறத்தையும் மறக்கச் செய்யவல்ல செல்வமும் ஒரு பெண்ணின் மனத்தை மாற்ற முடியாதே! அன்பு இல்லாத ஒரு கணவ

னிடம் வாழும்படி செய்ய அந்தச் செல்வத்தாலும் முடியாதே! உலகாளும் பெருஞ் செல்வம் வாய்த்தாலும் அது தான் முடியாது. முடிவதாக இருந்தால், எத்தனையோ இளம்பெண்கள் அறுபது வயது நிரம்பிய கிழவர்களை மணம் செய்துகொள்வார்களே! ஆனால், உலகத்தில் காண்பது என்ன? பெற்றோர்கள் செய்யும் கொடுமையினால் அறிவில்லாத பெண்கள் சிலர் செல்வர்களாகிய கிழவர்களை மணம் செய்துகொள்கின்றார்கள். உண்மைதான். ஆனால் அந்தக் கிழவர்கள் நினைந்து இரங்கும்படியாகச் சாதி சமூகக் குடும்பக் கட்டுப்பாடுகளை மீறி நடக்கின்றார்கள். நாளடைவில் கற்பு என்னும் ஒரு வரையறையும் வெறுத்துப் பழி தீர்க்கப் புறப்படுகிறார்கள். செல்வமும் தோற்றுப் போவதையல்லவா இது காட்டுகின்றது? அன்பை நாடும் பெண்மனம் வெறுஞ் செல்வத்தை மதிக்குமா?

ஒரு பெண்ணை இப்படி ஒருவனுடைய தலையில் சுமத்தி அவளுடைய வாழ்க்கையைப் பாழாக்கும் சமூகம் நெடுங்காலம் வாழ முடியுமா? நான் என்ன குற்றம் செய்தேன்? இதுவரையில் உள்ளம் அறிந்த குற்றம் எள்ளளவும் செய்ததில்லையே. என்னை அவர் தவிர இன்னொரு கயவன் தொட இடங்கொடுத்தது உண்டா? அவருக்குத் தீங்குசெய்ய வேண்டும் என்று என்றைக்காவது எண்ணியதும் உண்டா? அவருடைய கட்டளைகளை எதிர்த்து அவருக்குப் பழி ஏற்படுத்தியது உண்டா? ஆனால் என் மேல் அவர் கூறும் குற்றம் ஒன்று உண்டு. அதாவது அவர் செய்யும் கொடுமைகளை எந்நாளும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாமல், ஒவ்வொரு சமயம் வாய்விட்டுச் சொல்லிவிடுவது உண்டு. அதுவும் வேறு எவரிடத்திலும் சொன்னது இல்லை. அவருடைய நண்பர்களிடத்திலும் அவர்களுடைய மனைவியரிடத்திலும் மட்டுமே சொல்லியிருக்கிறேன். அப்போதும் சொல்லாமல் பொறுத்துக் கொண்டிருப்பது நல்லதுதான். ஆனால், அது என்னால் முடியவில்லை. என் வாழ்க்கையில் நன்மை விளையும் என்ற நம்பிக்கை அணுவளவாவது இருந்திருந்தால் நான் அப்போ

தும் வாய் திறக்காமல் பொறுத்துக்கொண் டிருப்பேன். நம்பிக்கை இல்லாத குறையால்தான் ஒவ்வொரு நாள் அவர்களிடம் சிலவற்றைச் சொன்னேன். நம்பிக்கை அற்றுப் போன நிலையில் வேறு வழி ஏது?

அந்த அம்மா பொன்முடி புறப்படுவதாக அப்போது சொல்லியிருந்தால், நானும் அந்த வீட்டிலேயே தங்கி யிருந்து அவர்களோடு புறப்பட்டிருப்பேன். ஆனல், என்ன காரணமோ, நான் கேட்டதற்கு அந்த அம்மா தக்க பதில் சொல்லத் தயங்கினுள். வேறு வழி இல்லாமல் நான் தெரிந்தவர்களைத் தேடித் திரிந்தேன். மூன்று நாள் கழித்து மறுபடியும் அங்கே போனபோது பொன்முடி யும் இல்லை; யாரும் இல்லை. வீட்டின் வாயிலில் இவர்—ஆறுமுகம்-சைக்கிலும் கையுமாக நின்றுகொண்டிருந்தார். என்னைக் கண்டதும் திடுக்கிட்டார். இவருடைய முகத் தில் அப்போதே ஒருவெறி— கவலை வெறி இருந்தது. ஆனல் அப்போது அது கொஞ்சமே குறிப்பாகக் காணப் பட்டது. இப்போது அது முற்றிவிட்டது. இவர்வாழ்க்கை இனிச் சீர்ப்படுமா? தெய்வமே! இப்படிப்பட்ட நல்ல மனமுடைய அருமையான பிறவிகள் அல்லல்படுவது தகுமா? ஏழை நான் இவரை எப்படிக் காப்பாற்றுவேன்?

என்னைப் பார்த்ததும் ''என்ன'மமா? எங்கே இருந்து வருகிருய்? இன்னும் போகவில்லையா'' என்று திடுக்கிட்ட வராய்க் கேட்டார்.

'' இல்லேங்க '' என்றேன்.

பெருமூச்சு விட்டார். சைக்கிலை நிற்கவைத்துவிட்டுக் கைகளை முறித்துக்கொண்டார். சிறிது நேரம் அந்த வாயிற் படியை ஒரே பார்வையாக உற்றுப் பார்த்தார். கலகல என்று கண்ணீர் உதிர்த்தார். மறுபடியும் பெரு மூச்சு விட்டார். ''அம்மா! நீ போய்வர வேண்டுமா? இப்படியே வருகிருயா?'' என்ருர்.

'' துணை இருந்தால் இப்படியே வருவேன் '' என் றேன்.

'சரி. பின்னல் நடந்து வா அம்மா. யாராவது நல்ல வர்கள் துணை கிடைக்கிறவரைக்கும் நானும் நடந்துவரு

வேன். கிடைத்தபிறகு உன்னை விட்டுவிட்டு நான் சைக்கி லில் வேகமாய்ப் போகவேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே சைக்கிலைத் தள்ளிக் கொண்டு முன்னே சென் ருர். நான் நடந்தேன். சைக்கிலில் பின்புறம ஒரு மூட்டை யும் ஒரு சிறிய இரும்புப்பெட்டியும் இருந்தன. முன் புறம் ஒரு பை மாட்டி யிருந்தது. அங்கும் இங்கும் திரும் பிப் பார்க்காமல் தள்ளிக்கொண்டு சென்ருர். நெடுநேர மாக ஒரே பார்வை பார்க்கிருரே என்று நான் கவலை யோடு கவனித்துக்கொண்டே சென்றேன்.

அரை மணி கழிந்தது. ஒரு பாதையின் திருப்பத்தில் நின்ருர். அப்போதும் அந்தப் பார்வை அப்படியே இருந் தது. மறுபடியும் பெருமூச்சு விட்டார். திடீரென்று, ''அவளும் வாணியும் எனக்காகக் காத்துக்கொண்டிருப் பார்கள்'' என்ருர்.

'' எங்கே?'' என்று கேட்டேன்.

''நான் சைக்கிலில் வேகமாக வந்து அவர்களைச் சேர்வ தாகச் சொன்னேன். காத்துக்கொண் டிருப்பார்கள் கவலையோடு'' என்று பேச்சை நிறுத்தினர்.

'' மக்கள் கணக்கற்றவர்கள் போகின்ருர்கள். பயம் இல்லைங்க'' என்றேன்.

உடனே திரும்பி என்னைப் பார்த்தார். அப்போது தான் நான் என் தலைமேல் இருந்த மூட்டையைக் கீழே வைத்துவிட்டு வியர்வையைத் துடைத்துக்கொண் டிருந் தேன். அதைக் கண்டதும் ''ஐயோ, இந்த மூட்டையை நீயே எடுத்துக்கொண்டு வந்தாயே அம்மா. எனக்குத் தெரியாமல் போச்சே'' என்று சொல்லிச் சைக்கிலை நிற்க வைத்து, மூட்டையை எடுத்துப் பின்புறத்தில் கட்டி மறுபடியும் தள்ளிக்கொண்டு சென்ருர்.

இவரைப் போன்ற அன்புருவமானவரோடு வாழ் கின்ற ஒருத்தி ஏன் பொன்முடி ஆக முடியாது? ஏன் கற் பரசி ஆக முடியாது? ஆனல் அவரைப்போன்ற கல் நெஞ் சரோடு வாழ்ந்தால் கற்பரசியும் கீழ்மகள் ஆகிவிடுவாள் அல்லவா? நான் எவ்வளவோ உயர்ந்த நோக்கங்களை என்

பெற்ருேரிடம் கற்றுத் தெரிந்துகொண் டிருந்தாலும் எல்லாவற்றையும் காற்றில் பறக்க விட்டுவிட்டேன். ஆனல், ஒருத்தி மூக்கின் மேல் விரல்வைத்துப் பேசும்படி யாக நடந்துகொள்ளவில்லை. அவருக்கே என் குற்ற மற்ற வாழ்வு தெரியும். அவர் என்மேல் சந்தேகப்பட்ட காலமும் இருந்தது. அவர் அன்று யார்மேல் சந்தேகப் பட்டாரோ அந்த ஆறுமுகமே இன்று எனக்கு வழித் துணையாக உதவுகின்ருர். சைக்கிலில் எளிதில் வேகமாகச் செல்வதை விட்டுவிட்டு எனக்காக அதையும் தள்ளிக் கொண்டு தாமும் நடந்துவருகின்ருர்.

ஆறுமுகத்தின் மேல் சந்தேகப்படும் அளவுக்கு அவ ருடைய மனம் கெட்டுவிட்டதல்லவா? அவருக்கு உண்மை யான நண்பர் இவரே. இவர் இல்லையாஞல் அவருடைய வாழ்க்கை எப்போதோ கெட்டழிந்திருக்கும். அப்படிப் பட்ட உண்மையான நண்பரை—நல்ல மனிதரை—என் மேல் கொண்ட வெறுப்பினுல் சந்தேகப்பட்டார். "உனக் கும் ஆறுமுகத்துக்கும் உறவு இருந்துவருவது எனக்குத் தெரியும். இல்லாவிட்டால் குடும்பச் சண்டையை—குடும் பச் செய்தியை எல்லாம்—அந்த ஆளிடம் சொல்ல உனக்கு மனம் வருமா?" என்று கேட்டு என் மனத்தைப் புண்படுத் தினர்.

போகட்டும். இப்போது எதிரில் வந்து அவர் என்னை யும் இவரையும் பார்த்துவிட்டால்—பார்த்தால் என்ன? பழைய சந்தேகம் வளரும். என்னைப் பழிப்பதற்கு ஒரு நல்ல காரணம் கிடைக்கும். கிடைக்கட்டும், பழிக்கட்டும். இனி நான் அவருடைய வேலையாள் அல்ல. திருமணம் என்று பெற்ருேர் கட்டிய கட்டு என்னை இதுவரையில் இவருக்கு அடிமையாக—அடிமைச் சுமையாக வைத்திருந் தது. ஜப்பான்காரர் குண்டு அவருடைய ஆவலை நிறை வேற்றி என்னைத் திக்கற்றவளாய் விட்டுவிட்டது.எனக்கும் விடுதலை தந்தது. இனிமேல் நான் எவருக்கும் அடிமை யாகவும் வாழமாட்டேன். சுமையாகவும் இருக்கமாட் டேன். உரிமையோடு குற்றேவலும் செய்வேன். அன் போடு தொண்டும் செய்வேன். அவர்மேல் பழி தீர்க்கும் வஞ்ச எண்ணமும் இல்லை. அவருக்கும் இனிமேல் வேண்

டுமானால் குற்றேவல் செய்வேன். சமைத்துப் போடுவேன்; வெந்நீர் வைப்பேன்; துணி துவைப்பேன்: ஆனால் இனிமேல் அப்படிச் செய்ய நேர்ந்தால் உரிமையோடு செய்வேன்; கூலி கேட்பேன்; தனியே உரிமையோடு வாழ்வேன்; கடவுளும் என்னைக் குற்றம் கூற மாட்டார். அவர் கண திறந்து காப்பாற்றிய முறைதான் இது. உலகம் பாழாகும் போர்க் குழப்பத்தில் சில உயிர்களுக்கு—சில பெண்களுக்கு-நன்மையும் உண்டாகின்றது; விடுதலையும் கிடைக்கின்றது.

போர் வந்ததால்எதிர்பாராதவிடுதலைஎனக்கும் கிடைத்தது. எனக்கே அல்ல, எத்தனையோ வாயில்லாப் பிராணிகளுக்கு கிடைத்தது. எனக்கு வாய் இருந்தும் வாயில்லாப் பூச்சியாகவே வாழ்ந்தேன். "பெண்டிர்க் கழகு எதிர் பேசாதிருத்தல்" என்று அப்பா ஆயிரமுறை அம்மாவிடம் சொல்லியதைக் கேட்டிருக்கிறேன். அது மட்டும் அல்ல, சுற்றுப்புறமும் தொன்றுதொட்டு வரும் கட்டுப்பாடும் அப்படித்தான் வற்புறுத்துகின்றன. அதனால் வாழ்நாளில் வருவதெல்லாம் வரட்டும் என்று வாயில்லாப் பூச்சியாக இருந்துவந்தேன். ஆனால் இரவும் பகலும் என் அடிமை வாழ்வை வெறுத்து மனச்சான்று போராடிக்கொண்டே இருந்தது. இப்படிப்பட்ட போராட்டம் அந்த வாயில்லாத உயிர்களுக்கு — அறிவும் இல்லாத மாடுகளுக்கு-இல்லையல்லவா?

அந்த ஊரில் அந்த மாடுகளைக் குடியானவர்கள் அவிழ்த்துவிட்டு ஓட்டினார்களே!என்ன செய்தார்கள்!அருமையாக விலை கொடுத்து வாங்கி அன்போடு தீனி கொடுத்துக் காப்பாற்றிவந்த மாடுகளை அவிழ்த்து ஓட்டினார்கள். தங்கள் வாழ்வுக்கு உதவியாக இருந்த எருதுகள் இப்போது வாழ்வுக்குச் சுமையாகிவிட்டன. ஒவ்வொரு குடும்பத்தாரும் இரண்டு எருது தவிர மற்ற எல்லாவற்றையும் அவிழ்த்து ஓட்டிவிட்டார்கள். ஆனால் அவர்கள் நெஞ்சம் கல் நெஞ்சம் என்று எண்ணினேன். அந்த மாடுகளை நினைத்து நினைத்துக் கண்ணீர்விட்டு அழுவதையும் பார்த்தேனே! என்ன செய்வார்கள், பாவம்!

இங்கே வந்து குடியேறித் தமிழர்கள் இந்தப் பாடுபட வேண்டியிருக்கின்றது. தங்கள் உயிருக்குப் பெரிய ஆபத்து என்று உணர்ந்து தாய்நாட்டுக்குப் புறப்படும்போது மாடுகளை அவர்கள் எப்படிக் காப்பாற்றிக்கொண்டிருக்க முடியும்? ஒவ்வொரு குடும்பத் தலைவனும் மனைவிமக்களை அழைத்துக்கொண்டு வழி நடப்பதே தொல்லையாக இருக்கும்போது, அந்த மாடுகளை எங்கே கொண்டு போவது? அவைகளுக்குப் புல்லும் தவிடும் எப்படித் தேடிக்கொடுப்பது? கூடியவரையிலும் முயற்சிசெய்து விற்றுவிடப் பார்த்தார்கள். கிடைத்தவரையிலும்கிடைக்கட்டும் என்று போட்டி போட்டுக்கொண்டு குறைந்த விலைக்கு விற்கப் பார்த்தார்கள். நூறு இருநூறு ரூபாய் விலை கொடுத்து வாங்கிய மாடுகளை ஐந்து ஆறு ரூபாய்க்கும் கேட்பார் இல்லையானல் என்ன செய்வார்கள்? பர்மாக்காரர் ஒரே ஒற்றுமையாக இருந்து மாடுகளுக்கு விலை இல்லாமல் செய்துவிட்டார்களாம். தப்பித் தவறிக் கையோடு கொண்டு போகும் சில மாடுகளையும் கூட்டம் கூட்டமாக வந்து திருடிக்கொண்டு போகின்றார்களாம்.

பர்மாக்காரர் நேற்று வரையில் நெருங்கிப் பழகியவர்கள். இன்றைக்குப் பெரிய பகையாக இருந்து கொள்ளையடிக்கத் துணிந்துவிட்டார்கள். ஜப்பான்காரருக்குப் பயப்படுவதா? பர்மாக்காரருக்கு அஞ்சி ஓடுவதா? வெளிநாட்டுக்கு வந்த தமிழர் இருதலைக் கொள்ளி எறும்புகளாய் ஓடுகின்றார்கள்; தமிழர்கள் இன்று எறும்புகளாகி விட்டார்கள். ஆம், ஆம்! எறும்புகளைப் போல்தான் வரிசை வரிசையாக ரங்கூனை விட்டுப் புறப்பட்டு வெளியேறுகின்றார்கள். ரங்கூன், நகரமல்ல; ஒரு எறும்புப் புற்று! அந்தப் புற்று இன்று கலைக்கப்படுகின்றது.

மாடுகளை அவிழ்த்து ஓட்டிய குடியானவர்கள் வைக்கோல் போர்களை அப்படியே விட்டுவிட்டு வரக்கூடாதா? அவைகளைக் கொளுத்திவிட்டு வருகின்றார்களே! கேட்டால் என்ன என்னவோ காரணங்களைச் சொல்லுகின்றார்கள். "தனி மனிதனுக்கு வெறி பிடித்தால் பைத்தியம் என்று சொல்கின்றார்கள். மக்கள் கூட்டத்திற்கே வெறிபிடித்தால் போர் என்று சொல்கின்றார்கள்" என்று நேற்று

அந்தப்பெரியவர் நடந்து வரும்போது சொன்னார் அல்லவா? அது உண்மை என்றுதான் தெரிகின்றது. அரசாங்கத்திற் கும் வெறிபிடித்துவிட்டது போல் தெரிகிறது.லட்சம் லட்ச மாகச் செலவு செய்து கட்டிய அருமையான ரயில் பாலங் களையும் மற்றப் பாலங்களையும் இப்படி மனமார இடித்துத் தள்ளிவிடுகின்றார்களே! எதிரிகள் எப்போதோ விமானத் தில் வந்து குண்டு போட்டு அழிக்கின்றார்கள். இவர்களோ அருமையாக எண்ணி முடிவு செய்து கூலியாட்களை வைத் துக் கணக்குப் பார்த்து அழிக்கின்றார்கள். இதுதான் இரண்டு கட்சியாருடைய வெறிக்கும் வேற்றுமையா?

வைக்கோல்போரைக் கொளுத்தவும் உழவர்களுக்கு மனம் வந்ததே! சமைத்த சோற்றைச் சாய்க்கடையில் கொட்ட ஒரு தாய்க்கு மனம் வருமா? யார் கண்டார்கள்? வந்தாலும்வரும்? போர்வெறி யாரைத்தான்விடும்? நேற்று வாவ்நகரத்திலிருந்து நடந்துவந்த அந்த அம்மா சொன்னாள் அல்லவா? அடுப்பிலே கொதிவந்த சோற்றை யும் பருப்புக் குழம்பையும் அப்படியே விட்டுவிட்டுக் கட் டின துணியோடு வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்துவிட் டாள் அல்லவா? என்ன செய்வாள் பாவம்! அந்த நகரம் ஜப்பான்காரர் குண்டுக்கு அகப்பட்டுக் கொண்டது. ஏதா வது கதவைத் தடார் என்று சாத்தினாலும் மக்கள் குண்டு ஓசையோ என்று நடுநடுங்கும்படியாக அவ்வளவு பயம் ஏற்பட்டுவிட்டது. அப்படிப்பட்ட பயம் மட்டும் மல்ல. அந்த அம்மா அதற்கு முந்திய நாளில்தான் கடைத்தெரு விற்குப் போயிருந்த தன் மகனைப் பறிகொடுத்தாளாம். கடைத்தெருவில் ஏழெட்டுக் கட்டிடங்கள் குண்டு விழுந்து பாழாய்விட்டனவாம். போன மகன் வருவான் வருவான் என்று எதிர்பார்த்த அந்த அம்மா மாலையில் அழுது கொண்டே அல்லல்பட்டாளாம். மகனைக் கடைத்தெருவில் பார்த்ததாக யாரோ சொன்னார்களாம்! ஐயோ என்று அலறி விழுந்தாளாம். மறுநாள் சின்ன பிள்ளைகளுக்குச் சோறுபோட உணவு சமைக்கும்போது, கணவன் உடனே புறப்படும்படியாக அழைத்தாராம். ‘இன்றைக்கும் அந்த நேரத்தில் ஜப்பான்காரர் வந்தாலும் வருவார்கள்’ என்று யாரோ அவர்களுக்குச் சொன்னார்களாம். முந்திய நாளில்

பறிகொடுத்த மகன் போக, மற்றப் பிள்ளைகளையாவது காப் பாற்றவேண்டும் என்று துணிந்துவிட்டாள் அந்த அம்மா.

அந்த அம்மா நல்ல துணையாகக் கிடைத்தால், இனி மேல் ஆறுமுகத்தை அனுப்பிவிடலாம் என்று ஒருவகை ஆறுதலோடு படுத்து உறங்கப் போனேன். எனக்கு இன் னொரு வகையிலும் ஒரு விடுதலை இருந்தது ஓர் ஆண்மக னோடு நெடுந்தூரம் வழிப்பயணம் செய்வது அச்சமும் கவ லையுமாகவே இருந்தது. என் தாய் அடிக்கடி என்னிடம் சொல்லியது நினைவு வந்தது; "ஆண்கள் வெண்ணெய் போல, பெண்கள் நெருப்புப் போல. நெருப்பை அணுகிய பின் வெண்ணெய் உருகாதிருக்க முடியுமா? ஆகையால் பெண்கள் கணவன்மாரைத் தவிர எந்த ஆண்களோடும் நெருங்கிப் பழகக் கூடாது" என்று எனக்கு அறிவுரை சொல்லியிருக்கிருள். அவள் சொன்னது உண்மை என் றே இதுவரையில் நம்பியிருந்தேன். நம்பி வந்ததால்தான் தப்பி வாழவும் முடிந்தது. எந்த ஆண்மகனும் எனக்காக வலைவீச முடியவில்லை. அந்தத் தாயின் அறிவுரை இல்லை யானல் ஒரு வேளை போராட்டத்தில் அகப்பட்டிருப்பேன். போராட்டத்தில் வெற்றியே கிடைத்திருக்குமோ, தோல்வி கிட்டியிருக்குமோ? எப்படியோ போகட்டும். போராட் டம் இல்லாமல்போனது நன்மை ஆயிற்று.

ஆனல், ஆறுமுகத்தோடு நெடுந்தூரம் நடந்து வந்த போது என்மனத்தில் குழப்பம் ஏற்பட்டது. நானும் கணவ னைத் துறந்தவளாய் நடந்துவந்தேன். அவரும் மனைவியைப் பிரிந்தவராய் நடந்து வந்தார். ஒரு வேளை என் தாய் சொன் னது போல், இவருடைய மனம் மாறுமானல் போராட நேரிடுமே என்று அஞ்சினேன். ஆனல் நான்கு நாள் இராக்காலத்தில் அவருடைய தூய வாழ்வுக்கு ஒரு பரீட் சை வைத்து முடிந்தது. அவர் நனவிலும் கனவிலும் பொன்முடியையும் வாணியையுமே காண விரும்புகின்ருர். சில வேளைகளில் நான் இருப்பதையே மறந்துவிடுகின்ருர். "யார் அங்கே?" என்று என்னையே கேட்கின்ருர். "நான் தான்" என்று சொல்லியதும், என் குரல்கேட்டு முகம் கவிழ்கின்ருர். கனவிலே "பொன்முடி! பொன்முடி!

என்றே வாய் வெருவுகின்றார். என்னோடு பேசும் போது தவிர மற்ற வேளைகளில் என்னைத் திரும்பிப் பார்ப்பதே இல்லை. என்னைப் பார்த்துப் பேசும்போதும், பார்த்த மறுநொடியிலேயே தலை குனிந்து பேசுகின்றார்; அல்லது பார்வையை வேறு பக்கம் திருப்பிக்கொள்கின்றார்.

என் தாய் என்னவோ எண்ணிப் பெண்களை நெருப்பு என்றாள். அவளுடைய வாழ்க்கையையே எண்ணி, பெண்கள் கற்பரசிகள் என்றும் ஆண்கள் தடுமாற்றம் உடையவர்கள் என்றும் சொன்னாள். தவிர, என் தந்தையின் வாழ்க்கையை ஆராய்ந்த அவள் எல்லா ஆண்களும் அப்படிப் பிற பெண்களை நாடி அலைகிறவர்களே என்று முடிவு செய்துவிட்டாள். அவள் ஆறுமுகம் போன்ற ஆண்களைப் பார்க்கவில்லை. ஆறுமுகம் பெருநெருப்புத்தான்; கற்பே வடிவான ஓர் ஆண்மகன் இவர். பெண்களுக்கு உள்ள இந்தச் சிறப்பு ஆண்களுக்கும் உண்டு என்பதை நான் நன்றாக உணர்ந்துகொண்டேன். சில நாட்களாக இரவும் பகலும் நான் இவர் அருகே இருந்தபோதிலும், என்னைக் காணவும் என்னோடு பழகவும் கூசுகின்றார். மனமெல்லாம் பொன்முடிக்கே உரிமையாக்கி யிருக்கின்றார்.

இவர் இவ்வளவு உறுதி உடையவர் என்பதை உணர்ந்திருந்தாலும், என் மனம் இவரிடம் விடுதலை பெறவேண்டும் என்றே நாடியது. வாவ்நகரத்து அம்மா குடும்பத்தோடு வந்து பழகிய பிறகு, இவரை அனுப்பிவிட வேண்டும் என்றே துணிந்தேன். தம்முடைய குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும், பொன்முடியையும் வாணியையும் காணவேண்டும் என்று இவர் படும் கவலையைத் தீர்ப்பது என் கடமை அல்லவா? இவ்வளவு தூரம் எனக்கு இவர் உதவியதே போதும் அல்லவா? இவ்வாறு எண்ணிக் கொண்டே இருந்தேனே அல்லாமல், இவரிடம் சொல்லத் துணிவு பிறக்கவில்லை.

அன்று இரவு பதினொரு மணிக்கு நாங்கள் இருந்த இடத்தில் பெரிய கூட்டம் நெருங்கி வந்துகொண்டிருந்தது. விழித்துக்கொண்டு பயந்தேன். பர்மாக்காரர் கொள்ளையடிக்க வருகிறார்களோ என்று பயந்து நடுங்

கினேன். எல்லாரையும் எழுப்பிவிட்டேன். நாங்கள் எழுந்து நாலைந்து மரங்கள் நெருங்கிய இடத்தில் ஒளிந்து கொண்டோம். அப்போது எங்கள் நெஞ்சம் பட்டபாடு சொல்ல முடியாது. இப்படிக் கண்காணா இடத்தில் நடுங்கிச் சாவதைவிட ரங்கூனிலிருந்தபடியே மடிந்திருக்கலாமே, ஜப்பான் குண்டையே அனுபவித்திருக்கலாமே என்றும் எண்ணினோம்.

சிறிது நேரத்தில் எங்கள் பயம் தீர்ந்தது. கூட்டம் நெருங்கிவந்ததும், அவர்கள் தமிழ் பேசுவது கேட்டோம். "அண்ணா! இங்கேயே தங்கலாம்" "ஆமாம், இந்த இடம் போதும்!" என்றும் இரண்டு குரல் தெளிவாகத் தமிழில் பேசக் கேட்டதும், மரத்தடியில் ஒளிந்திருப்பதை விட்டு வெளியே வந்தோம். நாங்கள் நிற்பதைப் பார்த்ததும், "யார் அங்கே" என்று அவர்களில் சிலர் கேட்டார்கள். சிலர் தடிகொம்புகளை எடுத்துஉயர்த்தினார்கள். சிலர்பயந்து ஓடத் தொடங்கினார்கள். ஆறுமுகம் அஞ்சாமல், "நாங்கள் தமிழர்கள். உங்களைப் போல் வந்தவர்கள்" என்று கத்தினார். நாங்கள் எதிரே சென்றோம். அவர்களும் வண்டிகளோடு நெருங்கி வந்தார்கள். அவர்கள் யாரோ? எங்களுக்கு அறிமுகமானவர் ஒருவரும் இல்லை. ஆனாலும், அந்த நள்ளிரவில் நாங்கள் ஒருவரை ஒருவர் கண்டபோது எவ்வளவு அன்போடு பழகினோம்! அன்பான உறவினர்கள் அல்லது சிறந்த நண்பர்களோடு பழகுவது போல் இன்பமாக இருந்தது. இத்தனைக்கும் காரணம் நாங்கள் பேசிய தமிழ்தான். எல்லாரும் தமிழர்கள் என்ற காரணம்தான். எல்லாரும் தாய்நாட்டுக்குப் புறப்பட்டுப்போகிறோம் என்ற காரணம் தான். உண்மையாகவே, இறந்துபோன அம்மாவையும் அப்பாவையும் கண்ணாரக் கண்டது போல் எனக்கு அவ்வளவு இன்பமாக இருந்தது. அன்று பெற்ற மகிழ்ச்சி ஒரு த்னி மகிழ்ச்சிதான்.

ஏறக்குறைய நூறு வண்டிகள் வந்து தங்கின. அவர்கள் அத்தனைப் பேரும் தங்கள் நிலபுலத்தை விட்டுவிட்டு வண்டிமாட்டோடு வந்திருப்பது அறிந்தோம். கையில் அரிசியும் பருப்பும் மட்டும் வைத்திருந்தார்கள். உணவு

உண்டது பகல் பன்னிரண்டு மணிக்காம். பசி கர்தடைத்தது என்று பலர் சோர்ந்து படுத்தார்கள். ஆறுமுகமும் நானும் வாவ்நகரத்து அம்மாவும் கையிலிருந்த உணவை வந்த குழந்தைகளுக்குக் கொடுத்துவிட்டு உணவு சமைக்கத் தொடங்கினேம். எங்கள் முயற்சியைப் பார்த்துவிட்டு, வந்த பெண்கள் எல்லோரும் எங்கள் கைவேலையை வாங்கிச் செய்தார்கள். அவர்களே பல பாத்திரங்கள் கொண்டு வந்திருந்தார்கள். எல்லாம் கிடைத்தும் விறகு கிடைக்க வில்லை. பக்கத்திலிருந்த ஒரு பள்ளத்தில் பாசி படிந்த தண்ணீரும் கிடைத்தது. ஆனல் விறகு கிடைக்கவில்லை. உடனே இங்கும் அங்கும் ஆறுமுகமும் இன்னும் சிலரும் ஓடிப்போய் உலர்ந்து போன சருகுகளைத் திரட்டிக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். பருப்பும் அரிசியும்சேர்ந்து வெந்து உப்பில்லாமல் கிடைத்த உணவை எல்லோரும் உண்டு படுத்துவிட்டார்கள். வந்த அலுப்பினல் சிறிது நேரத்தில் எல்லாரும் உறங்கினர்கள். நானும் உறங்கினேன்.

மணி இரண்டு அல்லது மூன்று இருக்கும். ஆரவாரம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்துகொண்டேன். ஆண்கள் பலர் தடியும் கொம்பும் கத்தியும் தாங்கி நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன். "எங்கள் மாடு இல்லை, உங்கள் எருது இல்லை. என் மூட்டை இல்லை. பெட்டி போய்விட்டது" என்றெல்லாம் பேசி அலறுவது கேட்டேன். ஆறுமுகம் எங்கே போயிருப்பதும் தெரியவில்லை. என்னுடைய மூட்டை மட்டும் எனக்குத் தலையணையாக இருந்தபடியே இருந்தது. பர்மாக்காரர் சமயம் பார்த்துப் புகுந்து கொள்ளை யடித்துக்கொண்டு போனது தெரிந்தது இந்தக் கூட்டம் வந்ததைப் பார்த்துப் பர்மாக்காரர் நெடுந்தூரம் தொடர்ந்து வந்திருக்க வேண்டும். எல்லாரும் உறங்கின நேரம் பார்த்துக் கொள்ளையடித்துக் கொண்டு போய்விட்டார்கள்.

ஆறுமுகம் எங்கெங்கோ அலைந்து தேடிவிட்டுநாலைந்து பேருடன் வந்து சேர்ந்தார். அவர் வந்து சொன்ன போதுதான், அவருடைய சைக்கிலும் திருடுபோய்விட்ட

தென்று தெரிந்து வருத்தப்பட்டேன். அவர் அந்தச் சைக்கிலில் எங்காவது போயிருப்பார் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். சைக்கில் திருடுபோய்விட்டது என்று அவர் சொன்னபோது என் நெஞ்சம் கலங்கியது. அவர் வந்து தலைமேல் கைவைத்துக்கொண்டு, "இனிமேல் என்ன செய்வது?" என்று ஓ என அழத் தொடங்கி விட்டார். பக்கத்திலிருந்தவர்கள் எவ்வளவோ தேறுதல் சொல்லியும் அவர் ஓயவில்லை.

''இதற்காக அழலாமா? எங்கள் எருதுகளைத் திருடிக் கொண்டு போய்விட்டார்கள். அதற்காக அழுதால் பயன் உண்டா? நாளைக்கு இந்த வண்டியை உடைத்து அடுப்பில் வைத்துச் சமையலுக்கு விறகு ஆக்கப் போகிறோம். துன்பம் வந்தபோது ஆண்மை காட்ட வேண்டாமா?'' என்றார் ஒருவர்.

''என்னுங்க! நாங்கள் வந்தபோது பெரிய தலைவர் போல் எங்களுக்குத் தைரியம் சொன்னீர்களே; இப்போது வருத்தப் படுகிறீர்களே!'' என்றார் இன்னொருவர்.

''எங்களுக்காக ஓடி ஆடிச் சருகும் தண்ணீரும் கொண்டு வந்து கொடுத்தீர்கள்! அவ்வளவு வீரமாக இருந்துவிட்டு, இப்போது எங்களையும் வருத்தப்பட வைக்கின்றீர்களே?' என்றார் இன்னொருவர்.

''உங்கள் கை கால் இருக்கிற வரைக்கும் உங்களுக்குக் கவலை ஏனுங்க?'' என்றாள் வாவ்நகரத்து அம்மா.

இவற்றையெல்லாம் கேட்ட ஆறுமுகம், "ஆமாம். நானும் உங்களைப் போல் குடும்பத்தோடு வந்திருந்தால் இவ்வளவு கவலைப்பட மாட்டேனே" என்றார். எனக்குச் சொல்லமுடியாத துயரமாயிற்று. காலையில் இவரைச் சைக்கிலில் வேகமாகப் போய்ப் பொன்முடியைப் பிடிக்குமாறு சொல்லத்துணிந்திருந்தேன். என் எண்ணம் பாழாயிற்று! எனக்கு நெருக்கடியான வேளையில் உதவியாக வந்தவர் மனம் தவிப்பதைக் கண்டு வருந்தினேன்.

அந்தக் கூட்டத்தார் பலரும் என்னை இவருடைய மனைவி என்று எண்ணிக்கொண்டிருந்ததாகத் தெரிந்தது.

இவர் தம்முடைய குடும்பததைப் பிரிந்திருப்பதாகச் சொன்னபோதுதான், அவர்கள் உண்மை அறிய விரும்பினார்கள். "நீ யார் அம்மா?" என்று அவர்களில் ஒருவர் என்னைக் கேட்டார். "நானும் ரங்கூன்தான்; என் கணவர் என்னை விட்டுவிட்டு முன்னே போய்விட்டார். இவர் அவருடைய நண்பர். இவர்துணையால் இவ்வளவு தூரம் வந்தேன்" என்று சொன்னேன்.

ஆறுமுகம் விம்மிக்கொண்டே தலை சாய்த்தார். அவர் நெடுநேரம் உறங்கவில்லை. பலரும் வந்து பார்த்துவிட்டும் பேசிவிட்டும் போய்ப் படுத்தார்கள். எனக்கு உறக்கமே வரவில்லை. ஆறுமுகம் படும் துயரத்திற்கு நானே காரணம் என்று என் நெஞ்சம் என்னை வருத்தியது. நான் கண்ணை மூடிக்கொண்டு கிடந்தேன் எல்லோரும் உறங்கிவிட்டார்கள். அவர் மட்டும் உறங்கவில்லை. நானும் உறங்கவில்லை.

ஆறுமுகம் எழுந்தார். அங்கும் இங்கும் நடந்தார். அதைப் பார்த்துக்கொண்டே இருந்த எனக்குத் திடீரென்று ஒரு திகில் ஏற்பட்டது. எங்காவது தற்கொலை செய்துகொள்வாரோ என்று அஞ்சினேன். அவரைத் தொடர்ந்து செல்ல எழுந்து உட்கார்ந்தேன். அதற்குள் அவர் திரும்பி வருவதைக் கண்டு அவர்க்குத் தெரியாதபடி மறுபடியும் படுத்துக்கொண்டு உறங்குவது போல் இருந்தேன். அப்போது பக்கத்திலிருந்த ஒருத்தி, "அவர் எங்கே போய்ப் போய் வருகிறார் அம்மா!" என்று என்னைக் கேட்டாள். "கொஞ்சம் பேசாமல் இரு அம்மா. அப்புறம் சொல்கிறேன்" என்றேன். "எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை அம்மா" என்றாள்.

ஆறுமுகம் ஒரு மரத்தின் பக்கத்தில் நின்றார். சட்டைப் பையில் கையை வைத்து எதையோ தேடினார். நேராகத் தாம் படுத்திருந்த இடத்திற்கு வந்து அங்கும் இங்கும் பார்த்தார். "மூட்டையும் போச்சா?" என்று தலைமேல் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்தார். அவ்வாறே படுத்தார்.

பக்கத்திலிருந்த அம்மா "தூங்கிவிட்டாரா?" என்று கேட்டார். இவர் விழித்துக்கொண்டிருப்பார் என்று

எண்ணி நான் பதில் பேசாமல் கிடந்தேன். சிறிது நேரம் கழித்து, "பொன்முடி! எங்கே? எங்கே?" என்று அலறி எழுந்தார். சுற்றிலும் பார்த்துவிட்டு, தலையை ஒரு மரத்தில் மோதியபடியே சாய்ந்து நின்றார். பக்கத்திலிருந்த அம்மா தன் கணவனை எழுப்பினாள். அவளுடைய கணவன் மறுபடியும் பர்மாக்காரர் வந்துவிட்டதாக அஞ்சி அலறி "எதோ? எங்கே?" என்று தடியை எடுத்துக்கொண்டு எழுந்தார். இந்த அலறலைக் கேட்டு மற்றவர் சிலர் அலறி எழ, இப்படியே கொஞ்ச நேரத்தில் எல்லாரும் எழுந்து விழித்துக்கொண்டு இங்கும் அங்கும் பரபரப்பாகச் சென்றார்கள்; அலைந்தார்கள். கணவனை எழுப்பிய அம்மாவும் நானும் எவ்வளவோ முயன்று காரணம் சொல்லியும் கூட்டத்தின் அலறலைக் குறைக்க முடியவில்லை. ஆறுமுகம் படுத்துக்கொண்டார். அவரைச் சூழ்ந்து பத்து ஆண்கள் காவலிருந்தார்கள்.

பொழுது விடியத் தொடங்கியது. "கிழக்கு வெளுத்து வருகின்றது; புறப்படுவோம்" என்று சிலர் புறப்படத் துணிந்தார்கள். "இரவு உண்டது போதுமானதாக இல்லை. காலையிலாவது நன்றாக உண்ணாமல் புறப்பட்டால் வழி மாளாது" என்றார் சிலர். "முன்போல் எருதுகள் இருந்தால் வண்டிகளிலாவது பெண்களும் குழந்தைகளும் ஏறி வரலாம். இப்போது நடந்துதானே போகவேண்டும்" என்று பெண்கள் முணுமுணுத்தார்கள். ஏறக்குறைய இருநூறு எருதுகளுடன் வந்தவர்கள் பதினாறு எருதுகளே மிகுந்திருக்கக் கண்டார்கள். ஆகவே எட்டு வண்டிகள் பூட்டி அவற்றில் குழந்தைகளையும் வயதானவர்களையும் மட்டும் ஏற்றி அனுப்புவதென்று முடிவு செய்தார்கள். சமையல் செய்து உண்டு, அடுத்த வேளைக்கு வேண்டிய உணவை வண்டிகளில் எடுத்துக்கொண்டு போவதென்றும் முடிவு செய்தார்கள். சமையல் வேலை பரபரப்பாக ஆயிற்று.

இரவெல்லாம் பித்துப் பிடித்து அலைந்த ஆறுமுகம் சமையல் நேரத்தில் வேண்டிய உதவியெல்லாம் செய்தது கண்டு பலருக்கும் மகிழ்ச்சியாகவே இருந்தது. அன்று வந்த பர்மாக்காரர் திருடிக்கொண்டு போன மூட்டைக

ளில் பொன்முடி விட்டுவிட்டுப் போன சில வெள்ளிச்சாமான்கள் இருந்ததாகவும், பணம் மட்டும் தம்முடைய சட்டைப் பையிலே இருந்ததால் தப்பியதாகவும் ஆறுமுகம் சொல்லியபோது என் மனம் குளிர்ந்தது. இனிமேல் அவரைப் பற்றிக் கவலை இல்லை என்று நம்பினேன்.

சமையல் முடிந்தது. எல்லோரும் உணவு உண்டார்கள். என்னைச் சுற்றிலும் பெண்கள் சிலர் உட்கார்ந்து கொண்டு மூட்டை கட்டிக்கொண்டும் பேசிக்கொண்டும் இருந்தார்கள். புறப்பட ஆயத்தமாக இருக்கும்படி எல்லாருக்கும் கேட்கும்படி சொன்னார்கள் ஆண்கள். அப்போது ஒருத்தி எழுந்து அடுப்பில் எரிந்துகொண் டிருந்த ஒரு பெரிய கொள்ளியைக் கொண்டுவந்து ஒரு கட்டெறும்புச் சாரையைத் தீய்த்து அவற்றின் புற்றில் நெருப்பை உதிர்த்தாள். காரணமில்லாமல் இப்படி என் கட்டெறும்புகளைச் சுட்டுக் கொல்லவேண்டும் என்று எனக்கு இரக்கம் தோன்றியது.

"ஏன் அம்மா இந்த வேலை?" என்றேன்.

"எப்படிக் கடித்தது பாருங்கள்" என்று அவள் தன் துடையைத் தேய்த்தாள்.

"கடித்த எறும்பு எதுவோ? இப்படி ஏன் எல்லா எறும்புகளையும் தீய்க்கவேண்டும்?" என்றாள் மற்றொருத்தி.

"விஷம்போல் ஏறுகிறது, எரிகிறது. தேள் போல இருக்கிறதே" என்று அவள் துடையைத் தேய்த்துக் கொண்டே அந்தக் கொள்ளிக் கட்டையில் இருக்கும் நெருப்பு முழுதும் உதிர்த்துவிட்டு, அந்த வெறுங் கட்டையால் ஓடுகிற மற்ற எறும்புகளைத் தேய்த்தாள்.

"இத்தனை எறும்பும் என்ன பாவம் செய்தனவோ?" என்றேன் நான்.

"நாம் செய்த அதே பாவம் தான்" என்றாள் இன்னொருத்தி.

"எப்படி அம்மா அது?" என்றேன்.

"ஜப்பான் அதிகாரிகளுக்கு யாரோ சில பேர் விரோதிகள், அவர்களுடைய படை முன்பின் தெரியாத நம்மையெல்லாம் துரத்தி ஓட்டவில்லையா? ரங்கூனில் இருந்த அத்தனைப் பேரையும் குண்டு போட்டுச் சுட்டுக் கொல்லத் துணியவில்லையா?" என்று அந்த அம்மா விளக்கினாள்.

"நாமெல்லாம் தப்பி ஓடி வந்து விட்டோமே! இந்த எறும்புகள் அத்தனையும் சுட்டு முடிந்துபோயிற்றே!" என்றாள் ஒருத்தி.

"அதோ சில கட்டெறும்புகள் அகப்படாமல் ஓடிவிடவில்லையா?" என்று இன்னொருத்தி சில எறும்புகளைச் சுட்டிக் காட்டினாள்.

கடிபட்ட அந்த அம்மா அங்கே ஓடும் எறும்புகளைக் கண்டதும் மறுபடியும் கொள்ளிக் கட்டையைத் தேடிக் கொண்டு அடுப்பருகே சென்றாள். அப்போது, "நில்லுங்கள் ஐயா, நில்லுங்கள்" என்று இரண்டு மூன்று பேர் சேர்ந்து கூவினார்கள். நான் திரும்பிப் பார்த்தபோது, ஆறுமுகம் நாலைந்து பேர்களின் கையில் சிக்கிக்கொண்டு திகைத்துக்கொண் டிருப்பதைப் பார்த்தேன். எழுந்து ஓடினேன்.

"இப்போது போய்ப் பயனில்லைங்க. நான்தான் சொல்கிறேனே, சொன்னால் கேளுங்கள்" என்று ஒருவர் மன்றாடிச் சொல்லிக்கொண்டிருந்தார்.

"போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுவேன். அவளும் வாணியும் போன பிறகு நான் இருந்து என்ன பயன்?" என்று ஆறுமுகம் தலையை அடித்துக்கொண்டார்.

"உங்கள் மனைவியும் மகளும் என்று எப்படித் தெரியும் ஐயா?" என்றார் ஒருவர்.

"அவர்தான் அடையாளம் சொல்கிறாரே. வேறு யார் அப்படித் தாயும் மகளுமாகப் போகும்படி தனியே அனுப்பிவிட்டிருப்பான். ஒரு பாவியும் அப்படிச் செய்ய மாட்டான். நான்தான் அந்தப் பாவி" என்று ஆறுமுகம் கண்ணீர் வடித்தார்.

"எங்கே? என்ன ஆனது? யார் வந்தது? எங்கே பார்த்தார்கள்?" என்று பலகேள்விகள் கேட்டும் எனக்குப் பதில் சொல்வார் எவரும் இல்லை. எல்லாரும் ஆறுமுகத்தைத் தேற்றுவதிலேயே ஈடுபட்டார்கள். ஆனால் ஒருவர் மட்டும் என்னுடைய கலக்கத்தை எப்படியோ தெரிந்து கொண்டு என்னிடம் வந்து பேசினார். எல்லா விவரங்களையும் தெரிவித்தார். தெரிந்துகொண்டேன்.

பதினைந்து மைல் தொலைவில் ஒரு ரயில் நிலையம் இருந்ததாம். அங்கே ரயில் கிடைத்தால் பிரயாணம் செய்யலாம் என்று மக்கள் கூட்டமாகப் போய்க் காத்திருந்தார்களாம். ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாகக் கூடியிருந்த அத்தனைப் பேருக்கும் இலவசமாகவே சர்க்கார் உணவுப் பொருள் கொடுத்து உதவியும் செய்தார்களாம். சாமான் (கூட்ஸ்) வண்டியில்தான் மக்கள் ஏறிச் சென்றார்களாம். ஆனால் அதற்கும் ஆயிரக்கணக்கான மக்கள் இருந்ததால் ஏற்றி யனுப்புவது அருமையாக இருந்ததாம். நூறு இரு நூறு என்று லஞ்சம் கொடுத்த செல்வர்களுக்கு முதலில் இடம் கிடைத்துப் போய்விட்டார்களாம். அவர்கள் போகவே, ஏழை மக்கள் மட்டும் ரயில் நிலையத்தில் தங்கிவிட்டார்களாம். மறு நாள் வண்டி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அவர்கள் படுத்துக் கிடந்தபோது எதிரி விமானம் பறந்து வந்து நிலையத்தின்மேல் குண்டு வீசித் தவிடுபொடி ஆக்கிவிட்டதாம். பக்கத்திலிருந்த மக்கள் பலர் மடிந்து போய்விட்டார்களாம். மாட்டுவண்டிகள் பற்றி எரிந்து போய்விட்டனவாம். தப்பிப் பிழைத்தவர்கள் உடனே புறப்பட்டு இந்தத் திசைநோக்கி நடந்துவரும்போது பர்மாக்காரர் கூட்டமாக எதிரில் வந்தார்களாம். அவர்களிடம் இதைச் சொன்னபோது, அவர்கள் இவர்களுக்கு உணவு கொஞ்சம் கொடுத்து, இந்த இடத்தில் நாங்கள் கூட்டமாகத் தங்கியிருப்பதைச் சொன்னார்களாம். அவர்களிடம் இருந்த மாடுகளையும் காட்டி, அவைகளை இந்தக் கூட்டத்தார் விலையில்லாமல் கொடுத்தனுப்பியதாகவும் சொன்னார்களாம். இவ்வளவு செய்திகளையும் தப்பி வந்த முப்பது பேரும் சொல்லிக்கொண்டிருந்த போது, ஆறுமுகம் குறுக்கிட்டுப் பேசினாராம். அங்கே தாயும் மகளுமாக

முப்பத்தைந்து வயதும் பதினெட்டு வயதுமாக இரண்டு பேரைப் பார்த்தது உண்டா என்று ஆறுமுகம் கேட்டாராம்.

பார்த்ததாக ஒருவர் பதில் சொல்லி முடிப்பதற்கு முன்னே, மற்றொருவர் சிறிதும் எண்ணிப்பார்க்காமல், "ஆமாம் ஐயா, அவர்களும் அகப்பட்டுக்கொண்டார்கள், பாவம்" என்று அவ்வளவுதான் சொன்னார். அதைக் கேட்டவுடனே ஆறுமுகம் அந்தத் திசை நோக்கி ஓடத் தொடங்கிவிட்டாராம். அவரைத் தான் "நில்லுங்கள் நில்லுங்கள்" என்று எங்கள் கூட்டத்தார் சிலர் தடுத்தார்கள்.

உடனே நான் ஆறுமுகத்திடம் சென்றேன். அவரை நோக்கி, "பொன்முடியும் வாணியும் மூன்று நாளைக்கு முன்னே புறப்பட்டார்களே! நமக்கு முன்னே நெடுந்தூரம் போய்க்கொண்டிருப்பார்களே! இங்கே தங்கியிருக்கக் காரணம் இல்லையே! நாம் விரைந்து நடந்தால், நாளை மறுநாள் அவர்களைப் பிடித்துவிடலாம்" என்றேன்.

"ஒரு வேளை ரயிலில் போக எண்ணி அங்கே போய்த் தங்கியிருந்தால்" என்று கலங்கினார்.

"மூன்று நாளைக்கு முன்னமே இடங்கிடைத்துப் போய்விட்டிருப்பார்கள்" என்றேன்.

"ரயிலில் இடங்கிடைப்பதற்கு லஞ்சம் கொடுக்க வேண்டுமே! அவர்களிடத்தில் பணம் இல்லையே. அதிகமாகக் கொடுத்தனுப்பத் தவறிவிட்டேனே" என்று கையை நொடித்துக்கொண்டார்.

"லஞ்சம் கொடுப்பது நேற்றுமுதல்தான். அதற்கு முன் வந்தவர்கள் அந்தக் கூட்டத்தில் யாரும் இல்லை. அதற்குமுன் வந்தவர்களுக்கு இடம் கிடைத்து முன்னமே போய்விட்டார்களாம்" என்று என்னோடு பேசிக்கொண்டிருந்தவர் தந்திரமாகப் பதில் சொல்லி ஆறுமுகத்தை ஒருவகையாகத் தேற்றினார்.

இதற்குள் பர்மாக்காரர் ஓட்டிக்கொண்டு போன மாடுகளைத் திருப்பிப் பிடித்துவரலாமா என்று கூட்டத்தார்

சிலர் யோசனை செய்தார்கள். நெருக்கடியான காலங்க ளில் உள்நாட்டுக்காரரோடு பகை வளர்க்கக் கூடாது என்று சிலர் சொல்லித் தடுத்தார்கள். ஆறுமுகத்தின் சைக் கிலும் திருடு போனதாக ஒருவர் சொல்லவே, "ஆமாம் ஆமாம்; ஒரு சைக்கிலும் பர்மாக்காரர் மூட்டையோடு வைத் துக்கொண் டிருந்தார்கள்" என்று வந்தவர் ஒருவர் தாம் பார்த்ததாகச் சொன்னார். அந்தச் செய்தி ஆறுமுகத்தின் செவியில் படாதவாறு நான் தடுத்துவிட்டேன். கூட்டத் தார் பர்மாக்காரரைத் திட்டியதையும் ரயில்நிலயத்திலி ருந்து ஓடி வந்தவர்கள் அந்தப் பர்மாக்காரர்க்கே உணவு கொடுத்து வழிகாட்டிக் காப்பாற்றியதாகப் புகழ்ந்து கூறியதையும் இரண்டு செவிகளாலும் கேட்டுக்கொண் டிருந்தேன்.

இந்த நிகழ்ச்சி நடந்தது முதல் ஆறுமுகத்தின் கவலை யைப் போக்கி அழைத்துக்கொண்டு போவது என் பொறுப்பாக மட்டும் இல்லை. அங்கிருந்த அத்தனைப் பேரும் அந்தப் பொறுப்பைப் பங்கிட்டுக்கொண்டார்கள். ஆறு முகம் எல்லாருக்கும் பொதுவான ஒரு குழந்தைபோல் ஆகிவிட்டார். ஆகையால் எப்படியோ நடந்துபோக முடிந்தது.

அங்கிருந்து புறப்படும்போது பலர் வருந்த வேண்டி யிருந்தது. அளவுக்கு மீறிச் சாமான்களை மூட்டை கட்டி மாட்டு வண்டிகளில் கொண்டுவந்தவர்கள் திண்டாடினார் கள். மாடுகள் திருடு போனதால், அந்த மூட்டைகளை எடுத்துக்கொண்டு போக வண்டியில்லாமல் போயிற்று. வண்டிக்காரர் கொண்டுவந்த வரைக்கும் வாடகை கேட்டு வாங்கிக்கொண்டு இனிமேல் முடியாது என்று மறுத்து விட்டார்கள். கூலியாட்களோ கிடைக்க வில்லை. அதனால் பல சாமான்களை அங்கேயே விட்டுவிட்டு மூட்டைகளைக் குறைக்க வேண்டி நேர்ந்தது. பணக்காரர் ஒருவர்க்கு மட்டும் ஒரு சாமானையும் விட்டுவர மனம் இல்லை. அவர் நிறையக் கூலிகொடுத்தால் இரண்டு ஆட்கள் அவருடைய பெட்டிகளை எடுத்து வருவதாக முன் வந்தார்கள். அவ்வ ளவு கூலி கொடுப்பதற்கும் அவர் இணங்கவில்லை. கடை சியில் அவரையே அங்கே விட்டுவிட்டு வருவார்கள்போல்

தோன்றியது. நல்ல காலமாக அவர் இறுதியில் ஒரு பெரிய பெட்டியை அங்கே விட்டுவிடத் துணிந்தார். அப்போது அதைப் பார்த்துக்கொண்டே கலங்கினர். சாவி எடுத்துத் திறந்தார். அந்தப் பெட்டி நிறையப் பட்டுத் துணிகளும் வெண்கலப் பாத்திரங்களும் இருந்தன. வெள்ளிக் கிண்ணங்கள் பத்து இருந்தன. பட்டுத் துணிகளைக் கூலியாட்களாக வந்தவர்கள் உடுத்திக்கொண்டு, வெண்கலச் சாமான்களை அங்கேயே விட்டுவிட்டு, வெள்ளிக் கிண்ணங்களைச் சிறு மூட்டையாகக் கட்டிக்கொண்டார்கள். இன்னொரு சிறிய பெட்டி மிகவும் கனமாக இருந்ததாம். அதில்தான் தங்க நகைகளும் சவரன்களும் இருக்க வேண்டும் என்று பலர் பேசிக் கொண்டார்கள். அந்தச் செல்வர் கண்ணும் கருத்துமாகப் பார்த்துவந்தார். ஆனல் கூலியாட்கள் நல்லவர்கள்; நன்றியுள்ளவர்கள். உயிர்வாழ்க்கைக்கே மனிதன் போராடும்போதும் அவர் பொன்னையும் வெள்ளியையும் போற்றிக் கவலைப்பட்டார். வயிற்றுக் கஞ்சிக்கு வழியற்ற ஏழைகள் அதைத் தூக்கிவரக் கிடைத்தார்கள்.

இன்னொரு செல்வர்தான் வல்லவர்; வாழத் தெரிந்தவர். அவர் வெள்ளிச் சாமான் ஒன்றுகூட எடுத்துக் கொள்ளவில்லை. கனம் இல்லாத ஒரு சின்ன பெட்டியில் பொன் நகைகளையும் சவரன்களையும் வைத்துக்கொண்டு, இன்னொரு கனமானபெட்டி நிறையப் பால் டப்பிகளும் தேயிலை டப்பிகளும் சர்க்கரை டப்பிகளும் நிறைய வாங்கி அடுக்கிவிட்டார். அதைச் சுமந்து வர ஆட்கள் போட்டியிட்டார்கள். காரணம் வேறென்றும் இல்லை. ஒரு நாளைக்கு இரண்டு முறை சுவையான தேநீர் கிடைத்தால் எந்தக் கூலியாள்தான் விருப்பத்தோடு சுமந்துவர மாட்டான்? உப்பும் இல்லாத வெறும் பருப்புச் சோற்றுக்கே ஏங்கி அலைந்த வழியில், அருமையான தேத்தண்ணீர் கிடைத்தால், யார் விடுவார்கள்? வயிற்றுப் பசியைத் தானகவே மாற்றும் ஆற்றல் இல்லாத பொன்னையும் வெள்ளியையும் விட, பாலும் சர்க்கரையும் தேயிலையும் பசிதீர்க்கும் செல்வங்கள் என்பதை உணர்ந்தவர் அவர். உடல் சோர்வு மிகுந்தவர்களும், நோயாளிகளும் அவருடைய தயவுக்

காகக் காத்திருந்தார்கள். அந்தச் செல்வர் தந்தால் ஒழிய வேறு எந்த வழியிலும் தேத் தண்ணீர் கிடைப்பதற் கில்லை. வழியில் பல இடங்களில் சர்க்கார் அரிசிக்கும் பருப்புக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தந்த வேளை யின் பசிக்குச் சுவையற்ற உணவே அமிழ்தமாகத் தோன் றினாலும், தேநீர் கிடைத்தபோது அது அமிழ்தத்தை விடப் பல மடங்கு சுவையானதாக இருந்தது. ஆறுமு கத்திற்கு அடிக்கடி தேநீர் கிடைத்துவந்தது. நான் வெளிக்கு வேண்டாதவள்போல் நடித்துவந்தேன். ஆனால் என் உள்ளம் அதை நாடி அலைந்தது எனக்கே தெரியும். ஒரு முறை நான் தண்ணீர் கொண்டு வந்து கொதிக்க வைத்து உதவி செய்தேன். அப்போது எனக்கும் கொஞ் சம் கிடைத்தது. அந்தக் காட்டுமலைவழிகளில் களைப்பு மிகுந்து சோர்ந்தபோது அது அளித்த ஊக்கம் சொல்ல முடியாதது.

எது செல்வம் என்று அப்போதுதான் தெரிந்து கொண்டேன். ஏராளமான பொன் கொண்டு வந்திருந்த மற்றொரு செல்வரை எல்லோரும் இகழ்ந்தார்கள்; புறக் கணித்தார்கள். ஆனால் இந்தத் தேநீர்ச் செல்வரை எல் லோரும் சூழ்ந்துகொண்டார்கள். நான் நீ என்று போட் டியிட்டுக் கொண்டு அவருக்கு உதவி செய்தார்கள். அடுப் புப் பற்ற வைக்கவோ தண்ணீர் கொண்டு வரவோ வேறு வேலைக்கோ அவருக்குக் குறைந்தது இருபது முப்பதுபேர் போட்டியிட்டுக்கொண்டு முன்வந்தார்கள். அந்தப் பெரிய பெட்டியை அங்கங்கே இறக்கி வைக்கவும் ஏற்றி விடவும் ஒருவரில் ஒருவர் முந்திக்கொண்டார்கள். ஆனால் தங்க நகை மிகுந்த இன்னொருவரின் பெட்டியை இறக்க வும் ஏற்றவும் அங்கங்கே திண்டாட்டமாக இருந்தது. "இந்தச் சர்க்கார் அமைப்புத்தான் கெட்டதாக இருக் கிறது. சர்க்கார் நாணயம் என்று ஏற்படுத்தித் தங் கத்துக்கும் வெள்ளிக்கும் இல்லாத மதிப்பை உண்டாக்கி விட்டார்கள். இல்லாவிட்டால் இந்தப் பளபளப்பான தகடுகளையும் பில்லைகளையும் வைத்துக்கொண்டு உலகத்தை ஏமாற்றும் செல்வர்களை யார் மதிப்பார்கள்?" என்று வாவ்நகரத்தார் சொல்லிக்கொண்டு வந்தார். "நெல்லும்

சோளமும் பயிரிட்டு அறுவடை செய்து சேர்த்துவைத்துள்ளவனுக்கு மதிப்பைத் தரலாம். ஆனல், வெறும் பகட்டான தகடுகளைச் சேர்த்து வைத்துள்ளவர்களால் உலகத்துக்கு என்ன பயன்?'' என்று வேறு சிலர் பேசினர்கள்.

நாங்கள் சிந்துவீ நதியை அடையும் வரையில்தான் இந்தத் தேநீர்ச் செல்வர் எங்களோடு வந்தார். அங்கே வந்ததும் கைநிறையக் கூலியைக் கொடுத்துவிட்டு ஒரு பெரிய படகில் போய் ஏறி உட்கார்ந்துகொண்டார். எனக்கும் ஆறுமுகத்துக்கும் அதில் இடம் கிடைக்குமா என்று அவரைக் கேட்டேன். அவர் என்னை அன்போடு பார்த்து, ''அம்மா! இது பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் செல்வர்களுக்குமே ஏற்பட்டது. இது நீராவியில் ஓடுவது. உங்களுக்கெல்லாம் சாதாரணப் படகுகள் ஏற்பாடு செய்திருக்கிருர்கள்'' என்ருர். கேட்டதும் அவரிடம் விடை பெற்றுக்கொண்டோம். படகு வேகமாய்ச் சென்றது.

இந்தப் புறம் திரும்பிப் பார்த்தால் எங்கள் கூட்டத்தில் அந்த நகைக்காரர் இருந்தார். அவரைச் சிலர், ''நீங்களும் நீராவிப் படகில் ஏறிப் போவதுதானே'' என்று கேட்டார்கள். ''அங்கே போனல் சர்க்கார் என்ன செய்வார்களோ? நீங்கள் என்னைப் பற்றி ஒன்றும் சொல்லிவிடாதீர்கள். உங்களைக் கும்பிட்டுக் கேட்டுக்கொள்கிறேன். தெரிந்தால் என் பணத்தில் பாதி சர்க்காரே எடுத்துக் கொள்வார்கள்'' என்று பயத்தோடு சொன்னர். இரக்கத்தோடு எல்லோரும் அவரைப் பார்த்தார்கள்.

அங்கே சர்க்காரின் உணவுப்பொருள்விடுதி ஒன்று இருந்தது. எல்லோருக்கும் பதினைந்து நாளைக்கு வேண்டிய அரிசியும் பருப்பும் கொடுத்தார்கள். மகிழ்ச்சியோடு அந்தப் பங்குகளைப் பெற்றுக்கொண்டோம். படகு வருகிற வரைக்கும் கரையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம. சர்க்கார் செய்யும் உதவியைப் பாராட்டி ஆறுமுகமும் வாவ்நகரத்தாரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இவர்களின் பேச்சைக் கவனித்துக்கொண் டிருந்த ஒருவர், "உங்களுக்கு என்ன ஐயா தெரியும்? எவ்வளவோ தெரியாமல் இருக்கிறது" என்றார்.

"என்னுங்க? தெரிந்தால் சொல்லுங்கள்" என்றார் ஆறுமுகம்.

"உங்களுக்கு அரிசியும் பருப்பும்தான் கிடைத்தன. நீராவிப் படகில் போகின்றவர்களுக்கு என்ன என்ன கிடைத்தன, தெரியுமா?"

"தெரியாதே."

"ஓவல்டின், பால் டப்பி, சர்க்கரை, கோதுமை, இன்னும் என்னென்னவோ."

"அவர்கள் எல்லாரும் பெரிய உத்தியோகஸ்தர்கள்."

"உண்மைதான். உயிருக்கு ஆபத்து வந்தபோது எல்லாரும் மனிதர்கள் என்று எண்ண வேண்டாமா?"

"இருந்தாலும்—"

"இருந்தாலும் என்ன? அவர்கள் நாம் செய்யாத அக்கிரமம் எல்லாம் செய்வார்கள். பணம் நிறைய வைத்திருந்து லஞ்சம் கொடுத்திருந்தால் உங்களுக்கும் அந்தப் படகில் இடம் கிடைக்கும்."

"போகட்டும் ஐயா. ஏதோ திக்கற்ற காட்டு வழியில் பசிக்குப் பருப்பும் அரிசியும் கொடுக்கிறார்களே. அதுவே போதும்."

"போதும் என்பது உண்மைதான். இல்லை என்று சொல்லவில்லை."

"படகில் இடம் கொடுத்து அப்பால் கொண்டு போய்ச் சேர்க்கின்றார்களே!"

"அதுவும் உண்மைதான்."

"ஆபத்துக் காலத்தில் சர்க்கார் வேறு என்னதான் செய்ய முடியும்?"

"அதைத்தான் சொல்லாதீர்கள். அந்தந்த நாடுகளில் அவரவர்களுடைய மக்களைக் காப்பாற்றுவதற்குச் சர்க்கார் செய்த ஏற்பாடுகள் எல்லாம் உங்களுக்குத் தெரியுமா? போர் வருவதற்கு முன்னே, குண்டு விழுவதற்கு முன்னே சர்க்கார் மக்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்துமுடித்திருக்கிறார்கள். கடைசி நேரத்தில் இவ்வளவு கவலைக்கு இடம் கொடுப்பதே இல்லையே."

"அங்கெல்லாம் முன்னமே தெரியும்."

"இங்கே மட்டும் தெரியாதா? எதோ—ரங்கூனிலிருந்த வெள்ளைக்காரர்களில் ஒருவரும் இந்தக் கூட்டத்தில் இல்லையே. அவர்கள் எப்படிப் போய்ச் சேர்ந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"முன்னமே போய்விட்டார்கள்."

"உங்களை எல்லாம் ஏன் முன்னமே அனுப்பியிருக்கக் கூடாது? போகட்டும். வெள்ளைக்காரர் ஆறுயிரம் மைல் கடந்து போகவேண்டும். நீங்கள் போகவேண்டியது ஆயிரம் மைல் தூரம்தான். ஆனால் நீங்கள் படும் துன்பத்தில் எள்ளளவாவது வெள்ளைக்காரர் பட்டது உண்டா? ஒருவராவது இப்படி மனைவி மக்களோடு குடும்பமாக வெள்ளைக்காரர் நடந்துபோனதைப் பார்த்தது உண்டா?"

"உண்மைதான்."

"நாம் எல்லாரும் கண்மூடிமக்கள் ஐயா. ஏமாந்து வாழ்வது நம்முடைய குற்றம் ஐயா. ஏமாற்றுவது பாவம் என்று சொல்கின்றார்கள். இந்தப் போரைப் பார்த்த பிறகு அது பொய் என்று எனக்குப் பட்டது. ஏமாந்து கிடப்பது தான் பாவம் என்று எனக்குத் தோன்றிவிட்டது. ஒரு கூட்டத்தார் ஏமாந்தால்தான் இன்னொரு சிறு கூட்டத்தார் ஏமாற்றுகின்றார்கள். ஏமாற்றி வாழும் கெட்ட வாழ்வுக்கு இடம் கொடுத்தவர்கள் ஏமாந்த கண்மூடிகளே. அவர்களே உலகத்தில் அநியாயமும் கொடுமையும் இருப்பதற்குக் காரணம் ஐயா."

"நீங்கள் யார்? தெரியவில்லையே!"

“தெரிந்துகொள்ளாமல் இருப்பதே நல்லது. யாருக்கும் சொல்லிவிடாதீர்கள். நான்தான் அந்த உணவுப் பொருள் விடுதியில் கணக்கு எழுதுகிறவன். பத்தாவது படித்திருக்கிறேன். வேலையில்லாமல் இருந்தேன். ஜப்பான் போர் வந்த பிறகு எனக்கு இங்கே வேலை கிடைத்தது. அறுபது ரூபாய் சம்பளம். உள்ளே நடப்பதெல்லாம் எனக்குத் தெரியும். செல்வமும் செல்வாக்கும் பெற்றவர்களுக்கு எல்லா வசதியும் செய்து கொடுக்கிறோம். ஏழைகளுக்கு ஏதாவது செய்து ஏமாற்றுகிறோம். அதோ தெரிகிறதே, அந்த ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பாருங்கள். அங்கே ஏழைக்கும் செல்வருக்கும் எவ்வளவு வேற்றுமை பார்க்கிறார்கள்! ஏழைக்குக் காலரா வந்தால் கீழே போட்டு என்னவோ மருந்து ஊற்றிவிடுகிறார்கள். லஞ்சம் கொடுக்கும் பணக்காரருக்குத் தலைநோய் வந்தாலும் கட்டில் கொடுத்து உதவியெல்லாம் செய்கிறார்கள்” என்று சொல்லிவிட்டு அவசர வேலை இருப்பதாக விடைபெற்றுப் போனார்.

இந்த இளைஞர் இவ்வாறு கொதிப்போடு பேசிவிட்டுப் போன பிறகு, ஆறுமுகமும் மற்றவரும் அதைப் பற்றித் தொடர்ந்து பேசினார்கள்.

“எவ்வளவு தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது, பார்த்தீர்களா?” என்றார் ஆறுமுகம்.

“அந்த ஆள் ஏதோ வயிற்றெரிச்சலால் பேசிய பேச்சு” என்றார் மற்றவர்.

“அப்படியே இருந்தாலும் உண்மைதானே.”

“அவருக்கு யாரும் லஞ்சம் கொடுத்திருக்க மாட்டார்கள். அல்லது, அவருடைய மேலதிகாரி கொஞ்சம் கடுமையாக இருப்பார். அதனால் வயிற்றெரிச்சல்.”

“இருந்தாலும், சொன்னது உண்மைதானே.”

“உண்மை என்று சொல்ல முடியுமா? ஏழைக்கும் பணக்காரருக்கும் வேற்றுமை பார்க்கிறார்கள் என்று சொன்னார். அதற்கு என்ன செய்வது? இதோ நம்மோடு

வந்த ஏழைகளைப் பாருங்கள். ஏதாவது சுத்தமாக இருக்கிறார்களா? இப்படி அசுத்தம் செய்து செய்துதான் காலரா வருகிறது. வந்த பிறகாவது ஒழுங்காக இருக்கிறார்களா? இருக்கிற தண்ணீரைக் கெடுத்துவிடுகிறார்கள். ஊசி போட்டுக்கொள்ளவும் ஒளிந்துகொள்கிறார்கள். சொன்னாலும் கேட்பதில்லை. இப்படிப்பட்டவர்களை எப்படிக் காப்பாற்றுவது? எங்கே மலசலம் கழிப்பது என்று தெரியவில்லையே!''

"எல்லாம் அறியாமை. தவிர ஏழைகளுக்குச் சிறு சிறு வீடுகளில் குடியிருந்து பழக்கமாகிவிட்டது. எதற்கும் பழக்கமும் அறிவும் வேண்டாமா? அதற்காகப் பணக்காரரைப் பழித்துப் பேசலாமா?''

"அதற்காகச் சர்க்காரை மட்டும் பழிக்கலாமா?''

"சர்க்கார் தானே எல்லாரையும் சமமாகக் கருதிக் காப்பாற்றவேண்டும்?''

"எல்லாரையும் படைத்த கடவுளே சமமாகக் கருதிப் படைக்கவில்லையே! சிலரைப் பணக்காரராகவும் பலரை ஏழைகளாகவும் படைத்திருக்கிறாரே.''

இப்படிப் பேசிக்கொண்டே இருக்கும்போது படகுகள் வந்தன. எல்லாரும் அவசரப்பட்டு ஏறினார்கள். இதைப் பார்த்த ஆறுமுகம், "பொறுங்கள், அவசரம் வேண்டாம்'' என்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தும் ஏழை மக்கள் கேட்கவில்லை. கடைசியில் நான் ஏறினேன். ஆறுமுகம் ஏறினார். படகுகள் நகர்ந்தன. இருபுறமும் குன்றுகளும் காடுகளும் நெருங்கியிருப்பதைப் பார்த்துக்கொண்டே சென்றோம்.

அந்த ஆற்றில் சில மைல் தூரம் சென்ற பிறகு அங்கங்கே பிணங்கள் மிதப்பதைப் பார்த்தோம். போகப் போகப் பிணங்களின் தொகை மிகுதியாயிற்று. சில பிணங்கள் ஆடையில்லாமலும் காணப்பட்டன. படகிலிருந்தவர்கள் பலர் பலவாறு பேசிக்கொண்டார்கள். படகு கவிழ்ந்து இறந்து போனவர்கள் என்றும், உணவு இல்லா

மல் உயிர் விட்டவர்கள் என்றும், எதிரி விமானம் குண்டு எறிந்ததால் கொல்லப்பட்டவர்கள் என்றும், இரவில் வழி தெரியாமல் வந்து இறங்கி முழுகிவிட்டவர்கள் என்றும், துன்பம் தாங்க முடியாமல் செத்துப் போனவர்கள் என்றும் பலர் பலவாறு பேசிக்கொண்டார்கள். கடைசியில் படகோட்டி எங்கள் சந்தேகத்தைத் தீர்த்தான். "போன வாரத்தில் இங்கே வந்தவர்கள் பலபேர் அம்மை முதலான தொத்து நோய்கள் வந்து செத்துப்போனுர்கள். அவர்களை எல்லாம் ஆற்றில் போட்டுவிட்டார்கள்" என்ருன்.

இதைக் கேட்டவுடனே ஆறுமுகம் துடித்து எழுந்தார். தாவிக் குதிப்பவர்போல் நின்ருர். நான் நடுநடுங்கி எழுந்து அவருடைய பக்கத்தில் நின்றேன். உடன் இருந்தவர்கள், "என்ன ஐயா? பைத்தியமா? படகு போகும் போது இப்படி எட்டிப் பார்க்கலாமா?" என்ருர்கள்.

"இங்கேதான் பலியாகிவிட்டாளோ?" என்ருர் ஆறுமுகம். இவருடைய கண்களில் துணிவும் கைகால்களில் துடிப்பும் இருப்பதை உணர்ந்தேன். பக்கத்திலிருந்தவர்கள் இவரை இழுத்துப் பிடித்து உட்காரும்படி வற்புறுத்தினர்கள். இவர் உட்கார்ந்தார்.

ஆனல் இவருடைய கண்கள் மட்டும் மிதக்கும் பிணங்களையே பார்த்து வந்தன. பக்கத்திலிருந்தவர்கள் சிலர் பர்மாக்காரர் கொள்ளையடித்த அந்த இரவில் உடனிருந்து இவருடைய நிலைமையைக் கவனித்தவர்கள். அவர்களுக்கு எல்லாம் தெரியும். "உங்கள் மனைவியும் மகளும் நல்லபடி போய்ச் சேர்ந்துவிட்டிருப்பார்கள். அல்லது மணிப்பூர் அருகே போய்க்கொண் டிருப்பார்கள். நீங்கள் கொஞ்சமும் கவலைப்படவேண்டாம்" என்று சொல்லித் தேற்றிக் கொண்டு சென்ருர்கள். வேறுசிலர் இவருடைய மனத்தை மாற்றுவதற்காகப் பேச்சை மாற்றிப் பார்த்தார்கள்.

உண்மையாகவே என்னுடைய மனமும் குழம்பியது: அந்தப் பிணங்களில் ஒன்ருகப் பொன்முடியும் இருக்கக் கூடும் என்று எண்ணியபோது என் நெஞ்சு படபடத்தது. எனக்குப் பேச்சு வரவில்லை. உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. எத்தனை நாள் இப்படி ஆறுமுகத்திற்குத் தேறுதல்

சொல்ல முடியும்? அப்புறம் அவருடைய கதி என்ன என்று பலவாறு கலங்கினேன். இப்படி அன்பான வாழ்க்கை வாழ்ந்து அல்லல்படுவதை விட, என்னையும் என் கணவரையும் போல அன்பில்லாமல் வாழ்ந்து கவலைப்படாமல் காலங் கழிப்பதே மேலானது என்றும் எண்ணினேன்.

ஐயோ! எத்தனை பிணங்கள்! நூற்றுக்கணக்கான பிணங்கள்! மனித உடல்கள்! மேலான பிறவி என்று எல்லாரும் புகழும் உடல்கள்! கேட்பாரற்று, அழுவாரின்றி மிதந்து சென்றன. சில இடங்களில் படகுகள் போகும் வழியில் குறுக்கே மிதந்து கிடந்தன. படகுகள் பிணங்களைத் தள்ளிக்கொண்டு போகவேண்டியிருந்தது.

என்னைப்போல் மானமும் நாணமும் நிறைந்து புடவை கட்டி வாழ்ந்த பெண்ணுடல்கள் உடையிழந்து மிதந்து செல்வதைக் கண்டபோது—அந்தப் பிணங்கள் எங்கள் படகை ஒட்டி நெருங்கி மிதந்து சென்றபோது—அவற்றைக் கண்ட என் கண் பட்டபாடு—! என் மனம் பட்ட பாடு—! எப்படிச் சொல்வேன்! இதை உலகம் என்று சொல்வது? நாகரிகம் முதிர்ந்து வாழும் மக்கள் கூட்டமா இப்படி மிதக்கும் பிணங்களாக மாறிவிட்டது? மேலான பிறவியா? நாகரிகமான காலமா? கண்ணை மூடிக்கொண்டு எவ்வளவு தூரம் செல்வேன்? ஐயோ, ஐயோ—இப்போது நினைத்தாலும் நெஞ்சம் நடுங்குகிறதே!

திடீரென்று, "அதோ, அதோ, அந்தச் சேலைதான்—அதேதான்" என்று ஆறுமுகம் அலறிக்கொண்டு எழுந்தார். பக்கத்திலிருந்தவர்கள் அவருடைய ஆடையையும் கைகளையும் பற்றிக்கொண்டார்கள். நான் அவருடைய காலடியில் உட்கார்ந்து கைகளால் கால்களைப் பற்றினேன். "பொன்முடி, பொன்முடி! அவள்தான் அவள்தான்" என்றார். "விடுங்கள், விடுங்கள்" என்று தாவிக் குதிக்க முயன்றார். நாங்கள் எல்லாரும் நடுநடுங்கிப் போனோம். எல்லோரும் இவரைச் சூழ்ந்துகொண்டார்கள். படகோட்டியும் படகை நிறுத்தினான்; திகைத்தான்.

## 4. பொன்முடி

இந்த நாற்காலி என்னைக் கோழையாக்கிவிட்டதே! இது எவர் குடியிருந்த வீடோ? இந்த நாற்காலி எவர் உட்கார்ந்து பொழுது போக்கிய நாற்காலியோ? இடர்களுக்கெல்லாம் அஞ்சாமல் வழி நடந்து வந்த என் நெஞ்சத்தை நெக்குருகச் செய்யும் ஆற்றல் இந்தப் பிரம்பு நாற்காலிக்கு இருந்ததல்லவா?

அவருடைய நினைவுதான் என்னை அடிக்கடி உருக்கி வருகிறது என்றால், அவர் உட்கார்ந்து பேசும் இந்த நாற்காலிக்கும் அந்த ஆற்றல் இருக்க வேண்டுமா? ஆமாம்—இதே நாற்காலிதான். இதே போன்ற பிரம்பு நாற்காலிதான். கை வளைவும் இது போலவேதான். கால்களும் இப்படித்தான். உயரமும் இவ்வளவுதான். இதன் அடியில் உட்கார்ந்து எத்தனை நாள் அவருடைய கால்களைப் பிடித்துக் களைப்பைப் போக்கிக் கொஞ்சினேன். அந்தச் சமயங்களில் அவர் பேசிய அன்பு மொழிகளை அந்த நாற்காலி கேட்டிருக்கும். இந்த நாற்காலி அந்த மொழிகளைச் சொல்லுமா? "பொன்முடி! நீ இதில் உட்காரு" என்று என்னை வற்புறுத்தி உட்காரச் சொல்லி எத்தனை நாள் அழகு பார்த்தார்! இந்த நாற்காலி மட்டும் இருக்கிறது. இதன் எதிரே நான் உட்கார்ந்து பேசும் அந்தப் பெஞ்சு காணோம். வாணி உட்காரும் சின்ன நாற்காலியும் காணோம்.

இது எவர் குடியிருந்த வீடோ? எந்தச் சாதியோ? எந்த மதமோ? என்ன மொழியோ? என்ன நிறமோ? இந்த நாற்காலியும் இந்த வீடும் சாதியும் காட்டவில்லை, மதமும் காட்டவில்லை; மொழியும் சொல்லவில்லை, நிறமும் சொல்லவில்லை.

இந்த வீட்டில் குடியிருந்தவர்கள் எங்கே போயிருக்கிறார்களோ? உயிரோடு இருக்கிறார்களோ? குண்டு

விழுந்து மாண்டார்களோ ? இது போன்ற வீடுகள் எத்தனை ! எத்தனை ! எல்லா வீடுகளுமே காலியாக இருக்கின்றனவே ! ஒரு சிறு குடும்பமும் இந்தப் பெரிய ஊரில் காணேமே ! சுடுகாடு என்ருல் இதுதான்.

வாணி இதைக் கண்டு கலங்கிவிட்டாள். பைத்தியக்காரியைப் போல் வீடுகளையும் தெருக்களையும் மரங்களையும் பார்த்தாள். " அம்மா ! எல்லா வீடுமா காலியாய்விட்டன?'' என்ருள். "தெருவெல்லாம் பாழடைந்து விட்டன அம்மா !'' என்ருள். "குண்டு விழுவதற்கு முன் மரங்கள் எல்லாம் காலியாகிவிட்டனவே '' என்று வியப்படைந்தாள். " மக்கள் ஓடிப்போய்விட்டது போல், காக்கை குருவிகளும் ஊரை விட்டுப் பறந்து போய்விட்டனவே '' என்ருள்.

பத்துப் பதினைந்து பேராகச் சிறு கூட்டமாக முதலில் புறப்பட்டோம். அப்படியே வந்திருந்தால் வாணி அஞ்சி அஞ்சிக் குலைந்திருப்பாள். நல்ல காலமாக, கூட்டம் பெருகிவிட்டது. நூறு ஆயிற்று. இரு நூறு ஆயிற்று. இப்போது ஐநூறு ஆயிற்று. வாணியோடு சேர்ந்து ஆடிப் பாடி விளையாடவும் பேசிச் சிரித்துக் காலங் கழிக்கவும் இளம் பெண்கள் பலர் சேர்ந்துவிட்டார்கள். இல்லையானல் இப்படிப் பட்ட சுடுகாட்டில் வந்து சேர்ந்து பைத்தியம்தான் பிடித்திருக்கும்.

ஆனலும் அவளுக்கு அப்பாவைப் பற்றிய கவலை தீரவில்லை. மூன்று நாளில் வருவதாகச் சொன்னரே, இன்னும் வரவில்லையே'' என்று அடிக்கடி கேட்கிருள்.

ஐயோ, அன்று காலையில் அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திகைத்தேன். நானும் அழுது அவளையும் அழ வைத்துவிட்டேனே! "நீ இன்னும் கொஞ்சம் பிடிவாதமாக இருக்கக் கூடாதா ? நீ புறப்பட்டால் தான் நாங்களும் புறப்படுவோம் என்று சொல்லியிருக்கக் கூடாதா?'' என்று என்னைக் கேட்டாள். அறிவான கேள்வி தான் என்னல் என் வாழ்நாள் முழுவதும் விடை சொல்ல முடியாத கேள்விதான்; மன்னிப்பு இல்லாத குற்றந்தான்.

அவருடைய இளகிய மனம் இப்படிப்பட்டது என்று தெரிந்திருந்தும் அவரைத் தனியே பாழான நகரில் விட்டு விட்டு நான் ஒரு பாழூரை அடைந்திருக்கிறேன்.

வாழ்க்கையிலே துன்பமே தெரியாமல் வளர்ந்த வாணி எங்குப் பார்த்தாலும் துன்பக் காட்சிகளே காண்கின்றாள். கடைசியாக இந்தப் பாழூருக்கு-காக்கை குருவியும் வாழாத இந்த ஊருக்கு—வந்து சேர்ந்தாள். காலையில் கண்ட டாங்கூ நகரத்தில் அவள் நடுநடுங்கி நின்றாள். அந்த ஊரில் வீடு என்று ஒன்று காண முடியாதபடி எதிரிகள் குண்டு வீசி அழித்திருக்கிறார்கள். எல்லாம் ஐந்தாறு நாளுக்கு முன்தான் நடந்திருக்கவேண்டும். கட்டிடங்களெல்லாம் கற்குவியலாகிவிட்டன. வானளாவிய பச்சை மரங்களெல்லாம் தீய்ந்து கரிந்து போயிருக்கக் கண்டோம். கொடுமை, கொடுமை! எங்குப் பார்த்தாலும் பிணங்களே நாறிக் கிடந்தன. பிணங்கள் இல்லாத இடத்திலும் நாற்றம் வீசுவதைப் பற்றி வாணி கேட்டாள். நான் யோசித்துச் சொல்லாமல் உடனே உண்மையைச்சொல்லிவிட்டேன். பதினெட்டு வயதான பெண்ணுக்கு என்ன தெரியாது? ஏன் மறைக்கவேண்டும்? மறைத்துப் பயனில்லை என்றுதான் உண்மையைச் சொல்லிவிட்டேன். “கட்டிடங்களின் அடியில் அகப்பட்டவர்களின் பிணங்கள் எடுபடாமல் அங்கேயே கிடந்து நாறுகின்றன” என்று சொன்னேன்.

வாணி அந்தச் சொல்லைக் கேட்டதும் கல கல என்று கண்ணீர் வடித்தாள். “அப்பாவைப்போல் இளகிய நெஞ்சு உடையவள், அதனால்தான் அதற்காகக் கண்ணீர் வடிக்கிறாள்” என்று எண்ணினேன். அந்த ஊரை விட்டுப் புறப்படும்போது கலக்கத்தோடு கேட்ட கேள்வி எனக்கும் தீராக் கவலையை உண்டாக்கிவிட்டது. “அம்மா! ஒருவேளை அப்பாவும் இங்கே வந்து எந்தக் கட்டிடத்திலாவது தங்கியிருந்திருப்பாரா?” என்று கேட்டாள். கட்டிடத்தின் அடியில் என் ஆருயிர் அகப்பட்டிருந்தால்—!

அந்த முகத்தை மறுபடியும் காண்பது எப்போது? மறுபடியும் காண முடியாவிட்டால் அந்த டாங்கூ நகரத்திலேயே நானும் உயிரை விடத் துணியவேண்டுமல்லவா?

எப்படித் தெரியும் ? எத்தனேயோ உடல்கள் சிதைந்து அழிந்து கிடக்கின்றன ! கண்ணில் காணுதபடி கட்டிடத்தின் அடியில் அகப்பட்டு அழியும் உடல்கள் எத்தனேயோ!

அவரா? இங்கே இன்னும் வந்திருக்க மாட்டார். வந்திருந்தாலும் தங்கியிருக்க மாட்டார். தங்கியிருந்தாலும் தெய்வம் அவருடைய உயிரைக் காப்பாற்றி யிருக்கும். நானும் வாணியும் இன்னும் நெடுங்காலம் வாழத் தெய்வம் பொறுக்காதா ?

அங்கே எட்டு வயதுள்ள பெண் ஒருத்தி அழுது கொண்டிருந்தாள். அவளேக் கைப்பிடித்து அழைத்துக் கொண்டு போனவர், "அழாதே அம்மா! அம்மா பின்னுல் வருகிருள். அதற்குள் நாம் அந்தப் பக்கத்து ஊருக்குப் பேய்த் தங்கியிருக்கலாம்" என்று தேற்றிக்கொண்டிருந்தார். "இங்கேயே இருந்து அம்மாவை அழைத்துக் கொண்டு போகலாம் அப்பா" என்று அந்தச் சிறு பெண் அழுது பிடிவாதம் செய்தாள். "கால் எல்லாம் வலிக்கிறதே, தலே நோகிறதே" என்று தன் துன்பங்களே உடனுக்குடன் அப்பாவிடம் முறையிட்டுக்கொண்டிருந்தாள். எனக்கோ அந்தக் காட்சி துயரமாக இருந்தது. அந்தப் பெண் சொல்கிறபடி, அங்கே காத்திருந்து அந்தத் தாயையும் உடன் அழைத்துக்கொண்டு புறப்படக் கூடாதா என்றுதான் எனக்கும் தோன்றியது. சிறுமி மெல்ல உறங்கிவிட்ட பிறகு, அவர் எனக்கு நடந்ததைச் சொன்னுர். அந்த இளேஞருக்கு அந்தப் பெண் முதல் குழந்தையாம். ஆறு வயதுள்ள மகன் ஒருவன் இருந்தானும். அவன் ரங்கூனில் செல்வமாக வளர்ந்திருந்தவனும். காட்டிலும் மேட்டிலும் வெயிலிலும் பனியிலும் நடந்து அல்லல் பட்டானும். கடைசியில் அம்மை நோய் வந்து இறந்து போய்விட்டானும். மகன் இறந்து போன திகிலால் ஒன்பது மாதக் கருப்பவதியாக இருந்த அவருடைய மனேவி திடீரென்று சோர்ந்து விழுந்து கிடந்து துன்பப்பட்டுப் பெண் குழந்தை பெற்று மறுநாளே குழந்தையும் அவளும் மாண்டார்களாம். விடியற்காலேயில் இந்த எட்டு வயதுள்ள மகள் தூங்கிக்கொண்டிருந்தபோது அந்த இரண்டு பிணங்களேயும் ஒரு புதரில் எறிந்துவிட்டு இவர்களே உடன் இருந்தவர்கள் அழைத்துக்

கொண்டு வந்துவிட்டார்களாம். இப்போது இவள், "அம்மா எங்கே" என்று கேட்கிருள். தம்பியைக் கேட்டுப் பார்த்துச் சலித்துவிட்டாள். எப்படியோ சந்தேகப்பட்டு அப்பன் சொல்வதை நம்பாமல் அழுகிருள். என்ன கொடுமை! ஒரு குடும்பம் சீர்குலைந்த கதை இது! இப்படி நூற்றுக் கணக்கான குடும்பங்கள் நிலை கலங்கி அல்லல் படுகின்றனவே!

ஆனல், வாணி எட்டு வயதுள்ள குழந்தையா? அவள் நிறையப் படித்தவள். நான் படித்த திருக்குறளும் தாயுமானவரும்கூட ஒருவாறு படித்துவந்தவள். நாள்தோறும் பத்திரிகை படித்துப் போர்ச் செய்திகளையும் அரசியல் குழப்பங்களையும் அப்பாவோடு கலந்து பேசிப் பழகியவள். அவளுக்கு எப்படிப் பொய் சொல்லித் தேற்றுவது? அவளும் வாய்விட்டுக் கேட்காமல் குறிப்பாகத் தெரிவிக்கிருள். என்ன சொல்வேன்?

வாணிக்குத் தேறுதல் சொல்வது எங்கே? என் மனத்துக்கே தேறுதல் சொல்ல முடியவில்லையே! "எங்கே அவர்? எங்கே அவர்?" என்ற கேள்வியே என் உள்ளத்தில் எந்நேரமும் எழுந்து அலைக்கின்றது. இந்தப் பிரம்பு நாற்காலியின் பக்கத்தில் உட்கார்ந்தவுடனே என் கை தடவுகின்றதே! இவ்வாறு உட்கார்ந்து அவருடைய கால்களைப் பிடித்த கை என்னை அறியாமல் தடவுகின்றதே! ஆ! நான் எப்படி மறப்பேன்? அந்த ஒரு நாள் செய்த செயலை எப்படி மறப்பேன்? "பொன்முடி! பெண்களுக்கு நாற்காலியில் உட்காரவே தெரிவதில்லை. பிறப்பாலேயே பெண்கள் தாழ்ந்தவர்கள்தான்" என்று சொல்லி என்னை ஏமாற்றி நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு, என் கால்களைப் பிடித்துப் பிடித்து, "நோவு தீர்ந்ததா?" என்று கேட்டுக் கேட்டு மகிழ்ந்தாரே! குழந்தைபோல் விளையாடும் மனம் அவருக்கு எப்படித்தான் வாய்த்ததோ தெரியவில்லை. வாணி பிறப்பதற்குமுன் இருந்த குழந்தை விளையாட்டு அவள் பிறந்து அவளுக்குப் பதினெட்டு வயதான பிறகும் நிற்கவில்லையே! இப்படிப்பட்ட அவரை இழந்தபின் நான் ஒரு நாளேனும் வாழ முடியுமா?

இவ்வாறு கலக்கத்தோடு எண்ணிக்கொண்டே அங்கே இருப்பது தவறு என்று எழுந்தேன். இந்த வேளைச் சமையல் செங்கல்பட்டாருடைய முறை என்று இருந்தாலும் அவர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமல்லவா என்று எழுந்து சென்றேன்.

செங்கல்பட்டார் சமையல் வேலையை ஏறக்குறைய முடித்துவிட்டார்கள் என்றே சொல்லலாம். அந்த நேரத்தில் அங்கே ராணுவ லாரி ஒன்று வந்தது. அவர்கள் எங்களைப் பார்த்துப் பேசியபோதுதான் அவர்கள் தமிழர்கள் என்று தெரிந்துகொண்டோம். முன்பின் பார்த்தறியாத அவர்களும் எங்களிடத்தில் மிக அன்பாக நடந்துகொண்டார்கள். அவர்கள் எங்களுக்கு என்னென்ன வேண்டும் என்று கேட்டார்கள். "உப்பு வேண்டும்" என்றார் ஓர் அம்மா. "தலைவலித் தைலம் வேண்டும்" என்று மற்றொருவர் சொன்னார். "நீலகிரித் தைலம் கொடுத்தால் கை கால் வலி நீங்கும்" என்று சிலர் கேட்டார்கள். உடனே லாரியிலிருந்த ஒரு மூட்டையை அவிழ்த்து ஒரு சிப்பாய் நாலைந்து தைலப் புட்டிகளைத் தந்தார். "இன்னும் வேண்டுமா?" என்று கேட்க, பலர் கை நீட்டினார்கள். இருந்த புட்டிகளையெல்லாம் ஆளுக்கொன்றாகக் கொடுத்து விட்டார் அந்தத் தமிழ்ச் சிப்பாய். தேயிலையும் சர்க்கரையும் கிடைக்குமா என்று பத்மாவதியும் வாணியும் கேட்டார்கள். உப்பும் தேயிலையும் சர்க்கரையும் இன்னும் அரை மணி நேரத்தில் கொண்டுவருவதாகச் சொல்லிவிட்டு அந்த லாரி புறப்பட்டது.

அந்த வேளையில் இளைஞர் சிலர் ஓடி வந்து நல்ல குளம் ஒன்று மேற்கே கால் மைல் தொலைவில் இருப்பதாகவும், குளிக்காதவர்கள் எல்லாரும் நன்றாகக் குளிக்கலாம் என்றும் சொன்னார்கள். சிலர் அப்போதே குளிக்கப் புறப்பட்டார்கள். நானும் வாணியும் எங்களைச் சேர்ந்தவர்களும் குளித்து ஆறுநாள் ஆயின. குளிக்க வேண்டுமென்று மனம் விரைந்தது. பொழுது போனபின் குளிப்பதால் உடம்பு கெடுமே என்று தயங்கினேன். மறுநாள் காலையில் குளிக்கலாம் என்று நாங்கள் சிலர் போகாமல் நின்றுவிட்டோம்; சிலர் புறப்பட்டார்கள். களைப்பால்

நடக்கத் தயங்கிப் பலர் நின்றுவிட்டார்கள். சமையல் வேலை விரைவாக முடிந்தது. உப்பு வரும் என்று காத்துக் கொண்டிருந்தோம். "லாரி வருவது அருமை; நமக்காகத் திரும்பிவர முடியுமா? அவர்களுக்கு வேறு வேலை இருக்காதா?" என்று சிலர் பேசிக்கொண்டார்கள்.

சிறிது நேரத்தில் லாரி வரும் ஓசை கேட்டது. எல்லாரும் ஆவலோடு உற்றாரை எதிர்பார்ப்பது போல் எதிர்பார்த்திருந்தார்கள். லாரி வந்து நின்றது. ஆனால் இது புதிய லாரி. இதில் இருந்தவர்களும் புதிய ஆட்கள். "நீங்கள்தானா உப்பும் சர்க்கரையும் கேட்டவர்கள்?" என்று அதிலிருந்த ஒரு சிப்பாய் கேட்டார். அவர்முகம் எனக்கும் பழகிய முகமாகவே இருந்தது. ஆமாம் என்று சொன்னவுடனே ஒரு கோணிமூட்டையை உருட்டிக்கீழே தள்ளினார்கள். உடனே மற்றொருவர், "நீங்கள் நாளைக் காலையிலேயே இந்த இடத்தை விட்டுத் தொலைவில் போய் விடவேண்டும். இங்கே மலேரியா மிகுதி. தவிர, பக்கத்தில் டாங்கூவில் இருக்கும் பிணங்கள் நாறுகின்றன. நாளைக்கு ஆறுவது நாளாகையால் நாற்றம் மிகுதியாகும். அது இந்தப் பக்கத்துக் காற்றையெல்லாம் கெடுத்துவிட்டிருப்பதால், தொத்து நோய்கள் பரவும். உடனே போய் விடவேண்டும். இது ராணுவ உத்தரவு. இல்லையானால் நாளைக்குப் பட்டாளம் வந்து உங்களைக் கட்டாயமாகவெளியேற்றிவிடும்" என்றார். உடனே லாரி நகர்ந்தது. கோணிமூட்டை நிறைய உப்புப் பொட்டலங்களும் சர்க்கரை டப்பிகளும் தேயிலைப் பொட்டலங்களும் இருந்தன; ஏராளமாக இருந்தன.

அந்த அமைதியான ஊரில் ஒருநாள் தங்கி ஓய்வு கொண்டு போக எல்லாரும் எண்ணியிருந்தோம். குளிக்காதவர்கள் குளித்துவிட்டுப் போக எண்ணியிருந்தோம். பின்னால் வருகின்றவர்களைப பார்த்து உடன் அழைத்துக் கொண்டு போக எங்களில் சிலர் எண்ணியிருந்தோம். எல்லாருடைய எண்ணமும் பாழாயின. விடியற்காலையிலேயே பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டியதாயிற்று. அங்கங்கே சிதறுண்டிருந்தவர்

களுக்கு இந்தச் செய்தி போய்ப் பரவியவுடன், நூற்றுக் கணக்கானவர்கள் கூடிவிட்டார்கள். கூட்டம் கூட்டமாக அங்கங்கே சமைத்துக்கொண் டிருந்தவர்கள் சமையல் வேலையையும் சீக்கிரம் முடித்துவிட்டார்கள். எல்லாரும் தெருக்களில் உட்கார்ந்து உண்ணத் தொடங்கிவிட்டார் கள். மேற்குவானத்தில் மெல்ல ஒளிவீசிய ஐந்தாம் பிறை நிலா அழகான காட்சியாக இருந்தது.

போன மாதத்தில இதே ஐந்தாம் பிறை நிலவில் இதே நேரத்தில் நானும் அவரும் ரங்கூன் வீட்டுச் சன்னல் அருகே நாற்காலிகளில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந் தது நினைவுக்கு வந்தது. அப்போது வாணி உட்கார்ந்த படியே உறங்கிக்கொண் டிருந்தாள். அவளை எழுப்பிப் படுக்கையில் உறங்கச் சொன்னர். அவளும் சிறு குழந்தை போல் கண்ணைத் திறக்க முடியாமல் தள்ளாடி நடந்து போய்ப் படுக்கையில் படுத்தாள்.

"பொன்முடி ! நம்ம வாணி இன்னும் குழந்தை யாகவே இருக்கிருள்" என்ருர்.

"ஆமாம்" என்றேன்.

"இந்த வயதில் மற்றப் பெண்கள் எல்லாம் தெரிந்தவர் களாக வாழ்கிருர்கள்."

"அதற்கென்ன செய்யலாம். நாம் அப்படி வளர்த்து விட்டோம்"

"அறிவும் ஒழுக்கமும் உடைய பெண்ணுக வளர்த்து விட்டோம். அவ்வளவுதான் நாம் செய்யக் கூடியது. இனிமேல் அவள் திறமையாக வாழ முடியும் அல்லவா ?" என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டார்.

"திருமணம் செய்ய வேண்டியது ஒரு கடமை அல்லவா ?" என்றேன்.

"அதற்கு என்ன செய்யலாம்? போன தை மாதத்தில் விடுமுறை பெற்றுத் தாய்நாட்டுக்குப் போகலாம் என்று இருந்தோம். கையில் காசு இல்லாமல் நின்றுவிட்டோம்.

இந்தத் தைமாதம் போகலாம் என்றால் உலகப் போர் பெரு நெருப்பாக மூண்டுவிட்டது. சாதி மதம் பற்றியும் அறிவுள்ளவர்களுக்குக் கவலை இல்லை என்று பொறுத்தேன். இந்த ரங்கூனில் அதற்கும் வழி இல்லை. அறிவைவிடப் பணத்தை மிகுதியாக எதிர்பார்க்கிறார்கள். வாணியின் அறிவையும் ஒழுக்கத்தையும் யார் கேட்கிறார்கள்? அவளுடைய கழுத்து எவ்வளவு தங்கத்தைச் சுமக்கின்றது என்றுதான் எதிர்பார்க்கிறார்கள். அவளுடைய பெற்றோர்கையிலிருந்து எத்தனை ஆயிர ரூபாய் வெளியே வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். மூளையில் களிமண்ணை நிரப்பினாலும், கழுத்தில் பொன்னை நிரப்ப வேண்டும். அப்படிப் பட்ட பெண்களுக்குப் படித்துப் பட்டம் பெற்ற பிள்ளைகள் கிடைக்கிறார்கள். ஒழுக்கம் இம்மியளவும் இல்லாவிட்டாலும், பெட்டி நிறையப் பணம் விழுமா என்று எதிர்பார்த்து ஓடுகிறார்கள். அறிவு இல்லாவிட்டாலும், ஒழுக்கம் இல்லாவிட்டாலும், பணம் மட்டும் இருந்தால் வாழ்க்கை சீர்ப்பட்டுவிடும் என்று கனுக் காண்கிறார்கள். என்ன செய்யலாம்?'' என்றார்.

''வளரட்டும் நம் வீட்டில். தகுந்த துணையாக எவனாவது கிடைத்தால் திருமணம் செய்துகொண்டு வாழட்டும். ஏன் கவலை?'' என்றேன்.

''கவலை ஒன்றும் இல்லை. நீ சொன்னதுதான்பொருத்தம். பெண்ணுக்கும் பிள்ளைக்கும் திருமணம் செய்ய வேண்டும் என்று பெற்றோர் முயல்வதே அநாகரிகம் என்று தோன்றுகின்றது. அது எதைக் காட்டுகின்றது? அந்தப் பெண்ணும் பிள்ளையும் அறிவும் முயற்சியும் இல்லாத பொம்மைகள் என்பதைத்தான் காட்டுகின்றது'' என்றார்.

''போர் முடிந்த பிறகு தாய்நாட்டுக்குப் போகவேண்டும். போய்ச் சில வாரங்கள் தங்கியிருந்து வரவேண்டும். அங்கே நல்ல பிள்ளை கிடைக்கக் கூடும்'' என்றேன்.

''போர் முடிவதா? இன்னும் எத்தனை ஆண்டுகள் கழித்தோ?'' என்று பெருமூச்சு விட்டார்.

"பெரிய நாடுகள் பல ஒன்றாகச் சேர்ந்து நல்ல அமைப்பு ஏற்படுத்திப் போரைத் தடுக்கக் கூடாதா? முன்னே ஏற்பட்ட அந்தச் சர்வதேச சங்கம் தூங்குகின்றதா? செத்துவிட்டதா?" என்றேன்.

"சர்வதேச சங்கமா? நல்லெண்ணம் உடைய பெரியோர்கள் ஏற்படுத்திய நல்ல அமைப்புத்தான். ஆனால் அதன் கதை எப்படியோ முடிந்திருக்கிறது. பொல்லாத குடிகாரர்கள் ஒன்று கூடிக் கள்ளுக்கடையில் மறியல் செய்வது போல் முடிந்தது. மண்ணாசையும் போர் வெறியும் நிரம்பியவர்களே கூடிப் போரை நிறுத்த முயல்வது என்றால் எப்படி முடியும்? அதில் உள்ளவர்கள் யாரோ சிலர், அவர்கள் என்ன செய்வார்கள்? கோடிக்கணக்கான மக்கள் மனம் மாறும்படி, போரை வெறுக்கும்படி, ஏதாவது செய்தால் ஒழிய, அதிகாரிகளின் அமைப்புக்கள் ஒன்றும் செய்ய முடியாது?" என்றார்.

"போரைப் போற்றித்தானே நாகரிகம் வளர்ந்து வந்திருக்கிறது! பகையை வளர்ப்பது, பகைவர்களை அழிப்பது இந்தச் செயலுக்குத்தானே அரசியல்தொண்டு என்று அருமையான பெயர் சூட்டுகின்றார்கள்! போர்த் தலைவர்களைப் புகழ்ந்து சிறப்பிப்பதற்குத்தானே கலைஞர்கள் பாதி நேரத்தைக் கழித்திருக்கின்றார்கள். உலகமெல்லாம் இலக்கியங்களில் ஒரு பகுதி அவர்களைப் பற்றித்தானே! இப்படி இருக்க, கோடிக்கணக்கான மக்கள் எப்படி மனம் மாற முடியும்?" என்று கேட்டேன்.

"நீ சொல்வது உண்மைதான். பொதுமக்களின் மனத்தைக் கலைதான்மாற்றமுடியும். கலையில் பாதி போர்ப்பேயை வழிபடுவதால், மனம் மாறுவதும் அருமைதான். ஆனால் நான் சொல்வது அதே அடிப்படையை வைத்துக்கொண்டு தான். கலைஞர்கள் மனம் மாறினால் கலையும் மாறும்; பொதுமக்களின் மனமும் மாறும். கலைஞர்கள் போரைப் புகழக் கூசவேண்டும்; படிக்கக் கூசவேண்டும்; இசையோடு பாடக் கூசவேண்டும்; நாடகமேடைகளில் நாடகமாக்கிப் போர்த்தலைவனைப் புகழக் கூச வேண்டும்; ஓவியமாக்க, சிற்பமாக்க, மற்றக் கலைகள் ஆக்கக் கூசவேண்டும்.

கோடிக் கணக்கான மக்கள் போரால் படும் துன்பத்தைக் கண்டு கண்டு கலைஞர்களின் மனம் இரங்காதா? பார்க்கலாம்'' என்றார்.

“எனக்கு என் தந்தை பெயரிட்டது நினைவுக்கு வருகிறது. வெட்கமாகவும் இருக்கிறது'' என்றேன்.

“இதற்காக வெட்கப்படலாமா? அவர் அந்தக் காலத்தில் ஏதோ சொற்பொழிவு கேட்டார். புறநானூற்றில் அந்தப் பொன்முடியார் பாடிய பாட்டின் பொருளில் அப்படியே ஈடுபட்டார். உனக்குப் பெயர் வைத்தார். அதனால் என்ன தப்பு?'' என்றார்.

“பழங்காலத்துப் போரில் பொதுமக்கள் சாவது இல்லை. போர்க்களத்தில் மட்டும் கொலைநிகழும்; போர்வீரர்கள் மட்டும் சாவார்கள். எங்கோ இருந்து எவரையோ கொன்று பொசுக்கும் விஞ்ஞானமுறை இல்லை அல்லவா?'' என்றேன்.

“ஆமாம்'' என்று தலையசைத்துவிட்டு எதையோ எண்ணிக்கொண்டிருந்தார். திடீரென்று, “பொன்முடி! பழங்காலத்தில் இருந்த அநாகரிகமான கொள்ளை, நரபலி இவை எப்படி மறைந்து விட்டன? சங்கங்கள் ஏற்படுத்தி வெறுந் தீர்மானங்கள் எழுதியா? அவற்றை அநாகரிகம் என்று பொதுமக்கள் உணரும்படியாக யாரோ செய்துவிட்டார்கள். அநாகரிகம் என்று பொதுமக்கள் உணர்ந்ததும் அவை ஒழிந்துவிட்டன ஆனல், போரை அநாகரிகம் என்று பொதுமக்கள் உணரும்படியாகச் செய்வதற்கு ஒருவரும் முயற்சியே செய்யவில்லை. முயற்சி இருந்தால் கட்டாயம் வெற்றிபெறும். அது எங்கே? கலைஞர்கள் முதலில் மாற வேண்டும்! கல்விநிலையங்களில் பாட்டு, வரலாறு, நாடகம், இசை, ஓவியம் முதலான எல்லாத் துறைகளிலும், போர் என்றால் அநாகரிகம் என்ற பாடம் அடிப்படையாக அமைய வேண்டுமே! இந்தச் சிறந்த முயற்சி இன்னும் தொடங்குவார் இல்லாமல் இருக்கின்றது. இந்தத் துறையில் சமயங்களும் தூங்குகின்றன அல்லவா?'' என்றார்.

இவ்வாறு பேசிக்கொண்டே இருந்தபோது, எங்களோடு அந்த வீட்டில் வாழ்ந்துவந்த அந்தக் காச நோயாளி படும் துன்பம் தெரிந்தது. மூச்சு விட்டு மூச்சு வாங்க அவர் நொடிக்கு நொடி படும் துன்பம் உணர்ந்தோம். "அம்மா! அப்பா!" என்று துன்பத்தோடு நீளும் அவர்குரல் எங்களுக்கு எவ்வளவோ காலமாகப் பழக்கமாக இருந்தும், துன்பவாடை எங்களைத் தாக்காமலிருக்கவில்லை.

நிலவு மறையும் நேரம் ஆயிற்று. அவர் அந்த நிலவை-இதோ இப்போது தெரிகிற இதே நிலவைத்தான்—பார்த்துக்கொண்டே பெருமூச்சு விட்டார்.

"என்ன எண்ணுகிறீர்கள்? இப்படிப் பெருமூச்சு விடும் காரணம் தெரியவில்லையே" என்றேன்.

"வேறொன்றும் இல்லை. உன்னைத்தான் நினைத்துக் கொண்டேன்" என்றார்.

"நான் எதிரிலேயே இருக்கும்போது நினைக்க வேண்டுமா? நினைக்கும்படியான அவ்வளவு தொலைவிலா இருக்கிறேன்?" என்று கேட்டேன்.

"ஒவ்வொரு வேளையில் அப்படித் தோன்றுகின்றது, எதிரிலே இருக்கும் போதும், கண்ணாரப் பார்க்கும்போதும், நினைக்கவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. உலகம் நம் குறுக்கே வந்து நிற்கின்றது. பெருந்தடையாய் வந்து மலையாய் மறைக்கின்றது" என்றார்.

"நம் இருவர்க்கும் இடையில் உலகம் வரவே கூடாது என்று வாழ்நாள் எல்லாம் எனக்கு எடுத்துச் செல்லியிருக்கிறீர்கள். இப்போது அந்த உலகம் வந்து நிற்கும்படியாக இடம் கொடுக்கலாமா?" என்றேன்.

"பொன்முடி! நான் இன்னும் அப்படித்தான் சொல்ல விரும்புகிறேன். ஆனால், சிங்கப்பூர் கதிகலங்கியபோது, இந்தப் பர்மாவும் ரங்கூனும் எவ்வளவு? இன்னும் இரண்டொரு வாரத்தில் என்ன ஆகுமோ? இப்போது பலர் புறப்பட்டுப் போகிறார்கள். நீயும் வாணியும் போய்த் தாய் நாட்டைச் சேர்ந்துவிட்டால்—" என்று நிறுத்தினார்.

எல்லோரும் சேர்ந்து போகவேண்டும், இல்லையா ஞல் ஒருவரும் போகக் கூடாது என்று முதலிலிருந்தே நான் வற்புறுத்திச் சொல்லிவந்ததை நினைத்துத்தான், பேச்சை முடிக்காமல் நிறுத்திஞர். நான் தெரிந்துகொண் டேன்.

"பார்த்தீர்களா? இப்போது நீங்களே வருந்துகின்றீர் கள். உலகம் நமக்கு இடையே வந்து நின்றதால் வந்த துன்பம் இது" என்றேன்.

"ஏது? இதை ஒரு பல்லவி ஆக்கிவிடுவாயோ?" என்ருர்.

"பத்தொன்பது ஆண்டுகளாக நீங்கள் பாடிய பல்ல வியை நான் இரண்டொரு மாதமாவது பாடக்கூடாதா?" என்றேன்.

"நான் குடும்பம் சீர்ப்படுவதற்காகப் பாடினேன்" என்ருர்.

"நானும் குடும்பம் கலையாமல், பிரியாமல், சிதையா மல் இருப்பதற்காகப் பாடுகின்றேன். இந்த ரங்கூனை விட்டு உங்களையும் விட்டுப் பிரிந்து போகும்படி நீங்கள் சொல்ல லாமா? அதை நன்ருக எண்ணிப் பார்க்கக் கூடாதா? உல கத்தைக் கொண்டுவந்து வைத்து என்னைப் பிரிக்கத் துணிய லாமா? உலகம் நமக்கு இடையில் வேண்டாம்" என்றேன்.

சிறிது நேரம் இரண்டு கையும் கோத்துத் தலைமேல் வைத்துக்கொண்டிருந்தார். உடனே, அந்த இருகைகளா லும் என் இரு கன்னமும் பற்றி, "பொன்முடி! உன்ஞல் தான் நான் சீர்ப்பட்டேன்" என்ருர்.

"உங்களால்தான் நான் சீர்ப்பட்டேன்" என்று நானும் தயங்காமல் அதையே சொன்னேன்.

"போன நோன்பை நினைத்துக்கொண்டேன்" என்ருர்.

"என்?" என்று கேட்டு அவரை உற்றுநோக்கினேன்.

"முதலில் நீ குடும்பம் நடத்தியபோது, நான் மிகவும் கவலைப்பட்டது உண்டு. என் கொள்கை, என் தாயுமானவர், என் நோக்கம் எல்லாம் வீணாகப் போகுமே என்று அஞ்சினேன். எதை எடுத்தாலும், 'உலகம் என்ன சொல்லும்?' 'உலகம் போகிற வழியில் நாம் போகவேண்டாமா?' 'பக்கத்து வீட்டார் என்ன நினைப்பார்கள்?' சொந்தக்காரர் என்ன சொல்வார்கள்?' என்று பலவாறு சொல்லி எதற்கும் இடம் கொடுக்காமல் வாழ்ந்தாய். செம்மறியாடு போல் கண்மூடி வாழவேண்டும் என்று விரும்பினாய். நான் புதுமையாக எதைச் சொன்னாலும் எதிர்த்தாய். ஆனால், போன நோன்பு செய்த போது, வழக்கமான அதிரசம் செய்யாமல் தேன்குழல் செய்து படைத்தாய்" என்றார்.

"இதைத்தானா இப்போது நினைத்துக்கொள்ள வேண்டும்? நீங்கள் பிடிவாதம் செய்தால் நான் என்ன செய்ய முடியும்? அதிரசம் செய்தால் ஆறுநாள் வீட்டிற்குள் நுழையமாட்டேன் என்று பிடிவாதம் செய்தீர்களே" என்றேன்.

"உலகத்துக்கு அஞ்சி நீ அதிரசம் செய்து படைக்க வேண்டும் என்றாய். உலகம் நம் இருவர்க்கும் இடையே இல்லை என்று அஞ்சாமல் காட்டுவதற்காக வேறு நல்லது ஏதாவது செய்து படைக்க வேண்டும் என்றேன். இது பிடிவாதமா?" என்றார்.

எனக்கும் மனம் இல்லாமல்தான் இருந்தது. பழைய வழக்கத்தை எப்படி விடுவது என்று எவ்வளவோ தயங்கினேன். பிறகு, உலகம் உலகம் என்று உலகத்தை எண்ணிக்கொண்டு, அன்பான குடும்ப வாழ்க்கைக்கு இடையூறு செய்யக் கூடாது என்று எண்ணினேன். பழைய வழக்கங்களை மாற்றக் கற்றுக்கொள்வதிலே ஒரு பெருமையும் அஞ்சாமையும் முன்னேற்றமும் இருப்பதை நான் அப்போது உணரவில்லை. ஆனால் "உலகத்துக்கு அஞ்சுகின்றவர்கள் இல்வாழ்க்கையில் தோல்வி அடைகின்றார்கள். உலகத்துக்கு அஞ்சாதவர்கள் இல்வாழ்க்கையில் வெற்றிபெறுகின்றார்கள். உலகமும் வேண்

டும்; இல்வாழ்க்கையும் வேண்டும். ஆனால் ஒன்று வீட்டுக்கு வெளியே; மற்றொன்று வீட்டுக்கு உள்ளே. வாசற்படிக்கு உள்ளே உலகம் வந்தால், அன்பான மனங்களில் அல்லல் புகுந்துவிடும்'' என்று அடிக்கடி சொல்லிவந்த மொழிகளை நினைத்தேன். அறிவாகவும் எண்ணிப் பார்த்தேன். அதிரசம் பெய்து படைத்தபின், ஒரு முழு அதிரசம் அவரும் உண்பதில்லை; நானும் உண்பதில்லை. விரும்பி உண்ண முடியாததைச் செய்வதற்கு எவ்வளவோ முயற்சி செய்ய வேண்டும். எண்ணிப் பார்த்துத்தான் அந்தத் தேன்குழல் செய்தேன். அவரும் ஐந்து ஆறு உண்டார்; நானும் நன்றாக உண்டேன்; வாணியும் மகிழ்ச்சியாக உண்டாள். நோன்பும் கொண்டாட்டமாக இருந்தது.

அந்த நிலவு அப்போது மறைந்துகொண்டே வந்தது. மேல்கீற்று மட்டும் தெரிந்தது. திடீரென்று அவர் ஏதோ பேசத் தொடங்கினார்.

''பொன்முடி ! எப்படியோ வாழ்ந்தோம். உலகத்தை வாசற் படிக்கு வெளியே விட்டுவிட்டு வாழ்ந்தோம். உலகப்பற்றை விட்ட இடந்தானே வீடு? நாம் வாழ்ந்த வாழ்வு வீட்டு வாழ்வுதான். பிறருடைய புகழையும் மதிப்பையும் பொருட்படுத்தாமல் வாழ்ந்தோம். உள்ளன்பையே பொருட்படுத்தி வாழ்ந்தோம். உலகத்தை உள்ளே விட்டிருந்தால், வாழ்க்கை ஒரு பெருஞ்சுமையாகி விட்டிருக்கும். நமக்கோ, வாழ்க்கை ஒரு நல்ல விளையாட்டாகவே முடிந்தது. இன்பம் துன்பம் இரண்டிலும் விளையாடினோம். வாடகை வீட்டில், குறைந்த வருவாயில், நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தோம். பணம் நிறைந்த வாழ்க்கை இல்லையானாலும் மனம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தோம். போதும்'' என்று சொல்லிக்கொண்டு எழுந்து படுத்தார். அந்த நிலா மறைந்து விட்டது.

இன்று இந்த நிலா இன்னும் மறையவில்லை. பலப்பல எண்ணி ஏங்கும்படி செய்து எனக்கு மட்டும் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றது.

## 5. நீலமேகன்

மலைச் சரிவுகளில் புழுக்களைப் போல் நெளிந்து நெளிந்து ஏறியும் இறங்கியும் வந்தோம். முள்புதர்களையும் அடர்ந்த செடிகளையும் வெட்டி உண்டாக்கிய அந்த வழிகளில் நாங்கள் காலால் நடந்து வந்து சேர்வதே பெரிய தொல்லையாக இருந்தது. இந்த மலைவழிகளைக் கடந்து பர்மாவை விட்டு இந்தியாவுக்கு வருவது எவ்வளவு பெரிய துன்பம்! என்ன கொடுந் துன்பம்! இதைவிட வாழ்க்கைப் பயணமே எளிய பயணமாகத் தோன்றுகின்றது. வாழ்க்கைப் போராட்டமே எளிய போராட்டமாகத் தோன்றுகின்றது. வாழ்க்கையின் இக்கரையிலிருந்து மரணம் என்னும் அக்கரையினை அடைந்தவர்களே துன்பம் குறைந்தவர்கள்.

எத்தனையோ பேர் அந்த மலைச் சரிவுகளில் விஞ்ஞான மரணம் அடைந்தார்கள். விஞ்ஞான மரணம் என்று அதற்குப் பெயரிட்டு அகராதியில் சேர்க்கவேண்டும். அப்படியாவது விஞ்ஞானிகள் வெட்கப்படுமாறு செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டும். மானமும் மனிதத் தன்மையும் உடைய விஞ்ஞானிகள் அப்போதாவது இந்தக் கொடுமைக்கு உதவி செய்யாமல் ஒதுங்குகின்றார்களா என்று பார்க்கவேண்டும். மலைச் சரிவுகளிலே திக்கற்றவர்களாய் நடந்துவரும்போது எங்கள்மேல் குண்டு வீச மனம் வந்தது! இத்தகைய கொடியவர்களுக்குத் தேசத் தொண்டர்கள் என்று அந்த நாட்டில் உள்ள அரசாங்கம் பட்டஞ் சூட்டி மானியம் கொடுத்துப் பதவியும் அளித்து மதிக்கப் போகின்றது! யாருக்கு? திக்கற்ற எங்கள் கூட்டத்தில் நூற்றுக் கணக்கானவர்களைத் கொன்றவர்களுக்கு—பெண்கள் என்றும் குழந்தைகள் என்றும் பார்க்காமல் குண்டு வீசிக் கொன்றவர்களுக்கு!

அந்தப் பொல்லாத வழிகளில் நடந்து நடந்து காலெல்லாம் இரத்தம் ஒழுகத் துன்பப் பட்டதெல்லாம் இந்தக்

கொடிய குண்டுகளுக்கு இரையாகி முடிவதற்கா? பனி யாலும் மழையாலும் சருகுகள் அழுகிச் சேருகியிருந்த இடங்களில் கால் வைத்துவிட்டு எமன்வாயில் விழுந்து விட்டதாக எண்ணித் தவித்த நிலையிலிருந்து தப்பி வந்து மலை ஏறியது இந்தக் கொடியவர்களின் விஞ்ஞானத்திற்குப் பலியாவதற்கா? மலைச்சரிவுகளில் கால் வழுக்கி விழுந்து கண்காணுப் பள்ளத்தில் உருண்டு சாகும் சாவை நினைத்து நினைத்து நடுங்கிக்கொண்டு உட்கார்ந்து உட்கார்ந்து நகர்ந்துகொண்டு வந்ததெல்லாம் கடைசியில் விமான ஒலி யைக் கேட்டு நடுங்கிக் கவிழ்ந்து படுத்து அசையாமல் அதி ராமல் அந்தக் குண்டுகள் பட்டுச் சாவதற்குத் தானு? நரி களின் ஊளைகளையும் புலி சிங்கங்களின் முழக்கங்களையும் கேட்டுக் கேட்டு இரவெல்லாம் ஒவ்வொரு மூச்சிலும் உயிரை விட்டுக்கொண்டு உடம்பைக் காப்பாற்றிக்கொண் டிருந்ததெல்லாம், இப்படி விமானம் பறந்து சுற்றும் ஒலி யும் குண்டுகளின் இடியோசையும் கேட்டு ஒரே முடிவை ஒரு நொடியில் அடைவதற்குத்தானு?

அந்த விமானங்களின்மேல் இருந்து அவைகளை ஓட் டிக்கொண்டு வந்து குண்டுகளை வீசி எறிந்தவர்களும் மனி தர்கள்தானே? அவர்கள் எங்களையும் பட்டாளம் என்று எண்ணி அழிக்க வந்தார்களா? மேலே இருந்து பார்க்கும் தொலைநோக்குக்கருவி அவர்களிடம் இல் லையா? நடந்தறியாமல் நடந்துவந்த பெண்களையும் அவர் களின் தோள் மேல் சோர்ந்துவந்த குழந்தைகளையும் என்ன என்று எண்ணினர்கள்? சிப்பாய்கள் என்றும் அவர்கள் தோள்மேல் தாங்கிய துப்பாக்கிகள் என்றும் எண்ணிக் குண்டு வீசிவிட்டார்களா?

நானும் மனிதன்தான். தவறு எண்ணுயிரம் செய்தி ருக்கிறேன். இன்றும் ஒரு பெரிய குற்றம் செய்திருக்கி றேன். ஆனல் விளையாட்டாகப் பிறருக்குத் தீங்கு செய்யும் பழக்கம் என்னுடைய எட்டாம் வயதிலேயே போய்விட் டதே. நான் அப்போது இன்பமாய்ப் பறக்கும் தும்பியைப் பிடித்து அதன் வாலைச் சிறிது கிள்ளி எறிந்து துடைப்பக் குச்சியைச் செருகிப் பறக்கவிட்டேன். இதைக் கண்ட என் தந்தையின் கை என் கன்னத்தைப் பழுக்கப் பார்த்

தது. அப்போதே அந்த வழக்கத்தை விட்டுவிட்டேன். இப்போது அப்படி வேடிக்கையாக உயிரை வதைக்கும் வாழ்க்கை இல்லை. இப்போது நான் செய்யும் தவறு, குற்றம், பாவம்—எல்லாம் என் வயிற்றுக்காக, என் நாடி நரம்புகளுக்காக, என் கவலை தீர்வதற்காகச் செய்திருக்கின்றேன். அவைகளையும் எண்ணாமல், அறிவால் ஆராயாமல் செய்துவிட்டிருக்கின்றேன். இந்தத் திக்கற்ற கூட்டத்தோடு பயணம் தொடங்கிய நாள்முதல் என்னுடைய மனம் எவ்வளவோ மாறிவிட்டிருக்கின்றது. மலைச் சாரலில் அந்தப் பொல்லாத சரிவில் என் பக்கத்தில் நடந்து வந்த அந்தத் தூய பிறவி கால் வழுக்கி உருண்டு கண்ணுக் கெட்டாப் பள்ளத்தில் மறைந்து என்னைக் கலங்க வைத்தாளே, அந்த நொடியிலேயே என் பொல்லாத மனமும் எவ்வளவோ மாறிவிட்டதே!

அவள் மாண்டுவிட்டிருப்பாளோ? அல்லது ஒருவேளை கீழே பள்ளத்தில் எங்கோ விழுந்து அங்கேயே குற்றுயிராய் இன்னும் எமனோடு போராடிக்கொண் டிருக்கின்றாளோ? எல்லோரும் சொல்கின்றார்கள்: அவள் உயிர் அந்த நொடியிலேயே போய்விட்டிருக்கும் என்று சொல்கின்றார்கள். ஐயோ! என்னைக் கடைத் தேற்றும் உயிர் அதுதான் என்று எவ்வளவோ நம்பினேன். உண்மையாகவே கடைத் தேற்றியது; என் மனத்தை அடியோடு மாற்றிவிட்டது. ஆனால் மாறிச் சீர்ப்பட்ட என்னுடைய வாழ்க்கையை அந்த உயிர் உடனிருந்து நடத்தும் வாய்ப்பு இல்லாமல் போய் விட்டதே! நடத்தி மகிழும் வாழ்க்கை இல்லாமல் போயவிட்டதே!

அந்த அருமையான உயிர் எங்கே சென்றதோ? அவ்வளவு சிறந்த பெண்மனம்—அன்பு மனம்—வீணில் அழிவதா? எத்தனையோ மனங்களும் உடம்புகளும் உலகில் உலாவிக்கொண் டிருக்கும்போது, என் வாழ்க்கையில் கிடைப்பதற்கு அரியதாக இருந்து கிடைத்த ஒரு துணையான மனம் வாழ்வதற்கு இடம் இல்லையா?

இவ்வளவு அன்பாக ஒரு பெண்ணால் பேச முடியும் என்று நான் நம்பியதே இல்லையே! இவ்வளவு அறிவாக்

ஒரு பெண்ணால் பழக முடியும் என்று நான் கனவிலும் எண்ணியதில்லையே! ஆண்மகன் ஒருவனுடைய வாழ்க்கையைச் சீர்ப்படுத்தும் வல்லமை ஒரு பெண்ணின் மனத்தில் இருக்கின்றது என்பதை எந்த நாளிலும் உணர்ந்ததே இல்லையே! பெண் என்றால் மாயப் பிசாசு என்றுதான் கேட்டிருக்கின்றேன். பெண் என்றால் பாவப் பிறவி என்றுதான் நம்பியிருந்தேன். பெண் என்றால் வாழ்க்கைக்குப் பெரிய இடையூறு என்றுதான் என் இல்வாழ்க்கையிலும் அனுபவத்தால் கண்டிருக்கின்றேன். ஆனால், ரங்கூன் கலக்கமுற்று மக்கள்கூட்டம் இப்படித் திண்டாடித் தாய் நாட்டுக்குப் புறப்பட்டுப் பசியாலும் களைப்பாலும் வருந்தும்போது, என் உயிர்ப் பசியும் உள்ளக் களைப்பும் தீர்க்க ஒரு மருந்தாய் அவள் கிடைத்தாள். அவளுடைய பெற்றோரையும் தம்பியையும் ரங்கூனிலேயே குண்டுக்கு இரையாக்கிவிட்ட தெய்வம், இவளை மட்டும் தப்புவித்துக் காப்பாற்றியது என்னைத் திருத்திச் சீர்ப்படுத்துவதற்காகவா? அந்த அருமையான நகரத்தில் அமைதியான காலத்தில் இன்பமான வாழ்க்கைக்கு வேண்டிய வாய்ப்புக்கள் இருந்த நாட்களில் அந்தக் குணமாலை என் வயிற்றுப் பசியைத் தீர்த்தாள்; ஆனால் என் உள்ளத்தின் களைப்பை ஒரு நாளும் உணரவில்லை. அந்த நகரத்தை விட்டுக் காட்டிலும் மலையிலும் அல்லல்பட்டு வரும்போது, துன்பமே நாற்புறமும் சூழ்ந்து கலக்கிவருங்காலத்தில், இந்த ஆறு நாட்களில் இவள் என் உள்ளத்தின் களைப்பைத் தீரப் போக்கிவிட்டாள். என்னை மனிதனாக்கிவிட்டாள். வீட்டிலே அமைதிக்கு இடையில் அல்லல்பட்ட எனக்கு இந்தக் காட்டு வழியில் குழப்பத்திற்கு இடையில் அன்பு மழை பொழிந்து என்னை ஆட்கொண்டாள். இப்போது குணமாலையைக் குறை கூறவும் என் உள்ளம் ஒடுங்குகின்றது; கூசுகின்றது. குணமாலையை மட்டுமல்ல எந்தப் பெண்ணையும் குறை கூற இனி நாக்குத் துணியாது. ஆறு நாட்களில் என்னைத் தூய்மைப்படுத்தும் மனம் பெண்பிறவிக்கு இருக்கும் போது நான் எப்படி ஒரு பெண்ணைப் பழிக்க முடியும்?

ஆ! இப்போதுதான் உணர்கின்றேன். என் வாழ்க்கையில் தாயின் அன்பைப் பெறாமல் தவித்த பெருங்

குறையை இப்போதுதான் உணர்கின்றேன். தந்தை என்னை அடித்தும் திட்டியும் திருத்தினர். உண்மையே. ஆனல் என் தாய் என்னைப் பெற்ற ஏழாம் நாள் சாகாமல் ஏழு ஆண்டு களாவது உயிரோடு இருந்து என்னை அன்பு நோக்காலும் அருள் மொழியாலும் வளர்த்திருப்பாளானல், நான் விலங் காய் வாழ்ந்திருக்கமாட்டேன். முப்பத்தைந்து வயது வரை யிலும் விலங்காக வாழ்ந்து முப்பத்தாறும் வயதில்தானே ஒரு பெண்ணின் அன்பு மனத்தை உணர்ந்தேன். சென்னை யில் படித்தது இன்னொரு பெருங்குறைதான். அதையும் உணர்கின்றேன். அதைவிடக் குடியேற்றத்திலே சிற் றன்னை வீட்டில் வளர்ந்திருந்தால் ஒருகால் திருந்தியிருப் பேனே? சென்னையில் நான் கண்டதெல்லாம் சமையல் காரன் அன்புதானே! வயது வந்தபின், உறவினர்வீடு களிலும் நான் அன்பு நோக்கம் பெற முடியாமல் போய் விட்டதே! உணவுவிடுதிகளில் யந்திரங்களைத் தானே கண் டேன்! இறுதியில், நானகத் தேடித் திரிந்து ஓர் அன் புருவை அடைவதற்கு முன், முறையும் உறவும் காட்டி என் குறையும் அவள்நிறையும் சொல்லி முன்னே கண் டறியாத ஒருத்தியைக் கொண்டுவந்து என்னுடைய துணைவியாக்கி வைத்தார்கள். என் வாழ்க்கை ஆக்கி வைத்த வாழ்க்கைதான்; செயற்கையாக மலர வைத்த மலர்தான்; அதனல்தான் இயல்பான நறுமணம் இல்லா மல் வீணகிவிட்டது.

அந்தத் தெய்வத்தை எவனுக்கோ துணைவியாக்கி வைத்தார்களாம். நாளும் கோளும் பார்த்துப் பதின்மூன் ரும் வயதில் அவளுடைய பெற்ரோர் திருமணம் செய்து வைத்தார்களாம். ஆனல் பதினன்காம் வயதில் கைம் பெண் ஆகிப் பெற்ரேருக்கே மறுபடியும் பெருஞ்சுமை யானளாம். அரசியல் குழப்பமும் அல்லல்பட்ட வாழ்வும் அவளை எனக்குத் துணைவியாக்கித் தந்தன. என்னுடைய நல்லூழ் என் வாழ்க்கையைத் திருத்தியதே என்று மகிழ்ச்சியோடு அவளிடம் பேசிக்கொண்டிருந்த அன்று காலையிலேயே அவள் அந்தப் பெரும் பள்ளத்தில் மறைந் தாள். பெண்மையின் உயர்ந்த பண்புகள் இப்படி ஒரு நொடியில் பாழாக வேண்டுமா?

விஞ்ஞானிகள் எவ்வளவோ புதுமைகளைக் கண்ட தாகப் பறையடிக்கின்றார்கள். நாச வேலையில் ஆயிரத் தெட்டுப் புதுமைகளைக் கண்டு வீறு பேசுகின்ற இந்தப் பெருமக்கள் ஆக்க வேலையில் கண்ட புதுமை என்ன? அருமையான மூளைகள் வாழும் உடம்புகளை அழியாமல் காக்க முடியவில்லை. சிறந்த பண்புகள் ஒளிரும் உடம்பு களை அழியாமல் காக்க முடியவில்லை. ஆற்றல் மிகுந்த உத் தமர்களையும் அறிஞர்களையும் சிறு சிறு மலேரியாக் கிருமி களும் மற்ற நோய்க் கிருமிகளும் கொன்று தின்பதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். பக்கம் பக்கமாக அந் தக் கிருமிகளைப்பற்றிப் புத்தகங்கள் மட்டும் எழுதுகின்றார் கள். அறிஞரின் உடம்பை அழியா உடம்பாக்க வேண் டும் என்று இவர்கள் எண்ணவில்லை. உத்தமரின் உடம் பிற்கு உரம் ஊட்ட வேண்டும் என்றும் இவர்கள் எண்ண வில்லை. ஆனால் திக்கற்றவர்களின் கூட்டத்தைக் குண்டு வீசிக் கொல்ல எளிய பல வழிகளை எவ்வாறோ கண்டு பிடித்திருக்கின்றார்கள்!

உடம்பு அழிந்தாலும் அழியட்டும். ஆனால் தற்காப்பு முறைகளையாவது ஆயிரம் ஆயிரமாக வகுத்துக்கொள்ளக் கூடாதா? மலைச் சரிவுகளில் காக்கையும் குருவியும் நடந்து அல்லல்படுவதில்லை. பள்ளத்தாக்குகளில் கீரியும் பாம்பும் விழுந்து மாய்வதில்லை. அவைகளுக்கு இருக்கும் ஆற்றலைப் பெற முயலாத மனிதன், ஆயிரக் கணக்கான வர்களை நொடிப் பொழுதில் கொல்லும் ஆற்றலை மட்டும் பெற்றுவிட்டான்.

நான் ஒரு சிட்டுக் குருவியாய் அவளும் ஒரு சிட்டுக் குருவியாய்ப் பறக்கும் ஆற்றல் பெற்றிருந்தால், அவ்வாறு மலைச் சரிவில் குந்திக் குந்தி நடந்து அல்லல்பட்டிருக்க மாட்டோம். அப்போதே மெல்ல மெல்லப் பறந்து தாய் நாட்டை அடைந்துவிட்டிருக்க மாட்டோமா? ஒரு சிறு வழுக்குதல் காரணமாக வாழ்க்கையையே முடித்துக் கொள்ளும் சிறுமை இருந்திருக்காதல்லவா?

அந்தப் பெரும் பள்ளம்—எமனுடைய திறந்த வாய்— என் நினைவை விட்டு நீங்கவில்லையே. அடிக்கடி என் நினை

வில் வந்து வந்து "அவள் எங்கே? தெரியுமா?" என்று கேட்டு என் உயிரை நடுங்கச் செய்கின்றதே! அவளை நான் அப்போதே தேடிக் கண்டுபிடித்திருப்பேன்! அடுத்த நொடியிலே நானும் உருண்டு சென்றிருந்தால்—! ஆனால் நான் கோழை!

அவளைக் காட்டு வழியில் காண்பதற்கு முன்னே காடு களை வெறுத்தேன்; அங்கங்கே வீசும் காற்றை வெறுத் தேன்; கரடுமுரடானவை என்று வழிகளை வெறுத்தேன்; சருகுகள் ஊறிய நீர் என்று குடிக்கும் நீரை வெறுத்தேன்; பகுத்தறிவில்லாத மக்கள் என்று உடன் வந்த கூட்டத்தை வெறுத்தேன்; மூடர்கள் பேசும் மொழி என்று அவர்கள் பேசிவந்த என் தாய் மொழியையும் வெறுத்தேன்; பருப் பும் அரிசியும் கலந்து வேகவைத்த சோற்றை நாய்தின்னுஞ் சோறு என்று சர்க்கார் தந்த உணவையும் வெறுத்தேன்; பரல்கற்களில் படுத்து உடலெல்லாம் நொந்து உறக்கத்தை வெறுத்தேன்; பகலெல்லாம் பலவகை இன்னலைக் கண்டு வாழ்க்கையையும் வெறுத்தேன்.

அவளைக் கண்ட அன்று மாலையே என் வாழ்க்கையின் வெறுப்பெல்லாம் எப்படிப் பறந்து போய்விட்டதோ, தெரியவில்லை. காடும் மலையும் எல்லாம் இயற்கையன்னை யின் கோயில் என்றேன். அந்தக் காற்றும் நீரும் இயற்கை யன்னையின் அருள் என்று கொண்டாடினேன். என் சுற்றுப்புறக் கூட்டம் எனக்கு மகிழ்ச்சியாகத் தோன்றி யது. நானும் அவளும் பேசிய தமிழ் தெய்வமொழியாகத் தோன்றியது. உப்பற்ற சோற்றை அவள் உருட்டி உருட்டி என் கையில் அளித்தபோது என் உடம்பெல்லாம் அமிழ்தம் பாய்ந்ததை உணர்ந்தேன். என் வாழ்க்கை அழியா வாழ்வு, மரணமற்ற பெருவாழ்வு என்று இறுமாந்து மகிழ்ந்தேன்.

என்னைவிட மறதியில் வல்லவர்கள் இல்லை என்று எண்ணியிருந்தேன். நான் படித்த புத்தகங்களின் பெயர் களை மறந்துவிட்டிருக்கின்றேன். பழகிய ஆட்களின்பெயர் களை மறந்துவிட்டிருக்கின்றேன். கற்ற அனுபவங்களை யும் மறந்துவிட்டிருக்கின்றேன். அருமை நண்பனுக

நெடுங்காலம் பழகிய ஆறுமுகத்தைப் பற்றியும் பலவற்றை மறந்துவிட் டிருக்கின்றேன். ஆனால் இந்த ஆறு நாள் பழக்கத்தைத்தான் மறக்க முடியவில்லை. ஆறு நாள் பழக்கம்: ஆனால் இந்தச் சிறு காலத்தில் எத்தனையோ வரலாறுகள்—எத்தனையோ செய்திகள்—எத்தனையோ புரட்சிகள். ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியும் இப்போதும் தெளிவாகக் கண்முன் வந்து நிற்கின்றது. காலையில் உண்ட உணவையும் மறந்து விடும் நான், அவளோடு இருந்து பேசிய ஒவ்வொரு பேச்சையும் அவள் எனக்குச் சொல்லிய ஒவ்வொரு சொல்லையும் மறக்க முடியவில்லையே. பார்த்த படக்காட்சிகளை எல்லாம் மறந்துவிடும் தன்மையுள்ள நான், அவள் இருந்த இடங்களையும் நின்ற நிலைகளையும் சார்ந்த சார்புகளையும் எள்ளளவும் மறக்க முடியவில்லை. அவைகள் எல்லாம் நிழற்படங்கள்போல்—அல்ல, அல்ல, தெளிவாகத் தீட்டிய ஓவியங்கள் போல் என் கண்முன் வந்து நிற்கின்றன.

ஆறு நாள் என் வாழ்க்கையின் குறுகிய பகற்காலமாக இருந்தது; இனிய இளவேனிற் காலமாக இருந்தது. முப்பத்தைந்து ஆண்டுகள் இருளில் கிடந்த பின் முதல்முதலாக வாழ்க்கைக் கதிரவனைப் பார்த்தேன். ஆறு நாளில் அந்தக் கதிரவன் மறைய வேண்டுமா? மறுபடியும் இருளைக் கண்டேன். முப்பத்தைந்து ஆண்டுகளாக இருந்த இருள் பிறவிக் குருடனுக்குத் தோன்றும் இருளாக இருந்தது. தாயின் அன்பும் பெறாத வாழ்க்கையில் எல்லாம் ஒரே இருளாக இருந்துவந்தது. ஆனால் ஆறுநாள் ஒளிக்குப் பிறகு, நான் காணும் இருள், அச்சம் மிகுந்ததாக இருக்கின்றது. கவலை முன்னிலும் பன்மடங்கு ஆற்றலுடன் வந்து நெருக்குகின்றது. முன்னே வறியவன் உற்ற வறுமையாக என் வாழ்க்கை இருந்தது; கவலையே தந்ததில்லை. இப்போதோ, அதே வாழ்க்கை செல்வன் உற்ற வறுமையாக உள்ளது; தீராக் கவலை தருகின்றது.

எனக்கு மறுபடியும் பொல்லாத காடும், தீமையான காற்றும், கரடுமுரடான வழிகளும், அழுக்குப் படிந்த நீரும், சோறும், அன்பற்ற உலகும் வாழ்க்கையில் வெறுப்பை வளர்த்துவருகின்றன. ஆனால் அந்தச் சிறு

மூட்டை அவள் எனக்குக் கொடுத்த பரிசாக இருந்தது. அதைவிடவோ மனமில்லை. அருமையான துணைவியைப் பறி கொடுத்த பிறகும், அவள்கையிலிருந்த மூட்டையைவிட மனமில்லாமல் இருந்தது. அதைப் பிரித்துப் பார்க்கவும் கைகள் நடுங்கின. என் மனம் என்றைக்கு இடந்தருமோ அன்றுதான் பிரிப்பது எனத் துணிந்தேன்.

"அந்தச் செல்வருடைய பெட்டியுடன் என் மூட்டையையும் எப்படி எடுத்துக்கொண்டு வர முடியும்?" என்று என்னைத் தடுத்தாள். "இந்த மலைச் சரிவைக் கடந்து போகும் வரைக்கும் என்னிடம் இருக்கட்டும்" என்று நானே அவளுடைய மூட்டையையும் சேர்த்து எடுத்துக் கொண்டு சென்றேன்.

இதுவரையில் எவ்வளவோ சுமைகளைத் தாங்கித் தாங்கி என் உள்ளம் மெலிந்து முறிந்துபோயிருக்கின்றது. ஆனால் இந்தச் சிறு சுமைதானே என் வாழ்க்கையை உண்மையாகச் சுமையற்ற வாழ்க்கையாகச் செய்து காட்டியது? இப்படிப்பட்டதை நான் விட முடியுமா? விட முடியாது என்று உறுதியோடு செல்வருடைய பெட்டியுடன் அந்த மூட்டையையும் எடுத்துச் சென்றேன்.

அவருடைய வறுமையும் என்னுடைய வறுமையும் சேர்ந்து வாழ்க்கை நடத்துவது எப்படி என்று கவலையால் கிடைக்கிறவரையில் கிடைக்கட்டும் என்று செல்வருடைய பெட்டியைச் சுமந்து வர உடன்பட்டேன். மாதம் நூறு ரூபாய்ச் சம்பளத்திற்கு ஆபீசில் எழுதி உழைத்து வந்த நான், என் வழிப்பயணத்தை நடத்திக்கொண்டே கூலி சுமந்து நாள் ஒன்றுக்கு முப்பது ரூபாய் சம்பாதிக்கக் கூடாதா என்று பண ஆசையால் ஒத்துக்கொண்டேன். சர்க்கார் உதவிய வெறும் பருப்பும் அரிசியும் பெற்று வெறுத்திருக்கும் அவளுக்குத் தேநீரும் சப்பாத்தியும் வாங்கித்தர உதவியாக இருக்குமே என்று உடன்பட்டேன். "கனம் மிகுதியாக இருக்குமே" என்று கனிவோடு கேட்டாள். "பணம் மிகுதியாக வருமே" என்று பதில் சொன்னதைக் கேட்டுப் புன்முறுவல் பூத்தாள். ரூபாய்க்கு ஒரு சப்பாத்தியும் அரைக் குவளைத் தேநீரும்

திருட்டுத்தனமாக விலையாகும் வழியில் பணமில்லாமல் என்ன செய்வது?

பெட்டியை என்னிடம் கொடுத்துவிட்டு முன்னே சென்ற செல்வர் பர்லாங்குக்கு ஒருமுறை எனக்காகக் காத்திருந்தார். ஆனால் அந்த மலைச் சரிவில் அவளைப் பறி கொடுத்துவிட்டு நான் கண்ணீரும் கம்பலையுமாக நின்றதை அறியாமல் திரும்பி வந்து என்னைக் கண்டு தேற்ற முயன்றார். வாழ்க்கையில் அவரும் இன்பதுன்பங்களைக் கண்டவர். என்னைத் தேற்றுவதற்கு எவ்வளவோ கூறிப் பார்த்தார். அப்போது அவர் சொன்ன சொற்களை என் மனம் அரைகுறையாகவே கேட்டது. யாரோ ஒருத்தி ஒருவனோடு நெடுந்தூரம் வந்ததாகவும் படகில் பயணம் செய்தபோது பெரிய இடர்கள் இருந்ததாகவும் அவன் ஓயாமல் பைத்தியம் பிடித்ததுபோல் மனைவியின் பெயரைச் சொல்லிக்கொண்டிருந்ததாகவும், அவன் ஆற்றில் குதிக்காதபடி அவள் எவ்வளவோ பாடுபட்டதாகவும், அவள் மிகவும் நல்லவளாகப் பழகியதாகவும், அப்படிப்பட்டவள் ஆற்றைக் கடந்ததும் மலேரியா காய்ச்சல் வந்து மூன்று நாளில் இறந்து விட்டதாகவும் சொன்னார். இப்படியே இரண்டு மூன்று குடும்பங்கள் பட்ட துன்பங்களை எடுத்துச் சொன்னார். பக்கத்திலிருந்தவர்களும் என்னை விடாப்பிடியாகப் பிடித்து அழைத்துக்கொண்டு நடத்திச்சென்றார்கள். அந்தப் பெட்டியை ஒருவரும் என் உயிர்ச்சுமையை இன்னொருவருமாக எடுத்துக்கொண்டு வந்தார்கள். அவர்களும் தாங்கள் கண்ணால் பார்த்த மரணங்களையும் துன்பங்களையும் அடுக்கடுக்காகச் சொல்லிச் சொல்லிப் பிரமன் எழுதிய எழுத்தின் உறுதியையும், எமதூதன் ஆற்றலையும் விளக்கிக் கொண்டே வந்தார்கள்.

இப்படியே நாங்கள் சிறிது தொலைவு நடந்ததும் ஒரு சமவெளிப் பகுதியை அடைந்தோம். மலையின்மேல் அவ்வளவு வெட்ட வெளி இருப்பதைப் பார்த்து எல்லாரும் வியந்து நின்றார்கள். நான் என் மனத்தைத் தேற்ற முடியாமல் கலங்கிக்கொண் டிருந்தேன். அப்போது திடீரென்று "எதிரி எதிரி" என்று மலையின்மேல் ஏறிக்கொண்டிருந்த சிலர் கத்துவது கேட்டு மேலே பார்த்தோம். விமா

னம் எங்கள் கண்ணுக்குத் தெரியவில்லை. தெரிவதற்கு முன்பே பலர் ஓடி ஓடி ஒளிந்துகொண்டார்கள். அப்போது எங்கள் கூட்டத்திலிருந்து ஓடிய பெண்களும் அவர்களின் தோள்மேல் இருந்து அலறிய குழந்தைகளும் தாய்மார்களைத் தொடர்ந்து ஓடிய சிறுவர்களும் பட்ட பாடு சொல்லமுடியாது. யாரோ வேண்டுமென்றே வேடிக்கைக்காகப் பயமுறுத்துகிறார்கள் என்று எண்ணினேன். புலி புலி என்று கத்திய கதைபோல் இங்கும் பொய்யர்கள் இருக்கின்றார்களே என்று வருந்தினேன். ஆனால் விமான ஒலி கேட்டது. நெஞ்சம் நடுங்கியது. நானும் ஓடத் தொடங்கினேன். செல்வர் அந்தப் பெட்டியை எடுத்துக்கொண்டு என் பின்னே ஓடி வந்தார். ஒரு பெரிய பாறையின் கீழே மறைவிடம் கிடைத்தது. அங்கிருந்து மேலே பார்த்தேன். எதிரியின் விமானம் சுற்றிச் சுற்றிக் கீழே இறங்குவதைக் கண்டேன். அந்தச் செல்வர் இன்னும் வரவில்லையே என்று எட்டிப் பார்த்தேன். பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு இடர்ப்பட்டுக்கொண்டுவருவதைக் கண்டு, அவர்க்குக் கேட்கும்படியாக உரத்தகுரலில் "சீக்கிரம் வாங்க. பெட்டியை விட்டுவிட்டுவாங்க" என்று எவ்வளவோ வன்மையாகக் கத்தினேன். அவர் கால் தடுக்கி விழுந்தது கண்டேன். அப்போது என்ன செய்வேன்? இரக்கத்தோடு அவரைப் பார்த்தேன். இடியொலி கேட்டேன். தலை கவிழ்ந்து கிடந்தேன். பெண்களும் சிறுவர்களும் அலறிய அலறல் என் செவியைத் துளைத்தது; நெஞ்சத்தை உடைத்தது. செவியைத் துளைக்கும் ஓசை—வெடி ஓசை — அலறல் — வேதனை — அழுகுரல் — துன்பத்தின் நடனம்!

விமானங்கள் வந்த வேலையை முடித்துவிட்டுத் திரும்பின. எழுந்தேன். பெட்டியின் கனத்தால் நடக்க முடியாமல் வெட்ட வெளியில் அகப்பட்டு இடர்ப்பட்டு விழுந்த செல்வர் பிணமாகக் கிடந்தார். அவர்மேல் பெரிய கற்கள் விழுந்து கிடந்தன. கற்களை எடுக்க அஞ்சினேன். கைகள் நடுங்கின. குற்றுயிராய் மக்கள் அங்கங்கே புரண்டு நெளிவது கண்டேன். ஒரு புறம் மரங்கள் பற்றி எரிவதும் கண்டேன். மறுபடியும் திடீரென்று ஒரு பெரிய

பாறை வெடித்துக் கீழே உருண்டுவருவதைக் கண்டேன். அது நான் ஒதுங்கியிருந்த பாறைமேல் தாக்கித் தகர்த்துப் பொடியாக்கிப் பக்கத்திலிருந்த ஏழெட்டுப் பேரை நசுக்கியது. அந்தப் பாறையை விட்டுச் செல்வரின் பிணத்தைப் பார்க்க ஓடிவராமல் இருந்திருந்தால் நானும் அங்கேயே நசுங்கியிருப்பேன். எப்படியோ வந்து தப்பிய விந்தையை எண்ணினேன். அச்சம், இரக்கம், நடுக்கம், கலக்கம்— இவைகளே நானாக இருந்தேன்.

செல்வருடைய பெட்டியைக் கண்டேன். அந்த மூட்டையைக் காணவில்லை. எங்கே தேடுவது என்று திகைத்தேன். அதை எடுத்துச் சென்றவர் என் கண் எதிரே கிடைக்கவில்லை. அவர் எங்கே பிணமாய் விழுந்துவிட்டாரோ? அல்லது ஓடி ஒளியும் முயற்சியில் எங்கே கைவிட்டுவிட்டாரோ? பொடியாய்த் தகர்ந்த பாறையின் கீழ்க் காண்பதா? அல்லது பற்றி எரிந்த மனித உடல்களும் மரத் துண்டுகளும் குவிந்த குவியலில் காண்பதா?

என் ஆவித் துணையை அங்கே விட்டு, அந்த மூட்டையையும் காணமல் இழந்து, பிணமாய்ப் போன செல்வருடைய பெட்டியைச் சுமந்துகொண்டு நடந்தேன். எவ்வளவோ பெரிய கூட்டமாய் ஆயிரத்துக்கு மேற்பட்ட கூட்டமாய் நடந்துவந்த நாங்கள் விமானம் வந்துபோன பின் ஏறக்குறைய இருநூறுபேர் சேர்ந்த சிறு கூட்டமாய் நடந்தோம். அந்தக் கூட்டத்தில் எனக்கு அறிமுகமாக இருந்தவர்கள் இருவரே. அவர்களில், ஒருவன் சிறு பையன்; ஒன்பது வயது இருக்கும். அவனுக்கு என் ஆவித்துணை அடிக்கடி கதை சொல்லிக்கொண்டு வந்தாள். அதனல் அவன் அறிமுகமானன். மற்ருருத்தி அவளோடு சமைப்பதில் துணையாக இருந்த கிழவி. அவளுக்கு வயது அறுபது இருக்கும்.

சிறிது தூரம் நடந்து மலைமேல் ஏறி மறுபடியும் இறங்கத் தொடங்கினேம். அப்போது பகல் பதினெரு மணி இருக்கும். இனி வெயில்நேரமாதலால் இளைப்பாறுவது நல்லதென்று முடிவு செய்தோம். என்னுடைய தோளில் மாட்டிய பையில் உணவு கொஞ்சம் இருந்தது. அது காலையில் நானும் அவளும் உண்டு மிகுந்த உணவு. அதைஎடுத்

தேன். தண்ணீர் தேடிக்கொண்டு மூன்று பேர் புறப்பட்டார்கள். என் பங்காக ஒரு செம்புத் தண்ணீருக்கு விலையாக நான்கணு அவர்களிடத்தில் கொடுத்தேன். அந்த உணவை எடுத்து என் முன்னே வைத்தேன். அதை உருட்டி உருட்டி உயிர்ச்சுவை யூட்டிக் காலையில் உண்பித்த அவளுடைய கையை நினைத்தேன். கண்ணீரால் அந்தச் சோற்றை நனைத்தேன்.

அந்தப் பையன், "நீங்கள் கதை சொல்வீர்களா?" என்று கேட்டான். "என் கதை காலையில் முடிந்தது" என்று கம்மிய குரலில் சொல்லிக்கொண்டே கண்ணைத் துடைத்தேன். அவன் காரணம் தெரியாமையால் மறுபடியும் கேட்க அஞ்சிப் போய்விட்டான்.

அந்தக் கிழவி அங்கும் இங்கும் தேடிக்கொண்டு என்னிடம் வந்து, "எங்கே அந்த அம்மா? சுகமாக வந்துவிட்டார்களா?" என்ருள். ஒன்றும் பேச முடியாமல் கையை விரித்தேன். அவள் அடுத்த மரத்தின் கீழே இருந்தவர்களிடம் போய் என்னவோ கேட்டுக்கொண்டிருந்தாள்.

அவள்-என் உயிர்-நேற்று மாலையில் சொல்லிய சொல் ஒன்று நினைவுவந்தது. ஒருமரத்தின் கிளையில் இரண்டு கழுகுகள் இருந்தன. நாங்கள் பேசிக்கொண்டே அதைப் பார்த்துக்கொண்டிருந்தோம். திடீரென்று ஒன்று எழுந்து கிழக்கே பறந்தது. மற்ருென்று சிறிது நேரம் கழித்துத் தெற்கே பறந்து சென்றது. ஆகாயத்தில் உயரப் பறந்து பறந்து மறைந்து போய்விட்டது. எங்கள் பார்வைக்கு எட்டிய தூரம் பார்த்தோம். அப்புறம் காண முடியவில்லை. அதற்குள் தெற்கே எழுந்து சென்ற கழுகு கிரீச் என்று கத்திக்கொண்டே வந்து அதே கிளையில் உட்கார்ந்தது. அப்போதுதான் அந்தச் சொல்லைச் சொன்னுள். "நாம் இப்படி ஆகக் கூடாது" என்ருள்.

இந்தச் சொல் என் ஆவியை உருக்கிற்று. என் பசியையும் களைப்பையும் நடுக்கத்தையும் மறந்தேன். நெஞ்சங் குலைந்து நெடுநேரம் இருந்தேன்.

எதிரில் இருந்த பெட்டியின் வலப்பக்கம் ஏதோ கல்லில் பட்டு நசுங்கிப் போயிருப்பதைக் கண்டேன். பூட்டுக்கு உரியதாக இருந்த கீல் கழன்றிருப்பதையும் கண்டேன். கீலை அகற்றிப் பூட்டைக் கழற்றினேன். அப்படியே மேல்மூடியைத் தூக்கிப் பார்த்தேன். சிறிது திறந்தது. விடாமல் முயன்றேன். நன்றாகத் திறந்தது. உள்ளே சிறு சிறு பெட்டிகள் இருந்தன. தங்கநாணயங்களும் நகைகளும் வைரக் கற்களும் நிறைய இருந்தன எனக்குப் பழக்கமான ஒரு துணிப்பையும் அதில் இருந்தது அதுதானா என்று எண்ணிக்கொண்டே திறந்து பார்த்தேன். என் விரலில் நெடுங்காலம் இருந்த மோதிரம் ஒன்று அதில் இருந்தது. எப்படி இந்தச் செல்வரிடம் வந்து சேர்ந்தது என்று ஒரு பரபரப்பு என் உள்ளத்தில் எழுந்தது; அந்தப் பையில் மறுபடியும் கையை விட்டேன். ஒரு வைரத்தோடு கண்டேன். அது குணமாலையின் வைரத்தோடு என்று ஐயம் இல்லாமல் தெரிந்தது. என் மோதிரத்தின் உள்ளே 'நீ. கு.' என்ற இரண்டு எழுத்துக்கள்—நீலமேகன் குணமாலை என்ற பெயர்களின் முதலெழுத்துக்கள்—பொறித்திருந்தார் என்னுடைய மாமனார். அது நினைவு வந்தது. மோதிரத்தைத் திருப்பிப்பார்த்தேன். நீ. கு. என்ற எழுத்துக்களைக் கண்டேன். என் கைகள் நடுங்கின; கண்கள், உள்ளம், உயிர் எல்லாம் கலங்கின. அந்தச் செல்வர் அந்தப் பொல்லாத மலைச்சரிவின் பக்கத்தில் என்னைத் தேற்றுவதற்காகச் சொன்ன நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன. மலேரியா வந்து மாண்ட அவள் யார்? பைத்தியம் பிடித்தவராய் மனைவியின் பெயரைச்சொல்லி அலைந்தவர் யார்? ஆறுமுகமா? உடன் வந்தவள்—நல்லவள்—மலேரியா வந்து மாண்டவள் யார்? பொன் முடியா? குணமாலையும் வந்திருந்தாளா? பணம் இல்லை என்று இந்த நகைகளை விற்றுவிட்டாளா? பொன்முடி—ஐயோ பாவம்—இறந்துபோய்விட்டாளா? நல்லவள்தான; அவளும் உயர்ந்த பெண்பிறவி! ஐயோ பாவம்—இறந்தா போய் விட்டாள்? ஐயோ!

## 6. வாணி

ஆமாம். இது ஒருவகை விடுதலைதான்; இந்த விடுதலை கிடைப்பதும் அருமைதான். ஆண்களுக்கு இந்த விடுதலை எப்படியோ கிடைத்துவிடுகின்றது; பையன் வளர்ந்து விட்டான், இனிமேல் அவன் குழந்தை அல்ல என்று பெற்றோர் விட்டுவிடுகிறார்கள். பெண்களுக்கு இந்த விடுதலை கிடைப்பதில்லை; இவ்வளவு எளிதாகக் கிடைப்பதில்லை; திருமணப் பருவம் வந்த பிறகும் மகள் அறியாதவள் என்றும் மகளுக்கு ஒன்றும் தெரியாது என்றும் சின்ன பெண் என்றும் பெற்றோர் நடத்துகின்றார்கள், இந்த எண்ணம் அவர்களுக்கு இருக்கும்போது, இதிலிருந்து விடுதலை பெறுவது எப்படி?

அப்பாவும் அம்மாவும் இன்னும் என்னைக் குழந்தை என்றே எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள்; குழந்தையாகவே எண்ணி அன்பு செலுத்திக் காப்பாற்றுகின்றார்கள். நானே குழந்தை அல்ல; உடம்பின் வளர்ச்சிக்கு ஏற்றபடி உள்ளமும் வளர்ந்துவிட்டது. வளர்ந்த தன்மையைப் பத்மாவதி போன்ற தோழிகளிடம் காட்டிக்கொண்டு அறிவோடு பேசுகின்றேன்; வெளியாரிடமும் அறிவு வளர்ந்தவளாகப் பழகமுடிகின்றது. ஆனால் பெற்றோரிடம் அவ்வாறு பேசவும் பழகவும் முடியவில்லை. அவர்கள் அன்போடு சிறு பெண் என்று நடத்துகின்றார்கள். நானும் அதற்கு ஏற்றபடி சிறு பெண்ணாக-குழந்தையாகவே அவர்களிடம் நடந்துகொள்கின்றேன். வேறு வழி ஏது? அவர்களுடைய அன்புக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியதாக இருக்கின்றது. இந்தக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெற முடியுமா?

குடும்பத்தில் நான் ஒரு பெண்ணாக ஒரே ஒரு குழந்தையாகப் பிறந்து வளர்ந்ததும் இதற்கு ஓரளவு காரணந்தான். எனக்குத் தம்பியரோ தங்கையரோ இருந்தால், அம்மாவும் அப்பாவும் அவர்களைக் குழந்தைகள் என்று பார்க்கும் பார்வையால், எனக்கு ஒருவகை விடுதலை கிடைத்திருக்கும். தங்கையரைவிட, தம்பியரைவிட அறிவு மிகுந்தவளாக

நான்நடக்கவும்முடியும். உடன்பிறப்பு இல்லாதது ஒருபெரிய குறைதான். பத்மாவதியிடம் இதைச்சொன்னால் அவள் மறுத்துப் பேசுகின்றாள்; எழெட்டுப் பேரோடு பிறந்து வளர்ந்தாலும், முப்பது நாற்பது வயது ஆனாலும் பெற்றோர்களின் கண்ணுக்குச் சிறுவர்களாகவே தோன்ற முடியும் என்கின்றாள். பெற்றோர்களின் அன்பு அவர்களுக்கு உண்மை விளங்காமல் மறைத்துக் குழந்தைகளாகவே காட்டுகின்றது என்கின்றாள். அதுவும் ஓரளவு உண்மைதான். உண்மை என்று அறிந்தும் அன்று வேண்டுமென்றே மறுத்துப் பேசினேன். "உன் அண்ணனை உன் பெற்றோர் இன்னும் குழந்தை என்றே எண்ணுகின்றார்களா? இல்லையே" என்று எடுத்துச் சொன்னேன். "அது உனக்கு எப்படித் தெரியும்? எனக்குத் தானே தெரியும்?" என்றாள். என் அவளுடைய அண்ணனைப் பற்றிப் பேசினேன் என்று வெட்கமுற்றுப் பேச்சை மாற்றிக்கொண்டேன். அவள் அதைப் பற்றி என்ன நினைத்தாளோ, தெரியவில்லை.

ஆண்மகன் ஒருவனைப் பற்றிப் பேச்சில் குறிப்பிடுவதற்குக்கூடப் பெண்கள் தயங்கவேண்டியிருக்கின்றது. அதிலும் கன்னிப் பெண் இன்னொருவனைப் பற்றி வாய் திறந்து பேசுவதற்கு உரிமை இல்லை. பேசினால் அவளுக்கும் அவனுக்கும் உறவு இருப்பதாக உலகம் முடிபோட்டுவிடுகின்றது. உலகம்முடிபோடுகிறதோ இல்லையோ, கன்னிப் பெண்ணின் மனத்தில் உலகம் என்ன நினைக்குமோ என்ற அச்சம் குடிகொள்கின்றது. என்னோடு நெருங்கிப் பழகும் பத்மாவதியிடம் அவளுடைய அண்ணனைப் பற்றிப் பேச முடியாமல் நானும் தயங்கினேன் அல்லவா? பத்மாவதி தடுக்கவில்லை. ஆனால் என் மனமே என்னைத் தடுத்தது. பேச்சை மாற்றிவிட்டேன்.

பத்மாவதிக்கும் எனக்கும் உறவு வளரும், நீடிக்கும். ஆனால், அவளுடைய அண்ணனுக்கும் எனக்கும் உறவு தொடங்குவதற்கும் வழி இல்லை. இந்தச் சமூகத்தில் அப்படி உறவு ஏற்பட முடியுமா? முடியாது என்பதற்கு வேறு காரணம் வேண்டுமா? நான் பெண், அவர் ஆண்; இந்த ஒன்றுதான் காரணம். ஓர் ஆணும் ஒரு பெண்ணும் காதலுறவு தவிர வேறு எவ்வகை நட்பும் கொள்ளக்

கூடாது என்று இன்றைய சமூக நிலைமை தெரிவிக்கும் போது நான் என்ன செய்வேன்? அவரோ, அந்தக் காத லுறவைத்தான் என்னிடம் நாடுகிறார். நானோ முன்னமே ஒருவரிடம் என் உள்ளத்தைச் செலுத்தியவள். அந்தப் பழைய இடத்திலிருந்து உள்ளம் திரும்பிவந்தால்தான் இவ ருடைய எண்ணம் நிறைவேறும். ஆனால் இவர் பார்க்கும் பார்வையும் இவர் செய்யும் செயலும் அவரையே எனக்கு நினைவூட்டிவருகின்றன. நான் என்ன செய்வேன்? இவரு டைய நல்ல பண்புகள் என் உள்ளத்தைக் கவர்கின்றன. அதிலும் பத்மாவதியின் அண்ணன் என்ற காரணம் பற்றி யாவது இவருடன் நட்புமுறையில் பழகலாம் என்று மனம் தூண்டுகின்றது. ஆனால், ஒரு கன்னிப் பெண்ணுக்கும் ஒரு குமரனுக்கும் அறிவான நட்பு என்று இந்தச் சமூகம் விடுமா? நெருப்பு உள்ள இடத்தில் வெண்ணெய் இருக் கக் கூடாதாம். யார் யாருடைய கதையையோ சொல் லும்போது அம்மா இந்த உவமையைக் கூறுகின்றாள். ஒரு வேளை எனக்கு மறைமுகமான அறிவுரை கூறவேண்டும் என்றுதான் இப்படி உவமை சொல்கிறாளோ என்று மனம் எண்ணும். ஆனால், அம்மாவின் கபடமற்ற நெஞ்சம் இன்னும் குழந்தை என்றுதானே எண்ணிவருகின்றது? ஒருவேளை ஆண்களும் பெண்களும் ஒத்த உரிமைகொண்டு பழகவேண்டும் என்று நான் எண்ணுவது தவறாக இருந்தா லும் இருக்கலாம். அம்மாவின் அறிவுரை அனுபவத்தால் விளங்கிய உண்மையுரையாகவும் இருக்கக்கூடும். இளமை என் கண்ணை மறைப்பதாகவும் இருக்கலாம். வாழ்க்கையில் அனுபவம் பெரியது அல்லவா?

இவராவது காதலை மறந்து பொதுவான நட்புமுறையில் பழகினால், நானும் அவ்வாறு பழக முயல்வேன். ஆனால், இவருடைய பார்வையும் குறிப்பும் காதலைக் காட்டும் போது நான் எப்படி இவரோடு பழக முடியும்? போதாக் குறைக்குக் கடிதமும் எழுதத் துணிந்துவிட்டாரே! வீடு வாசலை விட்டு, ரங்கூன்வாழ்வை விட்டு, எதிரிகளின் குண்டுகளை எந்நேரமும் எதிர்பார்த்துக் காடும் மலையும் கடந்துவரும் நாடோடி வாழ்விலும் இவருக்கு இந்தத் துணிவு எப்படி வந்ததோ, தெரியவில்லை.

அன்று இரவு முன்னேரத்தில் அந்தச் சேலத்துப் பெரியவர் அடுப்பில் சில சருகுகளை இட்டு எரியவைத்து, அதன் வெளிச்சத்தில் ஏதோ எழுதிக்கொண் டிருந்தார். தம் குடும்பத்தார் பின்னால் புறப்பட்டு வருவதாகவும், தாம் முன்னே நல்லபடி போய்க்கொண்டிருப்பதை அவர்களுக்குத் தெரிவிப்பதற்காக அப்போது கடிதம் எழுதுவதாகவும் கூறி அந்தக் கடிதத்தை எழுதி அங்கே இருந்த பெரிய மரத்தில் ஒட்டினால் அவர்கள் வந்து படித்துத் தெரிந்து கொள்வார்கள் என்று அவர் விளக்கியவுடனே, எல்லோரும் ஆட்டுமந்தைபோல் அவரைப் பின்பற்றத் தொடங்கினார்கள். "அப்பாவுக்கு நீயும் ஒரு கடிதம் எழுதம்மா" என்று அம்மா எனக்குச் சொன்னாள். அவள் சொன்னதைக் கேட்டவுடனே, அப்பாவின் நினைவு வந்தவுடனே நான் வழக்கம்போல் குழந்தையாய்விட்டேன். கண்ணீர் கலங்க, துயரம் பொங்கிய நெஞ்சத்தோடு, யாரோ கொடுத்த காகிதத்தில் எழுதினேன். கண்ணீர்த் துளிகளைத் துடைத்துக்கொண்டே எழுதி முடித்தேன். என்னைவிடப் பெரிய கோழையாய் அம்மாவும் அழுதாள். அழுது கொண்டே சோற்றைத் தடவி அந்தக் கடிதத்தை அடிமரத்தில் ஒட்டுவதற்காக எழுந்து சென்றாள். அவளுடன்பத்மாவதியும் சென்றாள். இருவரும் நகர்ந்தார்களோ இல்லையோ, என் கையில் ஒரு கடிதம் விழுந்ததைக் கண்டேன். அது இவருடைய கடிதம் — பத்மாவதியின் அண்ணனுடைய கடிதம். இதையும் ஒட்டச் சொல்கிறாரோ என்று எண்ணி எழுந்தேன். "ஒட்டுவதற்கு அல்ல, படித்துப் பார்" என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டு நகர்ந்தார். படித்தபோதுதான், இவருக்கு இவ்வளவு துணிவா என்று வியந்தேன். மற்றவர்களைப்போல் மரத்தில் ஒட்டக் கடிதம் எழுதுவதாக நடித்து, காதல் கடிதமே எழுதியிருந்தார்.

என்னுடைய புறக்கணிப்பை உணராமல் அவர் காதல் கொண்டிருப்பது ஏன் என்று தெரியவில்லை. நான் அடியோடு வெறுத்துப் பகைத்தால்தான் இந்தக் காதல் நாடகத்தை விடுவார் போல் தெரிகின்றது. என்னால் அப்படி வெறுக்கவும் பகைக்கவும் முடியவில்லை. ஒன்று காதல், இல்லையானால் வெறுப்பான பகை என்று என்னால் நடக்க-

முடியவில்லை. காதல் இல்லாதவிடத்தில் அன்பு இருக்கட்டும், நட்பு இருக்கட்டும் என்றுதான் நான் வெறுப்பில்லாமல் நடந்துவருகின்றேன். இதை இவர் உணராமல், இன்னும் தம் நாடகத்தை நடத்திவருகின்றார். பாவம், நல்லவர். அன்று மாலை எனக்குப் பின்னால் நடந்து வந்தவர், அம்மாவும் பத்மாவதியும் மற்றவர்களும் முன்னே நடந்து செல்வதைப் பார்த்து, "வாணி! வாணி!" என்று அழைத்தார். திரும்பிப் பார்த்ததும் என்ன செய்வதென்று தெரியாமல் தம் பையிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து நீட்டினார். நான் வேண்டாம் என்று சொல்லி விரைவாக நடந்தேன். சிறிது தொலைவு சென்று அந்தத் தோப்பை அடைந்து நானும் பத்மாவும் பேசிக்கொண்டிருந்தபோது இவருடைய முகத்தில் வாட்டம் கண்டேன், நானும் வருந்தினேன். என்ன செய்வது? அவருடைய தவறும் அல்ல. என் தவறும் அல்ல. என் மனநிலையை இவர் குறிப்பால் தெரிந்துகொள்ள முடியவில்லை; நான் இவருக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கவும் முடியவில்லை.

பெற்று வளர்த்த தாய்தந்தையர்க்கே என் உள்ளத்தைத் தெரிவிக்க முடியவில்லையே! ரங்கூனிலிருந்த போது அப்பாவும் அம்மாவும் திருமணத்தைப் பற்றி என் எதிரில் எப்போதாவது பேசியிருந்தாலும், குறிப்பால் புலப்படுத்தியிருப்பேன். அந்தப் பக்கத்து வீட்டாரைப் பற்றிச் சொல்ல முடியாவிட்டாலும், வேறு வகையாக என் மன நிலையைத் தெரிவித்திருப்பேன். பக்கத்து வீட்டாரைப் பற்றி அப்பாவும் என்னிடம் பேசியது குறைவு; ஊரை எல்லாம் அளந்து பேசுகின்ற வழக்கமுடைய அவர் அடுத்தவீட்டை ஏன் மறந்தாரோ, தெரியவில்லை. ஒரே முறை அவரைப் பற்றிப் பேசிய போது, இன்னும் பேசுவார் என்று அமைதியாக இருந்தேன். ஆனால் அந்த அமைதிக்குக் காரணம் இருக்கும் என்று அவர் எண்ணாமலே, "இந்தக் காலத்தில் கல்லூரி மாணவர்கள் இப்படித்தான் இரவெல்லாம் நெடுநேரம் படித்து உடம்பைக் கெடுத்துக்கொள்கின்றார்கள். இந்தக் கல்விமுறையையே மாற்ற வேண்டும். பரீட்சை முறையையே மாற்றவேண்டும். வாழ்க்கையோடு ஒட்டிய கல்வி வேண்டும். நூல்களைப் பக்கம் பக்கமாகப் புரட்டும்

கல்விக்கு மதிப்புக் குறையவேண்டும்'' என்று வழக்கம் போல் சீர்திருத்தச் சொற்பொழிவாளராக மாறிவிட்டார். கிடைத்த வாய்ப்பும் போய்விட்டது.

எதிரிகளின் படையெடுப்பு, குடும்பத்தில் ஆயிரம் கவலையை உண்டாக்கிய போதிலும், என் காதல்வாழ்க்கைக்கு ஒருவகையில் நன்மையாக முடியலாம் என்று நம்பியிருந்தேன். ஆனல் அந்த நம்பிக்கையும் பாழ்பட்டது. ''சேலத்தார் நாலைந்து குடும்பமாகச் சேர்ந்து புறப்படப் போகிருர்கள். அவர்களோடு உன்னையும் அனுப்பிவிடுகிறேன். நீ முன்னே போய்ச் சேரு, நானும் அம்மாவும் அப்புறம் வந்து சேர்வோம்'' என்று அப்பா தயங்கித் தயங்கிச் சொன்னர். நான் உடனே பதில் கூறியிருந்தாலும் நன்ருயிருந்திருக்கும். அம்மா முகத்தைப் பார்த்ததால் கெட்டேன். சேலத்தாருடன் போக வேண்டும் என்று உள்ளத்தில் ஆசை இருந்தது. இருந்தபோதிலும் அம்மா விரும்பாதபோது எப்படி உறுதியாக விடை கூறுவது என்று தயங்கினேன். ''நீங்களும் இப்போதே வந்துவிடுங்கள். எல்லோரும் ஒன்ருகப் போகலாம்'' என்றேன். அதன்பின்-அப்பாவும் ''சரி, பார்க்கலாம்'' என்று பெருமூச்சு விட்டுப் பேச்சை நிறுத்திக்கொண்டார்.

அன்று மாலையில் பக்கத்துவீட்டு நாகப்பரை நூல்நிலையத்தில் கண்டு பேசுவதாக ஏற்பாடு செய்தபடி, அங்கே போய்ச் சேர்ந்தேன், அவர் வழக்கம் போல் பெர்ஞர்ட் ஷாவின் நாடகம் ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு படித்துக்கொண்டிருந்தார். மெல்லச் சென்று, ''ஷா நாடகம் படிக்கக் கூடிய அந்த அளவுக்குக் கவலையில்லாமல் இருக்க உன்னல் முடிகின்றதே!'' என்றேன்.

''இல்லை, இல்லை'' என்று தலையசைத்துக்கொண்டே சுற்றித் திரும்பிப் பார்த்தார் அவர். ''நீ நினைப்பது தவறு. இதோ பார். மேஜர் பார்பரா என்னும் நாடகம் இது. போரின் கொடுமைகளைக் கூறுவார், இதைப் படித்தாவது ஆறுதல் அடையலாம் என்று கையில் எடுத்தேன். ஆனல் திறந்த பக்கத்திலேயே கை இன்னும் இருக்கின்றது. மனம் உன்னை எதிர்பார்த்துக்கொண்டும், உன் ஏற்பாடு

என்னவோ என்று கலங்கிக்கொண்டும், இருக்கிறேன். இன்னும் முகவுரையின் முதல்பக்கத்திலேயே இருக்கிறேன் பார்'' என்று காட்டினர்.

"நாடகம் படிப்பதால் ஆறுதல் கிடைக்குமா?'' என்றேன்.

"கற்பனைவாழ்க்கை அல்லவா? பறக்கமுடியும் என்று பார்த்தேன். ஆனல் கவலை என்னும் பெருஞ்சுமையைத் தாங்கிக் கொண்டு அந்தக் கற்பனைச் சிறகு எழ முடியவில்லை."

போகட்டும். நாம் எதிர்பார்த்தபடி சேலத்தாருடன் அனுப்புவதாகத் தெரிய வில்லை.''

"அப்புறம்! ஐயோ! இன்னும் நெடுநாள் தங்கியிருக்க முடியாதே! முன்னமே புறப்படவேண்டும் என்று வற்புறுத்திய மாமாவை இவ்வளவு பொறுத்திருக்கச் செய்ததே பெரிய முயற்சியாக இருந்ததே! சேலத்தாருடன் போகிறேம் என்று சாக்குச் சொல்லி அவரைப் பொறுக்கச் செய்தேன். நீ வருவாய் என்று நம்பித்தான் சேலத்தம்மாவிடம் சொல்லி உங்கள் வீட்டிலும் தெரிவிக்கச் சொன்னேன். இனிமேல் எப்படி நாள் தள்ளுவது?'' என்று கவலையோடு புத்தகத்தின் மேல்அட்டையைப் உற்றுப் பார்த்தார்.

நான் ஒன்றும் பேசாமல் இருந்தேன்.

"எனக்குப் பயமாக இருக்கிறது என்றும், நான் மட்டும் போகிறேன் என்றும் நீயாவது தைரியமாகச் சொல்லி விடக் கூடாதா? இப்போது—'' என்று நிறுத்தினர்.

"ஆணாக இருந்தும் நீயே உங்கள் மாமாவிடம் சொல்லத் தயங்கும் போது, நான் எப்படி அப்பாவிடம் சொல்வேன்?'' என்றேன். ஏதாவது சொல்ல வேண்டுமே என்று இவ்வாறு சொன்னேன்.

"சரி, ஏற்பாடு வீணயிற்று'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார். பிறகு நெடுநேரம் பேச்சில்லை.

அதற்குள் யாரோ ஒருவர் அந்தப் பக்கமாக வந்து‘ “என்ன நாகப்பன்! எப்போது பயணம்? இனிமேல் நமக்கு நூல்நிலையம் வேறே வேண்டுமா? தலைமேல் குண்டு பறக்கும்போது படிப்பு என்ன, படிப்பு!'' என்றார்.

“புறப்படுகிற வரைக்கும் எப்படியாவது பொழுது போக வேண்டுமே!'' என்றார் அவர்.

“இதுவும் முதல் தேதியிலிருந்து மூடப்படுமாம். இந்த இடமும் பட்டாளத்தார் எடுத்துக்கொள்ளப் போகிறார்களாம்.''

“ஆமாம்! பள்ளிக்கூடம் முதல் கோவில் வரையில் இப்போது சிப்பாய்க்கும் குண்டுக்கும் இருப்பிடமாக இருக்கும்போது, நூல்நிலையம் மட்டும் விதிவிலக்கா? சரி. உங்கள் சொந்த ஊர் எது?''

“வாணியம்பாடி ஜோலார்ப்பேட்டை அடுத்த திருப்பத்தூர்.''

“அப்படியா? நானும் அந்தப் பக்கந்தான். எங்கள் சொந்த ஊர் தர்மபுரி.''

“கேள்விப்பட்டிருக்கிறேன்.''

“அடுத்த வாரம் புறப்படப் போகிறோம். எல்லாரும் ஒன்றாகப் போகலாமா? ''

“என் விருப்பம் அல்ல. எல்லாம் மாமா ஏற்பாடு'' என்று நாகப்பர் சொல்லிமுடிப்பதற்குள் நூல்நிலைய மணி ஐந்து அடித்தது. தர்மபுரியார் விடை பெற்றுப் புறப்பட்டார். போரின் நெருக்கடியால், ஆறுமணிக்கு மூடும் நூல்நிலையத்தை ஐந்துமணிக்கே மூடத் தொடங்கிவிட்டார்கள்.

நூல் நிலையத்தை விட்டு வெளியே வந்ததும், நாகப்பர் என்னைப் பார்த்து, “உங்கள் அப்பா வேண்டும் என்றே நாள் தள்ளுகிறாரா? நாங்கள் புறப்படும் செய்தி தெரிந்தே தடுக்கிறாரா? என்மேல் அவருக்கு ஏதாவது கெட்ட எண்ணம் ஏற்பட்டுவிட்டதோ என்னவோ தெரியவில்லை. என்

னைப் பார்க்கும்போதே அவருடைய பார்வையில் ஒருவகை வெறுப்பு இருக்கிறது. நான் ஒருநாள் உங்கள் சன்னல் பக்கமாக உலாவிக்கொண்டிருந்தேன். இரண்டுமுறை சன்னல் வழியாகப் பார்த்ததையும் அவர் கண்டுகொண்டார். அன்றுமுதல் அவர் என்ன எண்ணினாரோ தெரியவில்லை'' என்றார்.

''அப்படி ஒன்றும் எண்ணமாட்டார். எண்ணியிருந்தால் என்னிடம் கொஞ்சம் கடுமை காட்டியிப்பார் அல்லவா? அவருடைய அன்பு கொஞ்சமும் மாறவில்லை. நீயே அஞ்சி அஞ்சி என்னென்னவோ எண்ணிக்கொள்கிறாய்.'' என்றேன்.

''சரி நேரமாயிற்று. வேறு வழி இல்லை. நான் மாமாவுடன் புறப்பட்டுவிடுகிறேன். இனி நாள் தள்ள வழி இல்லை. பயம் பயம் என்று நீ சொல்லத்தான் வேண்டும். அப்போதுதான் உங்கள் அப்பா நகர்வார்'' என்று நிறுத்தி என்னை உற்றுப் பார்த்தார்.

''அந்தப் போலி நடிப்புத்தான் எனக்கு வர வில்லையே! என்ன செய்வேன்? வெளியாரிடம்--பழகாதவரிடம்—உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேச முடிகின்றது. துயரம் இருக்கும்போது சிரிக்க முடிகின்றது. வெறுப்பு இருக்கும்போதும் இன்சொல் பேசமுடிகின்றது. அங்கெல்லாம் என் இதயம் முன்வருவதில்லை. மூளை மட்டுமே இயங்குகின்றது. ஆனால் அன்பாக வளர்த்த பெற்றோரிடம் அவ்வாறு முடியுமா?'' என்றேன்.

''ஆனால் அதெல்லாம் ஆண்களால் முடியாது. பெண்கள் இந்தக் கலையில் வல்லவர்கள் என்று சொல்கிறார்களே!'' என்று குறும்பாகச் சிரித்தார்.

உடனே, '' சரி. நான் கடைசியாக உன்னைக் கேட்பது ஒன்று; அதற்காவது உடன்பட்டால்தான் நமக்கு வாழ்வு உண்டு. நீ இனிமேல் தயங்கக் கூடாது. உண்மையையாவது உன் தகப்பனாரிடம் சொல்ல வேண்டும். இல்லையானால் சொல்லாமல் என்னோடு புறப்பட்டுவரவேண்டும். நீ வருவதானால் நான் அஞ்சாமல் என் மாமனிடம்

சொல்லிவிட்டு உன்னை அழைத்துக்கொண்டு செல்வேன். இனிமேல் அஞ்சிப் பயன் என்ன?'' என்று உறுதியான திட்டமிட்டார்.

இவ்வாறு கேட்பார் என்று முன்னமே நான் எண்ணி யிருந்தேன். ஆனாலும் அவருக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்தேன்.

''வாணி! கோழைத் தன்மைக்கு ஆளாக வேண்டாம். எள்ளளவும் இப்போது தயங்கவே கூடாது. எத்தனைக் குடும்பங்களில் இப்படி நடக்கவில்லை?'' என்றார்.

''உங்கள் துணிவும் சரிதான். உலகத்தில் நடப்பதும் உண்மைதான். ஆனால், என் அப்பாவும் அம்மாவும் மூடர் கள் அல்ல. முரடர்களும் அல்ல. எனக்காகவே வாழ்கின்ற வர்கள். ஆகையால் சொல்லாமல் வீட்டை விட்டு ஓடி வரும் நிலை எனக்கு இல்லை. குடும்பம் படும் கலக்கம் என்ன? இப்போது இதைச் சொல்ல எப்படி மனம் வரும்?'' என்றேன்.

அவர் பெருமூச்சு விட்டார். ''சரி. இனி வேறு வழி இல்லை. இப்படித்தான் சொல்வாய் என்று எனக்குத் தெரி யும். இனிமேல் தமிழ்நாட்டில்தான் உன்னை நான் தேடிக் காண வேண்டும். உங்கள் ஊருக்கு எப்படியாவது வந்து காண்பேன்'' என்று கலங்கி என் வலக்கையைப் பற்றி னார்; அவருடைய நெஞ்சின் குமுறல் அந்தக் கையின் சிறு நடுக்கத்திலே புலப்பட்டதும், எனக்குப் பேச வாய் எழவில்லை. கண்ணீர் கலங்கினேன். வழியில் எவருடைய கண்ணிலும் படக் கூடாது என்று துயரத்தை அடக்கித் தடுத்துக்கொண்டேன். ''மறக்க வேண்டாம்'' என்று சொல்ல வாயெடுத்தும் முடியவில்லை. ''அஞ்சாதே! கவ லைப் படாதே! இன்னும் சில வாரந்தான்'' என்று சொல் லிக்கொண்டே அவர் உடனே பிரிந்தார். திரும்பித் திரும் பிப் பார்த்துக்கொண்டே நடந்தேன். வீட்டை அடைந் தேன். வீட்டில் அப்போது அம்மா இல்லாதது பெரிய ஆறுதலாக இருந்தது. சாய்வுநாற்காலியில் சாய்ந்து விம்மி விம்மி அழுது என் துயரத்தைக் கொட்டினேன்.

காதலரைப் பிரிந்தேன். அன்று அவருடைய கனிவையும் கலக்கத்தையும் கண்டேன். நான் வருந்தாதிருக்க வேண்டும் என்றுதான் அவர் அன்று அவ்வளவு விரைவில் பிரிந்தார். நின்று தயங்காமல் உடனே பிரிந்தார். கலங்காதவர் போல் நடித்தார். வீட்டிற்கு வந்த பிறகும் மறுபடியும் காண வாய்ப்புத் தரவில்லை. என்ன எண்ணியோ அந்தச் சன்னல் பக்கமே வராமல் இருந்தார். இரவு நெடுநேரம் கண்விழித்துக் காத்திருந்தும் அவரைக் காணமல் ஏமாந்தேன்.

மற்றக் குடும்பங்களில் சாதி சமயம் பணம் பதவி முதலியவை காதல்வாழ்வுக்குக் குறுக்கே நின்று கெடுத்ததைப் பார்த்துமிருக்கிறேன், படித்துமிருக்கிறேன். இளைஞர்கள் அன்போடு உள்ளம் கலந்து வாழ முன்வந்த போதிலும் சாதியின் பெயரையோ சமயத்தின் பெயரையோ சொல்லிப் பெற்றோர் தடுக்கின்றார்கள். பணத்தின் பெருமையையோ பதவியின் செருக்கையோ நினைத்துக் காதலைக் கொல்கின்றார்கள். ஆனல் நான் பிறந்த இந்தக் குடும்பத்தில் இவற்றில் ஒன்றுக்கும் இடமே இல்லை. அங்கே மகன் விருப்பம்போல் நடந்துகொள்ளும் அறிவுள்ள தாய். இங்கே என் கருத்துக்கு உரிமை கொடுக்கும் சீர்திருத்த ஆர்வம் கொண்ட அப்பா. ஆனல் காதல்வாழ்வுக்கு இங்கும் தடை இருக்கின்றது. அவரும் மாமனின் அன்புக்குக் கட்டுப்பட்டு வாய் திறக்காமல் தயங்கினர். நானும் அப்பாவின் அன்பு நெஞ்சத்திற்காக, என் உள்ளத்தில் உள்ளதைச் சொல்லத் தயங்கினேன். சேலத்தாருடன் புறப்பட்டிருந்தால், வழிப் பயணமே எங்கள் திருமணப் பயணமாக மாறியிருக்கும். 'சேலத்தாருடன் புறப்படு' என்று அப்பா சொல்வார் என்று எதிர்பார்த்தேன். 'சேலத்தாருடன் புறப்படுவேன்' என்று நானே சொல்லியிருக்கக் கூடாதா ? சாதி முதலியவை குறுக்கே நிற்காத போது, இந்த அன்புநெஞ்சம் குறுக்கே நின்று என்னைக் கோழை ஆக்கியது. நாகப்பரைக் குறை கூறுவதற்கு இடமே இல்லை. எப்போது தேவையோ அப்போது மாமனிடம் அஞ்சாமல் தெரிவிப்பதாகவும், அதற்குமுன் வீணுக வெளியிடுவதால் பயனில்லை என்றும் கூறியிருக்கி

ஞர். நானும் அவருமாகக் கலந்து பேசி ஒரு நாள் குறித்து முடிவுக்கு வரவேண்டியதே தடையாக இருந்தது. எந்த நாளும் சரி என்று அவர் காத்திருந்தார். நான்தான் தயங்கினேன். அப்பாவிடம் எப்படிச் சொல்வது என்று அன்புக்குக் கட்டுப்பட்டுத் தயங்கினேன். சொல்லியிருந்தால் அப்பா தடுத்திருக்கவே மாட்டார் என்று உறுதியாக நம்புகின்றேன். ஆனால், செல்வது எப்படி? ஐயோ! பெண்மையே! என்னுடன் பிறந்து என்னைப் பெண்ணாக்கிய பண்பே! நீயே என் வாழ்விற்குத் தடையாக நிற்கவேண்டுமா?

காதலர் நினைவு இன்னும் இருக்கின்றது; மற்ற நினைவுகளுக்கு இடங்கொடுத்துத் தானும் இருக்கின்றது. அதற்குத் தூண்டுகோலாக இந்தப் பத்மாவதியின் அண்ணன் வந்து சேர்ந்தார். அவருடைய பார்வையும் சொல்லும் அந்தக் கடிதமும் என் மனத்தைத் திருப்ப முயன்றனவா? எள்ளளவும் இல்லையே. அதற்கு மாறாக அவை எனக்கு நாகப்பரையே நினைவூட்டிவருகின்றன. அவர் நல்லபடியே தாய்நாட்டுக்குப் போய்க்கொண்டிருப்பார் என்று கனவு காண்கின்றேன். ஆனால், அதை விட மிகுதியாக அப்பாவின் நினைவே வந்து வந்து வருத்துகின்றது. என்ன காரணம் என்று சொல்வது? எங்களை வழிகூட்டி அனுப்புவதற்கு அப்பா பட்ட பாடு அவர் விட்ட கண்ணீர் அம்மாவோடு போராடிய போராட்டம், எங்களை வழிவிட்ட காட்சி, கலங்கியழுத கண்ணீர், உடைந்த நெஞ்சம் இத்தனையும் கண்ட பிறகு மறக்க முடியவில்லையே! நாகப்பரையாவது சென்னையில் காண முடியும் என்று நெஞ்சம் எதிர்பார்க்கின்றது. ஆனால், அப்பாவை வழியெல்லாம் நெஞ்சம் எதிர்பார்க்கின்றது. புதிய குரலைக் கேட்கும்போதெல்லாம் அப்பாவோ என்று திரும்பிப் பார்க்கவேண்டியிருக்கின்றது. புதிய கூட்டத்தைப் பார்க்கும்போதெல்லாம் அப்பா இருப்பாரோ என்று மனம் நாடுகின்றது. இத்தனைக்கும் தூண்டுகோலாக அம்மாவின் வாடிய முகமும் சோர்ந்த குரலும் என்னை மேன்மேலும் கவலையுறச் செய்து வருகின்றன. அம்மா வாயால் சொல்வதில்லை. ஆனால் அவளுடைய ஏக்கமும் கவலையும் எப்படித்தான் மறைந்திருக்க

முடியும்? குடும்பக் கவலை இவ்வளவு மிகுதியாக இருந்து வரும்போது காதல்கவலை மூலையில் ஒதுங்கி அடங்கி நிற்காமல் என்ன செய்யும்? "மூன்று நாளில் உங்களோடு வந்து சேர்வேன்" என்று சொல்லி அப்பா அழுது வழி விட்டார். வாரக் கணக்காகியும் இன்னும் அவரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லையே! அந்த அன்புருவம் இன்னும் ரங்கூனில் இருக்கக் காரணம் இல்லையே! அவரைப் பற்றி அறிவிப்பவர் ஒருவரும் இல்லையே! நூற்றுக் கணக்கான தமிழரை நாள்தோறும் காண்கின்றேன். ஆனால் அவர்களில் அந்த அருமை அப்பா இல்லையே!

ஐயோ! எவ்வளவு கொடுமைகளைக் கண்ணால் காண்கின்றேன்! எவ்வளவு கொடுமைகளைக் காதால் கேட்கின்றேன்! உலகமே வாழுமிடமாகத் தெரியவில்லையே! மக்கள் அறிவின் ஆற்றலால் படைத்த குண்டுகள் இன்று மக்களை வேட்டையாடுகின்றன; வீடு வாசலை விட்டுத் துரத்துகின்றன; காடும் மலையும் கடந்து அலையச் செய்கின்றன; பற்பல துன்பங்களுக்கு ஆளாக்குகின்றன; வாழ்க்கையில் அமைதிக்கு இடமில்லாமல் எல்லா அமைப்புக்களையும் அழிக்கின்றன; போதும் போதும் இந்தக் காட்சிகள்! குடும்பங்கள் காலியாவதை மட்டுமே ரங்கூனில் இருக்கும் போது பார்த்தேன். ஊர் ஊராகக் காலியாக இருப்பதை வழியெல்லாம் பார்க்கின்றேன். சில வாரங்களுக்குமுன் இந்த ஊர்கள் நாகரிகமும் ஆடம்பரமும் விளங்குமிடங்களாக இருந்திருக்கும். இப்போது அதே நாகரிகத்தின் சுடுகாடாக, ஆடம்பரத்தின் அழிகளமாகக் காட்சியளிக்கின்றன. இடிந்த வீடுகள், எரிந்த கட்டிடங்கள், பாழ்பட்ட தெருக்கள் இந்தக் கோலத்தில் நாகரிகம் செத்து அழுகுகின்றது. இயற்கை வளர்த்த மரங்களிலும் பல தீய்ந்து கரிந்து நிற்கின்றன. காக்கை குருவிகளும் சில ஊர்களில் இல்லை. மக்களின் அழிவு வேலையைக் கண்டதும் அவைகள் மக்களின் கண்ணுக்கெட்டாத் தொலைவில் பறந்து போய் விட்டனவா? மக்களைப் போல் கண்மூடிவாழ்வு வாழும் எறும்புகளும் புழுக்களுந்தான் எங்கும் ஊர்ந்து நெளிகின்றன.

அந்த ஊரில் அழிந்த பிணங்களின் நாற்றம்! கண்ட இடமெல்லாம் மனிதத் தலைகளும் கைகளும் கால்களும்! கட்டிடம் இடிந்து வீழ்ந்த கற்களைப் புரட்டினாலும் மனிதத் தசைகளும் நரம்புகளும்! என்ன வாழ்க்கை இது! மக்கள் கூட்டம் இப்படி அழிவதா? புலி சிங்கங்களால் அழிந்தாலும் கவலை இல்லை. நாய் நரிகளால் அழிந்தாலும் கவலை இல்லை. கண்ணுக்குத் தெரியாத காலரா மலேரியாக் கிருமிகளால் அழிந்தாலும் கவலை இல்லை. மனிதனே பெருமை கொண்டு அறிவால் கண்டு படைத்த கருவிகளால் அழிவதா? இது என்ன நாகரிகம்! என்ன அரசியல்! என்ன விஞ்ஞானம்! வெறி பிடித்த கூட்டம்! அதன் செயல்களுக்குப் போர்முறை என்று பெயரா?

தனித்தனியாக ஒவ்வொருவரையும் காத்துக்கொள்ள முடியாது என்று குடும்பம் முதல் நாடு வரையில் பல அமைப்புகள் ஏற்பட்டன. ஆனால் இப்போது காண்பது என்ன? சில நாடுகளுக்கும் வேறு சில நாடுகளுக்கும் பகையாம்! இவை அவற்றைத் தாக்குதல், அவை இவற்றை எதிர்த்தல்; நாடுகள் அழிதல், ஊர்கள் அழிதல், குடும்பங்கள் அழிதல்; குடும்பங்களில் கணவன் மனைவியைப் பிரிந்து அழிதல்; மனைவி கணவனைப் பிரிந்து அழிதல்; பெற்றோர் மக்களை விட்டு வாடுதல்; மக்கள் பெற்றோரை விட்டு ஏங்குதல்; செத்த உடம்புகளைப் புதைக்கவும் முடியாமல் விட்டு ஓடுதல்; அன்பானவர்களின் மரணத்திற்காக அமைதியாகக் கண்ணீர் விடவும் முடியாமல் அஞ்சுதல்! அலறுதல்! கதறுதல்! அலைதல்!

இந்தக் கொடிய காட்சிகளைக் கண்ட பிறகு, இன்னும் பல கொடுமைகளைப் பற்றிப் பலரிடம் கேட்டபிறகு, குடும்பக் கவலையும் அடங்கிவருகின்றது; ஆயிரக் கணக்கான குடும்பங்கள் அலைந்து அழியும் நெருக்கடி வந்த போது, ஒரு குடும்பத்தின் வாழ்க்கையைப் பற்றித் தனியே பிரித்து எண்ண இடம் உண்டா? தாய் தந்தை மகள் என்று சிலர் வருந்தும் வருத்தம் பெரியதாகுமா? மக்கள்கூட்டம் வேட்டையாடப்படும்பொழுது எங்கள் காதல்வாழ்க்கையைப் பற்றி எண்ணவும் இடம் இல்லை. காடு தீப்பற்றி எரியும்போது, ஒரு சந்தன மரம் வெந்து

சாம்பலாவதைப் பற்றி வருந்திப் பயன் என்ன ? ஒரு முல்லைக் கொடி கருகி அழிவதைப் பற்றி ஏங்கிப் பயன் உண்டா ? எரியும் கடுந்தீயைத் தணித்து அவிக்க முடியுமானால் அவிக்கலாம். இல்லையானால், சந்தன மரத்திற்கும் கருவேல மரத்திற்கும் உள்ள வேற்றுமையை மறந்துவிட வேண்டும் ; முல்லைக் கொடிக்கும் ஓணான்கொடிக்கும் உள்ள வேறுபாட்டை மறந்துவிடவேண்டும். என் கடமையும் அதுதான். இந்த நிலையில் என் குடும்பத்தைப் பெரிதாக நினைப்பதும் அறியாமைதான் ! காதலைப் பற்றி எண்ணுவதும் அறியாமைதான் ! நல்ல காலமாக, அப்பா ஊட்டிய கல்வியறிவும் எனக்கு இப்போது துணையாகவே இருக்கின்றது. ஓய்ந்த நேரமெல்லாம் அவர் பேசிப் பேசி உணர்த்திய அரசியல் அறிவும் சமூக அறிவும் எனக்குப் பயன்படுகின்றன ! என்னைப் பற்றியும் என்னைச் சார்ந்தவர்களைப் பற்றியும் இப்போது எண்ணுவது குற்றம், குற்றந்தான். உலகமெல்லாம் படும் துன்பம், வேதனை, துயரம் எல்லாம் எனக்குச் சொந்தம் ! உலகம் ஒரு கடல், நான் ஒரு துளி. வருவது வரட்டும். நானும் என் சிறு முயற்சி செய்வேன். என் முயற்சியை ஒட்டிப் பல துளி சேர்ந்தால், பெரிய அலையாக எழுவோம்; புரளுவோம்; இந்தக் காட்டுத் தீ அவியாதோ, பார்ப்போம்.

# 7. நீலமேகன்

வயிற்றுப் பசியாலும் வழி நடந்த களைப்பாலும் அயர்ந்து உறங்கும் நேரம் அறிந்து திருடர்கள் திருடத் துணிந்தார்கள். தாய்நாடு தாய்நாடு என்று ஏங்கி ஏங்கி மக்கள் எத்தனையோ இன்னல்களைத் தாங்கி மலையும் காடும் கடந்து வந்தார்கள். கடைசியில் தாய்நாட்டையும் அடைந்தார்கள். ஆனால் இங்கு வந்ததும் முதல் முதல் பட்ட துன்பம் இது. கையில் இருந்த பணத்தைத் திருடர்களுக்கு ஒப்படைக்க வேண்டி நேர்ந்தது! பிறந்த ஊரிலும் சாய்க்கடைகள் இல்லையா?

திருடர்கள் வாழும் தாய்நாட்டிலே பழைய நல்லறங்களும் இன்னும் வாழ்கின்றன. எங்கள் பணத்தைத் திருடர்கள் திருடிக்கொண்டு போனதாகக் கேள்விப்பட்டவுடனே, இந்தக் கிராம மக்கள் எங்கள்மேல் காட்டும் இரக்கம் ஒன்றே போதாதோ? வெளிநாட்டில் இப்படி இரக்கம் காட்டிப் பேசுகின்றவர்கள் யார்? இந்த மணிப்பூர் சமஸ்தானம் இந்தியாவின் எல்லையில் இருக்கிறது. இந்த எல்லையிலேயே இந்தியாவின் விருந்தோம்பும் அறம் செழித்து வாழ்கின்றது. இன்னும் எல்லாவற்றையும் கடந்து எங்கள் தாய்மொழி பேசும் அந்தத் தமிழ்நாட்டிற்கே போய்விட்டால், அவர்கள், "வாங்க, வந்து எங்கள் வீட்டில் சாப்பிடுங்க" என்று அருமைத் தமிழில் பேசி அழைப்பார்கள் அல்லவா? அப்போது அந்தச் சொற்களைக் கேட்டு எங்கள் பசி களைப்பு எல்லாம் பறந்துபோய்விடும் அல்லவா?

என்னுடைய சட்டைப்பையில் இருந்த பணப்பை மட்டுந்தான் திருடு போயிற்று. போகட்டும், அவ்வளவு தானே! ஐயோ பாவம்! அந்தக் கோயம்புத்தூரார் கையில் கொண்டுவந்த பெட்டியும் போய்விட்டதாம். ஆனால் போலீசாரிடம் சொல்லி எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டார்களாம். சர்க்காரால் மக்கள் உயிரைத்தான் காப்

பாற்ற முடியவில்லை. மக்கள் கொண்டுவரும் பணத்தையாவது காப்பாற்ற முடியாதா?

முடியும். பணத்தைக் காப்பாற்றுவதற்குத்தானே பெரிய பெரிய சட்ட புத்தகங்கள் எழுதி அச்சிட்டு, அவற்றைப் படிக்கப் பெரிய பெரிய கல்லூரிகள் ஏற்படுத்திருக்கிறார்கள். உயிரைக் காப்பாற்றுவதற்கு—போர்த் தொல்லையிலிருந்தும் போர்க் குழப்பங்களிலிருந்தும் மக்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கு ஒரு புத்தகமும் காணோம். ஒரு கல்லூரியும் காணோம். புத்தகங்கள் போர் நடத்துவதற்கு வேண்டிய திறமையைத்தான் வளர்த்துவருகின்றன. பழங் காலத்துப் போர்களையும், வெற்றிகளையும், ஆயிரக் கணக்கானவர்களைக் கொன்ற வீரர்களான கொலையாளிகளின் பெருஞ் செயல்களையும் புத்தகங்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். அவைகளைப் பெரிய வரலாற்று நூல்களாகவும் சிறந்த காவியங்களாகவும் மதித்துப் பாராட்டுகின்றார்கள். கல்விநிலையங்களும் அவற்றை நன்றாக மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்து எதிர்காலக் கொலையாளிகளாகச் செய்கின்றன.

தன்னுடைய மகனே பக்கத்து வீட்டுப் பையனை அடித்தாலும் அல்லது அவனுடைய பொருளைத் திருடினாலும் அப்பன் தண்டிக்கின்றான். ஆனால் எந்த அரசாங்கமும் மற்ற நாட்டு மக்கள்மேல் படை எடுத்த வீரர்களைத் தண்டித்ததாகத் தெரியவில்லை; மற்ற நாட்டு மக்கள்மேல் குண்டு வீசிய விமானக் கொலைஞர்களை—விஞ்ஞானக் கொலைஞர்களைத் தண்டித்ததாகத் தெரியவில்லை. அறிவில்லாத தகப்பன் தன்னுடைய கடமை என்று உணர்ந்து செய்வதை அரசாங்கம் உணராதது ஏனோ? தெரியவில்லை.

அரசாங்கம் எப்படி உணரும்? அதுதானே கொலையாளிகளைக் கூலிக்குத் திரட்டுகின்றது. அவர்களுக்கும் செல்வாக்கும் பதவியும் தருகின்றது. கொலை மிகுதியானால், அவர்களின் சம்பளத்தையும் பதவியையும் உயர்த்துகின்றது. முதல்முதலில் எந்த அரசனோ இப்படிப் படை திரட்டிப் பக்கத்து நாட்டை அழித்தான. அப்புறம் ஒவ்வோர் அரசும் அவனைப் பின்பற்றத் தொடங்கியது. போர்க்

கலை ஒரு தனிக் கலையாகிவிட்டது. இன்றும் ஒருநாடு முன்னே செய்கின்ற தென்றால், உடனே மற்றொரு நாடு முந்திக்கொண்டு அதைவிடத் திறமையாகக் கொலையாளி களைத் திரட்டுகின்றது. அதைப் பார்த்து இன்னொரு நாடு அவசர அவசரமாகக் கட்டாயச் சட்டம் பிறப்பித்துத் திரட்டுகின்றது. இப்படியே போர்வெறி யாரையும் விட வில்லை. ஆனால் இந்த முயற்சியில் ஒரு சிறு பங்காவது போரை ஒழிக்க வேண்டும் என்ற துறையில் எந்த நாடும் செய்யவில்லை. போரை ஒழிப்பதற்கு நல்ல அமைப்புக்கள் ஏற்படுத்திச் சிறு தொண்டு செய்யக் கூடாதா? எல்லாரும் வாழ்வதற்கு எல்லாரும் முன்வரக் கூடாதா? ஆனால் ஒரு வரை ஒருவர் கொல்லுவதற்கு ஒருவரில் ஒருவர் போட்டி யிட்டுக்கொண்டு புறப்படுகின்றார்கள். அதற்குப் போர் என்று பெயராம்! அந்தப் போரை நடத்தச் சிறந்த திறமை வேண்டுமாம்! அதற்காக அளவற்ற செல்வத்தைச் செலவழிக்க வேண்டுமாம்! எங்கள் படைகள் இவ்வளவு, எங்கள் போர் விமானங்கள் இவ்வளவு, எங்கள் போர்க் கப்பல்கள் இவ்வளவு என்று பெருமையாகப் பேசுகின்றார் கள். எங்கள் வீட்டில் இவ்வளவு நஞ்சு இருக்கின்றது என்று யாராவது பெருமை பாராட்டுவார்களா? ஆனால், அரசாங்கம் என்று அமைந்தவுடன், கூசாமல் கொலைக் கருவிகளைப் பற்றிப் பெருமை கொள்கிறார்கள். தற்காப் புக்காக, வேறு வழி இல்லை, என்ன செய்வது என்று வருத்தத்தோடு சொல்லிக்கொண்டாலும் கவலை இல்லை. போலிநாகரிகம் இப்படி உலகத்தைக் குருடாக்கிவிட்டது!

அரசாங்கமும் உயிரைப் பற்றிக் கவலை கொள்ள வில்லை. தனிமனிதரும் அதை மதிப்பதில்லை; கவலைப் படுவ தில்லை. இத்தனை ஆயிரம் இத்தனைக் கோடி என்று நாண யங்களை மதித்துப் பெருமைகொள்ளும் அநாகரிகமே மக் கள்வாழ்விலும் வந்துவிட்டது. அந்தச் செல்வரும் தம் உயிரை மதித்துக் காப்பாற்றுவதை விட்டு இந்தப் பணப் பெட்டியைக் காப்பாற்றினார். மேலே விமானங்கள் பறந்து குண்டுவீசப் போகின்றன என்று தெரிந்திருந்தும், பெட் டியை விட மனமில்லாமல் சுமந்து வந்து தள்ளாடி விழுந் தாரே! அப்போதும்—உயிருக்கு ஆபத்து நேர்ந்த

போதும்—பாழும் பணப் பெட்டியை விட்டுவர மனம் இல்லை. பணப்பெட்டியைக் காப்பாற்றப் போய் உயிரைக் விட்டுவிட்டார்.

அவர் எனக்குக் கொடுத்தது அந்தக் கூலி—நாளுக்கு முப்பது ரூபாய். அதில் நாள்தோறும் இருபது ரூபாய் செலவு செய்து நானும் அவளும் வயிறார உண்டு மகிழ்ந்தோம். ஆனால், எனக்குக் கூலிகொடுத்த அந்தச் செல்வருக்கு வயிறாரச் சாப்பிட மனமில்லாமல் போயிற்று. ஒரு செயபுத் தண்ணீருக்கு இவ்வளவு பணமா என்று தண்ணீர்க்காரனோடு பேசிப் பேசி வயிறு எரிந்தார். ஒரு கிண்ணம் தேநீருக்குப் பத்தணாவா என்று தேநீர்க்காரனோடு பேசி அதன் வாசனை பிடித்ததே போதும் என்று குடிக்காமலே திரும்பினார். ஒரு சின்ன சப்பாத்தி முக்கால் ரூபாயா என்று வீண்பேச்சுப் பேசி ஆறணா கொடுத்து அரைச் சப்பாத்தி வாங்கி அதையும் மனம் இல்லாமல் உண்டார். பணம் செலவு செய்து குளிப்பதா என்று என்னோடு வந்த அத்தனை நாளும் குளிக்காமலே வந்து சேர்ந்தார். சுருட்டுப் பிடிக்கும் வழக்கம் உடையவராக இருந்தும் எப்படித் தான் சுருட்டுப் பிடிக்காமலே வந்தாரோ, தெரியவில்லை. சுருட்டுக்கிடைக்குமா என்று கேட்டுக் கேட்டு அலைந்தார். அந்த இராணுவ லாரியில் இருந்த தமிழ்ச்சிப்பாய்கள் ஒரு சிகரெட் பெட்டியை வீசி எறிந்தபோதும், அதிலிருந்து ஒன்றே ஒன்றைப் பக்கத்தில் கெஞ்சிக் கேட்ட ஆளுக்குக் கொடுத்துவிட்டு அதை அப்படியே எடுத்து வைத்துக் கொண்டார். அதில் இருந்தவைகளை மற்றவர்களுக்கு விலைக்கு விற்றுப் பணமாக்க எண்ணினாரோ, என்னவோ, தெரியவில்லை.

ஆனால் இவ்வளவெல்லாம் பணத்தை இழுத்துப் பிடித்து உயிரை விட்ட அவர்க்கு, எனக்குமட்டும் எப்படி நாளுக்கு முப்பது ரூபாய் கூலிகொடுக்க மனம் வந்ததோ? பத்தணா கொடுத்து ஒரு கிண்ணம் தேநீர் வாங்கிக் குடிக்க மனம் இல்லாதவர் முப்பது ரூபாய் கூலியாகக் கொடுத்தார்! கேட்டால் மற்றவர்கள் நம்பமாட்டார்கள். தங்களுடைய உடம்பு வாழவோ உள்ளம் வாழவோ உயிர்வாழவோ ஒரு

செல்லாக் காசும் செலவழிக்க மனம் இல்லாதவர்கள் பணத்தைக் காப்பாற்றுவதற்காகப் பணத்தை வாரி இறைக்கின்றார்கள். லஞ்சம் வாங்கும் அதிகாரிகளுக்கும் வழக்குகளை வளர்க்கும் வக்கீல்களுக்கும் வாரி வாரிக் கொடுக்கின்றார்கள். பணத்தைக் காப்பாற்றப் பணம் செலவு செய்கின்றார்கள். ஆனால் உயிரையோ உள்ளத்தையோ உடம்பையோ காப்பாற்றுவதற்கு ஏழைகளின் புகழ்ச்சியையும் கலையையும் உழைப்பையும் எதிர்பார்க்கின்றார்கள். ஏழைகளும் ஏமாந்து புகழ்கின்றார்கள், பாடுகின்றார்கள், குறைந்த கூலிக்கு வீடு கட்டியும் உணவுப்பொருள் உண்டாக்கியும் உழைத்து உதவுகின்றார்கள்.

போரால் நெருக்கடி ஏற்பட்டு வேறு வழியில்லாமல் போனதால் எனக்கு முப்பது ரூபாய் கூலிகொடுக்க உடன்பட்டார். இல்லையானால் செல்லாக் காசும் அவரிடம் வாங்கியிருக்க முடியாது. நான் அதிகாரியும் அல்ல; வழக்கறிஞனும் அல்ல; ஆகையால் வேறு வழியில் அவரிடம் செல்லாக் காசும் வாங்கியிருக்க முடியாது.

ஆனால், இப்படி ஈயாக் கையனாக இருந்து அவர் சேர்த்து வைத்த செல்வத்தை என்னிடம் ஒப்படைக்கப் போவது அவருக்குத் தெரியாது. தெரிந்திருந்தாலும் என்ன? அப்போதும் செலவு செய்ய மனம் வராது. "இன்னும் நெடுநாள் இருக்க முடியாது" என்று வைத்தியர்கள் உறுதியாகச் சொல்லிவிட்ட பிறகும் பொதுத்தொண்டுக்காகச் செல்வத்தை எழுதிவைக்கப் பணக்காரருக்கு மனம் இல்லையே! அப்போதும் தன்னை அடாது பேசி வம்புக்கும் துன்புக்கும் மார்தட்டிச் செல்லும் போக்கிரிப்பிள்ளைக்கே பேசாமல் வைத்துவிட்டு, ஆறடி மண்ணில் அடங்கி, வாயில் மண்ணும் அரிசியும் போடுவார்கள் என்று நம்பிக்கையோடு அங்காந்து கிடந்து சாகின்றார்கள்! திருத்தணி முருகனுக்கோ, திருப்பதித் திருமாலுக்கோ செலவிடும் காசையாவது மனமாரச் செலவு செய்கிறார்களா? நூற்றுத் தொண்ணூற்றிரண்டில் ஒரு பங்கு சொத்தைக் கடவுளுக்கே உடல் பொருள் ஆவியாக ஒப்படைத்து வாழ விரும்பி, ரூபாய்க்கு ஒரு தம்படி எடுத்து உண்டியில் போட்டுச் சேர்த்துவைக்கின்றார்கள். அந்த

யாவது அப்படியே முருகனுக்கோ திருமாலுக்கோ சேர்க்கின்றார்களா? அதுவும் இல்லை. பஸ்ஸுக்கும் ரயிலுக்கும் ஓட்டலுக்கும் முக்காலே மூன்றுவீசமும் செலவு செய்து விட்டு, எஞ்சிய வீசம் பங்கையும் எழு வழியில் மேள தாள வாத்திய வாண வேடிக்கைகளுக்குச் செலவழித்து விட்டுக் கொஞ்சம் காசையும் அங்கிருக்கும் உண்டியில் போட்டுவிட்டு, ஊருக்குத் திரும்பி வந்து "நான் எல்லா வற்றையும் அந்தத் தெய்வத்துக்கே ஒப்படைத்து விட்டேன். என்றைக்கு என் பொருளை அப்பனிடம் கொண்டு போய்ச் சேர்க்கப் போகிறேன் என்று காத்திருந்தேன். எல்லாம் அவனுடையதே. எல்லாம் அப்பன் அருள்" என்று அந்த ஊரில் உள்ள பள்ளிக்கூட ஆசிரியர்களிடமும் மற்றவர்களிடமும் சொல்லி மகிழ்வார்கள். இப்படிப் பட்டவர்களே இடிந்துபோன உள்ளூர்ப் பள்ளிக்கூடத்துக்கு அரை ரூபாய் தருமம் செய்கின்றவர்கள்; சம்பளம் கட்டத் தவிக்கும் இளம் பிள்ளைகளுக்கு இன்சொல்லும் உதவாமல் அவர்களைச் சோம்பேறிகள் என்று இகழ்கின்றவர்கள்; கூலிக்காரனுக்கு ஆறணுக் கூலி பேசி வேலை சரியாகச் செய்யவில்லை என்று மூன்றரை அணுக் கொடுத்து அவனை வயிறெரியச் செய்து வெளியே அனுப்புகின்றவர்கள்.

அந்தச் செல்வர் எப்படி இருந்தாரோ, பாவம்! ஆனால் தம்முடைய வயிற்றுக்கே உண்ண மனம் வராத அவர் இப்படித்தான் இருந்திருப்பார். அவருடைய உயிர் இந்தப் பெட்டியை விட்டுவிட்டு—பெட்டி நிறையத் தங்க நாணயங்களை விட்டுவிட்டு--எப்படித்தான் பிரிந்து போயிற்றோ தெரியவில்லை. ஆறுமுகத்தின் பாட்டிக்கு உயிர் போகாமல் போராடிக் கொண்டிருந்தபோது, அவளுக்கு அந்த நிலத்தில் பற்று, இந்த நிலத்தில் பற்று என்று சொல்லி மூன்று இடத்து மண்ணைக் கொண்டுவந்து கரைத்து வாயில் விட்டார்களாம். அந்த மண் குழம்பாகப் போய்த் தொண்டையை அடைத்துக்கொண்டிருக்கும். பாவம், அப்போதே உயிர் போய்விட்டதாம். அந்தச் செல்வருக்கு இந்தத் தங்க நாணயத்தைத் தேய்த்துத் தண்ணீரில் கலந்து வாயில் விடாமலேயே குண்டு ஓசை கேட்டு

உயிர் போய்விட்டது. வயிற்றுக்கு உண்மை வழி நடந்து களைத்துப்போன அவருடைய உயிருக்கு அவ்வளவு வல்லமை ஏது? எங்கோ ஒரு மூலையில் அடங்கிக் கிடந்த அவருடைய உயிர் ஒரு நொடிப் பொழுதில் எப்படியோ போய்விட்டது!

இந்தப் பணத்தை எடுத்து ஆள்வதற்கும் முதலில் நடுக்கமாக இருந்தது. இறந்துபோன அவருடைய ஆவி விடாமல் தொடர்ந்து வருமோ என்று அஞ்சினேன். அமைதியான நாட்களாக இருந்தால் நான் தொட்டே இருக்கமாட்டேன். ஆனல் என் சொந்தத் துன்பங்கள் ஒரு புறமும் உடன் வருவோரின் அளவற்ற துன்பங்கள் மற்ெருரு புறமும் அலைக்கும்போது, பயம் என்பது எங்கே வரும்? "சாகத் துணிந்தவர்க்குச் சமுத்திரம் எம்மட்டு" என்று வழியில் ஒருவர் பாடியது பொருத்தந்தான். நொடிக்கு நொடி சாவையே பார்த்துப் பார்த்துப் பழகி வந்த எனக்குச் செத்துப்போன ஒருவருடைய ஆவி என்ன தீங்கு செய்ய முடியும்?

ஆனல் அந்த ஒரு சாவுதான் எனக்கு என்றும் புதியதாக இருக்கின்றது. அவள் என்னை நடுங்க வைத்துவிட்டு உருண்டு உருண்டு கண்காணப் பள்ளத்தில் எங்கோ சென்ருளே அந்தச் சாவு—! எப்படி நினைப்பேன்? பெட்டியில் உள்ள அந்த மோதிரத்தில் உள்ள எழுத்து, அந்தத் தோடு இவைகளும் என் நெஞ்சம் நடுங்கச் செய்கின்றன. ஆனல், அவளையும அந்தப் படுபள்ளத்தையும் நினைக்கும்போது தான் என்னுடைய ஒவ்வொரு நாடியும்——!!

இந்தப் பெட்டியிலுள்ள பணத்தைப் பற்றி முதலில் இருந்த நடுக்கம் போய்விட்டது. இப்போது புதிய நடுக்கம் ஏற்பட்டது. எத்தனை ஏழைமக்களை வஞ்சித்துச் சேர்த்த பணமோ, எத்தனை மக்களின் கண்ணீரால் சேர்த்த பணமோ, எத்தனைக் குடும்பங்களைக் கெடுத்துத் தரைமட்டமாக்கி வட்டி வாங்கிச் சேர்த்த பணமோ என்று பலவாறு எண்ணும்போது இதை அப்படியே எடுத்துக் கொண்டு போய்ப் பாழ்ங்கிணற்றில் போட்டுவிட்டு வந்துவிடலாமா என்று தோன்றுகின்றது. நாணயங்களை ஒவ்

வொன்றாக எடுத்துச் செலவு செய்யும்போதெல்லாம் கைகள் நடுங்குவதையும் மனம் ஒடுங்குவதையும் உணர்கின்றேன்.

பாழ்ங்கிணற்றில் போட்டுப் பாழாக்குவதால் பயன் என்ன? என்னைச் சுற்றியுள்ள நூற்றுக் கணக்கான மக்கள் வேளைக்கு வேளை பசியாலும் நோயாலும் களைப்பாலும் நொந்து வருந்தும்போது, இந்தப் பணத்தைக் கொண்டு இவர்களுடைய பசியைப் போக்கக் கூடாதா? நோயைத் தீர்க்கக் கூடாதா? களைப்பை மாற்றக்கூடாதா? பாழான வழியில் பல குடும்பங்களை உறிஞ்சிச் சேர்தத பணமாக இருந்தாலும் பசியைப் போக்கும் வல்லமை இல்லையா? நோயைத் தீர்க்கும் ஆற்றல் இல்லையா? களைப்பை மாற்றும் வளம் இல்லையா? ஆகையால் இந்தப் பணத்தைத் தன்னலத்தோடு காப்பாற்றுவதுதான் பாவம். அடுத்தபடி ஒரு தொழில் கிடைத்து மறுபடியும் சம்பளம் பெற்று வாழ்வதாக இருந்தால் அது வரையில்—இல்லையானால் என்னுடைய உயிரை அவளிடம் கொண்டுபோய்ச் சேர்க்கும் அது வரையில்—மற்றவர்களுக்கு உதவியாக இந்தப் பணத்தைச் செலவு செய்வது கடமை என்று துணிந்தேன்.

பணம் இல்லாத குறையால்—வறுமை நீங்காத கவலையால்—ரங்கூனிலிருந்தபோது எவ்வளவோ குற்றங்கள் செய்திருக்கின்றேன். குணமாலையை நான் அரைப் பட்டினியும் முழுப் பட்டினியும் போட்டிருக்கின்றேன். என் வயிறு நிறைய வேண்டும் என்று, நாக்கின் ஆசை அடங்க வேண்டும் என்று, உணவுவிடுதியில் வயிறார உண்டிருக்கின்றேன். சுவையான உணவு இட்ட வீடுகளில் மறுபடியும் உணவு இங்கேயே இடைக்குமா என்று உணவு இட்ட தாய்மாரின் முகத்தை வஞ்ச நெஞ்சத்தோடு பார்த்திருக்கின்றேன். பணக்காரப் பெண்களின் நட்புக் கிடைக்குமா என்று எத்தனையோ வலைகளை வீசி வீசிப் பார்த்தேன். அவர்களின் நட்புக் கிடைத்துவிட்டால் என் கவலையெல்லாம் ஒழிந்துபோகும் என்று நம்பி அடாதன செய்து பார்த்தேன். ஆனால் அடுத்தடுத்து ஏமாந்து போனேன். ஏமாந்த போதெல்லாம் கவலையும் துன்பமும்

இரட்டிப்பு ஆகிவிட்டன. கவலையும் துன்பமும் பணக்காரப் பெண்களால் மிகுந்தபோதெல்லாம் ஏழைப் பெண்களை ஏமாற்றி வஞ்சிக்க முயன்றேன். கள்ளங் கபடற்ற ஏழைப் பெண்கள் சிலர் ஏமாந்து கெடுவதற்குக் காரணமாக இருந்தேன். அவர்களுடைய வாழ்க்கை என்னால் எவ்வளவு பாழ்பட்டதோ? எனக்கு அறிவுரை கூறித் திருத்த வந்த நண்பர்களையும் பகைத்துக்கொண்டு பிரிந்து நீங்கினேன். இவ்வளவும் அறிந்து பொறுத்துக் கொண்டோ, அறியாமல் நல்லவன் என்று நம்பியோ என்னோடு பழகியவன் ஒரே ஒரு நண்பன்—ஆறுமுகம். அவனுடைய வீட்டில் வாழ்ந்த அந்தத் தெய்வத்திடமாவது ஒழுங்காக நடந்துகொண்டேனா? ஆனால் சரியான தண்டனை கிடைத்தது. அந்த வீர மங்கை—அவள் பொன்முடி பொன்முடிதான். அவள் பகட்டுகளை விரும்பி ஏமாந்து போகும் பணக்காரப் பெண்ணும் அல்ல. வறுமைக் கடலில் வீழ்ந்து கரையேற முடியாமல் துரும்புகளைப் பற்றி ஏமாந்து போகும் ஏழைப் பெண்ணும் அல்ல. அவள் பொன்முடி. தன்னுடைய வீரத்தைக் காட்டி என் மானத்தைப் போக்கினாள். அந்தத் தெய்வம் என்னை எட்டி உதைத்திருந்தாலும் எனக்குத் தகும். குத்திக் கொன்றிருந்தாலும் தகும். அடாதது செய்யத் துணிந்தேன், பாவி! அன்று அந்த வீட்டை விட்டு வெளியே வந்த நான் மறுபடியும் அந்த வீட்டினுள் புகுவதற்கு ஆண்மை இல்லாமல் போயிற்று. ரங்கூனை விட்டு வெளியேறுவதற்கு முன் நண்பனைக் கடைசியாகப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று ஆறுமுகத்தைத் தேடிக்கொண்டு அந்தத் தெரு முனை வரையிலும் போய், வீட்டைப் பார்க்கவும் ஆண்மை இல்லாமல், அப்படியே திரும்பி வந்து கம்பெனி வாயிலில் காத்திருந்தேன். அந்தப் பொன்முடியா இறந்து போய்விட்டாள்? ஐயோ!

இதற்கெல்லாம் கழுவாய் உண்டோ? இல்லையோ? தெரியாது. எங்கிருந்தோ வந்து சேர்ந்தாள் ஒருத்தி. அவளுடைய ஆறு நாள் பழக்கம் என்னைப் புதிய பிறப்பாக மாற்றிவிட்டது. இனிமேல் பணம் இல்லை என்று கவலையைப் பெருக்கிக் கண்ணிழந்த நாயாய்த் திரிந்து வாழும்

வாழ்வு எனக்கு இல்லை. கண்ணும் பெற்றேன்; பணமும் பெற்றேன். நன்றியுள்ள நாயாகவேனும் வாழ்ந்து சாவேன். கிடைத்த பணத்தைச் சுற்றியுள்ள ஏழை மக்களுக்காகச் செலவு செய்வேன். ஆனால் அதிலும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அரசாங்கம் நன்மையும் செய்யும், தீமையும் செய்யும். "இவனிடம் இவ்வளவு பணம் ஏது?" என்று ஐயப்பட்டு ஆராய்ச்சி நடக்குமானால் அம்பலம் ஆகிவிடும். அவ்வாறு ஆகாமல் காப்பாற்றிக்கொண்டு ஆன வரையில் விழிப்போடு இருந்து உதவி செய்ய வேண்டும்.

இந்தக் கிராமத்திலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் மாட்டு வண்டிகள் ஏராளமாக உண்டு. அவைகளில் கிடைத்தவற்றை யெல்லாம் வாடகைக்குப் பேசிப் பெண்கள் குழந்தைகள் கிழவர்கள் ஆகிய இவர்களை யெல்லாம் ஏற்றி அங்கிருந்து புறப்பட்டேன். வழியில் உணவுவிடுதிகளில் ஏராளமான தின்பண்டங்களும் தேநீரும் வாங்கி உதவினேன். ஆனால் மலைகளிலும் காடுகளிலும் வரும் வழிகளில் செலவான அவ்வளவு பணம் தாய்நாட்டில் செலவாகவில்லை. அங்கிருந்து வண்டிகள் இம்பால் நகரம் வந்து அடைந்தன. அந்தத் தலைநகரில் வசதிகள் நிறைய இருந்தன. ஆனால் பசித் துன்பம்தீர்ந்தும், களைப்பும் ஒருவகையாகத் தீர்ந்தும், நோய்கள் தீரவில்லை. எதிர்பாராவகையில் காலராவும் அம்மையும் கொடுமையாக வந்து தாக்கிப் பலரைக் கொண்டுபோயின.

போதாக் குறைக்கு எதிரி விமானங்கள் வந்து பறக்கத் தொடங்கின. முதலில் அந்த விமானங்கள் வந்து பறந்த போது, பட்டாளத்தார் செய்த ஆரவாரத்தைப் பார்த்து நாங்கள் அஞ்சி அங்கங்கே அடங்கினோம். இரண்டாம் முறையாக விமானங்கள் வந்தபோது, எங்கள் அச்சம் எங்களை உடனே புறப்பட்டு வெளியேறத் தூண்டியது. மறு நாள் காலையிலேயே பெருங்கூட்டமாகப் புறப்பட்டு விட்டோம். அங்கிருந்து வேறு மாட்டுவண்டிகள் வைத்துக் கொண்டு புறப்பட்டோம்.

அன்று காலையில் புறப்பட்டது எங்கள் நல்ல காலம் என்று சொல்லவேண்டும். அன்று இரவே விமானங்கள்

வந்து குண்டு வீசி, புறப்படாமல் இருந்த மக்களேயும் பட்டாளத்தில் பெரும் பகுதியையும் கொன்றுவிட்டனவாம். முதல்நாள் வந்தபோது குண்டுகள் இல்லாமல் வந்து இடம் பார்த்துச் சென்றதாகவும் மறுநாள் குண்டுகளோடு குறித்த இடத்திற்கே வந்து அழித்துவிட்டதாகவும் பலரும் பேசிக்கொண்டார்கள்.

பர்மாவிலிருந்து இப்படி மக்கள் வந்து கூட்டம் கூட்டமாகத் தங்குவதை எதிரியின் விமானங்கள் பார்த்துப் பட்டாளங்களின் கூட்டம் என்று எண்ணி அழிக்கத் தொடங்கிவிட்டார்களாம். இதனுல் அங்கிருந்து போய்க் கொண்டிருந்த எங்களே எப்படியோ பிரித்துப் பிரித்து அனுப்பிவிட்டார்கள்.

நானும் ஒரு சிறு கூட்டத்தாரோடு பிரிந்து நின்றுவிட்டேன். எங்கள் சிறு கூட்டத்தார் தனியே பிரிந்த பிறகு, தாய்நாடாக இருந்தும், பல வசதிகள் இருந்தும், எங்களுக்குத் துன்பம் பொறுக்க முடியாததாக இருந்தது. பொல்லாத வழிகளில் போய் அகப்பட்டுக் கொண்ட சில கூட்டத்தார் மீளாத் துன்பங்களுக்கு ஆளாகி அங்கங்கே மாண்டு மடிந்தார்கள் என்று நெடுநாள் கழித்துக் கேள்விப்பட்ட போது நெஞ்சம் ஆறுப்புண்ணுய் எரிந்தது. சென்ற இடமெல்லாம், "உங்கள் கூட்டத்தில் மலேரியா நோயாளிகள் இருக்கிறர்களா? அம்மை யாருக்காவது தொத்திக்கொண்டிருக்கிறதா?" என்று எங்களேக் கேட்டார்கள். அப்போதெல்லாம் எங்களுக்குத் திடுக்கீடு உண்டாகும். அந்த நோய்கள் ஆயிரக்கணக்கான இந்தியர்களேக் கொள்ளே கொண்டதாம். பர்மாவில் எதிரிகளால் பட்டது போதாதென்றும், கொடிய வழிகளில் பலவகையாலும் பட்டது போதாதென்றும், தாய்நாட்டிற்கு வந்தபிறகும் இந்தத் தொத்து நோய்கள் ஆயிரக்கணக்கானவர்களே வாரிக் கொண்டு போயின.

ஒரு பெரிய ஆற்றின் கரையில் வந்து சேர்ந்த பிறகு எங்களுக்கு ஒருவகை ஆறுதல் பிறந்தது. தாய்நாட்டில் ஓடுகின்ற பெரிய ஆற்றின் தூய நீரைக் கண்டதும், எங்கள் துன்பங்களே யெல்லாம் அது கழுவிக் காப்பாற்றி

விடும் போல் தோற்றியது. அந்த ஆறுதான் பிரம்மபுத் திரா என்று கேட்டறிந்தோம். அங்கிருந்த நீராவிப் படகில் ஏறினோம். ஓர் இடத்தில் இறங்கி ஒரு ரயில்வே நிலையத்தை அடைந்து எல்லோருக்குமாகக் கல்கத்தா வரையில் டிக்கட்டு வாங்கினேன். கல்கத்தாவில் இறங்கியதும் அந்த நகரத்தைக் கண்ணாரப் பார்த்துக் களித்தேன்.

ரங்கூன் எவ்வளவு சிறந்த அழகான நகரம்! பர்மாவின் உயிர் என்று அல்லவா அதைச் சொல்ல வேண்டும்? அப்படிப்பட்ட சீரும் சிறப்புமான செல்வ நகரம் பாழாய் விட்டது, பற்றி எரிந்துவிட்டது என்று பத்திரிகைச் செய்தி வெளிவந்தது. சுவரொட்டிகளில் 'ரங்கூன் எரிந்தது, 40 மைல் தூரம் வெளிச்சம்' என்ற கொட்டை எழுத்துக்களை என் கண்கள் பார்த்தபோது திடுக்கிட்டேன். நான் பிறந்த நாடு வேறே, பழகிய ஊர் வேறே, பேசிய மொழி வேறே. வயிற்றுப் பிழைப்புக்கே ரங்கூனை நாடினேன். அந்தச் செல்வ நகரில் இருந்த சில ஆண்டுகளில் அது என் சொந்த ஊர் போல் ஆகிவிட்டது. ரங்கூனைப் பற்றி யாராவது புகழ்ந்து பேசினால், அது எங்கள் சென்னையைப் புகழ்ந்து பேசியதுபோல் மகிழ்ச்சியாக இருந்தது. சென்னைக்கு ஒருமுறை போயிருந்தபோதும், "எங்கள் ரங்கூனில் எல்லா வசதிகளும் உண்டு. அதைவிட அழகான நகரம் இல்லை என்று வெள்ளைக்காரர்கள் கூடச் சொல்லுகிறார்கள்" என்று பெருமையாகப் பேசிவிட்டு வந்தேன். எத்தனையோ கவலைகளுக்கு இடையில் அந்த நகரத்தில் வாழ்கின்றோம் என்ற பெரிய களிப்பும் இருந்துவந்தது. அவ்வளவு அருமையான நகரம் பற்றி எரிந்தது என்ற செய்தி எவ்வளவு கொடுமையான செய்தி! இதைக் கொட்டை எழுத்துக்களில் அச்சிட வேண்டுமா? சுவரொட்டிகளில் விளம்பரப்படுத்த வேண்டுமா? பத்திரிகைகள் ஏன் இப்படிச் செய்யவேண்டும்?.

ரங்கூன் நகரத்தைப் பற்றி அன்று அவள் எவ்வளவு அறிவோடு பேசினாள்? அந்தக் கழுகு உட்கார்ந்திருந்த மரத்தின் பக்கத்தில் பெரிய பாறையின்மேல் இருந்த தேன் கூட்டை நான் பார்த்துக்கொண்டே இருந்தேன். அவள் "என்ன பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள். நான் அந்த

மலைத்தேனைக் சுட்டிக் காட்டி அதனுடைய அழகைப் பாராட்டினேன்.

"ரங்கூனைப் போல் அவ்வளவு அழகாக இருக்கின்றது" என்றாள்.

"தேனீக்கள் போல் அவ்வளவு வேலைப்பாடு மனிதனால் செய்ய முடியுமா?" என்றேன்.

"தேக்கு மரங்களைச் சுவரும் கூரையும் தரையுமாக அமைத்து அடுக்கடுக்காக வரிசைவரிசையாக ஒழுங்காக ஏற்பட்ட வீடுகளையும் தெருக்களையும் நினைத்துப் பாருங்கள்."

"அந்த வீடுகளும் தெருக்களும் இப்போது பாழடைந்து போயிருக்குமே."

"இந்தத் தேன்கூடும் பௌர்ணமியில் அப்படித்தான் பாழாகும்."

"எதிரிகள் குண்டு வீசிப் பாழாக்குகின்றார்களே."

"இதையும் இதனுடைய எதிரிகள் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள். குறவர்கள் வணியும் தீப்பந்தமும் கொண்டுவந்து ஒரு நாள் பொசுக்கிவிடுவார்கள். நாம் ரங்கூனை விட்டு வெளியேறி அலைந்து அலைந்து வழியெல்லாம் மடிந்து மடிந்து அழியும் அதே முடிவுதான் இந்தத் தேனீக்களுக்கும் நேரும். அவைகளையும் ஒரு நாள் துரத்தி வருத்துவார்கள். பல தேனீக்கள் ஓடிப் பறந்து போய்விடும். அகப்பட்டவற்றைத் தீய்த்துவிடுவார்கள்.

" ஆனால் குறவர்கள் தேன்வேண்டும் என்று அழிக்கின்றார்கள். அவர்கள் அழித்தாலும் அதில் ஆக்கமும் தேடிக்கொள்கின்றார்கள். தேன் கிடைக்கின்றதல்லவா? அது எவ்வளவு பயனுள்ள பொருள்!"

"குறவர்கள் மனிதர்கள். அதனால்தான் அப்படிச் செய்கின்றார்கள்" என்றாள்.

இவ்வாறு சொன்னபோது என்னைத் திகைக்க வைத்துவிட்டாள். "எதிரிகளும் மனிதர்கள்தானே?" என்றேன்.

"எதிரிகள் யாராக இருந்தாலும் போர் என்ற பெயரால் உலகத்தைப் பாழாக்குகின்றவர்கள் பொல்லாத விலங்குகள். அவர்களை மனிதர்கள் என்று சொல்ல முடியுமா? குறவர்களை மனிதர்கள் என்று சொல்லலாம். மனிதனுக்கு ஓரளவு தன்னலம் உண்டு. தன்னலத்தால் தேனைப் பெற விரும்புகின்றார்கள். தேனைப் பெறுவதற்காக அந்தத் தேனீக்களைத் துன்புறுத்துகின்றார்கள். எந்தக் குறவனாவது தேன் வேண்டும் என்று இன்னொரு குறவன் வீட்டைக் கொள்ளை யடிக்கின்றானா? இல்லையே! அடுத்த வீட்டைப் பாழ்படுத்துவதற்காகத் தீப்பந்தம் எடுத்துக் கொண்டு போகவில்லை அல்லவா? அதற்காகப் புதுப் புது வழிகளை விஞ்ஞான முறையில் கண்டுபிடிக்கவில்லை அல்லவா? அடுத்த வீட்டுக் குறவனைக் கொல்வதற்காகக் குண்டு போடவில்லை அல்லவா? அறிவற்ற தேனீக்களைத்தான் துன்புறுத்துகின்றான். அதுதான் தன்னலம். அதனால் குறவர்கள் மனிதர்களே. ஆனால் இந்தப் போர் செய்கின்றவர்கள் ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்கின்றார்கள். திக்கற்ற வாழ்க்கை நடத்தும் குடும்பங்களின்மேல் குண்டு வீசி அழிக்கின்றார்கள். தாங்களும் சாகின்றார்கள். கடைசியில் ஏதாவது பயன் பெறுகின்றார்களா? அரசியலில் தேன் ஏதாவது பெறுகின்றார்களா? நஞ்சுதான் பெறுகின்றார்கள். அந்த நஞ்சு உள் நாட்டுக் குழப்பமாக அரும்பி, கட்சித் தேர்தல்களாக மலர்ந்து, வலிய இராணுவமாகக் காய்த்து, உலகப்போராகக் கனிந்து தேச பக்தி என்ற விலாசத்தோடு விலையாகின்றது. இதைத் தன்னலம் என்ற நல்ல பெயரால் சொல்ல முடியுமா? கண்மூடி வெறி என்றுதான் சொல்லவேண்டும். நாய்க்கு ஒரு காலத்தில் வெறி வந்தால், அதைக் கல்லால் அடித்துக் கொல்கின்றோம். அரசியல் தலைவர்களுக்கு வெறி பிடித்தால் அவர்களை அரியாசனத்தில் ஏற்றிச் சர்வாதிகாரிகள் ஆக்குகின்றோம். எல்லாம் நாம் செய்த தவறு, செய்யும் தவறு" என்று பேசி என் உணர்வைக் கொள்ளை கொண்டாள்.

இவ்வளவு சிறந்த மூளை இன்று அந்தப் படுபள்ளத்தில் மண்ணோடு மண்ணாய்க் கலந்திருக்கும் என்று நினைக்கும் போது பகீர் என்கிறது; என் வயிறு கலங்குகிறது.

இன்று அவள் உயிரோடு இருந்து ரங்கூன் பற்றி எரிந்த செய்தியைப் படித்திருந்தால் எவ்வளவு கொதித்திருப்பாள்! ஆனால் இன்று இந்தியாவிற்கு அணி செய்யும் ஒரு பெரிய நகரத்தில்—கல்கத்தாவில்-இருந்துகொண்டு அந்த ரங்கூன் நகரத்தின் அழிவை நினைத்துக் கலங்குகின்றேன். அவ்வளவுதான்! நான் வேறு என்ன செய்ய முடியும்?

இந்தப் பெரிய தலைநகரத்தைப் பயன்படுத்திக்கொண்டு கையிலிருந்த தங்க நாணயங்களை நோட்டுகளாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தேன். அதையும் ஒரே நாளில் செய்தால் பெருந் தொல்லை விளைந்து எண்ணமெல்லாம் பாழானாலும் ஆகும் என்று ஒரு மாதம் வரையில் தங்கியிருக்கத் துணிந்தேன். மூன்று மாதங்களுக்கு ஏறக்குறையக் காட்டிலும் மலையிலும் கடுவழிகளில் காலங் கழித்த எனக்குக் கல்கத்தா நகரில் ஒரு மாதம் தங்கியிருக்கும் ஏற்பாடு மகிழ்ச்சியாகவே இருந்தது. அதிலும் நகர வாழ்க்கை கிடைத்தபின், கைய் கணக்கற்ற செல்வமும் கிடைத்துவிட்டால் மகிழ்ச்சி இருக்காதா? ஆனால் அந்த மகிழ்ச்சி முள்ளிலும் கல்லிலும் படுத்து நிலவைக் கண்டு மகிழும் மகிழ்ச்சியாகவே இருந்தது. உயர்ந்த மாடியில் நிலாமுற்றத்தில் பஞ்சணைமேலிருந்து காணும் நிலவுதான் செல்வர்கள் அறிவோடு நுகரும் நகர வாழ்க்கையின் இன்பம். எனக்கு அறிவிருந்தும், நிறைந்த செல்வம் பெட்டியிலிருந்தும், கல்கத்தா நகரம் காட்சிக்கு இனியதாக இருந்தும, என் உள்ளம் முள்ளும் கல்லும் நிறைந்த படுக்கையாகவே இருந்தது. என் உள்ளத்தில் இருந்திருந்து பற்பல கவலைகள் உறுத்தி உறுத்தித் துன்பம் தந்தன. என் இல்வாழ்க்கையை நானே பாழ்படுத்திக் கொண்டதை நினைப்பேன்; இளமையில் கண்ணிழந்து கற்பிழந்து அறிவிழந்து ஒழுக்கமிழந்து செய்த குற்றங்களை நினைப்பேன்; எல்லாவற்றையும் மறந்து ஒருவாறு அமைதியாக இருக்க முயல்வேன். அப்போது அவளுடன் வாழ்ந்த ஆறு நாள் வாழ்க்கையும் அந்தப் பொல்லாப் படுபள்ளம் பிரித்த பிரிவும் வேலும் ஈட்டியுமாய் என் நெஞ்சில் பாய்ந்து வதைத்தன. கை நிறையப் பணமும் கல்கத்தா போன்ற நகரமும் வாய்த்தும் இவ்வாறு

சீரழிந்து சிதையும் மனம் இனிக் கடைத்தேறுவது எப்படி என்று சோர்ந்து போனேன். இனிமேல் வாழும் ஒவ்வொரு நாளும் இன்னல் படவேண்டிய நாளே என்று உறுதியாகத் தோன்றியது.

ஆயினும் அந்தப் பணத்தைத் தக்க வழியில் செலவு செய்துவிட்டு நானும் ஒரு படுபள்ளத்தை நாடி உருள வேண்டும் என்ற எண்ணம் என்னை விடவில்லை. கையில் உள்ள அவ்வளவு செல்வத்தையும் காலத்தையும் மிஞ்சாமல் செலவழிக்கும் வரையில் அந்தப் படுபள்ளம் எனக்காகக் காத்திருக்கட்டும் என்று துணிந்தேன்.

முதன் முதலில் ஒரு காசுக் கடையில் நுழைந்து இருபது சவரன்களை மாற்றியபோது அந்தக் கடைக்காரர் என்னை உற்று உற்றுப் பார்த்தார். என்னவோ பேசி, பர்மா என்று சொல்லி ஏதோ கேள்வி கேட்டார். ஆமாம் என்று தலையசைத்தபின், ஏதோ கணக்கெழுதிக்கொண்டு நோட்டுகளைக் கொடுத்தார். இப்படி ஒவ்வொரு கடைக்காரரும் உற்றுப் பார்க்கவும் கேள்வி கேட்கவும் இடந் தரக் கூடாது என்று ஒரு வழி செய்தேன். அந்தக் கடைக்காரர் கொடுத்த ஆயிர ரூபாயும் அப்படியே எடுத்துக் கொண்டு பெரிய பட்டுத்துணிக் கடையுள் நுழைந்து உயர்ந்த ஆடைகளை வாங்கி அங்கேயே சட்டை தைக்கவும் கொடுத்துவிட்டு வந்தேன். உயர்ந்த செல்வனைப் போல் உடைகளை மாற்றிக்கொண்ட பிறகு என்னை எந்தக் கடைக்காரனும் ஐயப்பட வில்லை. எங்குச் சென்றாலும் வண்டி வைத்துக்கொண்டும் கூலியாள் வைத்துக்கொண்டும் சென்றேன். அடிக்கடி வாடகை மோட்டாரில் ஏறிச் சென்றேன். பெரிய ஹோட்டலில் மேல்மாடியில் ஓர் அறை வாடகைக்குப் பேசிக்கொண்டேன்.

அங்கிருந்து ஒரு நாள் ரவீந்திரநாத தாகூரின் சாந்தி நிகேதனத்தைப் பார்க்க வேண்டும் என்று வாடகை மோட்டாரில் புறப்பட்டுப் போனேன். அந்தக் கலைக் கோயிலைக் கண்டதும் தாகூரின்மேல் எனக்கு அளவிலாப் பற்றும் மதிப்பும் ஏற்பட்டன. எளிய முறையில் உயர்ந்த கலைகள் இயற்கை முறைப்படி கற்றுக்கொடுக்கப்படுவ

தாக முன்னமே நான் கேள்விப்பட்டது உண்டு. அங்கிருந்த ஆசிரியர் ஒருவர் எனக்குத் துணையாக இருந்து சில பகுதிகளை விளக்கிச் சொல்லிக்கொண்டே வந்தார். எல்லாவற்றையும் பார்த்து முடிந்த பிறகு, உடனிருந்த அவரிடம் நன்கொடை கொடுக்க விரும்புவதாகத் தெரிவித்தேன். அவர் உடனே சென்று வேறொருவரை அழைத்து வந்தார். அவர் நீண்ட அங்கி அணிந்து வங்காளி போல் கீழ்ப்பாய்ச்சுக் கட்டி அழகாகத்தோன்றினர். அவர் என்னிடம் கொடுத்த நோட்டுப் புத்தகத்தில் என் பெயரும் அதை அடுத்துப் "பர்மாவிலிருந்து வந்த தமிழன்" என்ற விலாசக் குறிப்பும் எழுதித் தொகை என்ற இடத்தில் ரூ. 5000 எனக் குறித்து ஐந்து ஆயிர ரூபாய் நோட்டுகளைத் தந்தேன். அவர் தந்த ரசீது பெற்றுக் கொண்டு விடை பெற்றேன். திரும்பும் போது, தமிழ் நாட்டில் எங்கள் பாலாற்றங்கரையில் இப்படிப்பட்ட கலைக் கழகம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. முன்னமே ஒன்று இருந்தாலும், அதை நிலைநிறுத்திச் சிறப்பிக்க வேண்டும் என்று எண்ணி மகிழ்ந்தேன்.

நாள் தோறும் மாலை வேளையில் எங்காவது திரிந்து சென்று ஏழைகளைக் கண்டு அவர்களுக்கு உதவியாக என்ன செய்யலாம் என்று ஓயாமல் எண்ணிக்கொண்டிருக்கலானேன். அங்கங்கே தமிழர்களைக் கண்டபோதெல்லாம், அவர்களுடைய சொந்த ஊரும் ஜில்லாவும் கேட்டு, எப்போது ஊருக்குப் போவது என்றும் கேட்டு அவர்களுக்குக் கைச் செலவுக்குப் பணம் கொடுத்துவந்தேன். என்னுடைய இந்த உதவியை அடிக்கடி கவனித்து வந்தவர்கள் சிலர், ஓயாமல் என்னிடம் வந்து தொல்லைப் படுத்தத் தொடங்கினர்கள். சிலர் என் இருப்பிடத்தையே தேடிக்கொண்டு வந்துவிட்டார்கள். இனிமேல் யாருக்கும் கொடுப்பதில்லை என்று சொல்லி மறுத்துவிடத் தொடங்கினேன். ஆனல் மனம் கேட்கவில்லை. தக்கவர்களா அல்லவா என்று தெரிந்துகொள்வதும் அருமையாயிற்று. அதனல் ஒன்று செய்தேன். நாள்தோறும் கல்கத்தா--சென்னை ரயில் புறப்படும் நேரத்தில் ரயில்நிலயம் போயிருந்து அங்கு உண்மையாகவே ஏழைகள்

என்று கண்டவர்களுக்கு மட்டும் சென்னை வரையில் பயணச் சீட்டு வாங்கியிருந்தால் கைச் செலவுக்குப் பணம் உதவினேன். அவர்கள் இலவசமாகப் பயணம் செய்வதற்கு அரசாங்கத்தார் தக்க ஏற்பாடுகள் செய்து உதவியளித்துவந்ததால் டிக்கட்டு வாங்க வேண்டிய நிலை இல்லை. அழுக்குப் படிந்த ஆடைகளே தமிழர்கள் பெரும்பாலோரும் உடுத்திருந்தார்கள். உலகத்திலேயே குறைந்த அளவில் உடை உடுத்துப் பழகி வந்த தமிழர்களுக்கு அந்த நான்கு முழ ஆடையும் அழுக்கு இல்லாத கந்தையாக இருக்கக் கூடாதா என்று வருந்தினேன். இயன்றவரையில் அவர்களுக்குப் புதிய ஆடைகளும் வாங்கிக் கொடுத்தேன்.

சில நாட்களில் அங்குள்ள பெரிய மருத்துவ நிலையங்களுக்குச் சென்று நோயாளிகளைப் பார்த்துவிட்டு வருவேன். பர்மாவிலிருந்து வந்து மலேரியா நோயால் தாக்கப் பெற்ற தமிழர்கள் பலரை அங்கே கண்டேன். அரசாங்கத்தார் அவர்களுக்கு வைத்தியம் செய்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்திருந்ததால் என்னுடைய உதவி ஒன்றும் வேண்டியதில்லை. ஆனாலும் அறிமுகமான முகம் ஒன்று இரண்டு பார்க்க வாய்த்தபோது, எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சி உண்டாயிற்று.

இவ்வாறு அறிமுகமானவர்களைக் கண்டு மகிழ விரும்பி மருத்துவ நிலையத்திற்குப் போய் வந்துகொண்டிருந்தபோது, ஒரு நாள் மாலையில் நான் கண்ட ஒரு முகம் எனக்கு வேதனை தந்தது. அது வற்றிச் சுருங்கியிருந்தது. கண்கள் குழிந்திருந்தன. மீசையும் தாடியும் வளர்ந்து உரு மாறியிருந்தது. ஆனாலும் அந்த நெற்றியும் மூக்கும் எனக்குத் தெரிந்த ஆள் என்று காட்டிக்கொடுத்தன. உற்று உற்றுப் பார்த்தேன். மலேரியா நோயாளிகளின் பகுதி அது. அங்கிருந்த பார்வையாளரை நோயாளியின் பெயர் என்ன என்று கேட்டேன். உணர்விழந்து வந்ததாகவும் பெயர் சரியாகச் சொல்லவில்லை என்றும், இப்போது உணர்வு வந்திருப்பதாகவும், தூங்கிக்கொண்டிருப்பதாகவும், பலவீனமாக இருப்பதாகவும் ஏதாவது சொல்ல முயலும்

போது நாக்குக் குழறுவதால் நன்றாக ஒலிக்க முடியவில்லை என்றும் சொல்லி, "இது பிழைக்காது" என்றார். எனக்கோ மிகவும் இரக்கம் உண்டானது. உருக்கத்தோடு பார்த்தேன். திடீரென்று ஆறுமுகமோ என்ற ஐயம் எப்படியோ ஏற்பட்டது. என்னால் நிற்கவும் முடியாமல், உற்றுப் பார்க்கவும் முடியாமல் துயரமாயிற்று. ஆறுமுகமாக இருந்தால்—என்று எண்ணும்போதே எண்ணும் மனம் உடைந்து போவதாக இருந்தது.

பக்கத்தில் இருந்தவரும் மலேரியா நோயாளிதான். அவர் பெரும்பாலும் குணப்பட்டு நாளை மறுநாள் ஊருக்குப் போவதாக இருந்தார். அவர் தெலுங்கர் என்பதைப் பேச்சால் தெரிந்துகொண்டேன். என்னுடைய துயரத்தைப் பார்த்து வலியப் பேசினாரோ, அல்லது, என்னுடைய உதவிகளைக் கேள்விப்பட்டுத் தெரிந்து பேசினாரோ, தெரியாது. ஏமண்டி, ஒத்தண்டி, பாபண்டி என்று உருக்கமாகச் சில சொற்களைச் சொல்லிக்கொண்டே இருந்தார். நான் அவரைப் பார்த்தேன். "ஏடு தினமாயின—மோசமயினதி—பாபம்" என்று வேறு என்னென்னவோ சொல்லி, "பொன்முடி பொன்முடி அனி செப்புத்தாரு' என்றார். என் நெஞ்சு திடுக்கிட்டது. அலை அலையாக ஆறாத் துயரம் பொங்கி எழுந்தது. என் அருமை நண்பனைப் பார்த்துக் கண்ணீர் கலங்கி "ஆறுமுகம் ஆறுமுகம்" என்று அழைத்தேன்.

அருமைநண்பன் கண்களைத் திறந்தான். என்னுடைய கண்களில் இருள் மூடிக்கொண்டது. என்னால் சிறிது நேரம் பார்க்க முடியவில்லை. கண்களைத் துடைத்தேன். துடைக்குமுன்பே மறுபடியும் நீர் பெருகியதால் நண்பன்முகத்தை அரை குறையாகவே பார்த்தேன். அந்தக் கண்கள் என்னையே பார்த்துக்கொண்டிருந்தன. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பார்த்தேன். நண்பனுடைய குழிந்து ஒடுங்கிய கண்களிலும் கண்ணீர்த் துளிகள் கண்டேன். இரத்தமே இல்லாத உடம்பில்—எலும்புக் கூடாக இருந்த உடம்பில் இரண்டு துளிக் கண்ணீரும் கண்டேன்.

அவன் முகத்தை என் இரண்டு கைகளாலும் பற்றினேன். காய்ச்சலால் கன்னங்கள் கொதித்துக்கொண்டிருந்தன. அவனுடைய கைகளைப் பற்றினேன். ஒரே குளிர்ச்சியாகப் பனிக் கட்டிபோல் இருந்தன. "பொன்முடி எங்கே? வாணி எங்கே?" என்று கேட்டேன். கையை மெல்ல அசைத்து உதட்டைப் பிதுக்கினான். மறுபடியும் இரண்டு துளிக் கண்ணீர் கண்டேன். என் கைக்குட்டையை எடுத்து மெல்லத் துடைத்தேன். "நான் யார்? தெரிகிறதா?" என்றேன். மெல்லத் தலை அசைத்தான். தெரியும் என்று குறிப்பிடுவதாக எண்ணினேன். என்னுடைய இடக்கையை அவனுடைய வலக்கை தேடிப் பிடித்தது. அடுத்த நொடியில் ஒரு பெருமூச்சு விட்டு மெல்ல அழுதான். "வேண்டாம், உன் உடம்பு கெடும், அழாதே" என்று தேற்றி அவனுடைய மார்பின்மேல் கை வைத்துக் குனிந்தேன். வலக்கையால் என்னைச் சுட்டிக் காட்டி, என் கழுத்தைச் சுற்றி மாலை போல் காட்டினான். வாயால் ஏதோ பேச விரும்பினான். நாக்கு நன்றாக அசையவில்லை. என் செவியை அவனுடைய வாயின் அருகே கொண்டு போனேன். எங்கோ கிணற்றிலிருந்து பேசுவது போல் "உனலை உனலை" என்று மெல்லக் காற்றுப் போல் சொல்லித் தேம்பி யழுதான். குணமாலையைத்தான் சொல்கிறான் என்று தெரிந்துகொண்டேன். "என்ன? அவளைப் பற்றித் தெரியாதே" என்றேன். அவன் இரண்டு கைகளையும் விரித்துக் காட்டி மறுபடியும் தேம்பினான். "அவளா செத்துப் போய்விட்டாள்?" என்று கேட்டதற்கு விடாமல் தேம்பிக்கொண்டே தலை அசைத்தான். அதற்குள் மருத்துவநிலையத்து மணி அடித்தது. பார்க்க வந்தவர்கள் வெளியே போகவேண்டிய நேரம் இது என்று தெரிந்தது. திடீரென்று ஒருவர் வந்து வங்காளி மொழியில் என்னவோ பேசினார். நான் பேசாமலிருப்பதைக் கண்டு, "நோயாளி ஆபத்தான நிலையில் இருக்கிறான். அவனோடு என்னென்னவோ பேசி அழவைக்கிறாயே" என்று சொல்லி உடனே போகவேண்டும் என்று தெரிவித்தார். எழுந்தேன். நண்பன் முகத்தைப் பார்த்தேன். அவனுடைய இரண்டு கைகளும் எழுந்து என்னைப் பற்ற விரும்பின. அந்தக் கைகளைப் பிடித்து மெல்லப்

படுக்கையில் வைத்து, "கவலைப் படாதே. நாளைக்கு வருவேன்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தேன். என் கண்களைத் துடைத்துக்கொண்டே வெளியே வந்தேன்.

என் விடுதி வரைக்கும் நடக்கவும் வலிமையற்றுக் கால்கள் சோர்ந்தன. தொண்டையில் துயரத்தின் அடைப்பு அடிக்கடி உண்டாயிற்று. வாடகை மோட்டாரில் ஏறி உட்கார்ந்தேன். விடுதியில் என்னால் ஒன்றும் செய்ய முடியாமல் கலங்கிக்கொண்டிருந்தேன். உணவைப் பற்றிய நினைப்பும் அற்றுக் கிடந்தேன். உறக்கமில்லாமல் பசியும் இல்லாமல் படுக்கையில் புரண்டேன். சிறிது நேரம் தூங்கினேன். நண்பன்முகத்தை நினைத்துக் கொண்டே அலறி எழுந்தேன். மறுபடியும் படுத்தேன். குணமாலையின் நினைவு வந்தது. சிறையில் கிடந்து நொந்து புரளும் கொலைக்குற்றவாளி யானேன். அந்த உயர்ந்த மாடியில் பஞ்சணைமேல் உடல் இருந்து புரண்டது. உளமோ முள்ளணைமேல் புரண்டு வேதனை யுற்றது. ஆமாம் பெரிய குற்றவாளிதானே! குணமாலையின் நெஞ்சம் அப்படித்தானே தீர்ப்புக் கூறியிருக்கும்?

பொழுது விடிந்தது. அரை குறையாய்க் கடமைகளைச் செய்துகொண்டு அவசரமாகப் புறப்பட்டேன். பெரிய வைத்தியர்கள் வருவதற்கு முன்னமே வாயில் காவலர்களிடம் பணம் கொடுத்து எப்படியாவது உள்ளே போய்ப் பார்த்துவிட வேண்டும் என்று விரைந்தேன்.

கட்டிட வாயிலை அடைந்தேன். மலேரியா விடுதியை அடைந்து தேடினேன். அந்தப் படுக்கை காலியாக இருந்தது. பக்கத்திலிருந்த தெலுங்கர் "மீரு போயப் புடே சச்சி போயினாடு, பாவம்" என்றார். என் நெஞ்சம் பட்ட பாடு சொல்லத் தரமில்லை. அந்த விடுதிக்கு வெளியே காவலிருந்தவனை நோக்கி ஆங்கிலத்தில் "அந்த உடம்பு எங்கே?" என்றேன். அவன் ஒரு தனிக் கட்டிடத்தைச் சுட்டிக் காட்டினான். அங்கே இருந்தவர்களிடம் சென்று, "டெட் பாடி (Dead Body)" என்றேன். "இப்போது தான் வெளியே எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். எல்லாம் முடிந்து போயிருக்கும்" என்றான்.

# 8. பொன்முடி

கணவனைப் பிரிந்து காடும் மலையும் கடந்துவந்த நான், மகளையும் பிரிந்து தாய்நாட்டில் அலைய வேண்டி நேரும் என்று எதிர்பார்க்க வில்லையே! செல்வமாக வளர்ந்த மகள் நடந்து நடந்து மெலிந்துபோய் வாடுவதைக் கண்டு அந்த இரட்டைமாட்டு வண்டியில் ஏறும்படி சென்னேன். கையில் நிறையப் பணம் இருந்திருந்தால் அவளை அந்த வண்டியில் விடாமல், தனியாகவே வேறு வண்டியை வாடகைக்குப் பேசிக்கொண்டு ஏறிச் சென்றிருப்போம். ஆனல், கையில் காசு இல்லாக் குறையால் நடந்தே வர வேண்டி நேர்ந்தது. அப்போது அவள் நடந்து தளர்வதைக் கண்டு மனம் பெறுக்கவில்லை. அந்தச் சேலத்தார் ஏறிச் சென்ற வண்டியில் இடம் இருந்தால், அவள்மட்டும் ஏறிப் போவது நல்லது என்று எண்ணிக்கொண்டே எங்கிச் சென்றேன். சேலத்தார் அவளைப் பார்தது, “நீ இதில் ஏறிக்கொள்ளம்மா” என்று சொன்னபோது, நானும், “போய் ஏறிக்கொள்ளம்மா” என்று இணங்கிச் சொன்னேன். எப்போதும் தயங்குகின்ற வாணி அப்போது தயங்காமல் சென்று ஏறிக்கொண்டாள். அவளோடு நடந்துவந்த பத்மாவதிக்கும் நெருக்கி இடம் கொடுத்தார்கள். இருவரும் ஒன்றுக உட்கார்ந்து வண்டியில் போவதைப் பார்த்ததும் என் கவலை எவ்வளவோ குறைந்துவிட்டது. ஆனல் வேறொரு வடிவில் கவலை யெல்லாம் திரும்பி வரும் என்று எதிர்பார்க்கவில்லை.

சிறிது நேரத்தில் வண்டிகளுக்குப் பின்னல் நெடுந்தூரத்தில் பின்தங்கிவிட்டேன். நான் என்ன செய்வேன்? அவரைப் பிரிந்துவந்த அன்று காலையிலேயே என் உடம்பில் பாதி வல்லமை குறைந்துபோய்விட்டது. வெயிலும் பனியும் தெரியாமல் தேக்குமரக் கட்டிடத்தில் மேலடுக்கில் மென்மையாக வாழ்ந்துவிட்டேன். கரடுமுரடான வழிகளில் வேளைக்குச் சோறும் தண்ணீரும் கிடைக்காமல் அல்லல் பட்டதால் உடம்பும் தாங்க முடியாமல் போய்

விட்டது. ஆனல் அவரைக் காண முடியும், காணமுடியும் என்று நாள்தோறும் எதிர்பார்த்துப் பொறுத்துப் பொறுத்து நானும் இத்தனை நாள் எப்படியோ உயிரை வைத்துக்கொண்டிருந்தேன்.

இளமை முதல் வலிமை குறைந்து வளர்ந்தவள். அவர் அடிக்கடி சொன்னது போல் ஏதோ பூசணிப்பழம் போல் உருவாய்த் தோன்றியிருந்தேனே தவிர உடலில் வலிமை குறைவு. அடிக்கடி தலைவலியோடு பழகி, அதனுடைய நட்பு ஓயாமல் இருந்துவந்தது. மாதந்தோறும் நாட்டில் மழை தவறினலும் தலைவலியும் வயிற்றுநோயும் என் உடம்பில் தவருமல் இருந்துவந்தன. இப்படிப்பட்ட பெண்ணைத் தாய்வீட்டில் வளர்ந்து வந்த எனக்கு உயிர்த் துணையாய் வந்த கணவன் உடலுக்குச் சிறந்த வைத்தியராகவும் இருந்து உதவினர். 'நோயால் வாடும் உடம்பில் நிலையான அன்பும் அறிவும் இருக்க முடியாது. ஆகையால் எனக்குத் துணைவியாக இருந்து வாழ வேண்டுமானல் நோய் என்ற பேச்சும் இருக்கக் கூடாது'' என்று அவர் சொல்லத் தொடங்கினர். அதுமுதல் நோய் எது வரினும் சொல்லக் கூடாது என்று இருந்தேன். நான் சொல்லாத போதும் என் நெற்றிச் சுருக்கங்களையும், முகச் சுளிப்பையும், வெறுப்பான சொற்களையும், துன்பக் கண்ணேக்கையும் கண்டு ''என்ன உடம்புக்கு?'' என்று ஓயாமல் கேட்கலானர். இனி இவரிடம் மறைக்க முடியாது என்று சொல்லத் தொடங்கிய போதோ, ''நீ நாக்கிற்கு அடிமை; வாய்க்குச் சுவையானதை உண்கிருய்: உடலுக்கு உரமானதை உண்பதில்லை. இப்படித்தான் நீயும் நோயால் துன்பப்படுவாய். எனக்கும் துன்பந் தருவாய்'' என்று சொல்லத் தொடங்கினர். இதைக் கேட்டதும் எனக்குப் பெரிய வேதனை ஆயிற்று. வேண்டிய மருந்துகளை நானே தக்கவர்கள்வாயிலாகத் தருவித்துக்கொண்டு நோயை அடக்கிக்கொள்ள முயன்றேன். தலைவலித் தைலங்களோ என்னுடைய செயலை அவருக்குத் தெரியப்படுத்திவிட்டன. ''இப்படித் தைலம் போட்டுத் தலைவலியைத் தீர்த்துவிடலாம் என்று நம்புகிருய். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் இப்படித்தான் தவருன எழுத்தை அழித்துப் போக்காமல், அது தெரியாதபடி அதன்மேலேயே சரியான எழுத்தை

எழுதிஎழுதித் தடிப்பாக்கி மை ஊறச்செய்து காகிதத்தின் அழகைக் கெடுக்கிறார்கள். உள்ளதும் கெடுவது இப்படித் தான். நல்ல உணவாலும் உடற் பயிற்சியாலும் நோயைப் போக்கிக்கொள்ள முடியாத நாக்கடிமைகளும் சோம்பேறிகளும் நோய்க்கு அரண்மனை கட்டிக்கொடுப் பது இப்படித்தான். மருந்து அவ்வளவுதான் செய்யும். முதலில் எந்தத் தைலமும் கொஞ்சம் முகர்ந்தாலும் நோய் போய்விடும்; பிறகு தடவினால்தான் போகும்;பிறகு கன்னமுங்கூட; பிறகு எல்லா நாடிகளும்; பிறகோ எவ்வ ளவு தைலம் தேய்த்தாலும் கல்லுப்பிள்ளையார் போல் தலை வலி :உட்கார்ந்துகொள்ளும். அதற்குத்தான் தீராத தலைவலி என்று பெயர். அப்புறம் கண்ணாடி வரும். அப் புறம் கண் போகும். உன் கதியும் இப்படித்தான் ஆகும்'' என்று ஒருநாள் வெறுப்போடு சொன்னார். எனக்கோ வாழ்க்கையிலேயே வெறுப்பு ஏற்படும்படியாகச் செய்தது அந்தப் பேச்சு. இவரை ஏன் கணவனாகக் கட்டிக்கொண் டேன் என்றும் வெறுப்பாய்த் தோன்றியது. "ஒரு புட் டித் தைலம் வாங்கிக் கொடுத்தால் காசு செலவாய்விடும் என்று பார்க்கிறாய். நீயா வைத்தியர் வைத்துப் பார்க்கப் போகிறாய் ?'' என்றேன். மூன்று நாள் பேசாமல் இருந் தோம். கடைசியில் எப்படியோ அவரே என் உடம்பைக் காப்பாற்றும் வைத்தியரானார்; எனக்கு நல்ல ஆசிரியராக வும் வழிகாட்டி விளங்கினார். தலைவலியும் மற்ற நோய் களும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. அவர் வாணிக்குச் சொல்லிக்கொடுத்த மூன்று வாக்கியங்கள் என் மனதில் நன்றாகப் பதிந்து விட்டன. "உடல் நோயற் றிருப்பது முதல் இன்பம், மனம் கவலையற்றிருப்பது இரண் டாம் இன்பம், உயிர் பிறர்க்கு உதவியாக வாழ்வது மூன் றாம் இன்பம்'' என்று அவர் சொன்ன மூன்று மணிமொழி களை மறக்கவில்லை. இந்த மூன்றும் தெரியாமல் முப்பதா யிரம் புத்தகங்களைப் படித்தால் என்ன? அவற்றைக் கொளுத்தி அந்தக் கரியைப் பூசிக்கொண்டு காட்டில் திரிந் தாலும் என்ன?

இப்படிப்பட்ட துணைவரிடம் வாழ்ந்து உடலைக் காப் பாற்றியிருக்கா விட்டால், வாணியை எப்போதோ பிரிந்து எந்த இடத்திலோ மலேரியாவுக்கோ அம்மைக்கோ ஆளா

இப் பர்மாவிலேயே மண்ணாய் மறைந்திருப்பேன். எப்படியோ வந்து தாய்நாட்டில் கால்வைத்தேன். அருமை மகளைப் பிரிந்தேன். இது தாய்நாடு. இனி அவள் எப்படியும் சென்னைக்குப் போய்ச் சேர்வாள். தமிழர்கூட்டங்களை அந்தத் தமிழ்த் தலைநகரத்தில் காண்பாள். அவளும் பத்மாவதியும் ஏறிச் சென்ற வண்டிகள் என் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தன. "வண்டிகள் முன்னே போகட்டும்; எங்காவது அந்த வண்டிகள் தங்கும்போது பிடித்துவிடலாம்; பெரிய பாதையல்லவா?" என்று எண்ணிக்கொண்டே மெலிந்த கால்களை மெல்ல மெல்ல வைத்து நடந்தேன். என்னுடன் நடந்து வந்த ஏழெட்டுப் பேரும் என்னைப் போலவே களைத்துப் போயிருந்ததால் அவர்களைத் துணையாகப் பற்றி நடந்தேன். ஆனால் திடீரென்று இராணுவ லாரி ஒன்று குறுக்கே நின்று அங்கே பிரிந்த கிளைவழியைக் காட்டி, "காலால் நடந்து போகின்றவர்கள் யாராக இருந்தாலும் அந்த வழியிலேயே நடந்துபோக வேண்டும். வண்டிகளுக்கு மட்டுமே இந்த வழி" என்று சொல்லிக் கடுமையாக உத்தரவு பிறப்பித்தார்கள். வழக்கம்போல் மக்களின் முறையீடு படைவீரர்களின் செவியில் ஏறவில்லை. எங்கள் கெஞ்சுதலும் மன்றாடுதலும் பயனற்றுப் போயின. அந்தக் கிளைவழியில் நெடுந்தூரம் நடந்தோம்; நடந்தோம். அது ஒரு திக்கில் சென்றது. அங்கிருந்த கிராமத்து மக்களைக் கேட்டுப் பயன் விளையவில்லை. அவர்களின் பேச்சும் எங்களுக்கு விளங்கவில்லை. கணவன் கற்றுக்கொடுத்த ஆங்கிலம் சிறிதளவு பயன்பட்டது. சில வினைச்சொற்களும் சில பெயர்களும் யெஸ், நோ முதலான சில சொற்களும் மட்டும்கற்றுக் கொடுத்திருந்தார். அந்தக் கிராமத்தில் இரண்டு இளைஞர்கள் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் படித்தவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு நாங்கள் கேட்ட பொருள்கள் இன்ன இன்ன என்று விளங்கின. எப்படியோ காசு கொடுத்துக் கொஞ்சம் அரிசியும் பருப்பும் உப்பும் பெற்று வெட்ட வெளியில் அடுப்பு அமைத்துச் சமைத்தோம். அந்த ஊரார் ஒருவர் கொஞ்சம் கோதுமை மாவும் கொண்டுவந்து கொடுத்தார்.

அரிசியும் பருப்பும் உலையில் கொதிப்பதை எவனோ ஏழைச்சிறுவன் ஒருவன் நெருங்கி வந்து பார்த்து ஏழெட்டுக் குதி குதித்தான். அங்கிருந்து ஓடினான். பத்துப் பதினைந்து சிறுவர்களைக் கூப்பிட்டுக்கொண்டு வந்தான். அவர்கள் வரும்போது சோறு வடித்து ஆற்றிக்கொண்டிருந்தோம். வெந்த சோற்றைக் கண்டதும் அந்த இளஞ்சிறுவர்கள் கையைத் தட்டியும் நாக்கைத் தட்டியும் எங்களுக்கு வியப்பை உண்டு பண்ணினார்கள். புளியம் பழத்தைத் தின்னும் ஒருவனைப் பார்த்தால் மற்றப் பிள்ளைகளுக்கு நாக்கில் நீர் ஊறுவது போல், அவர்களுக்கு நீர் ஊறிக் கொண்டிருந்தது. ஒருவன் என்னென்னவோ பேசிக் கை நீட்டும்போது, அவன் வாயில் சுரப்பெடுத்த நீர் உதடு கடந்து வழியத் தொடங்கியது. அவன் கையை நீட்டியவுடனே வரிசையாக எல்லாச் சிறுவர்களும் கையை நீட்டி இரந்து கெஞ்சத் தொடங்கினார்கள். அதற்குள் சிறுவர்கள் சிலரைத் தேடிக்கொண்டு மூன்று தாய்மார் அங்கே வந்தார்கள். இந்தச் சோற்றைக் கண்டதும் அவர்கள்கண்களில் நீர் பெருகியது. "உங்களுக்கு எங்கே அகப்பட்டது?" என்னும் குறிப்போடு அவர்கள் சைகை செய்து கேட்டார்கள். நாங்கள் பதில் தெரிவிக்கு முன்பே, அவர்களும் கை நீட்டிக் கேட்டு மன்றாடினார்கள். அவர்களுள் ஒருத்தி தன் முன்னே இருந்த சில பிள்ளைகளின் தலைமேல் இரண்டு தட்டுத் தட்டிப் பிடித்துத் தள்ளி முன்னே வந்து விடாப்பிடியாய்க் கேட்டாள். அத்தனைப் பேரும் எலும்புக் கூடுகள்; உடுத்த ஆடைகளோ அழுக்குப் படிந்த கந்தல்கள்.

கிராமத்து மக்கள் இப்படித்தான் என்று எங்களில் ஒருத்தி சொன்னாள். நான் உடனே சொன்னேன்: "பட்டணத்து மக்கள்தான் நான் முந்தி நீ முந்தி என்று மானங் கெட்டு வயிறு வளர்ப்பார்கள். பிச்சையும் எடுப்பார்கள்; பிறர்க்குக் கைகட்டிச் சேவையும் செய்வார்கள். கூப்பிடுவதற்குமுன்னே விருந்துக்குப் போவார்கள்; ஏமாந்த போது பிறரை அடக்கியும் ஆள்வார்கள். நாட்டுப்புறத்து மக்கள் மானங் கெட்டு வயிறு வளர்க்கமாட்டார்கள். பசித்துன்பம் இவர்களாலும் பொறுக்கமுடியாமல் போனதால் இப்படிக் கை நீட்டிக் கெஞ்சுகின்றார்கள்.

வெறுஞ் சோற்றைக் கண்டால் இப்படி நாக்கைத் தட்டு வார்களானல், இவர்கள் நல்ல உணவு உண்டு எத்தனை நாளாகும் என்று எண்ணிப் பாரம்மா" என்றேன்.

நாங்களோ பத்துப் பேர். எங்களுக்குக் கிடைத்துச் சமையல் செய்ததோ மூன்றுபேர் உணவு. அதற்கிடையில் கைநீட்டுகின்ற தாய்மார்களும் சிறுவர்களுமோ ஏறக் குறைய முப்பது பேர். உள்ள நிலைமையை மற்றவர்களுக் குச் சொல்லி ஒரு முடிவுக்கு வந்தேன். எல்லாவற்றையும் கலந்து பிசைந்து பத்து உருண்டைகள் விளாம்பழம் அள வாக உருட்டி வைத்துவிட்டு, முப்பது உருண்டைகள் எலுமிச்சை அளவாக உருட்டி ஆளுக் கொன்று கொடுத் தனுப்ப முயன்றேன். அவர்களோ அதை ஒரே வாயாகப் போட்டு விழுங்கிவிட்டுக் கை கூப்பிக் கும்பிட்டு மறுபடி யும் கேட்டார்கள். என்னுடைய இரக்கமான மனத்தை உணர்ந்த ஒருவர் என்னை உட்கார வைத்துவிட்டு அவர் களைத் துரத்தத் தொடங்கினர். எங்கள் செயல் எப்ப டியோ அந்தக் கிராமத்துச் சேரியிலிருந்த மக்களுக்குத் தெரிந்துபோய் அந்த ஊரே புறப்பட்டு வந்து கலா புலா என்று ஆரவாரம் செய்து கைநீட்டிக் கும்பிட்டும் ஒரு வரை ஒருவர் அடித்துக்கொண்டும் எங்களைத் திகைக்க வைத்தார்கள். என்ன செய்வோம்? மற்றவர்களின் வற் புறுத்தலும் என் பெருங்களைப்பும் அந்த விளாம்பழ அளவு உருண்டையில் பாதியைத் தீர்த்து விட்டபின், மற்றப் பாதியை யாருக்காவது கொடுத்துவிடலாமென்று எழுந் தேன். உடன் இருந்தவர்கள் என்னைப் பிடித்து இழுத்து உட்காரவைத்து அந்த பாதியும் உண்ணும்படி வற்புறுத்தி னார்கள். அந்தக் கொடுமையான காட்சியைப் பார்த்துக் கொண்டே வாயினுள் இட்டேன்.

வேறு வழி இல்லாதது கண்டு அந்தக் கூட்டமெல்லாம் கலைந்து போயிற்று. இப்படியே நீட்டித்தால் அந்த வங் காள கிராமங்களில் பஞ்சம் பரவும் என்று நாங்கள் பயந்து பேசிக்கொண்டிருந்தோம். பேசிக்கொண்டே இருக்கும் போது இருபது இரட்டை மாட்டு வண்டிகள் துப்பாக்கிக் காவலோடு மூட்டைகளை ஏற்றிக்கொண்டு போவது கண் டோம். என்ன மூட்டைகள் என்று நெருங்கிக் கேட்

டோம். தொட்டுப் பார்த்தோம். எல்லாம் அரிசி மூட்டை களாக இருந்தன. துப்பாக்கிகள் எதற்காக என்று தெரியா மல் மறுபடியும் கேட்டோம். சோரா சோரா என்று அந்தக் கிராமத்தையும் மற்றக் கிராமங்களையும் சுட்டிக் காட்டி எல்லாம் திருடர்கள் என்றார்கள். சோறு கண்டு நாக்கு ஊறும் நிலைமையில் அவர்களைப் பட்டினிபோட்டு எலும்புருவமாகச் செய்துவிட்டு அவர்கள்உழைப்பால் விளைந்த அரிசி மூட்டைகளையும் வெளியே அனுப்பிவிட்டு, அரிசியைப் பார்த்தால் திருடுவார்கள் என்று அவர்கள் மேல் நம்பிக்கை இல்லாமல் துப்பாக்கிக் காவலோடு அரிசி மூட்டைகள் போய்க்கொண்டிருந்தன.

அன்று நள்ளிரவில் வாணியைப் பற்றிக் கவலையோடு நினைத்துக்கொண்டே எழுந்தேன். பற்பல எண்ணினேன். ஒவ்வொரு வேளையில், இந்தத் தாய்நாட்டில் கால்வைத்த பின் அவளைப் பற்றிக் கவலை இல்லை என்று தோன் றும். பத்மாவதியின் அறிவான துணையும் வாணியம்பாடி யாரின் அன்பான காவலும் இருப்பதால் எப்படியும் நல்ல படி போய்ச் சேர்ந்துவிடுவாள் என்று தோன்றும். உடனே, கல்கத்தா போகும் வழியில் போய் அங்கே கண வருடைய வருகைக்காகக் காத்திருந்து, அவர் வந்தபின் அவரோடு சென்னைக்குப் புறப்படலாம் என்று தோன் றும். மெல்ல மெல்ல வாணியின் கவலை மறையத் தொடங் கிற்று. "கல்கத்தாவில் கம்பெனித் தலைவரின் வீட்டில் ஒரு மாதம் நாமெல்லாம் தங்கியிருந்த பிறகுதான், சென் னைக்குப் போகவேண்டும்" என்று அவர் அழுத்தமாகச் சொன்னது நினைவு வந்தது. அதனால் கல்கத்தாவுக்கே போகவேண்டும் என்று துணிந்துவிட்டேன்.

கல்கத்தாவில்—அந்தப் பெரிய நகரத்தின் மூலை முடுக்குகளில்—எங்கே தேடுவது என்று எண்ணிக் கொண்டே இருந்தேன். அப்போது பக்கத்திலிருந்த தர்ம புரியம்மாள் என்னைப் பார்த்து, "என்னம்மா! பொன் முடி! தூக்கம் வரவில்லையா? இன்னுமா மகள்கவலை? இன்றைக்கு எப்படியாவது போய்ச் சேர்ந்து பார்த்துவிட லாம்" என்றாள். நான் என் எண்ணத்தைச் சொன்னேன். "சரி. அப்படியே செய். ஆனால் தனியே போகவேண்

டுமே. அந்த அரிசி வண்டியிலாவது போயிருக்கக்கூடாதா? துணையாக வரலாம் என்று பார்த்தால் நான்மட்டும் எப்படியம்மா வருவது?'' என்று பலவாறு சொன்னாள்.

எங்கள் இருவர்பேச்சையும் கேட்டுக்கொண்டு விழித்துக்கொண்டே இருந்த ஒருவர், "இந்த வழி எங்கே போகிறது என்று நினைத்துக்கொண்டீர்கள்? என்ன அம்மா? படித்தவர்களாக இருக்கிறீர்கள். பெரிய பெரிய கதை எல்லாம் பேசுகிறீர்கள். இது தெரியாதா? கல்கத்தாவுக்குப் போகாமல் நாம் சென்னைக்கு ரயில் ஏறவே முடியாது. அது போகட்டும்; அந்த அரிசி வண்டிக்காரன் சொன்னானே, அதுவும் மறந்துவிட்டீர்களா? கல்கத்தாவுக்குத்தானே வண்டி ஓட்டிக்கொண்டு போவதாகச் சொன்னான்? இந்த வழியே கல்கத்தாவுக்குத்தான். அங்கே போய் உன் மகளையும் பார்த்துவிட்டு அவளோடு இருந்து உங்கள் வீட்டுக்காரரைப் பார்க்கலாம்'' என்றார். அவருடைய பேச்சு எனக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது. வாணியைப் போய்ப் பார்த்துவிட்டதாகவும், கணவரையும் கண்டுவிட்டதாகவும் அவ்வளவு ஆறுதல் பிறந்தது.

ஆனால் கல்கத்தா போய்ச் சேர்ந்தபோது அந்த நகரத்தில் ஓயாமல் அலைந்ததுதான் நான் கண்ட பயன். அங்கே வாணியையும் பார்க்கவில்லை. கணவரையும் காணவில்லை. அலைந்தலைந்து உடம்பும் மனமும் நொந்து உயிர் நைந்ததுதான் பயன். இரவும் பகலும் இன்னலுக்கு ஆளானதுதான் பயன். தாய்நாடாக இருந்தாலும் போக்கிரிகளின் தொகைக்கு ஒன்றும் குறைவில்லை என்று கண்டேன். என் பசிக்கும் களைப்புக்கும் மருந்து தேடுவதை விட, என் கவலையைப் போக்கும் இரண்டு கண்களைத் தேடுவதை விட, என் மானத்தையும் கற்பையும் காக்கும் தற்காப்புத் தேடிக்கொள்வதே பெரிய கடமையாயிற்று.

வாணியைப் பற்றிய கவலையும் கணவரைப் பற்றிய கவலையும் மறுபடியும் என்னோடு போராடி ஒன்றை ஒன்று வெல்லப் பார்த்தன. வாணி ரயில் ஏறிச் சென்னைக்குச் சென்றுவிட்டிருப்பாள் என்ற நம்பிக்கை வளர்ந்து வரலாயிற்று. நாள் தோறும் ரயில் நிலையத்தில் தமிழர்கள்

அரசாங்கத்தாரிடம் பயணச் சீட்டுப் பெற்று மகிழ்ச்சியோடு ரயில் ஏறிச் செல்வதைக் கண்டேன். அந்தக் காட்சியைக் காணும் போதெல்லாம், நம்முடைய வாணியும் இப்படி ரயில் ஏறி எப்போதோ போய் நலமாகச் சேர்ந்துவிட்டிருப்பாள் என்று மகிழ்ச்சி பிறக்கும். இவ்வாறு வாணியைப் பற்றிய கவலை எப்படியோ குறைந்தது. ஆனால் அவரைப் பற்றிய கவலையோ அளவு கடந்து பெருகியது. ரங்கூனை விட்டு இன்னும் புறப்படவில்லையோ என்றும், புறப்பட்டபின் வழியில் டாங்கூ போன்ற நகரங்களில் குண்டுக்கு இரையாகிவிட்டாரோ என்றும், ஆறும் காடும் மலையும் கடக்கும்போது என்ன இடர் ஏற்பட்டதோ என்றும், வீட்டுணவு இல்லாத காரணத்தால் உடல் கெட்டு அவரைத் தொத்துநோய் ஏதேனும் பற்றிக் கொண்டதோ என்றும், நமக்கு முன்னே கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்து சென்னைக்குப் போய்விட்டாரோ என்றும் பலவாறு கலங்கிக் கலங்கி ஒவ்வொரு நாழிகையையும் கவலையாய்ப் போக்கினேன்.

கையிலிருந்த காசெல்லாம் செலவாகிவிட்டது. பர்மாவிலிருந்து வெளியேறியவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த அந்தக் கட்டிடத்தில் இருந்துகொண்டு, “என்ன செய்வது? என்ன செய்வது? என்ன செய்வது?” என்ற ஒரே கேள்வியைத் திருப்பித் திருப்பிக் கேட்டுச் சலித்தது என் மனம். என் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை விற்றுவிடலாமோ என்று எண்ணினேன். வாணியின் கழுத்தில் உள்ளது அவளுக்குப் போதும், என் கழுத்தில் உள்ளது எனக்குப் போதும் என்று அவர் அந்த ரங்கூனில் அமைதியான காலத்தில் சொன்ன சொல், போர் வந்து தொல்லைப் படுத்திய அல்லல்காலத்திலும் உண்மையாவதை நினைந்து உருகினேன்.

தங்கச் சங்கிலியை விற்றுவிடுவதே நல்லது என்று துணிந்தேன். உடனே மறுபடியும் தயங்கினேன். பயணச் சீட்டு இலவசமாகக் கொடுப்பதால் அதைப் பெற்றுக் கொண்டு ரயில் ஏறிச் சென்னைக்குப் போய் அங்கே அதைப் பற்றி முடிவு செய்யலாம் என்று தயங்கினேன். அங்கே அவர் முன்னமே போய்ச் சேர்ந்திருந்தால், அதை

விற்கவேண்டியதே இல்லையே என்று துன்பக் கடலுள் ஒரு தோணியும் கண்டேன். ஒரு நகை விற்க வேண்டி என் மனம் படும் பாடு எனக்கே வெட்கமாக இருந்தது. "பெண்கள் வீடு வாசலை விற்றாலும் விற்பார்கள். நகையை விற்க முன்வர மாட்டார்கள். அவ்வளவு அறியாமை!" என்று அவர் மற்றவர்களை இகழும்போது நானும் அவருடன் சேர்ந்து இகழ்ந்து பேசினேன். இன்று நானே இந்த நிலைக்கு வந்தேனே என்று வெட்கமுற்றேன்.

"நகை வாங்கிக் கொடுக்க உனக்கு ஏனோ மனம் வரவில்லை" என்று வாணி பிறந்தபோது வருத்தத்தோடு அவரிடம் சொன்னேன். அவர் சிறிது நேரம் சும்மா இருந்து, "சரி. உனக்கு இன்னும் வாழ்க்கை என்பது இன்னதென்று தெரியவில்லை" என்று சொல்லி வெளியே போய்விட்டார். அன்று இரவே, "பொன்முடி! நகை வேண்டும் என்று அதற்காகக் கணவனோடு வாழ்கின்றார்கள் பல பெண்கள். கணவன் வேண்டும் என்று அதற்காக நகை போட்டுக்கொள்கின்றார்கள் சில பெண்கள். நீ எந்தக் கட்சி?" என்று என்னைக் கேட்டார். நான் உடனே அவருடைய கருத்தைத் தெரிந்துகொண்டு, "முன்னே சொன்னது ஏழைப் பெண்களைப் பற்றி. பின்னே சொன்னது பணக்காரப் பெண்களைப் பற்றி. ஏழைப் பெண்கள் பணம் இல்லாத குறையால் ஏங்கி வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்கின்றார்கள். பணக்காரப் பெண்கள் பணம் நிறைந்த பாவத்தால் வாழ்க்கையே கிடைக்காமல் ஏங்குகின்றார்கள். நான் இந்த இரண்டு கட்சியிலும் சேராதவள்" என்றேன். இதைக் கேட்டதும், மகிழ்ச்சியோடு, "இவ்வளவு அறிவுள்ள நீ வீணான ஆடம்பரத்தை விரும்பலாமா? அழகு தேடிக்கொள். நோயற்ற நல்ல உடம்பே அழகு தரும். அதற்கு வழி நகை அல்ல" என்று என்னைப் பாராட்டினார். அன்று இரவே என் நகைஆசை சாகத் தொடங்கியது; குற்றுயிராய்க் கிடந்தது. பின்பு ஒரு நாள் அந்த நகை ஆசையை—இல்வாழ்க்கையின் இன்ப ஒற்றுமையைக் கெடுக்கும் நச்சுப் பாம்பை—குற்றுயிராய்க் கிடந்த ஆசையை நானே நசுக்கிக் கொன்றேன். அதன் பிறகுதான், "பின்னால் உதவும், நகை இருந்தால்

தவும்'' என்று பொருள் தெரியாமல் பேசிப் போராடு கின்ற பெண்களின் அறியாமையை நினைத்தாலும் வருத்த மாக இருந்துவருகின்றது. பின்னால் உதவுமாம்—எதற்குப் பின்னால்? யாருக்குப் பின்னால்? கணவன் செத்த பிறகு, விதவையான பிறகு உதவுமாம். கணவன் இறந்த பிறகு நெடுங்காலம் வாழ்ந்து வயிறார உண்டு கவலையின்றிச் செலவு செய்ய வேண்டுமாம். அதற்காக நகை வேண்டு மாம். சொல்வது இன்னது என்று உணர்ந்தால், இந்த நாட்டில் பிறந்த எந்தப் பெண்ணாவது மறுபடியும் அந்தச் சொல்லைத் தன் வாயால் சொல்வாளா? கணவன் முன்னே சாகவேண்டுமாம், தான் பின்னே வாழவேண்டு மாம், அப்போது உதவுமாம் நகை—இவ்வாறு ஒரு பெண்ணால் எண்ணிப் பார்க்கவும் முடியுமா?

இப்படி எண்ணிக் கொண்டே நகையை விற்கத் தயங் கிய தயக்கத்தை விட்டுவிட்டேன். துணிந்தேன். அப்போது என்னோடு இருந்த ஒரு தமிழ்க் கிழவியைத் துணையாக வரும்படி அழைத்தேன். அவள் என்னை வற்புறுத்தித் தடுத்து, "நீ ரயில்நிலையத்துக்கு வா அம்மா. அங்கே அடிக்கடி வங்காளத்தார் ஒருவர் வருகிறார். அவர் மோட் டாரில் ஏறி வருகிறார். அழகாகத் தமிழ் பேசுகிறார். நம் மைப் போலவே பேசுகிறார். ஏழைகளாக இருந்தால் அவர் களுக்கு வேண்டிய துணிகள் வாங்கிக் கொடுக்கிறார். அவ ரிடம் உன் துன்பத்தைச் சொன்னால் பணம் கொடுப்பா ரம்மா'' என்றாள். அப்படிப் பிச்சை எடுத்து வாழ்ந்து இந்தத் தங்கச் சங்கிலியை என் கழுத்தில் சுமந்து திரிய வேண்டும் என்று எண்ணினேன். அந்தக் கிழவி சொன்ன தற்கு நான் இணங்கவில்லை. அவள் வற்புறுத்தியும் பயன் இல்லாதது கண்டு, "உன்னுடைய ஊர் பேர் சொல்லிக் கேட்டால், கடன் கொடுத்து உதவி செய்வாரம்மா'' என்று வேறொரு வழி சொன்னாள். அது எனக்கு நல்ல வழியாகவே தோன்றியது.

அன்று மாலையே புறப்பட்டோம். ரயில்நிலையத்தை அடைந்தோம். அங்கே அழுக்குக் கந்தை உடுத்தவர் கள் பலர் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் தமிழர்களாகவே இருந்தார்கள். எல்லா

ரும் பல் வேறு ஜில்லாக்களுக்குப் பயணச்சீட்டு வாங்கி வைத்துக்கொண் டிருந்தார்கள். அவர்களில் பலர் கழுத் தில் தங்கச் சங்கிலி இல்லே. நான் தங்கச் சங்கிலி அணிந்துகொண்டு திரிய விரும்பி, அதை விற்க மன மில்லாமல் யாரோ ஒருவரிடம் கடன் கேட்க வந்ததை நினைத்து நானே வெட்கப்பட்டேன். என்னுடன் இருந்த கிழவியை, "அம்மா, புறப்படுங்கள்" என்றேன். காரணம் சொன்னபோது அவள் என்னே வெறுத்தாற் போல் பார்த்து, "நீ என்ன பெரிய கோழையாக இருக்கிருயே! கடன் கேட்காவிட்டால் போ. இருக்கி றதை விற்றுவிட்டு நடுத் தெருவில் திரி. நான் வேண் டாம் என்று சொல்லவில்லே. எப்படியாவது போ" என்ருள். கொஞ்ச நேரம் பொறுத்து, "சரி. வந்தது வந்தோம். அவரைப் பார்த்துவிட்டாவது போகலாம். அவர் வருகிற நேரம் ஆய்விட்டது. கொஞ்சம் இரு அம்மா" என்ருள். வீணுக அவளுக்கு த் துன்பத்தைக் கொடுத்தேனே என்று வருந்திக்கொண்டே அங்கே நின்றேன்.

வழக்கம்போல், "கணவன் எங்கே இருக்கிருரோ, ரங்கூன் பற்றி எரிந்துவிட்டதாமே, அது வரையில் அங்கே இருந்திருக்கமாட்டாரே" என்று என்னென்னவோ எண்ணிக்கொண்டிருக்கும்போது, பளபளப்பான ஒரு மோட்டார் வந்து நின்றது. "அவர்தான், அவர்தான்" என்று கத்திக்கொண்டே எல்லாரும் அதைச் சுற்றிக் கொண்டார்கள். அதில் இருந்து போலீஸ் உடை அணிந்த பெரிய போலீஸ் அதிகாரி இறங்கினுர். அவரைக் கண்ட தும் எல்லாரும் ஓடிப் போய்விட்டார்கள். நானும் கிழவி யும் பழைய இடத்திலேயே நின்றுகொண்டிருந்தோம்.

உடனே மற்ருெரு மோட்டார் வந்தது. அதையும் அப்படியே முற்றுகையிடப் போனுர்கள். அதற்குள் நீண்ட அங்கியும் கீழ்ப்பாய்ச்சும் அணிந்த ஒருவர் கீழே இறங்கி, "பெண்கள் மட்டும் வாங்க" என்ருர். தொலே வில் இருந்த நான் "நல்ல தமிழில் பேசுகிருரே, இவரும் தமிழர்தானே" என்று எண்ணினேன். என்ன நடக்கி றது, பார்க்கலாம் என்று கிழவிக்குப்பின்னுல் சென்றேன்.

அவருடைய முகம் தெரியாதபடி எல்லோரும் மறைத்துக்கொண்டிருந்தார்கள். கூட்டத்திலிருந்து சிறிது விலகியே நான் நின்றுகொண்டிருந்தேன். பயணச் சீட்டைப் பார்த்துப் பார்த்து மில் புடைவைகளை எடுத்தெடுத்துக் கொடுத்துக்கொண்டே இருந்தார். வாங்கி எடுத்துக் கொண்டு முகமலர்ந்து செல்லும் பெண்களைப் பார்த்துக் கொண்டே நின்றேன். திடீரென்று, "அம்மா! ஐயோ! அம்மா!" என்று என் வலப்பக்கத்தில் அலறும் குரல் கேட்டுத் திரும்பினேன். கூப்பிய கைகளோடு, கலங்கிய கண்களோடு நின்றுகொண்டு "அம்மா" என்றார். துணிகளைக் கொடுத்துக்கொண்டிருந்தவர் அவர்தான்.

முகத்தைப் பார்த்ததும் நீலமேகன்தான் என்று உடனே தெரிந்துகொண்டேன். நானும் கை கூப்பினேன். ஆனால் ஒன்றும் பேச வாய் வரவில்லை. அதற்குள் துணி வாங்கியவர்களும் வாங்காதவர்களும் எல்லோரும் எங்களைச் சூழ்ந்துகொண்டு பெருங் கூட்டமாய்க் குழப்பம் உண்டாக்கிவிட்டார்கள். அவரோ, கண்ணைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் மறுபடியும் "அம்மா! அம்மா!" என்றார். போலீஸ்காரர் வந்து கூட்டத்தைக் கலைத்துக்கொண்டிருந்தார்கள். அவர் என்னை அணுகி வந்து "வாங்க, அம்மா" என்று முன்னே சென்று மோட்டாரின் கதவைத் திறந்தார். என் கால்கள் பின்வாங்கின. ஏற மனமின்றி நின்றேன். "அம்மா! நான் பழைய பாவி அல்ல. ஏறுங்கள் அம்மா, சொல்கிறேன்" என்றார். அந்தச் சொல்லைக் கேட்டதும், ஒரு வகைத் திகைப்போடு ஏறி உள்ளே உட்கார்ந்தேன். அவரும் உட்கார்ந்தார். மோட்டார் ஓடியது.

"அம்மா! ஆறுமுகம் போய்விட்டார்!" என்று தேம்பித் தேம்பி அழுதார்! மோட்டார் ஓர் உய்யானத்தின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தது. என் கண் திறந்து பார்த்தேன். அவருடைய கண்கள் கலங்கியிருந்தன. ரயில் நிலையத்தில் அவர் அலறியதும், போய்விட்டார் என்று சொன்ன சொல்லும் நினைவுக்கு வந்தன. என் நெஞ்சு அடைத்தது. தொண்டை இறுகியது. கண்கள் சுழன்றன.

"தைரியம் விடாதீர்கள்! அம்மா! சும்மா இருங்கள்" என்று ஒரு கையில் தேநீர் ஏந்தி நீட்டினார். அதை வாங்க மறுத்துத் தலைகவிழ்ந்து விம்மினேன்.

# 9. நீலமேகன்

பொன்முடியைத் தேற்றுவதற்கு ஒரு வாரம் ஆயிற்று. ஒரு வாரம் கழிந்த பிறகு—ஏழுநாட்களும் கண்ணீரும் கம்பலையுமாய்க் கழிந்த பிறகு எட்டாம் நாள் "வாணியைத் தேட வேண்டுமே" என்று வாய்விட்டுச் சொன்னாள்.

நாளைக்கே புறப்பட்டுப் போய்ப் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்தேன். "எங்கே போய்த் தேடுவது?" என்றாள். "சென்னைக்குத்தான் போகவேண்டும், அங்கே போயிருக்கக் கூடும், போய்ப் பார்க்கலாம்" என்றேன்.

சிறிது நேரம் கழிந்தது. "குணமாலையைப் பற்றி ஏதாவது தெரியுமா?" என்றேன்.

"நீங்கள் பாவி! அவளை அங்கேயே விட்டுவிட்டு உங்கள் உயிரை மட்டும் காப்பாற்றியது துரோகம் அல்லவா? அவளை முன்னமே அனுப்பிவிட்டேன் என்று பொய் சொன்னது பெரிய துரோகம் அல்லவா ? கபடற்ற ஒருத்தியை இப்படி வஞ்சிக்கலாமா? ஐயோ, பாவம்! அவள் கதி என்ன ஆயிற்றோ? இப்படி மானங் கெட்ட வாழ்வு, நன்றி கெட்ட வாழ்வு, ஆண்மை கெட்ட வாழ்வு வாழ்வதை விட—" என்று நிறுத்தி என்னைத் திரும்பிப் பார்த்தாள்.

நான் தலைகுனிந்து தரையைப் பார்க்கலானேன்.

"நான் என் சொல்ல வேண்டும்? தானாக உணரவேண்டும்" என்று பெருமூச்சு விட்டாள்.

"அவள் வழியில் மலேரியா வந்து" என்று நான் சொல்லி முடிப்பதற்குள் "செத்துப்போய்விட்டாளா ?" என்று அலறினாள்.

தலை கவிழ்ந்துகொண்டே "ஆமாம்" என்றேன்.

"கொலைப் பாதகம்! பெண்கொலை!" என்று சொல்லிக் கண்ணீர் விட்டாள்.

நான் பேசாமல் எழுந்து வெளியே வந்து எட்டிப் பார்த்தேன். அந்த உணவுவிடுதியின் மேல்மாடியிலிருந்து பார்த்தபோது, தெருவில் கீழே ஓயாது ஓடிக்கொண்டிருந்த டிராம் வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் பஸ்களும் லாரிகளும் எனக்கு வாழ்க்கையின் பரபரப்பை விளக்கின. என் இளமையில் குணமாலையோடு இல்வாழ்க்கை தொடங்கிய காலத்தில் என் மனம் அப்படித்தான் இருந்தது. என் எண்ணங்கள் எங்கே புறப்பட்டன, எங்கே ஓடுகின்றன, எங்கே போய் முடியும் என்ற கவலையில்லாமல் இருந்தேன். கவலையற்ற வாழ்வு என்றும் அதைச் சொல்வது கூடாது. நெறியற்ற வாழ்வு என்றுதான் அதைச் சொல்லவேண்டும். கல்கத்தாவின் பெரிய தெருக்களில் இப்படிப்பட்ட ஆரவாரத்தைக் கண்டு ஓயாத ஒலிகளைக் கேட்டு இதுதான் நகரத்தின் சிறப்பு என்று அறிவில்லாத மக்கள் எண்ணி வியப்படைகின்றார்கள். நானும் அப்படித்தான் இளமையில் மனம் போன போக்காய் ஓடி ஓடி அலையும் வாழ்க்கையின் வேகத்தையும் ஆடம்பரத்தையும் இன்பம் இன்பம் என்று எண்ணிக் காலம் கழித்தேன். கல்கத்தா நகரம் உண்மையாகவே சிறப்புடையதுதான். அதன் பல்கலைக் கழகம், நகராண்மைக் கழகம், சட்ட சபை, நூல் நிலையம், கலைக்கூடம் முதலானவைகளை அறிவில்லாத மக்கள் கேள்விப்படுவதும் இல்லை; கேட்டாலும் கண்டு மகிழ்வதும் இல்லை. நானும் இளமைக்கே சிறப்பான காதலின்பம், கற்பொழுக்கம், பொதுநலத் தொண்டு, மெய்யுணர்வு முதலான உயர்ந்த துறைகளை நன்றாகக் கேட்டறிந்ததும் இல்லை; கேட்டறிந்த வரையில் தக்கவாறு நடக்க முயன்றதும் இல்லை.

பொன்முடி என்னைக் கடிந்து கூறியது பெருத்தந்தான் என்று எண்ணி மறுபடியும் எட்டிப் பார்த்தேன். அளவு கடந்த வேகத்தில் ஏழெட்டு மோட்டார் வண்டிகளும் அவற்றை அடுத்துச் சில லாரிகளும் சைகில்களும் கிழக்கே இருந்து மேற்கே ஓடி வந்துகொண்டிருந்தன. அங்குப் போக்குவரவை ஒழுங்குபடுத்தும் பொறுப்பில்

இருந்த ஒரு போலீஸ்காரன் திடீரென்று வலக்கையை நீட்டி 'Stop' என்ற எழுத்துக்கள் பொறித்த தட்டைக் காட்டினன். அத்தனை மோட்டார்களும் லாரிகளும் சைகில்களும் அப்படியேநின்றன. தெற்கே இருந்து வடக்கேசெல்லும் குறுக்குப் பாதையில் இருபது முப்பது மோட்டார்களும் மற்ற வண்டிகளும் அப்போது ஓடிக்கொண்டிருந்தன. பாதையைக் கடந்து போகும் மக்களும் எத்தனையோ பேர் இங்கும் அங்கும் விழிப்போடு பார்த்துக்கொண்டு நடந்து சென்ருர்கள். அந்தப் போலீஸ்காரன் வலக்கை நீட்டித் தடுக்காதிருந்தால் எங்கெந்த வண்டிகள் எவ்வெவற்ருேடு தாக்கி யார்யாரைக் கொன்று என்னென்ன அழிவுகள் நேரும்படி செய்திருக்குமோ? அவை ஒன்ருேடொன்று மோதி முட்டி அழியாதவாறு அங்கே அவன் காத்துவரவில்லையானல், கல்கத்தா இவ்வளவு அழகிய நகரமாக இருக்குமா? நொடிக்கு நொடி பிணக்காடாக அல்லவோ மாறிவிடும்! ஆ! ஆ! இப்படிப்பட்ட காவல் என் இளமையுள்ளத்தில் இல்லாமல் போற்று. இப்படி என் எண்ணங்களை உடனுக்குடன் தடுத்து நிறுத்தி நேரம் அறிந்து நெறி அறிந்து திருப்பிச் செலுத்தும் ஒரு போலீஸ்காரன் என் உள்ளத்தில் இருந்திருந்தால், எத்தனையோ நல்ல கொள்கைகளும் நோக்கங்களும் மோதி மோதிப் பாழ்படாதிருக்கும். மற்றவர்களின் வாழ்க்கையிலும் நான் தீங்கு செய்யாமல் உதவியே செய்திருப்பேன். அப்படிப்பட்ட காவல் இல்லாமையால் என்மனமும் நாள்தோறும் பாழ்பட்டுச் செத்தது; ஒருவகையில் பிணக்காடாக, ஒழுக்கத்தின் சுடுகாடாக நாறியது; எழில்நகராக விளங்க முடியாமல் போயிற்று என்று வருந்திக்கொண்டே உள்ளே சென்றேன்.

"குணமாலை எங்கே உயிர்விட்டாள்? பக்கத்தில் இருந்தீர்களா?" என்று கேட்டாள்.

"எங்கே என்று தெரியாது. வழியில் எங்கோ இறந்துவிட்டாள். ஆறுமுகம் உடன் வந்ததாகத் தெரிகிறது. அவர் உயிர்விடும்போது இருந்திருப்பார்" என்றேன்.

"என்ன வழிக்கொள்ளை! எமனும் இப்படி வழிக் கொள்ளை அடிக்கின்றானே!" என்றாள். ஒரு பெருமூச்சு விட்டு, "இந்தப் பாவத்தை எப்படித் தொலைக்கப் போகின் றீர்கள்?" என்று கேட்டாள்.

"அவள் இருந்திருந்தால் அவளுடைய காலில் வீழ்ந்து குற்றமெல்லாம் ஒத்துக்கொண்டு மன்னிப்புக் கேட்டிருப் பேன். இப்போது என்ன செய்வேன்? நான் உங்களிடமும் பொல்லாத குற்றம் செய்திருக்கின்றேன் அல்லவா? அதை மன்னிக்க மனம் இருந்தால் மன்னித்துவிடுங்கள். அந்த ஒரு பாவமாவது கழியட்டும்" என்று அமைதியாக இருந் தேன்.

"இவ்வளவு நல்ல உணர்வு அந்த ரங்கூனிலேயே ஏற் பட்டிருந்தால், குணமாலை செத்திருக்க மாட்டாளே!" என்று என்னை நோக்காமல் திரும்பிக்கொண்டாள்.

"இப்போது என்ன செய்வது? சொல்லுங்கள். செய் யக் காத்திருக்கிறேன்" என்று வணக்கமாகக் கேட்டேன்.

"அன்று இரவு நடந்ததை மறந்துவிடுங்கள். அதைப் பற்றி வருத்தம் வேண்டாம். நான் அப்போதே அவரிடம் சொல்லி மறந்துவிட்டேன்" என்றாள்.

ஆறுமுகத்திற்கு இந்த ஆண்மை கெட்ட முயற்சி தெரிந்திருக்கும் என்று நான் எண்ணவில்லை. பொன்முடி அவனுக்குச் சொல்லியிருக்கமாட்டாள் என்றுதான் நான் நினைத்துக்கொண்டிருந்தேன். அவனும் அதை எள்ளள வும் அறியாதவன் போல், பழைய உண்மை நண்பனாகவே நடந்துகொண்டதால், அவனுக்குத் தெரியாது என்றே எண்ணியிருந்தேன். பொன்முடி அவனுக்குச் சொல்லி யிருப்பதாகத் தெரிந்ததும், என் மனச் சான்று என்னைக் குத்தி வாட்டியது.

"இந்தத் தங்கச் சங்கிலியை விற்றுக் கொடுக்கவேண் டும், கைச்செலவுக்குப் பணம் இல்லை" என்று தன் கழுத்திலிருந்த அந்தச் சங்கிலியைக் கழற்றப் போனாள்.

உடனே நான் தடுத்து, "வேண்டாம்; பொறுங்கள்; ஒன்றும் அவசரம் இல்லை" என்றேன்.

"ஏன் இந்த ஆடம்பர வாழ்வு? எனக்காகத் தனியாக ஓர் அறையும் வேலையாளும் பார்த்து இந்தச் செல்வர்களின் விடுதியில் ஏன் விடவேண்டும்?"

"நானும் பக்கத்துத் தெருவில் இதே போல் ஓர் உணவு விடுதியில்தான் தங்கியிருக்கிறேன். காரணம் வேறொன்றும் இல்லை. எனக்குக் கிடைத்ததோ புதையல் போல. அந்தச் செல்வத்தை எளிய வாழ்க்கை வாழ்ந்து வைத்துக் கொண்டிருந்தால் எல்லாரும் சந்தேகப்படுவார்கள். ஆடம்பரமான உடையும் நடையுமாக இருந்தால் அதிகாரிகளும் நெருங்கமாட்டார்கள். நெருங்கினாலும் வழக்கறிஞர்கள் முன்வந்து காப்பாற்றிவிடுவார்கள்" என்றேன்.

பிறகு அந்தப் பொருள் என்னிடம் சேர்ந்த வரலாறும், அதைச் செலவு செய்த வழிகளும், இனிமேல் தமிழ் நாட்டுக்குச் சென்றபின் செய்ய வைத்துக்கொண்டுள்ள நோக்கங்களும் எடுத்துச் சொன்னேன். எனக்கு ஒரு தொழில் கிடைத்ததும் அதைப் பொதுநிதி யாக்க விரும்பியுள்ள முடிவையும் சொன்னேன். எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக்கொண்டு தலையசைத்தாள். மறுபடியும் கவலை மெல்ல மெல்ல அவளுடைய உள்ளத்தில் குடிபுகுவதை முகக்குறிப்பால் தெரிந்துகொண்டேன். அப்போது தனிமை நல்லது என்று எண்ணி, வேறு வேலை இருப்பதாகச் சொல்லி விடை பெற்றேன்.

வாயிற்படியைக் கடக்கும்போது, "நாளை இரவு சென்னையெயிலில் புறப்பட முடியுமா?" என்று கேட்டாள். "அதற்கே முயற்சி செய்வேன். ஒரு வேளை முடியாவிட்டால் நாளை மறுநாள் புறப்படலாம். ஒரு நாள் பொறுத்தால் இங்கே எல்லாவற்றையும் ஒழுங்கு செய்துவிட்டு ஒரே முடிவாகப் புறப்பட்டுவிடுவேன்" என்றேன். "சரி" என்றாள். வெளியே வந்தேன்.

மறுநாள் காலையில் விடுதியில் உட்கார்ந்து கொண்டே பொன்முடியின் குடும்பம் திக்கற்று நிற்பதை

நினைத்துக்கொண்டும் வாணியை எப்படித் தேடுவது என்று ஆராய்ந்துகொண்டும் ஆழ்ந்த எண்ணத்தில் இருந்தேன். எதிரில் மேசைமேல் இருந்த காலைப் பத்திரிகையைப் படிக்கவும் மனமில்லாமல் எடுத்துப் பிரித்தேன். விரைவில்வங்காளத்தில்உணவுப் பஞ்சம் வந்துவிடும்என்று தலைவர்கள் சிலர் செய்த எச்சரிக்கைகளைப் படித்தேன். நான் தங்கியிருந்த உணவுவிடுதியில் மிக உயர்ந்த சுவையான உணவு கிடைப்பதையும் அதற்காக அங்கே செல்வர்கள் ஏராளமாகப் பணம் செலவு செய்வதையும், அடிக்கடி பற்பல விருந்துகள் ஆடம்பரமாக நடப்பதையுமே கண்டுள்ள எனக்கு உணவுப்பஞ்சம் என்பது நம்ப முடியாததாக இருந்தது. போர்ச் செய்திகளில் ஒன்றும் புதுமை காணப்படவில்லை. தமிழ்நாட்டுச் செய்தி ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தேன்.

“ஐந்தாம் படை: மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்” என்று சென்னைச் செய்தி ஒன்று இருந்தது. அதைப் படித்தேன். பர்மாவிலிருந்து வெளியேறிய இரண்டு பெண்களும் ஓர் இளைஞனும் சென்னைக்குச் செல்லும் வழியில் விசாகப்பட்டணத்தில் கைது செய்யப்பட்டார்கள் என்ற செய்தி அறிந்தேன். உடனே அவர்கள் யாராக இருக்கலாம் என்று எண்ணி ஒன்றும் தெரியாமல் எழுந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்து சோர்ந்திருந்தேன்.

பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. வாணியும் ஒருத்தியாக இருக்கக் கூடும் என்ற ஐயம் எழுந்ததும் வருந்தினேன். உடனே எழுந்தேன். அறையைப் பூட்டிவிட்டு, விடுதியின் பொறுப்பாளர் உள்ள இடத்திற்குச் சென்றேன். டிரங்க் டெலிபோனில் சென்னைப் போலீஸ் கமிஷனரோடு பேச வேண்டும் என்று தெரிவித்தேன். அதற்குரிய கட்டணத் தொகையை எடுத்துத் தந்தேன். “இன்னும் ஒரு மணி நேரம் பொறுத்து இடம் கிடைக்கும். இராணுவச் செய்திகள் மிகுதியாக இருக்கின்றன” என்று பதில் வந்தது.

ஒரு மணி நேரம் கழித்துச் சென்றேன். ஐந்து நிமிஷத்தில் அனுமதி கிடைத்தது. போலீஸ் கமிஷனருக்கு

பெயரும் விலாசமும் வரலாறும் தெரிவித்து, என் ...ணன்மகள் வாணி என்பவள் அந்த ஐந்தாம் படை ...க்கில் அகப்பட்டவர்களுள் ஒருத்தியா என்று அறி ...தமாறு கேட்டேன். இன்னும் இரண்டு மணி நேரம் ...த்து டிரங்க் டெலிபோனில் பேசினால் அதற்குள் பதில் ...வைத்துத் தெரிவிக்க முடியும் என்றார்.

இரண்டு மணி நேரத்திற்குள் பொன்முடியின் விடு ...ச் சென்று அவளுக்குத் தெரிவித்து வர எண்ணி ...னன். உடனே செல்லக் கூடாது, சென்று சொல்லவும் கூடாது என்ற முடிவுக்கு வந்தேன். ஒருகால் அந்த இரு வரில் வாணி ஒருத்தியாக இருப்பதாகவே தெரிந்தாலும், இந்தத் திடுக்கிடான துன்பச் செய்தியைத் தெரிவித்தால், பொன்முடியின் மனநிலை என்ன ஆகுமோ என்று அஞ்சி ...னேன். எப்படியும் சென்னைக்குச் சென்று சேர்கின்ற ...ரைக்கும் அவளுக்கு இந்தச் செய்தியைத் தெரிவிக்கக் ...டாது என்று துணிந்தேன்.

இரண்டு மணி நேரம் கழித்து மறுபடியும் கட்டணம் செலுத்தி டிரங்க் டெலிபோன் கேட்டேன். அரை மணி நேரம் கழித்துக் கிடைத்தது. முன் சொன்ன விவரங்கள் எல்லாம் தெரிவித்தேன். "அவர்களில் ஒருத்திக்கு வாணி என்று பெயர். வயது பதினெட்டு இருக்கும். அவளுடைய தகப்பன் பெயர் ஆறுமுகம்" என்று கமிஷனர் ஆபீஸ் தலைமைக் குமஸ்தா பதில் சொன்னார். எந்தச் சிறையில் இருக்கிறாள் என்பதை அன்புகூர்ந்து தெரிவிக்கும்படி வேண்டினேன். சென்னை சென்ட்ரல் சிறை என்று தெரிவித்தார். நன்றி கூறிவிட்டு நகர்ந்தேன்.

வாணி எனக்கு நன்றாகத் தெரிந்த இளம் பெண். நண்பர் ஆறுமுகம் அவளை அன்போடு செல்வ மகளாக வளர்த்துவந்தார். அறிவுடைய மகளாகச் செய்யவும் அரும்பாடு பட்டார். ஆனாலும் அரசாங்கத்தை எதிர்த்து அவள் என்ன செய்துவிட்டிருக்கக் கூடும்? அப்படிப் பட்ட சூழ்ச்சி செய்ய அவளுக்கு அஞ்சாமை எங்கிருந்து வந்தது? அதுவும், தந்தையை எங்கோ விட்டுவிட்டுத் தாயையும் நடுவழியில் விட்டுவிட்டுத் தனியாகத் திக்கற்

றுப் போன ஒரு பெண்ணுக்கு இவ்வளவு தைரிய வருமா? இருக்கலாம்; வேறு வழி இல்லாமல் போர் களத்தில் குதிக்க நேர்ந்தபோது கோழையும் வீரம் பெ கூடும் என்று எண்ணினேன். கோழியும் ஒவ்வொரு வே யில் பூனையை எதிர்த்துக் கொத்திச் சீறவில்லையா?

கல்கத்தாவைப் பிரிந்து புறப்படுமுன் யார் யாரை காணவேண்டுமோ அவர்களை எல்லாம் கண்டு விடைபெ முயன்றேன். வேண்டிய துணிமணிகளையும் பெட்டிகளி எடுத்து வைத்தேன்.

அன்று மாலை பொன்முடியைக் காணச் சென்ற போது, என் முகத்தைப் பார்த்ததும், "என்ன? கவலை யோடு இருக்கிறீர்கள்? ஏதாவது வாணியைப் பற்றித் தெரிந்ததா?" என்று கேட்டாள். "எங்கெங்கோ கேட் டுப் பார்த்தேன். ஒன்றும் தெரியவில்லை. அதனால்தான் கவலையாக இருக்கின்றது" என்றேன்.

சிறிது நேரம் ஏதோ நோட்டுப் புத்தகத்தில் வரவு செலவு கணக்குக் குறித்துவிட்டு, "வாணியைப் பற்றியா கவலைப்படுகிறீர்கள்? கொஞ்சமும் கவலை வேண்டிய தில்லை. அந்தப் பாழும் மலையும் காடும் கடந்து தொத்து நோய்கள் இல்லாமல் மகள் வந்து சேர்ந்துவிட்டாளே அதுவே போதும். இனிமேல் அவளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதே இல்லை. அவள் சென்னைக்குப் போய்ச் சேர்ந்து அமைதியாக நல்ல வழியில் காலத்தைப் போக் கிக்கொண்டிருப்பாள்" என்றாள்.

"நானும் அப்படித்தான் நினைக்கின்றேன். ஆனால் இளமைப் பருவம்; அதனால்தான் கவலைப்படுகின்றேன்" என்றேன்.

"நீங்கள் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். அவள் தான் என்னைப் பற்றி எந்நேரமும் கவலைப்படுவாள். அந் தக் கவலையும் இப்போது இருக்காது என்று எண்ணுகின் றேன். வாணியம்பாடியார் ஒரு குடும்பத்தார் எங்களோடு புறப்பட்டு வந்தார்கள். அந்தக் குடும்பத்தில் பத்மாவதி என்று ஒரு பெண் இருக்கிறாள். இவளும் அவளும் இர

வும் பகலும் பிரிவதே இல்லை. பத்மாவதி எவ்வளவு திறமை யும் அறிவும் உடையவள்! பெரிய பெரிய அரசியல் பேச் செல்லாம் பேசுகிறாள்! ஒரு நாள் சொன்னாள்: 'மனி தன் மற்றொரு மனிதனைத் தன் வழிக்குக் கொண்டுவர முயல்கிறான்; திருத்த முயல்கிறான்; திருத்த முடியாத போது கொல்ல முயல்கிறான். மனிதத் தன்மையில் வெற்றி கிடைக்காது என்று தெரிந்தவுடனே விலங்குத் தன்மைக் குப் பாய்கிறான். இதனால்தான் அறிவும் திறமையும் வளர்ந்த இந்தக் காலத்திலும் கொடிய போர்கள் நடக் கின்றன' என்று வாணியிடம் பேசிக்கொண்டிருந்தாள். எத்தனையோ முறை கவனித்திருக்கிறேன். நுட்பமான அறிவு உடையவள். இப்படிப்பட்ட நல்ல துணை இருக் கும்போது வாணிக்கு என்ன குறை?" என்று பெருமை யோடு நிமிர்ந்து பேசி மகிழ்ந்தாள்.

எனக்கோ ஐயம் ஒவ்வொன்றாக நீங்கிக் கவலை மிகுந்து வந்தது. "அதனால்தான் நான் இப்போது கவ லைப்படுகிறேன். இந்தப் போர்க்காலத்தில் அதைப் பற்றி நாம் ஒன்றும் பேசக் கூடாது. அமைதியான காலத்தில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் போர்க் காலத்தில் அவசரச் சட்டங்களும் அடக்குமுறைகளும் பெருகி யிருக்கும்போது நாம் வாயை மூடிக்கொண்டு தான் இருக்கவேண்டும்" என்றேன்.

"இந்த அரசாங்கம் அவர்களை என்ன செய்துவிட முடியும்? கத்தியா, துப்பாக்கியா, வெடிகுண்டா, புரட் சியா ஒன்றும் இல்லாதபோது திக்கற்ற பெண்களை என்ன செய்துவிட முடியும்? உயிரை வாங்கிவிடுமா? வைசூரி யாலும் மலேரியாவாலும் கண்காணா மலைவழிகளில் செத்து மண்ணாவதை விட, அப்படியாவது நல்ல வேலை செய்து தாய்நாட்டில் புகழ் பெறட்டுமே!" என்று வீறு கொண்டு பேசினாள்.

இந்தப் பொன்முடியும் வாணியோடு போயிருந்தால், "இரண்டு பெண்கள் கைது" என்பதை விட்டு "மூன்று பெண்கள்" என்று செய்தி வந்திருக்கும். நல்ல வேளை யாக அருமை நண்பரின் குடும்பத்தில், குடும்பத் தலைவியை

யாவது தாய்நாட்டில் கண்டு என்ஞல் ஆன உதவி செய்ய முடிந்ததே என்று ஆறுதல் அடைந்தேன். நண்பர் ஆறுமுகம் செய்த முயற்சியின் விளைவே இவ்வளவும்! எந்நாளும் அரசியல், சமூக இயல் என்று மனைவியிடமும் மகளிடமும் பேசிப்பேசி அறிவை வளர்த்தார். இப்போது அரசியலிலும் சமூகத்திலும் மகளையும் மனைவியையும் விட்டுவிட்டுக் குடும்பத்தைக் கலைத்துவிட்டு அவரும் மறைந்துவிட்டார்.

இவ்வாறு வருத்தத்தோடு நினைத்துக்கொண்டிருந்த போது, தன் கையில் வைத்திருந்த கணக்குக் குறிப்பை என்னிடம் தந்து, "இவ்வளவு பணத்தை வீணுக்குவதா?" என்று கவலையோடு கேட்டாள்.

அந்தக் கணக்குக் குறிப்பை நான் புரட்டிப் பார்த்தேன். விடுதிக்கு வந்ததுமுதல் இது வரையிலும் ஆகியுள்ள செலவையெல்லாம் குறித்துவைத்திருந்தாள். "எதற்காக உங்களுக்கு இந்தக் கவலை?" என்று கேட்டேன்.

"கணக்கில்லாமல் வந்தாலும் கணக்கெழுதிச் செலவு செய்ய வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லவில்லையா?"

"நீங்கள் சொல்வது சரிதான். இதைக் கணக்கு எழுதிப் பயன் என்ன?"

"நான் எவ்வளவு கடனாளி என்று தெரிந்துகொள்ள வேண்டாமா? இப்போது என் தங்கச் சங்கிலியை விற்ருலும் கடன் கொடுத்துத் தீராது என்று தெரிகின்றதே! இவ்வளவு ஆடம்பரமான விலையுயர்ந்த உணவும் தங்குமிடமும் எனக்கு ஏன்? எத்தனையோ தமிழர்கள் தெருவில் திரிந்து அலைகின்ருர்களே! நானும் அவர்களில் ஒருத்தியாகத் தானே இருந்தேன்? இதே நாட்டில் இந்தக் கல்கத்தாவுக்கு இருபத்தைந்து மைல் தொலைவில் ஒருவாய்ச் சோறு கிடைக்குமா என்று ஏங்கும் ஏழைகளைப் பார்த்தேனே! எனக்குமட்டும் வேளைக்கு ஐந்து ரூபாய் விலையுள்ள உணவு வேண்டுமா?"

"நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். ஆனால் வேறு வழி இல்லை. வேறு உணவுவிடுதிகளில் வேளைக்கு ஒரு ரூபாய்ச் செலவில் உணவு கிடைக்கும். ஆனால், அங்குள்ளவர்கள் பொறாமை உள்ளவர்கள். என்னைக் காட்டிக் கொடுத்து என் கைப் பணத்தைப் பறிமுதல் செய்யும்படியாக வைத்துவிடுவார்கள். இங்கே தங்கியிருந்தால் அந்தப் பயம் இல்லை. கையில் உள்ளதைக் கவலை இல்லாமல் வைத்திருந்து பிறர்க்கு உதவியாகச் செலவு செய்துவிடுவதற்கு இதுதான் வழி. நான் இந்தப் பணத்திற்குத் தர்ம கர்த்தாவாகத்தான் இருக்கிறேன். காவலாளி—அவ்வளவுதான் என்று எண்ண வேண்டாம். இதைக் காத்துக் கொண்டிருக்கப்போவதில்லை. மூன்றில் ஒரு பங்கு செலவாகிவிட்டது. இன்னும் இரண்டு பங்கு உள்ளன. அதைத் தமிழ்நாட்டில் செலவழிப்பேன். வேண்டுமானால் நான் இன்றைக்கே உங்களிடம் கொடுத்துவிடுகிறேன். நீங்கள் இதை அநியாயமாகப் பிறர்கையில் சேர்த்துவிடாமல், உதவியான வழிகளில் செலவு செய்துவிடுவதாகச் சொல்லுங்கள். ஒப்படைத்து விடுகிறேன். எனக்கு இந்தக் கவலை வேண்டாம்" என்று வெளிப்படையாக எடுத்துச் சொன்னேன்.

"எனக்கு அந்தத் தொல்லையே வேண்டாம். எனக்குத் தந்திரமான வழிகளே பழக்கமில்லை. இங்கே வேளைக்கு ஐந்து ரூபாய் உணவு உண்டு. நாளைக்கு ஆறு ரூபாய் வாடகை கொடுப்பதே எனக்கு மன வேதனையாக உள்ளது. என் மனச் சான்று இடங் கொடுக்கவில்லை. ஒவ்வொரு வேளையும் ரசகோளாவும் பாதம்அல்வாவும் பாலேடும் பார்க்கும்போதெல்லாம், அந்தக் கிராமத்தில் ஒரு வாய்ச் சோற்றுக்கு மானங் கெட்டுக் கெஞ்சிக் கை நீட்டி அலைந்த முகங்கள் என் கண்முன்னே வந்து நிற்கின்றன" என்று துயரத்தோடு மொழிந்தாள். வங்காளத்தில் பஞ்சம் என்று பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளை நினைத்து நானும் அப்போது கவலையுற்றேன். ஆனாலும் வேறு வழியில்லாத காரணத்தால் இன்னும் சில நாள் ரசகோளாவையும் பாதம் அல்வாவையும் உண்ணத் துணிந்தேன்.

"சென்னைக்குப் போகிறவரைக்கும் எப்படியாவது பொறுத்துக்கொள்ளுங்கள். அங்கே போன பிறகு பார்த்துக்கொள்ளலாம்'' என்றேன்.

"நானும் அப்படித்தான் எண்ணிக்கொண்டு பேசாமல் இருக்கிறேன்.''

"இந்தச் செலவெல்லாம் இவ்வளவு என்று நீங்கள் எப்படித் தெரிந்துகொண்டீர்கள்? பில் எல்லாம் நான் தானே கேட்டு வாங்குகிறேன்?''

"விடுதி ஆபீசுக்கு நானே நேரில் போய் விவரங்கள் எல்லாம் கேட்டேன். சொன்னார்கள்.''

"நீங்கள் கேட்டிருக்கக் கூடாது. இவர்கள் சந்தேகப்படுவார்கள்.''

"அதுவும் தெரிந்தது. ஆனால் மனம் கேட்கவில்லை. போகட்டும். நாம்தான் புறப்படப் போகிறோமே! புறப்பட்டுச் சென்னைக்குப் போனபிறகு இந்தத் தங்கச் சங்கிலியை முதலில் விற்றுப் பணத்தை உங்களிடம் கொடுத்துவிட வேண்டும்.''

"இது என் பணம் அல்ல. என்னிடம் கொடுப்பது தகுதி அல்ல. யாரோ ஒரு செல்வருடைய பணம். அதாவது யாரோ ஒரு செல்வரிடம் ஏழைகள் உழைப்பால் சேர்ந்த பணம். ஆகவே ஏழைகளுக்கு உரிமையான பணம், உழைப்பாளிகளின் உரிமையான செல்வம். நீங்கள் கொடுப்பதாக இருந்தால் ஏழைகளுக்குத்தான் கொடுக்க வேண்டும்.''

"அப்படித்தான் செய்யலாம்.''

"ஆனால் இப்போதே விற்கவேண்டாம். பொறுக்கலாம்.''

"ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தி அதில் சிறு பெண்களைச் சேர்த்து, நானும் வாணியும் ஆசிரியர்களாக இருந்து நடத்த வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்

கிறேன். அதில் சிறு வருவாய்க்கு ஏற்பாடு செய்து கடன் அடைக்க வேண்டும்.''

''பள்ளிக்கூடத்தில் ஏழைச் சிறுவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுப்பீர்கள் அல்லவா? அதுவே கடன் அடைத்தது போல்தான். பத்து ரூபாய் கடன் வாங்கினல் பத்து ரூபாயாகவே கொடுத்தால்தான் கடன் தீருமா? வேறு வகையாகத் தீர்க்க முடியாதா? பணமாக வாங்கினீர்கள். கல்வியாகக் கொடுத்துவிடுங்கள்.''

''எப்படியும் பள்ளிக்கூடந்தான் வழி. வாணிக்கும் பள்ளிக்கூடந்தான் தகும்'' என்ருள்.

''வாணிக்கும் பள்ளிக்கூடம் தகும்'' என்ற சொல்லைக் கேட்டதும் என் மனம் திடுக்கிட்டது. ''என்ன எண்ணிவிட்டீர்கள்? ஏதாவது எங்காவது விட்டுவிட்டீர்களா?'' என்று உடனே என் முகக் குறிப்பை நுட்பமாக அறிந்து கேட்டாள்.

''ஒன்றும் இல்லை. சாவியை விட்டுவிட்டாற்போல் இருந்தது. அதனல் திடுக்கிட்டேன். சட்டைப் பையில் தான் இருக்கிறது'' என்று சொல்லிக்கொண்டே சட்டைப் பையிலிருந்து எடுத்துக் காட்டினேன். சிறைவாழ்க்கையைப் பள்ளிக்கூடம் என்று பேசுவது வழக்கம். அது அவளுக்குத் தெரியுமோ, தெரியாதோ? ''வாணிக்கும் பள்ளிக்கூடம் தகும்'' என்ற சொல் என் உள்ளத்தில் மறைந்திருந்த சிறைச் செய்தியை நினைவூட்டித் திடுக்கிடச் செய்தது.

கடைசியாகப் புறப்படுவதற்கு முன்னே, ''இரண்டாம் வகுப்பு டிக்கட்தான் வாங்கப் போகிறேன். ஒன்றும் தடை செயயக் கூடாது. இப்போதே கேட்டுக்கொள்கிறேன்'' என்று பணிவாகச் சொன்னேன்.

''யார்வீட்டுப் பணம்? என்ன கொடுமை?'' என்று தடுத்தாள்.

''உங்களுக்கு அரசியலும் சமூக இயலும் நன்ருகத் தெரியும். இருந்தாலும் நான் அனுபவத்தால் சொல்கி

றேன். உண்மையாகப் பாருங்கள். வறுமையும் செல்வமும் போராடுகின்ற உலகத்தில்—உழைப்பாளியும் உண்டுகளித்திருப்போனும் போராடுகின்ற உலகத்தில்—எல்லாரும் கெட்டவர்களே! நாம் யாரோடு பழகுவது? யாரோடு பழகினல் இடையூறு குறைவு என்று பார்க்க வேண்டும். நடுத்தரமானவர்களோடுதான் பழக வேண்டும். ஆனல் கை நிறையச் செல்வம் வாய்த்த போது நடுத்தரமானவர்கள் பொறுமைப்படுவார்கள்; கெடுக்கத் துணிவார்கள். பணம் வைத்துக்கொண்டு பழகுவதால் அதுதான் ஆபத்து. ஏழைகளோடு பழகினல், நம்மைப் பார்த்து ஏங்குவார்கள்; பெரும் பணக்காரரோடு பழகினல் நம்மைப் புறக்கணித்து நடப்பார்கள்; அதனல், ஒன்று, காசில்லாத ஏழைகளோடு சேர்ந்து போகவேண்டும்; அல்லது, பெரும் பணக்காரரின் பக்கத்தில் உட்கார்ந்து போக வேண்டும். டிக்கட்டே வாங்காமல் ரயில் ஏறிப் போனலும் கவலை இல்லை; முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பில் பயணம் செய்தாலும் கவலை இல்லை. இப்போது இருக்கும் நிலைமையில் மூன்றும் வகுப்பில் மட்டும் போய்ப் பழகக் கூடாது. இன்னும் சில நாட்கள்தானே. எப்படியாவது பொறுத்துக்கொள்ளுங்கள்'' என்று சொல்லி வேண்டிய ஏற்பாடுகள் செய்ய விடை பெற்று வெளியே வந்தேன்.

ஏற்பாடுகளை முடித்துக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டோம். கல்கத்தா மிகப் பெரிய நகரம். சில வாரங்கள் பழகிவிட்டேன். பிரிய மனம் இல்லாமல்தான் பிரிந்தேன். வழியில் பற்பல எண்ணங்கள் எண்ணினேன். பொன்முடி, திருக்குறள் சிறிய பதிப்பை எப்படியோ தன்னுடன் எடுத்துவந்திருந்தாள். அதைப் படித்துக்கொண்டிருந்தாள். என் கையில் செய்தித் தாள்கள் இருந்தும் படிக்க மனம் ஓடவில்லை. சென்னை மெயில் வண்டியும் என் மனமும் ஓட்டத்தில் போட்டியிட்டன. வழியில் எத்தனையோ அழகான இயற்கைக் காட்சிகளைக் கவனிக்காமல் ரயிலும் கடந்து ஓடிக்கொண்டிருந்தது. என் மனமும் அந்த அழகுக் காட்சிகளைப் புறக்கணித்து ஓடிக்கொண்டிருந்தது. அந்தி வானத்தை எத்தனை முறை கண்டு வியந்து பாராட்டினலும் பயன் என்ன? அழகிய நிலவொளியில் அதன்

வெண்ணிற அமிழ்ததத்தைப் பருகிக்கொண்டு பல நாளும் கழித்தாலும் பயன் என்ன? இயற்கையன்னையின் திரு விளையாடலால் உயர்ந்தோங்கி நிற்கும் மலைகளையும் அலை புரளும் ஆழ்ந்த கடல்களையும் வாழ்நாள் முழுதும் பார்த்தும் பயன் என்ன? அவை மக்களின் வாழ்க்கையைப் பண்படுத்த வில்லையே! மனம் ஒரு பெரிய உலகம். அந்த மன உலகில் அந்தியின் அழகும் உண்டு; காலையின் கவர்ச்சியும் உண்டு; நள்ளிரவின் குளிர்மயக்கமும் உண்டு; நண்பகலின் கொதிப்பும் உண்டு. அந்த மன உலகில் கருமுகில்களும் உண்டு; வெண் முகில்களும் உண்டு; உயர்ந்த மலைகளும் உண்டு; ஆழ்ந்த கடல்களும் உண்டு. அந்த மன உலகில் வெயில் பரப்பும் கதிரவனும் உண்டு; வெண்ணிலாப் பொழியும் திங்களும் உண்டு; வெப்பமும் உண்டு; தட்பமும் உண்டு; மழையும் உண்டு; பனியும் உண்டு; வளமும் உண்டு; வறட்சியும் உண்டு. அந்த மன உலகை அல்லவா காண வேண்டும்; ஆராய வேண்டும்; பாட வேண்டும்; பண்படுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டே உறங்கிவிட்டேன்.

# 10. பொன்முடி

வாழ்க்கையில் எதிர்பார்த்தது நிகழாமல் போவதும் உண்டு; எதிர்பாராதது நிகழ்வதும் உண்டு. என் வாழ்க்கையிலோ, எதிர்பார்த்ததற்கு நேர்மாறுனது நிகழ்வதே வழக்கமாகிவிட்டது.

கழுத்திலிருந்து தங்கச் சங்கிலியைக் கழற்றிவிட வேண்டுமெ என்ற முயற்சியால் கல்கத்தா ரயில்நிலையத்தை அடைந்தேன். ஆனல் தங்கச் சங்கிலியைக் கழற்ருமல் தாலிக் கயிற்றையே கழற்றும்படியாக நேர்ந்தது. சென்னைக்குப் போய் மகள் மகிழ்ச்சியாக இருப்பதைக் காண வேணடும் என்று முயன்றேன். ஆனல் சென்னைக்குப் போய் அவள் சிறையில் வாடுவதையே காணுமாறு முடிந்தது. நீலமேகனை இனிமேல் வீட்டு வாசற்படிக்குள் சேர்க்கக்கூடாது என்று கணவனிடம் பிடிவாதம் செய்தேன். ஆனல் கணவன் இறந்தபின் அதே நீலமேகனுடைய உதவியே பெறவேண்டியதாயிற்று.

நீலமேகனுடைய உதவி இல்லையானல் நான் ஆயிரம் அல்லல்பட்டிருப்பேன். இந்த உலகத்தில் ஒரு நச்சுப் பாம்பாக அந்த ஆளை மதித்திருந்தேன். என் கணவன் அந்தப் பாம்புக்கும் பால் வார்க்கின்ருரே என்று அவரையும் வெறுத்துவந்தேன். ஆனல் அந்த நச்சுப் பாம்பே இப்போது நாட்டுத் தொண்டராக மாறியதுதான் வியப்பாக இருக்கின்றது. என்ன காரணம் என்பது? உண்மை என்ன என்று கேட்டால், மலைவழியில் நல்லவள் ஒருத்தியோடு ஆறு நாள் பழகி அவளை ஒரு படுபள்ளத்தில் பறிகொடுத்ததுதான் காரணம் என்று சொல்கின்ருர். என்ன கொடுமையான நிகழ்ச்சி அது!

இன்று இவ்வளவு உயர்ந்த நோக்கங்கள் நிரம்பியுள்ள இதே ஆள், அன்று இரவு கணவன் இல்லாதபோது வீட்டுக்கு வந்து பசி என்று கேட்டு உண்ட பிறகு, "அன்று ஒரு நாள் இப்படித்தான் ஒரு வீட்டுக்குப்

போனபோது, அந்த அம்மா வயிற்றுப்பசி, உடம்புப் பசி இரண்டையும் தீர்த்தாள்'' என்று நாக்குக் கூசாமல் உளறினன். "என்ன? குடிகாரனைப் போல் என்னென்னவோ உளறுகிருய்?" என்று சீறினேன். "எவ்வளவோ படித்திருக்கிருய்! இவ்வளவு சீர்திருத்தம் இல்லையா?" என்று மறுபடியும் உளறினன். பாவம்! அவன் இவன் என்று சொல்கிறேன். ஒழியட்டும்! அந்த நிலைமை மாறிவிட்டது. "வெளியே போய்விடு! போகவில்லையாளுல் நான் வாசற்படியில் காவல் கிடப்பேன். திருடன் வீட்டிலிருக்கும்போது வேறு என்ன செய்வது?" என்று சொல்லிக்கொண்டே வெளியே வந்து நின்றேன். தலை கவிழ்ந்துகொண்டே வெளியேறினன்—வெளியேறினர்.

இவ்வளவு கயமையும் இப்போது நீங்கிவிட்டது. ஓர் ஆண்மகன்போல் பெண்களை மதித்து நடந்துகொள்கிருர். நெறியான வாழ்க்கையில் பற்றும், நாட்டுத் தொண்டில் ஆர்வமும் கொண்டிருக்கிருர். என்ன மாறுதல்! அன்று வீட்டை விட்டு வெளியேற்றிய நான் அதே நீலமேகனேடு கல்கத்தாவிலிருந்து சென்னை வரைக்கும் இரண்டாம் வகுப்பில் பயணம் செய்தேன். அதே நீலமேகன? அல்ல, அல்ல. அவன் ஒரு கயவன். இவர் ஒரு மனிதர். மனிதத் தன்மை பெற்றுவிட்ட ஒருவரோடு தனியே பயணம் செய்தால் தவறு என்ன?

ஒரு தாயிடம் அன்பு கொண்டு வழிபடும் மகனைப் போல் என்னிடம் அன்பும் பணிவும் உள்ளவராக நடக்கிருர். தம் குற்றத்தை நினைந்து வருந்துகிருர். குணமாலையைக் கொடுமையாக நடத்தியதற்காக மனம் நோகிருர். வாணியைப் பற்றியும் கவலைப்படுகிருர். அவரை நான் தேற்றவேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. என் அருமைத் துணைவரை நினைக்கும்போது கலங்குகிருர்.

என் அருமைத் துணைவரை—என் காதலரை—காணது கலங்கும் என் ஆருயிரை நானும் எப்படியோ மெல்ல மெல்ல மறந்துவருகிறேனே! மறந்துவிட முடியாது. ஆனல் அந்தக் கவலை ஒரு சிறிது குறைந்துவருகிறது. படிப்படியாகக் குறைந்துவருகிறது. நாள் செய்வது நல்லோர்

செய்யார் என்னும் பழமொழி உண்மைதான். நாள் செல்லச் செல்ல, படிப்படியாக அவரைப் பிரிந்த கவலை குறைந்துவருகிறது. அந்தக் கொடிய செய்தியைக் கேட்டதுமுதல் இனி உயிர்வாழ முடியாது என்று துணிந்தேன். நான்கு நாட்கள் கழிந்ததும் இனி என்ன செய்வது என்று எண்ணத் தொடங்கினேன். மேலும் நான்கு நாட்கள் கழிந்தபின் எந்தெந்தக் கடமைகளை எவ்வெவ்வாறு செய்வது என்று ஆராய்ந்து வாழவே தொடங்கிவிட்டேன். சாகத் துணிந்திருந்த என் மனம் வாழவே துணிந்துவிட்டது. ஆனால் முன்னே வாழ்ந்தது குடும்பத்திற்காக. அந்தக் குடும்ப வாழ்க்கை செத்துத்தான் போய்விட்டது. இப்போது வாழ்வது சமூகத்திற்காக—நாட்டிற்காக. இந்த வாழ்வை விரும்பித்தான் ஏற்றேன். முன்னெல்லாம் உடன்கட்டை ஏறுவதைப் பற்றிப் புகழ்ந்து பேசினேன்; நாட்டிற்கே பெருமையானது என்று பாராட்டினேன். இப்போது அது சாதாரணமானதாகத் தோன்றுகின்றது. உடனுயிர்துறக்கும் கற்பு, சாதாரணப் பெண்களின் செயல் என்றுதான் தோன்றுகின்றது. குடும்பம் என்னும் குறுகிய எல்லையை விட்டு வெளியே நோக்கும் பரந்த நோக்கம் இல்லாத எளிய மனத்தின் எல்லைதான் அது என்று தோன்றுகின்றது. மாதவி போன்ற பெருமக்களின் பெருமையும் இப்போதுதான் தோன்றுகின்றது. துணைவர் எனக்கு அரசியல் அறிவும் சமூக அறிவும் ஊட்டி, வெறுமையான உணர்வு மட்டும் கொண்டு பழகாமல், அறிவோடும் ஆற்றலோடும் பழகி வாழக் கற்றுக்கொடுத்தார். அந்தக் கல்வி வீணாகவில்லை. எனக்கும் பயன்பட்டது. வாணிக்கும் பயன்பட்டது. ஆனால் என்னிலும் வாணி முந்திக்கொண்டாள். நான் இன்னும் துயரத்தால் நொந்து வருந்திக்கொண்டிருக்கும்போதே, அவள் அரசியல் தொண்டு செய்யத் தொடங்கிவிட்டாள். உலகம் கண்விழிக்குமாறு ஒரு புது இயக்கத்திற்கே காரணமாகிவிட்டாள். இயக்கம் தொடங்கிவிட்டாள் என்றே சொல்லவேண்டும்.

ஆனால், அவளுக்குத் தந்தையின் முடிவு தெரியாதல்லவா? இப்போது தெரிவிக்கவும் கூடாது. தெரிந்தால் மனம் உடைந்து போவாள். என் வாழ்வைப் பற்றிக் கவ

லைப்பட்டு வருந்துவாள். சிறைத் துன்பத்தை அவள் எவ்வளவுதான் புறக்கணித்திருந்தாலும், பொருட்படுத்தாதிருந்தாலும், அந்தத் துன்பத்தோடு இந்தத் துயரமும் சேர்ந்தால், அவளால் தாங்க முடியாமல் போனாலும் போகும். உணர்வின் ஆற்றலும் அறிவின் திட்பமும் இருந்தாலும் என்ன செய்ய முடியும்? உள்ளம் உடைந்து உருகினால், உடல் உரம்கெட்டு வாடுமல்லவா? இவ்வாறு எண்ணியே அவளுக்குத் தந்தையின் முடிவைச் சொல்லாமலிருக்கத் துணிந்தேன். கல்கத்தாவில் அந்தக் கம்பெனித் தலைவரோடு இருந்து கம்பெனி வேலையைக் கவனிப்பதாகவும் அடுத்த மாதம் வருவதாகவும் சொல்லிவிட்டேன். இன்னும் மூன்று நான்கு வாரங்கள் கழிந்த பிறகு வேண்டுமானாலும் சொல்லலாம்.

நெல்லூரில் தென்னிந்தியச் சாப்பாடு கிடைத்துச் சாப்பிட்டபோது உணவை விருப்பத்தோடு உண்ணவும் முடிந்தது. வங்காளத்தில் உள்ளவர்கள் நெய்யும் சர்க்கரையுந் தான் உணவுப் பொருள்கள் என்று எண்ணிவிட்டாற் போல் இருக்கின்றது. எங்கே பார்த்தாலும் எப்போது பார்த்தாலும் ரசகோளா, பாதம் அல்வா என்று பலகாரங்களின் மணமும் அவற்றின் பெயர்ஒலியும் மூக்கும் செவியும் வெறுக்கும்படியாக மலிந்து கிடக்கின்றன.—தவறு, தவறு. வங்காளத்தில் உள்ளவர்களுக்கு அவைகள் எங்கே கிடைக்கின்றன? கல்கத்தாவில் உள்ள சில செல்வர்களுக்குத்தான் பெரிய பெரிய உணவுவிடுதிகளில் இவை ஏராளமாக மலிந்து கிடக்கின்றன. உண்மையான வங்காள மக்கள் யார்? அங்கே எங்கள் சிறு சோற்று உருண்டைகளுக்காக மானங்கெட்டு நாக்கைத் தட்டிய சிறுவர்களும், அவர்களைப் பெற்ற தாய்மார்களும், அரிசி மூட்டைகளைக் கொள்ளையடிக்கும் திருடர் என்று பழிக்கப்பட்ட அந்தப் பாட்டாளிப் பெருமக்களுமே ஆவார்கள். அவர்களுக்கு அரிசிச் சோறு ஏது? கண்டு எத்தனை நாட்கள் ஆயினவோ? என்ன கொடுமை என்பது? பாடுபடும் உழைப்பாளிகளுக்குப் பட்டினியும் வறுமையும்; பொன் வெள்ளித் தகடுகளைச் சேர்த்துவைக்கும் எய்ப்பாளிகளுக்குப் பெருமையும் வாழ்வும். ஒரு பக்கம் பட்டினி; ஒரு

பக்கம் விருந்து. இது தலைவிதி என்பதா? அப்படியானல் அந்தத் தலைவிதியின் தலையைத் தட்டிப் பிளந்து எறிய உழைப்பாளிகளின் கையில் சம்மட்டிகள் இல்லையா? அறிவாளிகளின் கையில் எழுதுகோல் இல்லையா?

கல்கத்தா உணவு என்று எண்ணும்போதே என் நெஞ்சம் கொதிக்கின்றது! என்னென்னவோ எண்ணுகின்றேன். போகட்டும்.

அந்தக் கல்கத்தா உணவில் புளி சேர்க்கத் தெரியவில்லை. அருமை மிளகு நீரும் நெல்லூரில்தான் கிடைத்தது. தென்னிந்தியச் சாப்பாட்டை வாழ்த்திக்கொண்டே உண்டேன். பொறுக்க முடியாத காரத்தையும் பொறுத்துக்கொண்டேன். மறுநாள் சென்னையில் காரம் குறைந்த—அறுசுவையும் அளவாகக் கூடிய இனிய தமிழ்ச் சாப்பாடு கிடைக்கப் போவதை எண்ணினேன். அப்போதுதான் திடீரென்று நினைத்துக்கொண்டேன். அருமைக் கணவன் இறந்ததையும் மறந்து நல்ல சுவையான உணவை மனம் நாடுவதை எண்ணினேன். சுவையெல்லாம் கைத்தது; மனம் எல்லாம் ஒடுங்கியது.

சென்னையில் காலடி வைத்தவுடன் அருமைக் கணவரை நினைத்துக் கலங்குகின்றேன். ஆனல், உடனே, எல்லா மக்களும் தமிழைப் பேசுவதைக் கேட்டு என் செவிகளில் இன்பத் தேன் வந்து பாய்ந்தது. அந்த இன்பத் தேன் என் உள்ளத் துயரை அவித்தது. அங்கிருந்து சென்ட்ரல் லாட்ஜ் என்னும் விடுதியை நோக்கிச் சென்ரேும். வழியெல்லாம் ஏழைச் சிறுவர்கள் கந்தல் உடுத்துத் திரிவதும் காசு வேண்டும் என்று கை நீட்டி நிற்பதும் கண்டேன். சாலை ஓரங்களில் ஏழை மக்கள் குடும்பம் குடும்பமாய் ஏங்கி வாடுவதையும் கண்டு வருந்தினேன். தமிழனுடைய தலைநகரமாகிய இந்தச் சென்னையிலும் இப்படிப்பட்ட வறுமை விளங்குகின்றதே என்று எண்ணி நொந்தேன். வருந்திக்கொண்டே விடுதியின் உள்ளே நுழைந்த போது அங்கே சிற்றுண்டிகளின் பெயர்கள் தமிழில் எழுதப்பட்டிருப்பது கண்டு உள்ளம் பூரித்தேன். வறியவன் ஆனுலும் தமிழன் பண்பு கெடவில்லை என்று

மகிழ்ந்தேன். கல்கத்தாவில் உள்ளதுபோல் பெரிய கட்டிடங்களும் செல்வர்களின் ஆரவாரமும் இல்லாவிட்டாலும், தமிழன் தலைநகரந்தான் தலைசிறந்த நகரம் என்று இறுமாந்தேன். சிற்றுண்டிகளின் பெயர்கள் எல்லாம் தமிழில் எழுதப்பட்டிருப்பது கண்டதும் செவிகளில் பாய்ந்த இன்பத்தேன் கண்களையும் குளிர்வித்தது. என் உள்ளத்தையும் குளிரச் செய்தது. பூரி உருளைக்கிழங்கு என்றும் கீரைவடை என்றும் எழுதிய பெயர்களை நான் இதற்கு முன் எங்கும் எந்த உணவுவிடுதியிலும் கண்டதில்லை. ஐந்து வயது குழந்தையாக இருந்த வாணிக்குப் பாவாடை கட்டி அழைத்துக்கொண்டு சென்னையில் திரிந்த காலங்களிலும் இதைப் பார்த்ததில்லையே !

மாலையில் நீலமேகனுடன் சைனபஜாருக்குச் சென்றபோது என் கண்ணைக் கவர்ந்த கட்டிடங்கள் சட்டக் கல்லூரியும் நீதிமன்றமும் ஆகும். அவற்றை நெருங்கிச் செல்லச் செல்ல என் வியப்பெல்லாம் வெறுப்பாக மாறி விட்டது. சட்டக் கல்லூரியும் நீதிமன்றமும் அடுத்துப் பாதையின் பக்கத்தில் அமைந்த மேடையில் மரங்களின் கீழே வெய்யிலும் மழையும் பனியும் குளிரும் பார்க்காமல், மானமும் மதிப்பும் இழந்து வாழும் குடும்பங்களைப் பார்த்ததும் வயிறெல்லாம் எரிந்தது. அவர்களும் தமிழே பேசியதைக் கேட்டதும், என் கால்களும் நடுங்கிச் சோர்ந்தன. தமிழை நினைத்து இன்புறும் இன்பமெல்லாம் போயிற்று. இன்பத்தேன் வந்து பாய்ந்த காதுகளில் அவர்களின் பேச்செல்லாம் பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துணுக்குகளாய்ப் பாய்ந்தன. இதுவா செந்தமிழ் நாடு என்று நொந்தேன். ஆயிரம் இலங்கியங்களை அருமையாகப் பெற்றிருந்தும் தமிழனை வாழ்வது எங்கே? வெறுமையான ஏடுகளை அடுக்கடுக்காகப் பார்த்துவிட்டுத் தமிழனை வாழ்கிறுள் என்று எண்ணி என்னையே ஏமாற்றிக்கொண் டிருந்த ஏமாற்றம் தொலைந்தது. கந்தை உடுத்து, ஓயாது குடித்து, மனைவி மக்களை அடித்து, மரத்தடியிலே, பாதை ஓரத்திலே, சமைத்து உண்டு உறங்கி மானமும் மதிப்பும் இழந்து வாழும் தமிழர் சிலர் இருக்கும் வரையில் தமிழ் வாழமுடியாது; இத்தனைக் குடும்பங்களுக்கும் மாடி வீடுகளும்

மாண்பு நிறைந்த வாழ்வுகளும் கிடைத்தால்தான் தமிழன்னைக்கு வாழ்வு உண்டு என்று ஏங்கினேன்.

அங்கிருந்து எவரெஸ்டுவிடுதியில் தங்குவதற்குப் புறப்பட்டோம். வழியில் ராமசாமி முதலியார் சத்திரத்தைக் கண்டபோது அருமைக் கணவர் வழிவிடும்போது சொன்ன சொல்லை நினைத்துக்கொண்டேன். ரங்கூனை விட்டுப் பிரிவதற்குமுன் வழியனுப்ப வந்த அவரைப் பார்த்து, "இன்னும் நீ தனியாக இங்கே தங்கியிருப்பதில் பயன் இல்லை. இப்போது எங்களோடு வந்துவிட்டால் நல்லது. ஒரு கவலையும் இருக்காது. நாளைமறுநாளாவது நிற்காமல் புறப்பட்டு வந்துவிடு. மேற்கொண்டு ஒரு நாளும் தங்கியிருக்க வேண்டாம். வேலை போனால் போகிறது. எப்படியாவது வயிறு வளர்க்கலாம்" என்று கண்ணைத் துடைத்துக்கொண்டு அழுதேன். "பொன்முடி......! அழாதே" என்று சொல்லிக்கொண்டே உருகினார். "பொன்முடி! நான் வந்துவிடுவேன். எப்படியாவது சென்னைக்குப் போய்ச் சேர்ந்துவிடலாம். எப்படியாவது வாழலாம். பிச்சை எடுத்து ராமசாமிமுதலியார் சத்திரத்தில் தங்கிக் காலங் கழிக்கலாம்" என்றார். அந்தக் காலமும் கழிகிறது. சத்திரமும் இருக்கிறது. ஆனால் அவர்—!

விடுதியில் இனி ஒருநாளும் தங்கியிருக்க முடியாது. எங்காவது எளிய வாழ்க்கைக்கு வழி செய்ய வேண்டும் என்று நீலமேகனிடம் வற்புறுத்தினேன். சேத்துப்பட்டு நல்ல மூலை, அமைதியான இடம், நகரத்து நன்மையும் நாட்டுப்புறத்து நன்மையும்ஒருங்கேகிடைக்கும்என்று அங்கே பார்த்த செங்கல்வியாபாரி ஒருவர் சொன்னார். அவருடைய உதவியால் வைத்தியநாத முதலி தெருவில் ஒரு வீடு கிடைத்தது.

அமைதி மிகுந்த நல்ல இடமாக இருந்தது. பக்கத்தில் கல்லூரிக் கட்டிடம் தமிழ் மணம் கமழ்ந்துகொண்டிருந்தது. வாணி இருந்தால் எவ்வளவு மகிழ்வாள் என்று எண்ணினேன். ஐந்து வயதாக இருந்தபோது அவள் சென்னையைக் கண்டது நினைவும் இருக்காது அடுத்த

முறையில் சென்னைக்கு வந்தபோது, தந்தையிழந்த மகளாக வந்து சேர்ந்தபோது, ஒரு நாளாவது உலாவிச் சென்னையைக் கண்ணாரக் கண்டு மகிழாதபடி அந்தச் செண்ட்ரல் சிறைச் சாலையில் மணிமேகலையாய்த் தவம் செய்ய நேர்ந்து விட்டது.

அது தவம்தான். தவம் என்று கூறுவது முற்றிலும் பொருந்தும். பொன்முடியின் வயிற்றில் பிறந்த ஒரு பெண் வீரமகளாக மாறியது பெருமையாக நினைத்து மகிழ்கின்றேன். ஆனால், அதே நினைப்பில், அருமைமகள் உயர்ந்த சுவர்களும் இரும்புக் கம்பிகளும் உதவா மனங்களும் காவல் காக்க அடங்கி ஒடுங்கிக் கிடக்கின்றாளே என்ற துயரம் வாட்டி வதைக்கின்றது. என்ன செய்வேன்?

அவளோடு சேர்ந்து பத்மாவதியும் தவம் கிடக்கின்றாள். அதுவும் வியப்பல்ல. அந்தப் பக்கத்து வீட்டு மாணவன்—நாகப்பன்—எப்படியோ வாணியோடு வந்து சேர்ந்தான். அவன் எப்படிச் சிறைப்பட்டானோ, தெரியவில்லை. வாணிக்கும் அவனுக்கும் முன்னமே—ரங்கூனிலேயே—பழக்கம் இருந்திருக்குமா? இளம் பெண்களின் மனம் பெற்றோர்க்குத் தெரியாத மனமாக இருக்கின்றதே! ஆமாம்! என் பெற்றோர் என்னைக் குழந்தை என்றுதானே எண்ணிக்கொண் டிருந்தார்கள். வாணியும் வளர்ந்த பெண்; காதலனைத் தேடிக்கொண்டாள். ஆனால் சிறைச் சாலையில் வாழ்க்கையா? ஐயோ! மகளே!

வாணி சிறைப்பட்டது நீலமேகனுக்குக் கல்கத்தாவிலே தெரிந்துவிட்டதாம். தெரிந்திருந்தும் எத்தனை நாள் என்னிடம் மறைத்துவந்தார்? வாணியைப் பற்றித் தெரிந்துகொள்வதற்காகப் போய்த் தெரிந்தவர்களைக் கேட்டுக்கொண்டு வருகிறேன் என்று நாள்தோறும் முயல்வதாக நடித்தார். எங்கள் குடும்பத்தைப் பற்றிய அன்பு, நான் எவ்வாறு இரு பெருந் துன்பத்தைத் தாங்குவேன் என்ற கவலை, கல்கத்தாவில் கணவன் முடிவு அறிந்ததும் ஒரு வாரம் சோர்ந்து செயலற்றுப் போனதால் அஞ்சிய அச்சம் இவற்றால் என்னிடம் சொல்ல முடியாமல் மறைத்து வந்தார். அதிகாரிகளிடம் நானே போய் வாணியைப்

பற்றிக் கேட்பதாகச் சொன்னேன். அப்போதுதான் உண்மையைச் சொல்லிவிட்டார்.

உண்மையை அறிந்ததும் திடுக்கிட்டுத் துயருற்றேன். ஆனால் சோர்ந்துபோக வில்லை. கல்கத்தாவில் கணவன் முடிவை அறிந்து சோர்ந்து செயலற்றபோது குடும்பத் தலைவியாக இருந்தேன்! அவ்வளவுதான். அதனால் அந்தத் துயரத்தைத் தாங்க முடியவில்லை. அதுபோல் இப்போதும் சேத்துப்பட்டில் ஆகிவிடுமோ என்று இவர் அஞ்சினார். அஞ்ச வேண்டிய காரணமே இல்லை. இப்போது நான் உலகப் போராட்டத்தைத் தாங்கும் ஆற்றல் பெற்றுவிட்டேன்; தொண்டு செய்யத் துணிந்துவிட்டேன். அதனால் சோர்வு ஏது? என்ன வந்தாலும் சரி, என்ன போனாலும் சரி. சோர்வு ஏது? கவலையும் அடிக்கடி வரலாம், போகலாம். ஆனால் இனிமேல் என் வாழ்க்கையில் சோர்வுக்கு இடம் இல்லை.

வாணி—என் அருமை மகள்—என் ஒரே மகள்—எங்கள் உயிர்—சிறையில் இருக்கிறாள்; தமிழ்நாட்டைக் கண்டு அதன் தலைநகரத்தில் வாழ வந்தவள் சிறைப்பட்டு வாடுகின்றாள் என்று கேள்விப்பட்டதும் கலங்காமலிருக்க முடியுமா? கலங்கினேன்; அது இயற்கை. ஆனால் அவள் சிறை சென்ற காரணத்தை எண்ண எண்ண, என் மனம் எங்கெங்கோ பறந்து ஆறுதல் பெற்றது. என் மனம் ஏசுநாதரை நினைத்து, திருநாவுக்கரசரை நினைத்து, திலகர் காந்தி முதலான பெருந்தொண்டர்களை நினைத்து, திருவள்ளுவருடைய மணிமொழியை நினைத்தது. "ஒப்புரவினால் வரும் கேடு எனின் அஃது ஒருவன் விற்றுக் கோள் தக்கது உடைத்து" என்னும் குறளைப் பத்துப் பதினைந்து முறை என்னுடைய வாய் சொல்லியது.

அரசாங்கத்தார் ஐந்தாம் படை என்று சிறைப்படுத்திவிட்டார்கள் என்று சொன்னபோது எனக்கு ஆறுதல் பிறக்கவில்லை. நீலமேகன் வந்து நிகழ்ந்ததைச் சொன்னபோது உள்ளம் குளிர்ந்தது. "சிற்றப்பா என்று குறித்துச் சிறை அதிகாரிக்கு எழுதினேன். அனுமதி பெற்றேன். சென்ட்ரல் சிறைக்குப் போய்ப் பார்த்தேன். கால்

மணி நேரம் பேசிக்கொண்டிருந்தேன். வாணி ஒன்றுமே கவலைப்பட வில்லை. மகிழ்ச்சியோடு இருக்கிருள். ஐந் தாம் படையாக ஒன்றுமே பேசவில்லையாம். எந்தக் கட்சியையும் நாட்டையும் குறித்துத் தாக்கியும் பேச வில்லையாம். ஆனல், பொதுவாகப் போரை ஒழிக்கவேண் டும் என்றும், போரே நிகழாமல் தடுக்கவேண்டுமாஞல் கூலிக்கு ஆட்களே போகக் கூடாது என்றும், எல்லா மக்களும் அறிவுடையவர்களாஞல் எந்த வகையிலும் போருக்குத் துணை செய்யாமல் எல்லா நாடுகளிலும் மறுப் பார்களாஞல் எதிர்காலத்தில் போரே நிகழாது என்றும், இதற்கு உரிய வழியில் இயக்கம் ஒன்று தொடங்க வேண் டும் என்றும் பேசிக்கொண்டிருந்தார்களாம். யாரோ ஒரு பெண்—பத்மாவதி என்று பெயராம். இளைஞன்—நாகப்பன் என்று பெயராம்—உங்கள் பக்கத்து வீடாம். இவர்களே பேசிக்கொண டிருந்தார்களாம். வால்டேரில் இவ்வாறு பேசிக்கொண் டிருந்ததை வேவுகாரர் கேட்டுக் கொண்டிருந்து தெரியப்படுத்தியதால், கைது செய்துவிட்டார்களாம்'' என்று நீலமேகன் சொன்ன போது நிகழ்ந்தவை அறிந்தேன்; வருந்தினேன்.

பத்மாவதி என்ற அந்த அறிவு மிக்க தோழி வாணி யோடு இருப்பதை நீலமேகன் சொன்னபோது வருத்தத் திற்கு இடையே ஒரு வகை ஆறுதல் பெற்றேன். இப் படிப்பட்ட துணை இருக்கும்போது அந்த இரும்புக் கம்பி கள் அவளை என்ன செய்ய முடியும் என்று ஒருவாறு ஆறுதல் அடைந்தேன்.

ஆனல், மறுநாள் நான் அதிகாரியின் அனுமதி பெற் றுப் போய்ப் பார்த்தபோது, அந்தச் சிறையில் வாணியை மட்டுமே பார்த்தேன். பத்மாவதியைக் காணவில்லை.

"எங்கே பத்மாவதி ?'' என்று கேட்டேன்.

"நேற்று மாலையில் அவளுக்கு விடுதலை கிடைத்தது. அவளுடைய அப்பா வந்து வாணியம்பாடிக்கு அழைத் துப் போய்விட்டார்'' என்ருள்.

"அவளுக்கு மட்டும் எப்படி விடுதலை கிடைத்தது?''

" அவளுடைய அப்பா நன்னடக்கை எழுதிக் கொடுத்து அழைத்துக்கொண்டு போனார்."

" நானும் நீலமேகனும் அப்படிச் செய்தால் உன்னை யும் விடுதலை செய்வார்களே !"

" எப்படிச் செய்தால் ?"

" நன்னடக்கை எழுதிக்கொடுத்தால்—"

"ஓ! இப்போது என் நடக்கை தீயநடக்கையா? இனி மேல் நன்னடக்கை எழுதிக்கொடுக்கப் போகின்றீர்களா ? நீங்கள் எழுதிக் கொடுத்தாலும் ஒன்றும் நடக்காது. நான் முன்னே மன்னிப்பு எழுதிக் கொடுத்தால்தான் உங் கள் நன்னடக்கை செல்லுபடியாகும். நான் என் மன் னிப்புக் கேட்பேன் ? என்ன குற்றம் செய்தேன்? இந்தப் பிறவியிலா ?" என்றாள்.

நான் ஒன்றும் பேசமுடியாமல் நின்றேன்.

"எல்லாம் தெரிந்தும் இப்படிச் சொன்னாயே! அப்பா வந்திருந்தால் நன்னடக்கை பற்றிப் பேசுவாரா? அல்லது, நானாக மன்னிப்புக் கேட்டாலும் அவர்காதுக்கு எட்டி னால் என்ன நினைப்பார்?" என்றாள்.

இல்லாத அப்பாவைப் பற்றி அருமை மகள் பேசக் கேட்டதும் என் மனம் அடக்கிப் பிடிக்க முடியாமல் விம் மித் துயரத்தால் உடைந்தது. "பக்கத்தில் யார் அம்மா?" என்று கேட்டுக்கொண்டே முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டு அங்கிருப்பவர்களைப் பார்ப்பதுபோல் நடித்துக் கண்களைத் துடைத்தேன்.

" நீ என் அம்மா வந்தாய் ? என்னை அழப்படுத்து வதற்கா?" என்று அவள் கேட்ட கேள்வியால் பேசாமல் இருந்தேன்.

" பத்மாவதி மன்னிப்புக் கேட்கமாட்டாளே! அவள் மட்டும் என் அப்படிச் செய்தாள் ?" என்று கேட் டேன்.

" அவளுடைய அப்பாவுக்கு அரசியல் சமூகம் இவற் றைப் பற்றி ஒன்றும் தெரியாதல்லவா ? அவர் அடிக்கடி

வந்து அழுதார். பத்மாவதியை மன்றாடிக் கேட்டுக் கொண்டார். தவிர, அவளும் சற்று மாறிவிட்டாள். பழங்காலத்து முனிவர்களைப் போல் மனத்தை ஒடுக்கித் தனியே இருந்து தவம் செய்யவேண்டும் என்ற ஆர்வம் அவளுக்கு ஏற்பட்டுவிட்டது. அப்படித் தவம் செய்து, ஆக்கவும் அழிக்கவும் வல்லமை பெற வேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தாள். சாபம் கொடுக்கக் கற்றுக் கொண்டால் போரை எளிதில் நிறுத்திவிட முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு ஏற்பட்டுவிட்டது. விமானங்களில் வந்து குண்டு வீசுகின்றவர்கள் அப்படியே கல்லாய்ப் போக வேண்டும் என்றும், எரிந்து சாம்பலாய்ப் போக வேண்டும் என்றும், சாபம் கொடுக்கும் ஆற்றல் பெற்று விட்டால் எல்லாம் சரியாய்ப் போகும் என்றும் ஒரு நாள் சொன்னாள். என்னை ஏமாற்றுவதற்காக இப்படிச் சொன்னாள் என்று எண்ணுகின்றேன். விமானம் முதலியவற்றை ஓட்டுகின்றவர்கள், அவர்களை ஓட்டச் செய்யும் படைத் தலைவர்கள், குண்டு செய்யும் தொழிலாளிகள், குண்டு செய்யக் கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகள், போர் தொடங்கும் அரசியல் தலைவர்கள், இவர்களுக் கெல்லாம் உணவும் உடையும் கொண்டுபோகும் லாரிகள், இவர்கள் பயணம் செய்யும் ரயில்கள், இவர்களுக்கு உணவும் உடையும் விற்கும் வியாபாரிகள், இவர்களுக்குஉதவியாகக் கூலிவேலை செய்யும் தொழிலாளிகள், இவர்களைப் புகழ்ந்து பேசும் வாய்கள், பாராட்டி எழுதும் கைகள் எல்லாம் கல்லாய்ப் போகும்படி அல்லது அழியும்படி சாபம் கொடுக்க வேண்டுமாம்."

இந்தக் காரணத்தை அவள் கூறுவதில் வேடிக்கையாகப் பேசி என் கவலையைக் குறைக்க முயன்றாள். பிறகு யார் யாரைப் பற்றியோ கேட்டாள். எப்படி எப்படி வந்து சேர்ந்தாய் என்று கேட்டாள். நீலமேகன் எப்படிப் பழகினார் என்றும் கேட்டாள். எல்லாம் சொன்னேன்.

"அவரிடம் ஏது அவ்வளவு பணம்? எனக்காக ஐயாயிரரூபாய் வேண்டுமானாலும் செலவு செய்து வழக்கறிஞர்

வைத்து வழக்காட முடியும் என்று வற்புறுத்தினர். நான் ஒத்துக்கொள்ளவில்லை'' என்ருள்.

“அவர் சொன்னபடி செய்யலாமே! பிறகு சம்பாதித்துக் கடன் கொடுத்துவிடலாமே'' என்றேன்.

“எனக்கு அது சற்றும் பொருத்தமாகத் தெரியவில்லை. எதற்காக ஐயாயிர ரூபாயை வீணுக்க வேண்டும்? ஏழை மக்கள் எத்தனையோ பேருக்கு எவ்வளவோ உதவி செய்யலாமே! ஒரு சின்ன கைத்தொழிற்சாலை ஏற்படுத்தலாமே! அதை அடுத்து அதனோடு சேர்த்து ஒரு சிறு பள்ளிக்கூடம் ஏற்படுத்தலாமே!'' என்ருள்.

“நீ வழக்காடி வெளியே வந்தால் இவ்வளவும் நன்ருகச் செய்யலாமே.''

“நான்தான் சொல்கிறேனே! வழக்காடி எவ்வளவு பாடுபட்டாலும் விடுதலை கிடைக்காது. போர் நடக்கும் காலத்தில் நியாயம் பிறக்குமா? ஐந்தாம் படை என்று ஐயம் ஏற்பட்ட பிறகு விடுதலை உண்டா? ஆகையால் ஐயாயிர ரூபாயும் விழலுக்கு இறைக்க வேண்டியதுதான். அதனல்தான் சொல்கிறேன். எதிர்வழக்காடாத சாக்ரடீசும் ஏசுநாதரும் பைத்தியக்காரர்களா?'' என்ருள்.

“கடைசியில் எத்தனை நாளைக்கு இப்படிச் சிறைக்குள் இருந்து வருந்துவது?'' என்று கண்ணீர் விட்டுக் கேட்டேன்.

“நீ வர வரக் கோழையாகப் போய்விட்டாய் அம்மா! என்னைப் பற்றிக் கவலை வேண்டாம். பக்கத்து வீட்டு நாகப்பன் தெரியுமா? அவரும் இந்தச் சிறையில் இருக்கிருர். அவருக்கும் எனக்கும் ஒரு மனமாகிவிட்டது. உன்னை விட்டுப் பிரிந்த பிறகு அவர்தான் எனக்குத் துணையானர். சேலத்தார்வண்டியில் ஏறினேன் அல்லவா? அப்போதிருந்து அவர் துணையாக வந்தார். எங்கள் பேச்சிலும் துணையாக இருந்தார். அதனல் சிறையிலும் துணையாக வந்தார். எங்கள் வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படாதே'' என்ருள்.

குறித்த நேரம் ஆனது. சிறையதிகாரியின் ஆணைப்படி வெளியே வர வேண்டுமே என்று எண்ணிக்கொண்டே, "நான் உன்னை இங்கே விட்டுவிட்டு எத்தனை நாளைக்கு வெளியே வாழ்வது?" என்று கலங்கி அழுதேன்.

"நீயும் அப்பாவோடு கூடப் போய் இருப்பதுதானே. அவரைக் கல்கத்தாவில் தனியாக விட்டுவிட்டு உனக்கு மட்டும் இங்கே என்ன வேலை? மாதம் ஒருமுறை நீங்கள் இரண்டு பேரும் வந்து பார்த்துக்கொண்டு போனால் போதாதா?" என்றாள்.

மனத்தை நிறுத்தப் பெரும்பாடுபட்டு மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு நின்றேன். நிற்க முடியவில்லை. "போய்வருகிறேன்" என்று சொல்ல முயன்றேன். நா எழவில்லை. அவளும் ஏதோ சொல்லத் தொடங்கி, "நீ—" என்றாள். பெருமூச்சு விட்டாள். சிறைஅதிகாரியின் ஆணைப்படி நகர்ந்து வெளியே வந்தேன். கண்களைத் துடைத்துக்கொண்டு நடந்தேன்.

மறுமுறை பார்க்கச் சென்றபோது, "அப்பா ஏன் வரவில்லை? கடிதங்கூட எழுதவில்லையே அம்மா. உனக்கு எழுதியிருப்பாரே. எடுத்துக்கொண்டு வரக்கூடாதா? கையெழுத்தாவது கண்ணால் பார்க்கலாமே" என்றாள். அன்றும் அவளிடம் உண்மையைச் சொல்ல முடியாமல் வந்தேன்.

அடுத்த முறையில், அதாவது வழக்கு நடப்பதற்கு மூன்று நாளுக்கு முன்னேதான், அவர் பலேரியாவால் மறைந்த கதையைச் சொன்னேன். அதைக் கேட்டு அவள் நைந்து மூர்ச்சையாகி வருந்தியதைச் சொல்லால் சொல்ல முடியாது. அதற்குப் பிறகு மூன்றுநாள் கழித்து நீதிமன்றத்தில் போலீஸ் துப்பாக்கிகளுக்கு இடையே அவள் நின்றுகொண்டிருந்த கொடிய காட்சியை என் பொல்லாத கண்களால் பார்த்தேன். துரும்பாய் மெலிந்து போயிருப்பதைக் கண்டதும், அந்த மன்றத்தை விட்டு வெளியே ஓடிப்போய்த் தனியேமரத்தடியில் அலறினேன். அப்பாவைப் பிரிந்தறியாத மகள் ஒரே பிரிவாய்ப் பிரிந்த

செய்தியை அறிந்த பிறகு சிறைக்குள் என்ன பாடுபட்டாளோ? எவ்வளவு மனத்துயரோ? எவ்வளவு கண்ணீரோ? ஆறுதல் சொல்வார் யார்? அங்கிருப்பவை இரும்புக் கம்பிகள்தானே? மூன்று நாளில் எவ்வளவு மாறுதல்! எவ்வளவு மெலிவு கண்டேன்!

வழக்கு நடந்தது. "எதிர் வழக்காட மாட்டேன்" என்று வாணி மறுத்துவிட்டாள். நாகப்பனும் மறுத்துவிட்டான். குற்றம் சுமத்தப்பட்டது. வாக்குமூலம் எழுதித்தர அனுமதியும் நேரமும் கொடுத்தார்கள். பகல் இரண்டு மணிக்கு மறுபடியும் வாணியும் நாகப்பனும் அந்தக் கூண்டில் வந்து நின்றார்கள். இருவரும் தனித்தனியாக எழுதியது படிக்கப்பட்டது. இரண்டும் ஒன்றேதான். பத்திரிகையில் அப்படியே வந்தது.

"எங்கள் மனச்சான்று சொல்கின்றது. அதைத்தான் இங்கே சொல்கின்றோம்."

உலகத்தில் மூட நம்பிக்கை பெருகிவிட்டது. தன்னலம் வளர்ந்துவிட்டது. அதனால்தான் மக்கள் எல்லாரும் உடன் பிறந்தவர்கள் என்பதை எவரும் நம்புவதில்லை. எல்லாரும் கடவுளின் மக்கள் என்ற சமயங்களின் அறிவுரைப்படி எவரும் வாழ்வதில்லை. அறம் என்பது ஆற்றல் மிக்கது; அதை எதிர்த்து வாழ முடியாது என்ற மறைமொழியை எவரும் நம்புவதில்லை. மற்றவர்களுக்குத் தீங்கு செய்வதால் நாமே வருந்துகின்றோம்; மற்றவர்களுக்கு உதவி செய்வதே இன்பத்திற்கு வழி என்று கூறும் மனச்சான்றை எவரும் மதிப்பதில்லை. உலகத்தை நல்வழியில் நிறுத்திக் காப்பதற்காக மகாவீரரும் புத்தரும் திருவள்ளுவரும் ஏசுநாதரும் முகம்மது நபியும் திருநாவுக்கரசரும் சங்கரரும் ராமாநுஜரும் தாயுமானரும் இராமலிங்கமும் விவேகாநந்தரும் செய்துள்ள முயற்சிகள் இன்னும் வெற்றி பெறவில்லை. ஆனால் அந்த முயற்சிகள் வீணாகப் போவதில்லை. பயன் விளைந்தே தீரும்.

அவர்கள் இன்று இந்த நாட்டில் இருந்தால் என்ன செய்வார்களோ அதைத்தான் நாங்களும் ஒரு சிறிது செய்வதாக நம்புகிறோம்.

போர் மக்களை ஏமாற்றுவது; துன்புறுத்துவது; அச்சுறுத்துவது. ஆகையால் அது பாவமானது என்று நம்புகின்றோம். போருக்காக ஏற்படுத்தப்படும் ஏற்பாடுகள்,

போருக்காகக் கற்பிக்கப்படும் கலைகள், போருக்காகச் செய்யப்படும் செயல்கள் எல்லாம் மன்னிக்க முடியாத குற்றங்கள் என்று நம்புகின்றோம். இந்தக் குற்றங்களை எங்கள் எதிரிகள் செய்தாலும் குற்றம் என்று நம்புகின்றோம்; எங்கள் நண்பர்கள் செய்தாலும் குற்றம் என்று நம்புகின்றோம். எதிரிகளோ நண்பர்களோ யார் யாரை அழித்தாலும் குற்றம் என்று நம்புகின்றோம். அந்தக் குற்றத்தைக் கடிந்துகூறித் திருத்துவது எங்கள் கடமை என்றும் நம்புகின்றோம்.

பொதுமக்கள் இந்தத் துறையில் இன்னும் எண்ணிப் பார்க்கவே இல்லை என்றும், அவர்கள் மனம் வைத்தால் போரை அடியோடு நிறுத்திவிட முடியும் என்றும், எங்களுக்கு உறுதியாகத் தோன்றுகின்றது. ஆகையால், எல்லாருக்கும் எடுத்துச்சொல்கின்றோம். எந்தத் துறையில் எந்த வகையில் எந்த வடிவில் போருக்குக் காரணமாக இருந்தாலும் அது பாவம் என்று எடுத்துச் சொல்கின்றோம். போரை யார் நடத்தினாலும், எங்கே நடத்தினாலும், எந்தக் காரணத்தினால் நடத்தினாலும் அது வாழ்வைக் கெடுக்கின்றது; மக்களைக் கொல்கின்றது: அமைதியை அழிக்கின்றது. ஆகையால் போருக்கு உதவி செய்வது பாவம் என்று எடுத்துச்சொல்கின்றோம்; எங்களைப் போல் உலகத்தில் பெரும்பாலோர் எண்ணும் நாள் வரவேண்டும் என்று விரும்புகின்றோம்; வரும் என்றும் நம்புகின்றோம்; அப்போது யார் என்ன முயற்சி செய்தாலும் போர் நடக்காது என்று உறுதி கூறுகின்றோம். இதற்காக எங்களால் இயன்ற தொண்டு செய்தோம். இந்தத் தொண்டு குற்றம் என்று உங்களுக்குத் தோன்றினால் நீங்கள் விரும்பியதைச் செய்யலாம்.''

மன்றம் கலைந்தது. மறுநாள் தீர்ப்புக் கூறுவதாக அறிவிக்கப்பட்டது. வெளியே செல்லும் போது ''என்ன பைத்தியம்! போரை நிறுத்த முடியுமா?'' என்று இருவர் பேசிக்கொண்டு சென்றார்கள். ''ஏதோ மிஞ்சினவர்கள் என்று தெரிகிறது'' என்றார் இன்னொருவர். ''போர் செய்யாமல் எந்த அரசன் அரசாண்டான்? உளறுகிறார்களே!'' என்றார் மற்றொருவர். பலர் பலவாறு பேசிக்கொண்டு சென்றார்கள்.

தாயுமானவர்பாடல் ஒன்று வாங்குவதற்கு எண்ணி அங்கிருந்து நடந்து கந்தசாமி கோயிலை

அடைந்தேன். புத்தகம் வாங்கிக்கொண்டேன். அந்தக் கடைக்காரரைப் பார்த்து, "இங்கே உள்ள இரும்புக்கடைக் காரர், பலசரக்குக் கடைக்காரர் எல்லாரும் இராமலிங்க வள்ளலாரின் படத்தை நடுவில் வைத்துச் சிறப்பாக மாலை போட்டுப் பூசை செய்கிறார்கள். அதைப் பார்த்தால் மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றேன்.

"ஏன் செய்கிறார்கள்? தெரியுமா?" என்றார்.

"அவர் மேல் உள்ள அன்புதான்" என்றேன்.

அதுதான் இல்லை. அவருடைய பெயர் கூடப் பலருக்குச் சரியாகத் தெரியாது. கேட்டுப்பாருங்கள். சோதி, சோதி என்று சொல்வார்கள். அவர்களுக்கு அவ்வளவு தான் தெரியும். அதற்குமேல் தெரியாது. இன்றைக்கு நீதிமன்றத்தில் யாரோ இருவர் நன்றாகச் சொன்னார்களாம். நாத்திகம் வரவரப் பெருகிவிட்டது என்று சொன்னார்களாம். அதற்கு இதுவே சான்று. காசைத் தொடுவதற்கும் கூசினாராம் இராமலிங்கசாமி. ஆனால் இவர்கள் அத்தனைப் பேரும் "எல்லாம் செயல் கூடும்" என்ற ஒரு பாட்டில் அந்த மூன்றே சொற்களை மட்டும் கேட்டு, வியாபாரம் நன்றாக நடக்கும், செல்வம் நிறையச் சேரும், அப்புறம் எல்லாம் செயல் கூடும் என்று ஒரே பண ஆசை பிடித்துத் திரிகின்றார்கள். இதை ஒருவருக் கொருவர் ரகசியமாகப் பேசிக்கொள்கிறார்கள். எல்லாம் எனக்குத் தெரியும். இராமலிங்கசாமி படம் இருந்தால் பணம் சேராது என்று யாராவது புதிய கதை கட்டிவிட்டால், உடனே நேர்மாறாக நடப்பார்கள். அந்தப் படங்களை எல்லாம் கொண்டு போய்க் கடலில் போட்டுவிடுவார்கள். சிவனை வழிபட்டால் அவனைப் போல் ஓட்டாண்டியாகிவிடுவார்கள் என்று யாரோ கதை கட்டி, அதனால் பல ஊர்களில் சிவன்கோயில் கவனிப்பார் இல்லாமல் பாழ்பட்டு வரவில்லையா? எல்லாம் வடிகட்டின நாத்திகம்" என்றார்.

அவர் சொன்னது உண்மையாக இருக்கும் என்றே பட்டது. ஆனால் இராமலிங்க வள்ளலாரின் உண்மையான பெருமையைத் தெரிந்துகொண்டால் நலமாக இருக்குமே என்று வருந்தினேன்.

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம்எனநான் தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ

என்ற திருவருட்பா என் நினைவுக்கு வந்தது. அருட்பெருந் தலைவர் இராமலிங்க வள்ளலாரின் அன்புருவை நினைந்து உருகினேன். இந்தப் பாட்டின் கருத்தைத்தான் வாணியும் நாகப்பனும் வாக்குமூலமாகச் சொன்னார்கள். மோட்சத்திற்காக என்று எதைச் சொன்னாலும் அரசாங்கம் கவலைப்படுவதில்லை; சிறைப்படுத்துவதில்லை. வாழ்வுக்காக என்று அதையே சொன்னால் உடனே சிறைப்படுத்துகின்றது; துன்புறுத்துகின்றது.

அமைந்தகரை பஸ் ஏறி வந்துகொண்டிருந்தேன். அதில் இருந்த இளைஞர் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து, "இன்றைக்கு வழக்குக்கு வந்திருந்தீர்களா?" என்றார்.

"என்ன கூட்டம்! மக்கள் ஒரே பரபரப்பாக இருந்தார்கள். எவ்வளவு கூட்டம்!" என்றார் மற்றவர்.

"கூட்டத்தைப் பார்த்து மயங்கிவிடாதீர்கள். நம்ம மக்கள் உணர்ச்சியில்லாத மக்கள். கிரிக்கெட் பந்தயம் எங்காவது நடக்கும்போது என்ன பரபரப்பு ? எவ்வளவு கூட்டம்? டிக்கட்கிடைக்காமல் திண்டாடுகின்றவர்கள் மட்டும் இதைவிடப் பத்து மடங்கு இருப்பார்கள். கூட்டமாக இருந்ததனாலேயே, வழக்கில் பற்றும் உண்மையான அன்பும் கொண்டவர்கள் என்று நம்பி ஏமாற வேண்டாம்" என்றார் இன்னொருவர்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? காலம் முன் போல் இல்லை. இப்போது எல்லாருக்கும் நல்ல வழியில் அக்கறை இருக்கிறது. பொதுத்தொண்டில் ஊக்கம் இருக்கிறது" என்றார் முன்னே பேசியவர்.

"எல்லாம் தெரியும். கிரிக்கெட் பந்தயத்தில் காட்டும் ஊக்கத்தில் கால்பங்கு இதுபோன்ற பொதுவேலையில் காட்டியிருந்தால், எப்போதோ உலகம் முன்னேறிவிட்டிருக்காதா ?" உண்மையான உணர்ச்சி நமக்கு இருக்குமானல், நாமெல்லாம் வாயில்லாப் பூச்சிகளாக இருந்து பார்த்துக்கொண்டிருப்போமா?" என்ருர் மற்ருெருவர்.

"நீங்கள் என்னவோ சொல்கிறீர்கள். நான் சொல்கிறேன்; இந்த அரசாங்கமாக இருப்பதால் இவர்கள் உயிர் தப்ப முடியும். எளிய தண்டனையே கிடைக்கும். இதே ஆட்கள் ஜெர்மனியில் பிறந்து இதுபோன்ற சூழ்ச்சி செய்திருந்தால், அன்றைக்கே தலை போய்விடாதா? அல்லது, ஜப்பானில்தான் செய்ய முடியுமா? இதாலியில் இப்படிச் செய்தபின் உயிர்தப்ப முடியுமா? ரஷ்யாவிலாவது முடியுமா என்றுதான் கேட்கின்றேன். இந்தக் காலத்தில் இந்த நிலைமையில் இவ்வளவு பேச்சுரிமை வேறு எந்த அரசாங்கம் கொடுக்கும்?" என்ருர் முதலில் பேசியவர்.

அவர் பேசியதிலும் உண்மை இருப்பதாகவே தெரிந்தது. சேத்துப்பட்டில் இறங்கியதும் நேரே வீட்டிற்குச் சென்றேன். அங்கே நீலமேகன் எனக்காகக் காத்துக் கொண்டிருந்தார். நான் சென்றவுடன், "அம்மா! இனிமேல் நான் கலங்கிக்கொண்டு உலகத்தில் திரியப்போவதில்லை. கடமைகளைச் செய்து உலகத்தைத் திருத்தப் போகின்றேன். இனிமேல்—" என்று உணர்வோடு எழுந்தார்.

"கொஞ்சம் இருங்கள்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று மாடத்திலிருந்த கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படித்தேன். அது வாணியம்பாடியிலிருந்து வந்திருந்தது. பத்மாவதி எழுதியிருந்தாள். நீலமேகன்வாயிலாக எல்லாம் அறிந்ததாகவும், அடுத்த வாரத்தில் அங்கு வரப்போவதாகவும், நிலையாகச் செய்ய வேண்டிய கடமைகள் சிலவற்றைப் பற்றிக் கலந்து பேசி ஆராய வேண்டும் என்பதாகவும் எழுதியிருந்தாள்.

வெளியே வந்து பார்த்தேன். நீலமேகனைக் காணவில்லை. உணர்ச்சி மிகுந்தவராய்ப் பரபரப்போடு இருந்த

அவர் எங்கே சென்றதும் தெரியவில்லை. வீட்டிற்குள் சென்றேன். எந்தக் கடமையிலும் மனம் செல்லாமல் கலங்கிக்கொண்டிருந்தேன். அறியாமை மிகுந்த உலகத்தில் இவர்கள் செய்யும் தொண்டு என்ன பயன்தரப் போகின்றது என்று சோர்ந்து கிடந்தேன்.

மறுநாள் கூறப்போகும் தீர்ப்பு என்னவோ என்று என் மனம் படபடத்தது. நீதிமன்றத்தை அணுகியபோது கூட்டம் கடல்போல் இருக்கக் கண்டேன். முன்னாளை விட இருபது முப்பது மடங்கு பெருகிய கூட்டமாக இருந்தது. கூட்டத்தைப் பார்ப்பதில் வாணிக்குப் பெரிய விருப்பம். ஆனால் அன்று அவள் நன்றாகப் பார்க்க முடிந்திருக்காது; பார்த்தாலும் மகிழ முடிந்திருக்காது. அவள் உள்ளத்தில் எத்தனையோ எண்ணங்கள் எழுந்து அலைந்துகொண்டிருந்திருக்கும். அதனால் இந்தக் கூட்டத்தைக் கண்டு மகிழ முடிந்திருக்காது. கூட்டம் கடல்போல்தான் இருந்தது.

அவள் ஐந்து வயதாக இருந்தபோது நீதிமன்றக் கடற்கரைக்கு நானும் அவரும் இரண்டு பக்கம் இரண்டு கைகளைப் பற்றி அவளை அழைத்துக்கொண்டு போனோம். கொஞ்ச தூரம் அவள் நடந்ததும், "மகளுக்குக் கால் நோவும்" என்றுசொல்லித் தூக்கித் தோள்மேல் சார்த்திக் கொண்டு நடந்தார். அப்போது அந்த மாலைவேளையில் கடற்கரையில் தொழிலாளர் கூட்டம் ஒன்று நடந்தது. கடலோடு போட்டியிட்டுக்கொண்டு ஒருவர் முழங்கிக் கொண்டிருந்தார். வாணி அந்தப் பெரிய கூட்டத்தைப் பார்த்து உற்ற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வாய்மேல் கைவைத்துக்கொண்டு என்னைப் பார்த்தும், அப்பாவைப் பார்த்தும் மாறி மாறிப் புன்சிரிப்புச் சிரித்தாள். சொற்பொழிவாளர்பேசுவதையும் கேட்க முடியவில்லை. என்னையும் அவரையும் தடுத்துத் தடுத்துப் பேசி ஆரவாரம் செய்தாள். அப்போது கூட்டமான மக்களைப் பார்த்தால் அவ்வளவு மகிழ்ச்சி அடைவாள். அங்கிருந்து கடலை அணுகிய போது அந்த அலைகளைக்கண்டு ஓரே ஓட்டமாக ஓடினாள். நான் நடுநடுங்கிப் போனேன். நல்ல காலமாக அவர் ஓடிப்போய்ப் பிடித்து நிறுத்திவிட்டார்.

மறுபடியும் நான் வலக்கையும் அவர் இடக்கையுமாக அவளைப் பற்றிக்கொண்டு அலை வரும் இடத்தில் நின்றோம். அலைகள் வந்து வந்து அவள் கால்களை நனைத்தன. ஒவ்வோர் அலை வரும்போதும் ''அப்பா! அப்பா!'' என்று அவரைக் கூப்பிட்டுக்கொண்டு ஆரவாரமாகச் சிரித்துக் கொண்டிருந்தாள். ஒரு பெரிய அலை அப்படியே வந்து சிறு குழந்தையாக இருந்த அவளை முழுதும் நனைத்துவிட்டது. ''குழந்தை பயந்து போயிருப்பாள்'' என்று அவர் உருகினார். ''பயந்துவிட்டாயா? அம்மா!'' என்று அவளுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டே கேட்டார். ''இல்லை அப்பா! நல்லா இருந்தது. பெரிய தண்ணி! இன்னும் வரச் சொல்லு அப்பா!'' என்றாள். அவர் பூரிப்பு அடைந்தார்.

இன்று கேட்பதற்கு அவர் இல்லை. நான் இருந்தேன். ''நான் அஞ்சவில்லை அம்மா! நீதான் கோழையாகிவிட்டாய். இதுதான் பெரிய வாழ்வு'' என்று அஞ்சாமல் என்னிடத்தில் சொன்னாள். நான் பூரிப்பு அடைவது எப்படி? அவளை இன்னும் குழந்தையாகவே நினைக்கின்றேன். அந்தத் தாய்மனமே என்னைக் கலக்குகின்றது.

இன்று அவள் போராட்டக் கடலில் கால் வைத்துவிட்டாள். அவளைப் பெரிய அலை நனைத்துவிட்டது. பத்து ஆண்டுகள் கடுங்காவல் என்று தீர்ப்புக் கூறிவிட்டார்கள். முழுதும் நனைந்துவிட்டாள். ஆனால்—!.

இன்ப நிலையம்
வெளியீடு

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

# இன்ப நிலையத்தின் இணையற்ற நூல்கள்

---

டாக்டர் மு. வரதராசனார்

எழுதியவை

★

## அன்னைக்கு 1-0-0

இன்றைய நமது நாட்டின் நிலை; எதிர்கால முன்னேற்றத்திற்கு வழி; மொழிப்பற்று, கல்லூரி வாழ்க்கையின் அனுபவ அறிவு—விவசாயம்—வியாபாரம் முதலிய தொழில்களின் அடிப்படைச் சிக்கல்கள்—மனித மனப்பான்மையின் விசித்திரம் போன்ற அரிய கருத்துக்களையும் தமிழகத்தின் இன்றைய அரசியல் சமூக விஷயங்களையும், விளக்கிக் கூறும் நூல்.

## அரசியல் அலைகள் 1-4-0

அரசியல் கட்சிகளினால் மக்களுக்கு ஏற்படும் நன்மை, தீமைகள்—உழைப்பாளிக்கும்—உண்டு களித்திருப்போருக்கும் பொருளாதார நிலையிலுள்ள ஏற்றத் தாழ்வு; அதனால் ஏற்படும் போராட்டம்-உழவர், தொழிலாளிகளுக்கு அரசியல் அறிவு இல்லாமையால் அவர்கள் படும் கஷ்டங்கள்—உணவுப் பஞ்சம்; அதை நீக்க வழி, இவை போன்ற பல ஆழ்ந்த கருத்துக்களை அரசியல் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து கூறும் நூல்.

## விடுதலையா? 1-8-0

சிறு கதை என்ற பெயரால் காதல் நிகழ்ச்சிகளையும், இன்னும் சிலர் காமக்களியாட்டையுமே அநேகமாக இந்நாளில் எழுதி வருகின்றார்கள், அதற்கு விதிவிலக்காக நம் கண்முன்னே காணும் ஏழையின் ஏக்கத்தை—பாட்டாளியின் பரிதாபத்தை—முதலாளித்வத்தின் மோசக்கருத்தைப்பற்றி நம் சிந்தனையைக் கிளரும் சிறு கதைகளின் வாயிலாக இந்நூலில் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

தமிழரசுக் கழகத் தலைவர் — "தமிழ் முரசு" ஆசிரியர்

**ம. பொ. சிவஞானம்** எழுதிய நூல்கள்

| | |
|---|---|
| கப்பலோட்டிய தமிழன் (ஐந்தாம் பதிப்பு) | 1—12—0 |
| வீரபாண்டியக் கட்டபொம்மன் | 1—12—0 |
| தமிழன் குரல் | 2— 0—0 |
| தமிழர் கண்ட காந்தி | 0— 8—0 |
| சுதந்தரப் போரில் தமிழகம் | 0—10—0 |
| சிலப்பதிகாரமும் தமிழரும் | 0— 8—0 |

**வானொலியில் ம. பொ. சி.**

**வீரக் கண்ணகி**

★

**ம. பொ. சி. வாழ்க!**

(பல அறிஞர்களின் கருத்துரை அடங்கிய தொகுப்பு நூல்)

★

"ஜீவா" நாரண-துரைக்கண்ணன் எழுதிய

தேவகி — (நவீனம்)

**கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்**

என் கடன் களிப்பூட்டுதலே (வானொலிப் பேச்சு) 0—3—0

"*1942*" — (நவீனம்) — கு. ராஜவேல்

இன்ப நிலையம்

மயிலாப்பூர் — சென்னை 4.

இன்ப நிலையம்

மயிலாப்பூர், சென்னை. 4.

Commercial Printing & Publishing House Armenian Street, Madras